

இணுவில் சைவமகாஜன வித்தியாலய

(யா/ இணுவில் மத்திய கல்லூரி முன்னாள் அதிபர்)

அமரர் திரு. வயித்திலிங்கம் நடராசா அவர்களின்

நூறாவது அகவை நிறைவு விழா

# சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணுவில் சைவமகாஜன வித்தியாலய
(யா/ இணுவில் மத்திய கல்லூரி முன்னாள் அதிபர்)

அமரர் திரு. வயித்திலிங்கம் நடராசா அவர்களின்

# நூறாவது அகவை நிறைவு விழா

# சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு மலர் விபர அட்டவணை


| | | |
|---|---|---|
| சஞ்சிகை | : | நூறாவது அகவை நிறைவு விழா சிறப்பு மலர் |
| வெளியீடு | : | மலர்க்குழு |
| | | பழைய மாணவர்கள், இணுவில் சைவமகாஜன வித்தியாலயம் |
| | | இணுவில் மத்திய கல்லூரி. |
| பதிப்பு | : | 29-08-2010 |
| பக்க அளவு | : | B5 (ISO) |
| பக்கம் | : | 129 |
| எண்ணிக்கை | : | 500 |
| கடதாசி | : | 70 GSM பாங் |
| அச்சுப்பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ், 39/2, ஆடியபாத வீதி, திருநெல்வேலி. |
| முகவரி | : | பழைய மாணவர்கள், இணுவில் மத்திய கல்லூரி |

| | | |
|---|---|---|
| Name | : | Nadarajah Centenary Souvenir |
| Published by | : | Old Students of Inuvil Saiva Mahajana Vidyalayam |
| | | Inuvil Central College |
| | : | Inuvil Central College, Inuvil |
| Size | : | B5 (ISO) |
| No., Pages | : | 129 |
| No., Copies | : | 500 |
| Printers | : | Guru Printers, 39/2, Adiyapatha Road, Thirunelvely. |
| Address | : | Old Students of Inuvil Saiva Mahajana Vidyalayam |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ☛ பொருளடக்கம் | 3-5 |
| ☛ அருள் ஆசிச் செய்திகள் | |
| ◆ இரண்டாவது குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமசாரிய சுவாமிகள் | 7 |
| ◆ சாந்தலிங்கம் இராமசாமியடிகள் | 8 |
| ◆ ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் | 9-10 |
| ◆ கைலைமாமுனிவர் திருவளர் திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் | 11 |
| ◆ ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் | 12 |
| ◆ ஸ்ரீமத் குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள் | 13-14 |
| ☛ வாழ்த்துச் செய்திகள் | |
| ◆ அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி | 15 |
| ◆ வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி | 16 |
| ◆ இணுவில் மத்திய கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி | 17-18 |
| ◆ செஞ்சொற் செல்வரின் செய்தி | 19 |
| ☛ சங்க காலம் - காலமும் கருத்தும்<br>கலாநிதி வ. மகேஸ்வரன் | 20-21 |
| ☛ ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரதும் சுவாமி விபுலானந்தரதும் கல்விச் சிந்தனைகள் - பேராசிரியர் சபா ஜெயராசா | 22-23 |
| ☛ பாடசாலைக் கல்வியும் செலவும்<br>பேராசிரியர் மா. சின்னத்தம்பி | 30-37 |
| ☛ இலங்கையில் சிறுவர் வறுமை<br>பேராசிரியர் க. தேவராஜா | 38-42 |
| ☛ உலகம் தழுவிய சைவம்<br>முனைவர் இரா. சந்திரசேகரன் | 43-45 |
| ☛ வயித்திலிங்கம் நடராசா அவர்களின் நினைவாக எடுத்த விஞ்ஞான ஆய்வு கூடத் திறப்புவிழா<br>வை. க. சிற்றம்பலம் | 46-48 |
| ☛ சிறுக்கிக்கேன் இந்தச் செயல்?<br>ச. வே. பஞ்சாட்சரம் | 49-51 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☛ பண்பாட்டு நோக்கில் சீர் இணுவைத் திருவூரும்
கிராமியக் கலைகளும் - த. சிவசுப்பிரமணியம் 52-56

☛ வாழ்வும் சமயமும் 57-58
திருமதி கமலராணி கிருஸ்ணப்பிள்ளை

☛ உலக மயமாக்கல் கல்வியில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் 59-62
தம்பு சிவா

☛ இணுவில் மண்ணில் இன்றும் வாழும் நல்லாசிரியரின் பணி 63
மூ. சிவலிங்கம்

☛ சீர் இணுவை திருவூரும் தலைமை ஆசான் நடராசாவும் 64-66
திருமதி சந்திரபவானி பரமசாமி

☛ பழைய மாணவரின் செய்தி 67-68
சின்னையா அமிர்தலிங்கம்

☛ இணுவில் ஒன்றியம் (ஐ. இ) 69-70
பதஞ்சலி நவேந்திரன்

☛ சமயம் கூறும் வாழ்வியல் 71-75
ம. மதுசாளினி

☛ தகவல் தொடர்பாடலும் சமுதாயமும் 76-80
பா. பாலஜீவன் 10A

☛ கட்டுரைப் போட்டியில் பரிசில்கள் பெறுபவர்கள் 81

☛ ஸ்ரீ விஸ்வேஸ்வர சுவாமி தேவஸ்தானம் 82-83
ம. சுயம்புலிங்கம்

☛ சமூக செயல் திட்டம் 84-85
கந்தசாமி கண்ணபிரான்

☛ சைவ மகாஜன மண்டபம் 89-93
நடராசா சச்சிதானந்தன்

◆ யாழ் மாவட்ட மேலதிக கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி
திரு. வே. தி. செல்வரத்தினம் 94

◆ கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபரின் வாழ்த்துச்செய்தி 95-96
திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

◆ உடுவில் கல்விக்கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளரின்
வாழ்த்துச் செய்தி - திரு. செ. குபேரநாதன் 97

◆ சங்கானை கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளரின்
வாழ்த்துச்செய்தி - திரு. துரைஐயா எங்கரசு 98

◆ அதிபர் செ. சோதிப்பெருமாளின் வாழ்த்துச் செய்தி 99

◆ Mr. V. Nadarajah - The Architect of
Inuvil Saiva Mahajana - Thambyaiyah Devarajah 100





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாழ்த்துச்செய்தி — 101
  திரு. செ. இலகுநாதன்
- வாழ்த்துச்செய்தி — 102
  திரு. இ. மயூரநாதன்
- நாவலர் வழியில் இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம் — 103-109
  அ. பஞ்சாட்சரம்
- இணுவில் சைவமகாஜன வரலாறும் அதிபர்
  நடராசாவின் வழிகாட்டலும் — 110-111
  பொன்விழா மலர்
- ஆளுமை நிறைந்த அதிபர் — 112-115
  தமிழவேள் இ. கந்தசாமி,
- இணுவில் சைவமகாஜன கல்வி முறைமையும்
  அதிபர் வ. நடராசா அவர்களின் பங்கும் — 116-117
  கலாநிதி தா. அமிர்தலிங்கம்
- சைவநெறி வளர்த்த சைவமகாஜன வித்தியாலயம் — 118-120
  திரு. K. S. ஆனந்தன்
- மூத்த பத்திரிகையாளரின் நோக்கில் நடராஜம் — 121
  செல்லப்பா நடராசா
- நூறாவது அகவை விழா நிகழ்ச்சி நிரல் — 122-125
- திரு. வ. நடராஜா அவர்களின் பாடசாலைப் பதிவேட்டிலிருந்து.... — 126-127
- நன்றிகள் — 128-129




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்


**தொலைபேசி:**

**நல்லூர், யாழ்ப்பாணம்,**
**இலங்கை.**


# அருள் ஆசிச் செய்தி



அன்புசார் பெருந்தகையீர்!

இணுவில் சைவமகாஜனா வித்தியாசாலையின் ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றிய வைத்தியலிங்கம் நடராஜாவின் 100வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதனை இட்டு மகிழ்ச்சி அடைகிறோம். இணுவில் என்னும் புனிதப் பிரதேசத்தில் கல்விசார் பொதுமக்களும், சமயநெறி நின்று வாழ்பவர்களும், கலைஞர்களும், ஆசிரியர்களும் வாழ்ந்த இப்பிரதேசத்தில் கல்வி என சமயநெறியோடு சேர்ந்த பாடசாலைகள் பல உண்டு. இவ்வரிசையில் சைவ மகாவித்தியாலயம் கல்விப் பணியாற்றியமையால், இன்று இணுவில் மத்திய கல்லூரி என உயர்நிலை அடைந்து, நிமிர்ந்து நிற்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. பணியில் நீண்டகாலமாகப் பணியாற்றிய ஆசிரியர், அதிபர். திரு. வைத்திலிங்கம் நடராசாவின் செயற்பாடுகளைக் கௌரவித்து மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்வடைகின்றோம். இப் பணியை இன்று செயற்படுத்தி ஆசிரியருடைய மகன் சச்சிதானந்தம் தந்தைக்கு மகன் ஆற்றும் உதவியாக 100வது அகவை சிறப்புச் செய்து அனைவரையும் பெருமைப்படுத்துவது மகிழ்ச்சிக்குரியதாகும். இப் புனிதப் பணியைச் செய்யும் திரு. சச்சிதானந்தன் அவர்களை வாழ்த்திப் பாராட்டுகின்றோம். திரு. வைத்திலிங்கம் நடராசா நினைவை என்றும் நம்மோடு வைத்திருக்கும் செந்தமிழ்ச் சொக்கையின் திருவருளைச் சிந்திப்போமாக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி
கயிலைக்குருமணி சீர்வளர்சீர்
**சாந்தலிங்க இராமசாமியடிகள்**
பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர்-641 010,தமிழ்நாடு
தொலைபேசி : 0422-2607995,,2608678, நகலி : 2607994
webpage: www.sivasiva.in,
peruratheenam.blogsopt.com

உ



சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

Holy Kailasa heritage Meikandar
heritary - Kailai Guru Mani - Seervalarseer
**Santhalinga Ramasamy Adigal**
Peruraatheenam, Perur,
Coimbatore -641 010, Tamilnadu.
Telephone:0422-2607995,2608678, Fax : 2607994
Email : peruradigal@yahoo.com
: perurmutt@yahoo.com

**குருமுதல்வர் (Aatheenakarthar)**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்
(Thavathiru Santhaliga Adigalar Thirumutt)

**புரவலர் (Patron)**
உலக சைவப் பேரவை
(World Saiva Council)

தமிழகத் துறவியர் பேரவை
(Tamilnadu Saints Forum)

**தலைவர் (President)**
சத்வித்யா சன்மார்க்க சங்கம்
(Sathvidhya Sanmarga Sangam)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல், தமிழ்க்கல்லூரிக் கழகம்
(Thavathiru Santhalinga Adigalar Arts, Science &Tamil College Kahzhakam)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப்பள்ளி
(Thavathiru Santhalinga Adigalar Higher Secondary School)

ஞானாம்பிகை மறைவரிமைப் பள்ளி
(Gnambikai Matriculation School)

தவத்திரு ஆறுமுக அடிகள் தாய்த்தமிழ் பள்ளி
(Thavathiru Aarumuga Adigalar Tamil School)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் நினைவு அறக்கட்டளை
(Thavathiru Santhalinga Adigalar Memorial Trust)

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் சத்வித்யா சன்மார்க்க சங்க அறக்கட்டளை
(Thavathiru Santhalinga Adigalar Sathvidhya Sanmarga Sanga Trust)

**தாளாளர் / செயலர்**
**(Correspondent / Secretary)**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல், தமிழ்க்கல்லூரி
(Thavathiru Santhalinga Adigalar Arts, Science &Tamil College)

**உறுப்பினர் (Member)**
பாரதத் துறவியர் பேரவை
(Bharat Saints Forum)

தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உயர்மட்டக் குழு.
(Tamilnadu Govt. Hindu Religious Endowment Board Higer Level Committee)



# வாழ்த்துப்பா

கல்வி நலத்தால் யாழ்ப்பாண இனுவில் கலைகள் தேர்ந்துயர்ந்த
நல்லோர் வைத்திலிங்க நடராசா ஆசிரியப் பணியில்
வல்லவராக உயர்ந்து மக்கள் வளங்கள் சேர்ந்து சிவநெறியில்
பல்வகைப் பணிகள் நிறைவேற்றி பரமன்தாளில் சேர்ந்திட்டார்.

மக்கள் மனைவிசூழ அவர் மைந்தன் சச்சிதானந்தன்
தக்கார் தமிழின் சமயநெறி தழைக்கச் சேவை செய்கின்றார்
செக்கர் நிறை வேலவன் பணியில் சிறந்த தந்தை நடராசா
தொக்க நிறைவு நூற்றாண்டின் தூய நூலை வாழ்த்துகின்றோம்.

வேண்டுந் தங்களன்பு

அன்புள்ள
(தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகள்)
பேரூராதீனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதினம்
26வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609001

*"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"*

## ஆசியுரை



*"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"*

- குறள்.

மனிதன் என்பதற்கு மனம் உள்ளவன் என்பது பொருள். இம்மனம் செம்மையாக அமைய அடிப்படைத் தேவை கல்வியாகும். எண் என்பதும் எழுத்து என்பதும் வாழும் மனிதர்களுக்கு கண் போன்றது என்பது வள்ளுவர் வாக்கு. மேலும், கல்வியைக் கேடில் விழுச்செல்வம் என்கிறார். கல்வியால்தான் அறிவு வளர்கிறது. கல் + வி = கல்வி. கல் - கல்லுதல், வி - தோண்டுதல், தோண்டுவதால் அறிவு விளக்கமுறுகிறது. நவரத்தினங்களை சாணைக் கல்லில் பட்டை தீட்டுவதால் ஒளிவிட்டு பிரகாசிக்கிறது. அதைப்போல் மனமாகிய கல்லைக் கல்வி என்னும் சாணைக்கல்லில் பட்டைத் தீட்டுவதால் மனம் ஒளிவிட்டு பிரகாசிக்கிறது. (ஒளி - அறிவு).

ஒரு பிறவியில் ஒருவன் கற்ற கல்வியானது ஏழுபிறவிக்கும் தொடர்ந்து வந்து பயனைத்தரும் என்பதும் வள்ளுவர் வாக்கு. எனவேதான் கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்த சான்றோர்,

*"கற்றை நன்றே கற்கை நன்றே
பிச்சைப் புகினும் கற்கை நன்றே"*

என்றும் வலியுறுத்தினர். ஒரு சமூகம் உயர்ந்த பண்புகளுடன் விளங்குவதற்கும், ஒழுக்கத்தோடும் அறத்தோடும் வாழ்ந்து பெருமையுறுவதற்கும் முதன்மையாகத் தேவைப்படுவது கல்வியாகும்.

இதனை நன்குணர்ந்த கல்வியாளரும், ஆசிரியரும் அதிபருமாகிய வ. நடராசா என்பார் இலங்கையில் இணுவில் எனும் ஊரில் வாழ்வோர் நற்கல்வி பெற்று நலமுற வாழ்ந்திட சைவ மகாஜன வித்தியாலயத்தின் அதிபராக அமைந்து அரும்பணி ஆற்றியுள்ளமையால் பல்லாயிரவர் கல்வி வளத்தோடு நல்லுறவு பெற்று நற்பண்புடையவராகத் திகழ வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. நல்லுறவு நற்பண்பை ஏற்படுத்தும்.

இலங்கையில் சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய சான்றோர் நல்லூர் ஆறுமுகநாவலர் ஆவார். அவர்களின் வழிநின்று சைவநெறி போற்றித் தமிழ் வளர்த்த பெருமைக்குரியவர் வ. நடராசா ஆவார். இவர் இணுவில் என்னும் ஊரில் உடையார் குடியில் சைவமரபில் தோன்றிய அன்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் சைவ மரபைச் சார்ந்த மாணவர்கள் கல்வி வாய்ப்பினைப் பெற்றிடவும். பண்பாட்டோடு வளர்ந்திடவும் 37 ஆண்டுகள் சைவமகாஜன வித்தியாலயத்தில் பல பொறுப்பினை ஏற்று பணியாற்றியவர் திரு.வ.நடராசா

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் அப்பரின் அருள் நெறி பற்றி அயராது பணி செய்தமையால் "இணுவை அப்பா" எனப் பாராட்டும் பெற்றுள்ளார். இவர் ஆசிரியப்பணியோடு நின்று விடாமல் சமூகப்பணியும், சமயப்பணியும் ஆற்றியதோடு மாணவர்கள் பல்துறையிலும் வெற்றி பெற்றிட தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். இணுவில் உள்ள இக்கல்லூரியை மத்திய கல்லூரியாக தன் உழைப்பால் உயர்த்தியவர்.

*"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே*
*அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"*

எனும் தாயுமானவரின் வாக்கிற்கேற்ப வாழ்ந்தவர். "கடமையைச் செய், பயனை எதிர்பாராதே" என்பதற்கேற்ப கடமையாற்றியதோடு சமய நம்பிக்கையும், பக்தி உணர்வும் கொண்டவர். இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் நன்றி உணர்வோடு தம் குருவுக்காக எடுக்கும் நூற்றாண்டு விழா போற்றுதலுகுரியது. ஆசிரியர் மாணவர் எனும் உயர்ந்த உறவு முறையில் போற்றத் தகுந்த செயலாகும். நல்லாசிரியர் நடராசாவுக்கு மலரொன்று வெளியிடுவதும் மகிழ்ச்சிக்குரியது.

இந்நூற்றாண்டு விழாச் சிறக்கவும் விழா மலர் மணம் கமழவும், நடராசா புதல்வர்கள் சச்சிதானந்தன் உள்ளிட்டோரும் விழாவில் பங்கேற்போரும் அவர்தம் குடும்பத்தினரும் பழைய மாணவர்களும் எல்லா நலனும் பெற்று நீடு இனிது வாழ்ந்திடவும் எல்லாம் வல்ல ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PHONE: 2456655

"KAILAI MA MUNIVAR"
**THIRU VALAR THIRU KASIVASI**
MUTHUKUMARASWAMI TAMBIRAN
SWAMIGAL

HEAD OF KASITHIRU MADAM
TIRUPANANDAL - 612 504
THANJAVUR DISTRICT

SIVA SIVA



# வாழ்த்துரை

இலண்டன், திரு. சச்சிதானந்தன் அவர்கள் தந்தையாரும், சிறந்த கல்வியாளரும், கல்விக் காவலரும். ஆதீனங்கள், திருமடங்களின் பால் உழுவலன்பு பூண்டு அவர்களை ஏற்றுப் போற்றுபவரும், சமயச்சாரியாரிடம் பத்திமை பூண்டவரும், இலங்கையில் சமயக்கல்வி வழங்கப்பெற ஆக்கம் செய்தவருமான திருமிகு. நடராசா அவர்களின் நூற்றாண்டுவிழா சீரும் சிறப்புமாய் நிகழ்வதறிந்து மகிழ்ச்சி.

சைவசமய சீலரும் ஒழுகலாறும் பூண்டு, சமய நூல் ஓதி, பிறர்க்கும் நல்லவாறு தெரிந்து நெறி நயம்பட உரைத்துப் புகழ் பெருக்கிய அன்பர்தம் நூற்றாண்டுவிழா மாண்புற நிகழ்ந்திடச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சுபம்

சிவ சிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுரை ஆதீனம்

## 292 ஆவது குருமகாசன்னிதானம்

## ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்



அமரர் திரு. வைத்திலிங்கம் நடராசா அவர்களின் 100வது அகவை நிறைவு விழா சீரும் சிறப்புடன் நடைபெற செந்தமிழ் வளர்த்த திருஞானசம்பந்தனை நினைவு கூர்ந்து ஆசிர்வதிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குருபாதம்

பேணித்தொழுமவர் பொன்னுலகாளப் பிறங்கருளால்
ஏணிப்படி நெறியிட்டு கொடுத்திமையோர் முடிமேல்
மாணிக்க முத்து மரகதம் போன்று வயிரமன்னி
ஆணிக்கனகமு மொக்குமையாறனடித்தலமே

ஸ்ரீ திருநாவுக்கரசுநாயனார்


**முனைவர். ஸ்ரீமத் குமாரசுவாமித்தம்பிரான் சுவாமிகள்** எம்.ஏ.எம்.பில். பி.எச்.டி
கட்டளை விசாரணை
**தருமபுர ஆதீனம் ஸ்ரீ பஞ்சநதீஸ்வர சுவாமி தேவஸ்தானம்**
**திருவையாறு – 613 204. போன் : 04362 – 260332 📱 94431 50332**


தேதி : 27.06.2010



கல்வி ஞானக் கலை பொருள் ஆயவன்
செல்வம்மல்கு திருக்கானூர் ஈசனை
எல்லியும் பகலும் இசைவு ஆனவா
சொல்லி டீர் நும் துயரங்கள் தீரவே" அப்பர்

"அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் - உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங்கில்லை
சிற்றுயிர்க்கு குற்ற துணை குமரகுருபரர்.

திரு. நடராசா சச்சிதானந்தன் அவர்கட்கு திருவருளையும், குருவருளையும் சிந்தித்தித்து எழுதியது.

தங்கள் தந்தையார் திரு. நடராசா அவர்கட்கு நூற்றாண்டு காணுவது சிறப்பிற்குரியது.

தோன்றிற் புகழொடு தோன்றுக. அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று. இது வள்ளுவன் வாக்கு. இவ்வுலகில் பலர் பிறக்கின்றார்கள். வாழ்கின்றார்கள், இறக்கின்றார்கள். இதுவா வாழ்க்கை?

"வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்"
"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற வாக்கினை உணர்ந்து வாழ்ந்தோர் சிலர்" அந்தச் சிலருள் "மனிதருள் மாணிக்கமாக", "மனிதருள் புனிதராக", "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்துள் ஒருவராக" நிலம், மலை, நிறைகோள் மலர்நிகர் மாட்சியோடு வயித்திலிங்கம் தங்கமுத்து தம்பதியருக்கு கருவிலே திருவுடையவராய் தோன்றிய பெரியார் திரு. நடராசா அவர்கள்.

"கல்லா நெஞ்சில் நில்லா ஈசன்", "கற்றிருந்த கலைஞானம் ஆனாய் நீயே", "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியே" என இறைவனையே கல்வியின் உருவாகப் போற்றியது நம் சமயம்.

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்றும் "கல்வி கண் போன்றது" என்றும் கல்வியின் சிறப்பினைக் காட்டியும், கல்லாமையின் இழிவைச் சுட்டியும் வள்ளுவர் இரு அதிகாரம் செய்தார்.

மேலும் தருமையாதீனக் குருமுதல்வர் "கற்பிலரும் சுத்த விழலெனவே நீத்து விடு" எனச் சுட்டினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மங்களுள் சிறந்தது கல்விக்கண் திறத்தல். "*அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தலின் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்*" சிறந்த தர்மம் என்றும், "*தேடு கல்வி இல்லாததோர் ஊரினைத் தீயினுக்கு மடுத்தல்*" என்றான் பாரதி. மேலும் நாடு உயர்வு பெற வேண்டுமானால் மக்களுக்கு உணவும், கல்வியும் அவசியம் என உணர்த்தினான். இதனை உணர்ந்த திரு. நடராசா அவர்கள் "இணுவில் சைவமகாஜனா வித்தியாசாலை அதிபர் பொறுப்பு ஏற்றதும் செய்த காரியம் நாட்டின் உயர்வு கருதியே ஆகும்.

*"வயிற்றுக்கு சோறிடல் வேண்டும் - இங்கு*
*வாழும் மனிதருக் கெல்லாம்*
*பயிற்று பல கல்வி தந்து - இந்த*
*பாரை உயர்த்திட வேண்டும் என்றார்.*

அதனால்தான் ஓலைக் கொட்டகையை நீக்கிக் கல் கட்டிடமும், ஓடு கூரையும் செய்தும், நவராத்திரியில் கிட்டும் குருக்காணிக்கையை பெற்று கல்வி அபிவிருத்திக்கு அனுமதித்தும், ஆறுமுகநாவலர், நால்வர் குருபூசைகளை நடத்தியும், குன்றக்குடி அடிகள், சுத்தானந்த பாரதி உள்ளிட்ட சமயத் தலைவர்களை அழைப்பித்தும், சமய சமுதாய, கல்வி, ஊர் நலன் முன்னேற்றத்தில் ஈடுபடுத்திக் கொண்டவர். சிறுவயதில் தகப்பனாரை இழந்த நிலையிலும், உறவினர்கள் ஊராரின் பெருமதிப்பு மிக்கவராக ஆக்கிக் கொண்டதற்கு காரணம் அன்னாரின் தொண்டேயாகும்.

*"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை*
*முனியாது கற்க வழிவகுத்தார்."*

"*எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே*" என்பதற்கொப்ப திரு. நடராசாவின் பண்பால், உயர்ந்த சிந்தனையால், தொலைதூர நோக்கால், வள்ளண்மையால், சமயங்கலந்த ஒழுக்கங்களால் வாழ்ந்த ஆடவராதலின் இணுவில் எனும் நிலம் புகழ் அடைந்துள்ளது.

"*மகன் தந்தைக்காற்றும் உதவி*", "*தந்தை மகற்காற்றும் நன்றி*" இவ்விரண்டு செயலையும் வள்ளுவன் வழியினின்று நடராசா குடும்பம் அமைந்துள்ளது.

நடராசா அவர்கள் "*நல்ல தாய் தந்தை ஏவநான் இது செய்யப் பெற்றேன்*" எனச் சேக்கிழார் வாக்கொப்பக் காணும் பிள்ளையை உலகுக்கு அளித்து உதவினார்.

சச்சிதானந்தன் உள்ளிட்டோர் தந்தையாரின் நூற்றாண்டுவிழா கண்டு நன்றி பாராட்டியுள்ளது போற்றுதலுக்குரியது.

தாயை தண்ணீர்க்கரையில் பார்த்தால் பெண்ணை வீட்டிலே பார்க்கணுமா? என்பார்கள். அதைப்போல திரு. சச்சிதானந்தன் அவர்களின் பண்பும், பக்தியும், ஆதீனங்களோடு கொண்ட குரு பக்தியும், இயலிசை நாடக மரபு பயிற்றுவிக்கும் பண்பும் மரபு மீறாத வழிபாடு கடைப்பிடித்தல் முதலியன திரு. நடராசா அர்களிடம் இருந்திருக்கின்றது. இதனை அவர்கள் வரலாற்றில் அறிய கிடைத்தது. இலண்டன் சிவன் கோவில் எழுப்பிக்க நிமித்த காரணமாக விளங்கியும் ஆற்றிய பணி சிறப்புடையது.

நடராசாவின் எச்சத்தால் கிடைத்த சச்சிதானந்தன், சகோதரர்கள், பழைய மாணவர்கள், அதிபர், இணை ஆசிரியர்கள் மற்றும் குடும்பத்தார், உறவினர் யாவருக்கும் செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளும், தருமை குருமணியின் குருவருளும் கிடைப்பதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථන
தொலைபேசி } 021-222 2235
Telephone

දුරකථනය පොදු
பொது தொலைபேசி } 021-222 2233
General Telephone } 021-222 2234

ෆැක්ස්
பக்ஸ் } 021-222 2355
Fax

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

E-mail: gajaffna@sltnet.lk

මගේ අංකය
எனது எண் } Message from GA
My No.

ඔබේ අංකය
உமது எண் }
Your No.

දිනය
திகதி } 12.08.2010
Date

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



கலை, கலாசாரம், கல்வி, ஆன்மீகம், இயற்கைவளம் எனும் சிறப்புக்கள் அனைத்தையும் ஒருங்கிணைந்த தோற்றமாய், தமிழ்மணக்கும் இணுவையூரில் "தோன்றில் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்வாங்கு வாழ்ந்த நல்லாசானாம் நடராசாவின் புகழை அவரது பணியின் பயன்கள் எம்மிடத்துக்குச் சொல்லி நிற்கின்றன. இணுவை சைவ மகாஜன வித்தியாலய முன்னாள் அதிபராய் விளங்கிய திரு. வைத்திலிங்கம் நடராசா அவர்களின் நூற்றாண்டு அகவை நிறைவையொட்டி வெளியிடப்படும் நினைவு மலரிற்கு வாழ்த்துரை வழங்கும் வாய்ப்பிற்காய் மனம் மிக மகிழ்கிறேன்.

கிராமிய மணம் கமழும் தன்மண்ணில் தான் வாழும் சமூகத்தோடியைந்து, ஆசிரியராய், அறப்பணியாளராய், சமூகத் தொண்டராய் விளங்கினாரெனக் கேட்டு வியப்புற்றோம். அன்றைய சைவமகாஜன வித்தியாலயம் இன்று இணுவில் மத்திய கல்லூரியாய் மலர்ந்து வியத்தகு வளர்ச்சியுடனும் சாதனைகள் படைத்தற்கு அடிக்கல் அமைத்தவர். இணுவில் மக்களின் பேரன்பிற்குப் பாத்திரமாய் விளங்கிய ஆசிரியர் திரு. நடராசா என்றால் அது மிகையாகாது. தன் கிராமத்து மக்களோடு மக்களாய் நின்று மக்களை மாண்புறுவித்த திரு. நடராசா அவர்களால் படிப்போடு, பண்பும் சேர உருவாக்கப்பட்ட கல்விப் பரம்பரை இன்று உலகெங்கணும் புகழ்பூக்க நின்று ஆசானின் பெயர் சொல்லி நிற்கின்றது. இணுவில் சைவ மகாஜனாவித்தியாசாலை பழைய மாணவர்களினால் வெளியிடப்படும் சிறப்பு மலர் எனும் நூல் திரு வைத்திலிங்கம் நடராசா அவர்களின் விழுமைமிகு வரலாற்றின் நினைவுப் பொக்கிசமாய் தமிழ் மக்களின் நன்றி மறவாப் பெரும்பண்பு மிளிர எம்மக்களுக்கு நல்லதொரு வழிகாட்டலாய் அமைந்திடவும் வெளியீட்டாளரின் நன்முயற்சி வெற்றி பெறவும், மனமுவந்து, மனமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

திருமதி.இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்
யாழ் மாவட்டம்.

இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபர்
மாவட்ட செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி இல. / දුරකතන අංකය / Telephone No. } 0212224047
தொலைநகல் இல. / ෆැක්ස් අංකය / Fax No. } 0212224047

# வலயக் கல்வி அலுவலகம் - வலிகாமம்
# කලාප අධ්‍යාපන කාර්යාලය - වලිකාමම්
# Zonal Education Office - Valikamam

எமது இலக்கம் / අපේ අංකය / Our Number } NP/41/20/3/8/
உங்கள் இலக்கம் / ඔබේ අංකය / Your Number }
திகதி / දිනය / Date } 2010.08.11.

மருதனார்மடம்
சுன்னாகம்

මරුතනාර්මඩම්
චුන්නාකම්

Maruthanarmadam
Chunnakam



## வாழ்த்துச் செய்தி.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று —

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க இணுவையூரில் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அவதரித்த உத்தம புருடன் அமரர் திரு.வ.நடராஜா அவர்களின் 100வது அகவை தினத்தை நினைவு கூர்ந்து வாழ்த்துக் கூறுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். பிறந்தோம் வாழ்ந்தோம் என்று இல்லாமல் பிறவியின் கடமையை நன்கு உணர்ந்து தன்னையும் தன்னைச் சார்ந்த மக்களையும் நல்வழிப்படுத்திய பெருமையை தனதாக்கிக் கொண்டவர். இவரது மன உறுதியும், தளராத சிந்தையும் இவரது செயற்பாடுகளினூடாகத் துல்லியமாக வெளிப்படுகின்றது. தனக்கென வாழாமல், பிறரின் பொறாமை அழுக்காறு என்பவற்றை அவர்களிடம் இருந்து களைய வேண்டும் என்ற சிந்தையுடன் மக்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து வழிப்படுத்திய சீராளன் இன்று எம்மத்தியில் இல்லாவிட்டாலும் அவரின் புகழுடன் எமது மனத்திரையில் நிலைத்து நிற்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. சைவப்பண்புகளை படிப்பதுடன் மட்டுமல்லாமல் ஆசாரசீலராகக் கடைப்பிடிக்க வழிகாட்டியதுடன் இன்று வரை இணுவில் வாழ் மக்கள் "தலைவரின் வழியே தம் வழி" என வாழ்வதுடன் தலைவனின் பெயர் போற்றி விழா எடுப்பது திரு.வ.நடராஜா அவர்களின் ஆத்மசாந்திக்கு வழிவகுக்கின்றது என்றால் மிகையாகாது.

"வாழிய அவர் புகழ் பல்லாண்டு"

ப.விக்னேஸ்வரன்,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் மத்திய கல்லூரி
## J/INUVIL CENTRAL COLLEGE

*Inuvil,*
*Chunnakam.*

*Tel: 021 222 7551*

இணுவில்,
சுன்னாகம்.

23/07/2010

*Principal*
**Mr.A.Sathananthan**
B.Com., Dip.In.Edu., SLPS 2 - 1

*Deputy Principal*
**Mr.M.Uthayakumaran**
B.Com., Dip.In.Edu., S.L.T.S 1




# அதிபரின் வாழ்த்துச் செய்தி

இணுவில் சைவமகாஜன வித்தியாலயத்தின் அதிபராகவும், சிறந்த சமூக சேவையாளராகவும், விளங்கிய திரு. வ. நடராசா அவர்களின் நூறாவது அகவை நிறைவு ஆண்டில் வெளியிடும் மலரிற்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இணுவில் மத்திய கல்லூரி முன்னர் சைவமகாஜன வித்தியாலயமாக இருந்த வேளையில் ஆசிரியராக, அதிபராகப் பணிசெய்து மிகவும் அக்கறையுடன் உழைத்த உத்தமர், திரு. வ. நடராசா அவர்களாவர். கல்விப்பணியுடன், சமூகப்பணிகளையும் நிறைவாகச் செய்து கிராமத்தில் புகழ்பூத்த ஒருவராகத் திகழ்ந்தவர். அவரது சேவைதனை மதிப்பளித்து, இளைய தலைமுறையினரும் ஏனையவர்களும் கல்லூரியின் படிநிலை வளர்ச்சியினை அறியும் வகையில் நூறாவது அகவை பூர்த்தி ஆண்டில் இம் மலரினை வெளியிடுவது காலத்தின் தேவையாகும்.

சைவ மகாஜன வித்தியாலயம் 1992இல் இணுவில் மத்திய கல்லூரியாக மாற்றப்பட்டுப் பல அதிபர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளது. கல்லூரி தற்போது மாகாணமட்ட, தேசியமட்ட விருதுகளைப் பல்துறைகளிலும் பெற்று ஒளிவீசிக் கொண்டிருக்கின்றது. பேச்சு, நடனம், நாட்டிய நாடகம், சித்திரம் போன்ற பல்வேறு நிகழ்வுகளில் எமது கல்லூரி மாணவர்கள் தேசியமட்ட விருதுகளைப் பெற்று வருகின்றார்கள். அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய, சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் என்போர் பாராட்டுக்குரியவர்கள். இக் கல்லூரியின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களாக அதிபர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என்போர் திகழ்கின்றனர். இவை மட்டுமன்றி இக் கல்லூரி மேலும் பல சாதனைகளைத் தேசிய மட்டம்வரை பெற்று 1AB தரப் பாடசாலையாக உயர்த்தப்பட்டு விரிவான கல்விச் சேவைதனை வழங்கிட அனைவரதும் ஒத்துழைப்பினையும் அவாவி நிற்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையினரின் வளர்ச்சிக்காக, அதிபராகப் பதவி வகித்த காலத்திலும், பின்னரும் திரு. வ. நடராசா அவர்கள் ஆற்றிய பணிகள் பல. எல்லோர் மனத்திலும் பதிந்திருப்பதனை அவரிடம் கற்றுயர்ந்து நிற்கும் பலரிடமிருந்து அறிய முடிகிறது. அவரது குடும்பம் இன்றைய மாணவர்களது நலன் கருதி அமரர் அவர்களின் ஞாபகார்த்தமாக விஞ்ஞான ஆய்வுகூடத்தினைச் செப்பனிட்டு அமைத்துத் தந்தமை என்றும் நன்றியுடன் நினைவு கூரத்தக்கது.

---

மேலும், கல்லூரிக்கான பல்வேறு வளத்தேவைகளை அவரது குடும்பம் நிறைவு செய்ய உதவுமென கல்லூரிச் சமூகம் எதிர்பார்க்கின்றனர். பெற்றார்கள், பழைய மாணவர்கள், இக்கல்லூரி சார்ந்த நலன் விரும்பிகள் என்போர் பாடசாலையின் தேவைகளுக்கு உதவிட முன்வரவேண்டும்.

இந்நூல் வெளியீடு அமரர் அவர்களின் கல்லூரி வரலாற்றுக் காலத்தினை கோடிட்டுக் காட்ட உதவும் என்பது வெள்ளிடைமலை. வெளியீடு சிறப்புற அமைய வாழ்த்துவதுடன் விழாக் குழுவினரது முயற்சிக்கு, குறிப்பாக அவரது புதல்வர் திரு.ந.சச்சிதானந்தன் அவர்களுக்கும் மற்றும் கலாநிதி அமிர்தலிங்கம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரிதாகுக.

☆☆☆






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
அன்பே சிவம்

*Aru. Thirumurugan,* B.A., Dip. IN. Ed.,
Principal
Skandavarodaya College
Chunnakam, Sri Lanka



செஞ்சொற் செல்வர்
**ஆறு. திருமுருகன்**
28, கையிலாச பிள்ளையார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# செஞ்சொற் செல்வரின் செய்தி



இயற்கை வளமும், இறைவழிபாடும், இசை ஒலிகளும் இரக்கமுள்ள ஈரநெஞ்சுடைய மனிதரும் நிறைந்த திருவூர் இணுவில். இப்பதியில் கல்வி வளம் தந்த உபாத்தியாயர் வரிசையில் உயர்திரு நடராசா உபாத்தியாயர் உன்னத மதிப்புப் பெற்றவர். தலைமை வாத்தியார் என்ற நாமத்தால் ஊர்மக்கள் இன்றும் நினைத்து வணங்கும் சிறப்புக்குரியவர். இப் பெருமகனார் செய்த கல்வித்தொண்டு மறக்க முடியாதது. இணுவில் சைவமகாஜனா வித்தியாசலையில் பலநூறு ஏழை மாணவர்களின் வாழ்வுக்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கு என்றால் மிகையாகாது. இப்பெருமானாரின் நூற்றாண்டு குறித்து விழா எடுத்து மலர் வெளியிடுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகின்றேன். இவரது நல்லாசிரியப் பணியால் நன்மை பெற்ற இணுவில் வாழ்மக்கள் இதயங்களில் அமரர் நடராசா உபாத்தியாயர் அவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதன் அடையாளமே நூற்றாண்டு விழாவுக்கான காரணம் எனலாம். பண்புடையார் பட்டுண்டு உலகு என்னும் வள்ளுவரின் கருத்துக்கு அமையப் பண்பினால் உயர்ந்த பெருந்தகைகளை படித்தவர்கள் மட்டுமல்ல பாமர மக்களும் போற்றுவர். எல்லா மக்களுடனும் மிகவும் எளிமையாகப் பழகும் பண்பு மிக்கவர் இவர். விவசாயிகளின் நலத்துக்காக அரும்பாடுபட்டவர். விளையாட்டுத்துறைகளில் பெரும் ஆர்வம் உடையவர். விளையாட்டு மைதானம் இல்லாத பாடசாலை என்ற குறையை நீக்க இணுவில் எச்சாட்டி என்ற பகுதியில் மைதானத்தை உருவாக்கி பாடசாலைச் சிறார்கள் மகிழ்வுறச் செய்தவர்.

ஆன்மிக நாட்டம் மிக்க இவரது சில சேவை மறக்க முடியாதது. இவரது தலைமைந்தன் திரு. ந. சச்சிதானந்தன் அவர்கள் தந்தை வழியில் இலண்டன் மாநகரில் சைவம் தழைத்தோங்க வழி செய்தவர். உலக சைவமகாநாட்டை இலண்டனில் ஏற்படுத்தியதுடன் பல நூறு தமிழ் அறிஞர்களை இலண்டன் மண்ணுக்கு அழைத்து மகிமைப்படுத்தியவர். எனது முதல் வெளிநாட்டுச் சொற்பொழிவுக்கு இவரே வித்திட்டார். இன்று திரு. நடராசா உபாத்தியாயரின் நினைவுகளை மீண்டும் நினைந்து போற்றக் கிடைத்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க காலம் – காலமும் கருத்தும்

**கலாநிதி வ. மகேஸ்வரன்**

தமிழ் இலக்கிய வரலாறு என்பது இன்று பலராலும் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து பல நூல்களாகவும் தொகுதிகளாகவும் ஆராயப்பட்டு பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. வரலாறுஎன்ற பதத்திற்குப் புறம்பாக இலக்கியத்தை வரலாறாக்கி அதனூடாக மொழி இலக்கியம், பண்பாடு என்பவற்றைக் காணும் ஆய்வு அணுகுமுறை என்பது மேலைத்தேயத்தவரால் எமக்கு அறிமுகப்படுத்தப்பட்டதாகும். தமிழில் வரலாற்று எழுது முறைமையை ஈழத்தவரான சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களே முதலில் கட்டமைத்தார். அவர் தமது வீரசோழியப் பதிப்புரையிலே தமிழ் இலக்கிய வரலாற்றைக் காலகட்டங்களாக வகுக்க முனைந்துள்ளார். தமது தமிழ் இலக்கிய வரலாறு என்பது காலங்களை அல்லது நூற்றாண்டுகளை அடிப்படையாகக் கொண்டும், அரசுகளை அடையாளப்படுத்தியும், இலக்கியப் போக்குகளை அடிப்படையாகக் கொண்டும் எழுதப்பட்டுள்ளன. இன்றுவரை தமிழ் இலக்கிய வரலாறு தொடர்புடைய நூல்கள் நூற்றுக்கும் மேற்பட்டவை வெளிவந்துவிட்டன. எனினும் ஈழத்தவரான பேராசிரியர் வி.செல்வநாயகம் எழுதிய தமிழ் இலக்கி வரலாறு என்ற நூலே இன்றுவரை தோன்றிய நூல்கள் பலவற்றுக்கு ஆதார நூலாக விளங்குகின்றது என்பதை மறுப்பாரில்லை. பொதுவாக தமிழ் இலக்கிய வரலாற்றுக் கால கட்டங்கள் என வகுக்கப்பட்டவற்றுள் முதல் காலமான சங்ககாலம் பற்றியும், சங்க இலக்கியங்கள் பற்றியும் காலத்துக்குக் காலம் தமிழ்ச்சூழலில் நிகழ்ந்த கருத்துநிலைகளை ஒரு நேர்கோட்டுப்பார்வையில் தொகுத்துத் தருவதாகவே இக்கட்டுரை அமைகிறது.

சங்க காலம், சங்க இலக்கியம் என்ற கருத்தாடலில் முதன்மை பெறும் விடயம் "சங்கம்" என்ற சொல் பற்றியது. சங்கம் என்ற சொல் வடமொழிச் சொல் என்றும், கி.பி 470 பின்னரே தமிழ் நாட்டில் சமணசங்கம் ஒன்று வச்சிர நந்தி என்ற சமணதுறவியால் உருவாக்கப்பட்டது. சங்கம் என்ற சொல்லும், புலவர் கூட்டமைப்பும் இல்லாத காலமொன்றிற்குச் சங்க காலம் என்று பெயரிடுதல் முறையன்று எனச் சிலர் வாதிடுவர். "சங்கம்" சங்ககாலம், முச்சங்கங்கள் என்ற சொல்லாடல்கள் யாவும் இறையனார்என்பவரால் எழுதப்பட்ட "களவியல்" என்ற நூலுக்கு பல்லவர் காலத்தில் எழுதப்பட்ட உரையினாலேயே கட்டமைக்கப்பட்டது என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. தமிழகத்தில் நிலைபேறாக்கம் பெற்ற பௌத்த,சமண சங்கங்களுக்கு எதிரான கருத்து நிலையில் சைவத் தமிழ்ப்பண்பாட்டை முன்நிறுத்தி சங்கம், முச்சங்கம் என்ற சொல்லாடலை வலிந்து தமிழ்ச் சமூகத்துள் நிலைபேறாக்கம் செய்வித்த பெருமை இறையனார் களவியல் உரைகாரரையே சாரும் என்றும் குறிப்பிடுவர். எனினும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்பவன் (நெடுநல் வாடையின் பாட்டுடைத் தலைவன்) பாடியதாகக் கூறப்படும் புற நானூற்றுச் செய்யுள் (புறம்) ஒன்றில் "மாங்குடி மருதன்" என்ற புலவனின் தலைமையில் புலவர் அவை ஒன்று இருந்தது என்ற ஆதாரத்தை முன் நிறுத்தி சங்க காலத்தில் புலவர் அவை, கூட்டு, புணர் எனச் சங்கங்கள் இருந்ததையும் வெளிப்படுத்தியுள்ளனர். எது எவ்வாறெனினும் சங்கம் என்ற சொல்லாடல் தமிழர் சமூகத்தில் மிகவும் ஆழமாக வேரூன்றிய ஒன்றாக அமைந்துவிட்டது. தமிழகத்தின் பண்பாட்டு அரசியல் அதன் நிலை பேறாக்கத்துக்குத் துணை நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சங்க காலம்" என்ற பதம் கிறீத்து சகாப்த ஆண்டுக் கணக்கினுள் எந்தக் கால எல்லையைக் குறித்தது என்பதும் காலத்துக்குக் காலம் மாறிவரும் கருத்து நிலையாக உள்ளது. கால்டுவெல் காலத்திலிருந்து இன்றுவரை பல்வேறு அறிஞர்கள் பல்லேறுவிதமான காலப்பகுப்புகளை வகுத்துள்ளனர். கால்டுவெல் இதனை கி.பி 8 முதல் கி.பி - 13 வரை என வகுப்பார். இதனையே சி - வை தாமோதரம்பிள்ளை கி.பி 10 முதல் கி.பி 150 வரை என வரையறை செய்வார். எம் சிறினிவாச ஐயங்கார் இதனை கி.பி 600 தொடக்கம் கி.பி 500 வரை எனப்பாகுபடுத்துவார். எஸ். வையாபுரிப்பிள்ளை கி.பி 100 முதல் கி.பி 350 வரை என்பார். திரு. திருமதி கெப்ளபிபா ஜேசுதாஸன் கி.பி 150 தொடக்கம் கி.பி 250 வரை எனக் குறிப்பிடுகின்றனர். மு.வரதராசன் கி.மு 500 தொடக்கம் கி.பி 200 வரை என்றும், கமில்ஸ்வெலபில் கி.மு 150 தொடக்கம் கி.பி 250 வரை என்கிறார். இவ்வாறாகப் பல்வேறபட்ட கருத்து நிலைகள் காலம் பற்றிய ஆராய்ச்சியில் வெளிவந்துள்ளன. எனவே இதனை உறுதியிட்டு கூறமுடியாத சூழல் நிலவி வந்தது. எனினும் கி.பி 600 இற்கு முற்பட்ட இக்காலத்தை சமூக உருவாக்கக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆராய்ந்த அறிஞர்கள் கி.பி 100 தொடங்கி கி.பி 450 வரையில் உள்ள காலமே சங்ககாலம், மூவேந்தர் ஆட்சிக்காலம் என்று வரையறுக்கப்பட்ட காலம் என்று பொதுவான முடிவிற்கு வந்துள்ளனர் தமிழில் இலக்கிய வரலாறு எழுதிய பேராசிரியர் க.சிவத்தம்பி இவ் வகுப்பில் உடன்பாடு உடையவராக உள்ளார் ஆயினும் மிக அண்மையில் வெளிவந்த ஐராவதம் மகாதேவன் அவர்களின் "பண்டைத் தமிழ்க் கல்வெட்டுக்கள்" *(Early Tamil Inscription)* என்ற நூல் மேற்கூறிய கருத்து நிலைகள் பாகுபாடுகள் யாவற்றையும் புரட்டிப்போட்டு விட்டது. பிராமிக்கல் வெட்டுகள் குறிப்பிடும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கிய அறிஞர்கள் சங்ககாலத்தின் கால எல்லையை கிறீஸ்தவ சகாப்பத்திற்கு முன்பாக பல ஆண்டுகள் முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர்.

சங்ககாலம் என்ற கருத்தாடலில் இன்னோர் முக்கிய இடையீடு சங்கமருவிய காலம் பற்றியதாகும். பேராசிரியர் செல்வநாயகம் முதலியோர் இதனை தனிக்காலமாக வரையறை செய்திருப்பினும் பல அறிஞர்கள் சங்க இலக்கியங்களையும், மருவிய கால இலக்கியங்களையும் ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியாகவே காண்பர். *Post Chang am Classical Period, Classical literature* என்ற ஆங்கிலச் சொல்லாடல்கள் யாவும் அவ்விரு காலங்களையும் ஒரு தன்மையுடைய காலங்கள் என்று குறிப்பிடுவர். மேலும் சங்க காலத்தை, தொகை நூல்களின் காலம், மூவேந்தர் ஆட்சிக்காலம் என்று குறிப்பிடுவதற்கும் மேலாக சமணகாலம், பௌத்தகாலம் என்று கட்டமைத்த பாகுபாடுகழும் உண்டு என்பதை மனங்கொள்ளல் வேண்டும்.

சங்ககாலத்தை விளக்கிக் கொள்வதில் அக்கால இலக்கியங்களுக்கும் முக்கிய பண்புண்டு. முதலில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற தொகுப்பு கருத்து நிலைகள் பற்றி நோக்க வேண்டியுள்ளது. சங்கப்பாடல்கள் உதிரிகளாகவே ஆங்காங்கே எழுதப்பட்டிருத்தல் வேண்டும். தொகுத்தவர்களே அவற்றுக்கான முறையியலைத் தீர்மானித்துக் கொண்டு இவற்றைத் தொகுத்துள்ளனர். தொகுத்தோர், தொகுப்பித்தோர் என இருவகையாக இவர்கள் செயற்பட்டுள்ளனர்.

| **நூல்கள்** | - | **தொகுத்தோர்** | - | **தொகுப்பித்தோர்** |
|---|---|---|---|---|
| அகநானூறு | - | மதுரை உப் பூ குடிக் கிழான் மகன் உருத்திர சன்மன் | - | பாண்டியன் உக்கிரப் பெருவழுதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| குறுந்தொகை | - | பல்துறை முற்றிய கூடலூர் கிழார் | - | யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை |
| கலித்தொகை | - | நல்லந்துவனார் | - | தெரியாது |
| ஐங்குறு நூல் | - | பூரிக்கோ | - | தெரியாது |
| நற்றிணை | - | தெரியாது | - | பன்னாடு தந்த மாறன் வழுதி |

புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியவற்றைத் தொகுத்தோர் தொகுப்பித்தோர் பற்றித் தெரியவில்லை. எனினும் பதிற்றுப்பத்து முற்று முழுதாகச் சேர மன்னர்கள் பற்றியே பாடப்பட்டமையால் சேர மன்னர்களுடைய அனுசரணையுடனேயே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பார் பேராசிரியர் கா.சிவத்தம்பி மேற்படி தொகுப்பு முயற்சிகள் அவை பாடப்பட்ட காலத்திற்கு சற்றுப் பிந்திய காலத்திலேயே நிகழ்ந்திருக்க வேண்டும் என்பார் அறிஞர்.

பத்துப்பாட்டு என்ற தொடர் கி.பி 11 அல்லது 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கொள்ளப்படும் பன்னிருபாட்டியல் என்ற பாட்டு நூலிலேயே முதன் முதலில் குறிப்பிடப்படுகின்றது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் தொடர்கள் தொல்காப்பியத்துக்கு பேராசிரியர் எழுதிய உரையிலும் (தொல், பொருள் 362, 3920 நன்னூலுக்கான மயிலை நாதர் உரையிலுமே (நன்: 387) முதன் முதலிற் காணப்படுகின்றது எனவே எட்டத் தொகை, பத்துப்பாட்டு என்ற தொகை குறித்த தொடர்கள் பிற்காலத்திலேயே நிலவின என்பதையும் மனங்கொள்ளல் அவசியமானதாகும்.

மேற்கூறிய விடயங்களுக்குப் புறம்பாக சங்க இலக்கியங்களும் சங்ககாலமும் தமிழ்ச் சூழலில் பல்வேறு பண்பாட்டுப் பரிமாணங்களைப் பெற்றுள்ளன. சங்ககாலம், சங்கம், சங்கஇலக்கியங்கள் என்ற பதங்கள் மிக நீண்ட காலமாகத் தமிழ்ச் சூழலில் நிலவிவந்துள்ளன. நமது தேவாரங்களையும் பாசுரங்களையும் படிக்கும் ஒருவருக்கு "சங்கம்" என்ற சொல்லாடல் பெற்ற முக்கியத்துவத்தை உணருதல் சாத்தியமாகலாம். அத்துடன் சங்க இலக்கியங்கள் ஏட்டுச்சுவடிகளிலே தேங்கிக்கிடந்தமையால் அவை பெரும்பாலான கற்றறிந்தோரைத் தவிர பொதுமக்களுடைய அறிகைக்கு எட்டாதகவாயிருந்தன. எனினும் 19 ஆம் நூற்றாண்டின் பின் சங்க இலக்கியங்கள் சி.வை.தாமோதரம்பிள்ளையினதும், உ.வோ.சாமிநாதையரினதும் பதிப்பு முயற்சியினால் அச்சுவாகனம் ஏறியதன் பின் அவை பொதுமக்கள் மயப்பட்டன. இதனை அடியொற்றி பல

வரலாற்று மீட்டுருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் வி.கனகசபைப்பிள்ளையின் *Tamil Eighteen Hundved Tears age* - என்ற நூல் மிகவும் கணிப்பிற்கு உள்ளானது. இதனை அடியொற்றி தமிழர் வரலாறு, தமழர் பண்பாடு என்பவற்றை ஆராய்ந்து மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சிகள் பலவாறாக இடம் பெற்றன.

தமிழகச் சூழல் வடமொழியினதும் அதன் வழிவந்ததுமான ஆரியப்பண்பாட்டினால் பாரம்பரியமாக நிலவிய தமிழ்மொழிக்கும், அதன் பண்பாட்டுக்கும் பாரிய பின்னடைவு காலந்தோறும் நிலவி வந்துள்ளது. தமிழகப் பண்பாட்டை ஆரியக் கண் கொண்டு தான் பார்க்கமுடியும் என்ற ஒரு நெருக்கடியான சூழலிலேதான் சங்க இலக்கியங்கள் பதிப்புகளூடாக மீளவும் வெளிவந்தன. இது தமிழ் ஆர்வலர்க்கும், தமிழ்ப்பண்பாட்டுக் காவலர்க்கும் பெரு விருந்தாக அமைந்தது. இதனால் தமிழ்ப் பண்பாட்டின் வேர்களாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமாக *(Origin)* சங்ககாலம் அவர்களால் முன்நிறுத்தப்பட்டது. சங்ககாலம் தமிழர் வரலாற்றில் பொற்காலமாகக் கட்டமைக்கப்பட்டமைக்கப்பட்டது. அகத்திணைக் காதல் வாழ்க்கை பெரிதும் சிலாகித்துப் பேசப்பட்டது. "புறநானூறு" வீரத்தின் விளைநிலமாகச் சித்திரிக்கப்பட்டது. தமிழரது வீரப்பண்பு இதன்மூலம் விதந்து பேசப்பட்டது. வீரத்தாய்கள், வீரமறவர்கள், வாழ்ந்த காலமாகவும் அது பேசப்பட்டது. இவ்வாறான பெருமிதமான உணர்வுப் பார்வையைத் தன்முனைப்புக் கொள்கை என்று விமரிசகர்கள் குறிப்பிடுவர்.

மேற்குறித்த விடயங்களுக்குப்புறம்பாக சங்ககாலம் என்பது சமூகவியல் அடிப்படையில் நோக்கப்பட்டது. மக்கள், வாழ்வியல், அரசுகள் பண்பாடு முதலியன சமூகவியற் கண் ணோட்டத்தில் அணுகப்பட்டது. இனக்குழு மக்கள் வாழ்வில் இருந்து அரசுடமை வாழ்விற்கு, உணவு தேடும் வாழ்விலிருந்து உணவு உற்பத்தி வாழ்விற்கு மாறிய காலகட்டத்தை சங்கப்பாடல்கள் காட்டுகின்றன. என மார்க்னிய ஆய்வாளர் கருத்துக்களை முன்வைத்தனர். சங்க இலக்கியங்களை கிரேக்க இலக்கியங்களுடன் ஒப்பிட்டுக் காணும் முயற்சிகள் இடம் பெற்றன. இவ்வாறான முயற்சிகள் யாவும் பெரும்பாலும் பல்கலைக்கழகம் ஆய்வாளர்களாலேயே மேற்கொள்ளப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலங்களில் சங்க இலக்கியங்களை அகழாய்வுச்சான்றுகள், கல்வெட்டுச்சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுகளை முன்நிறுத்தி சங்ககாலத்துக்கும், இலக்கியங்களுக்கும் வலுச்சேர்க்கும் முயற்சிகள் நடந்தேறின. சங்க இலக்கியங்களைப் புரிந்து கொள்வதிலும், அவற்றை மெய்ப்பிப்பதிலும் அவ்வாறான ஆய்வுகள் பெருந்துணை புரிந்தன. இந்தவகையில் பேராசிரியர் கா.இராஜன், பேராசிரியர் சுதர்ஸன் செனிவிரட்ண, ஒஸ்மண்ட் பொப்பியாராச்சி, ஐராவதம் மகாதேவன் முதலியோருடைய ஆய்வுகள் பயனுள்ள தகவல்கள் பலவற்றைத் தந்தன. பண்டைய தமிழ் வழி இனக்குழுமங்களின் வாழ்வு, புலப்பெயர்ச்சி, நிலவியல், சமூக உருவாக்கம் *(Social For nation)* அரசுருவாக்கம் *(State For nation)* வணிகம், துறைமுகப்பட்டினங்கள், கருவிகள், ஆபரணங்கள், மணிகள் எழுத்து முதலான பல விடயங்கள் இவற்றால் துலக்கம் பெற்றன. சங்ககாலத்தை புதுப்பரிமாணத்துடன் இவை முன் நிறுத்தின.

இறுதியாக, அண்மைக்காலங்களில் சங்கம், சங்க இலக்கியம் என்ற விடயங்கள் கட்டுடைக்கப்பட்டு அவை மீள்வாசிப்புக்கு உட்படுத்தப்பட்டன. சங்க இலக்கியங்கள் காட்டும் சமூகம், சமூகப்படிநிலைகள், அது குறிப்பிடும் காதலும் வீரமும், சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தொன்மங்களினதும் பழமரபுக் கதைகளின் உண்மைத் தன்மை, சங்க இலக்கியங்களின் தொகுப்பு முயற்சிகளின் அரசியல் பின்னணி கருத்துச்சார்புகளின் பின் புலம், சங்க இலக்கியங்களின் திணை, துறைகளை தொல்காப்பியத்தின் துணையின்றி நோக்குதல் அல்லது தொல்காப்பியத்தின் துணையுடன் அவற்றை நோக்குவதால் ஏற்படும் கருத்துச் சிக்கல்கள் எனப்பல்வேறு தளங்களில் சங்க இலக்கியம் பற்றிய கருத்தாடல்கள் நிகழ்ந்துவருவதை அவதானிக்கலாம் இந்த வகையில் பேராசிரியர்களான சிலப்பு செல்வராசு, மாதையன், மௌனகுரு, ராஜ்கௌதமன், கலாநிதி அம்மன்களி முருகதாஸ் ஆகியோர் இவை தொடர்பான புதிய பரிமாணங்களைத் தந்துள்ளனர் எனலாம்.

இவ்வாறாச் சங்ககாலம், சங்க இலக்கியம் என்ற விடயங்கள் காலத்துக்குக்காலம் பல்வேறு தளங்களில் நோக்கப்பட்டு அவை தொடர்பான கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. ஆய்வுகள் நுண்ணிதாக மேன்மேலும் நிகழுமிடத்து சங்க இலக்கியங்களும், காலமும் மேன் மேலும் விரிபடும் எல்லைகளை நோக்கி நகரக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாவியவை:


செல்வநாயகம். வி - (2003) தமிழ் இலக்கியவரலாறு, மீள் அச்சு, குமரன் பதிப்பகம். சென்னை.

சிவத்தம்பி. கா - (2000) தமிழில் இலக்கிய வரலாறு என்.சி.பி.எச. சென்னை.

கைலாசபதி. க - (1986) ஈழத்து இலக்கிய முன்னோடிகள் மக்கள் வெளியீடு. சென்னை.

வேலுப்பிள்ளை. ஆ - (1999) தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் ஸ்ரீ லங்கா வெளியீடு. யாழ்ப்பாணம்.

செல்வராசு. நா - (2005) சங்க இலக்கிய மறு வாசிப்பு காவ்யா. சென்னை.

கைலாசபதி. க - (2006) தமிழில் வீரநிலைக் கவிதை குமரன் புத்தக இல்லம். சென்னை.

அம்மன்கிளி முருகதாஸ் (2006) சங்கக் கவிதையாக்கம் மரபும் மாற்றமும் குமரன் புத்தக இல்லம்.

மாதையன். பெ - (2001) வரலாற்று நோக்கில் சங்க இலக்கியப்பழமரபுக்கதைகளும் தொன்மங்களும் தமிழ்ப்பல்கலைக்கழகம். தஞ்சாவூர்.

சுப்பிரமணியன். கா - (1993) சங்ககாலச் சமுதாயம் என்.சி.பி.எச. சென்னை.

இராஜன். கா - (2005) சங்க இலக்கியமும் அகழாய்வும் கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடு.

மௌனகுரு - (2003) சங்ககால சமூகமும் இலக்கியமும் - ஒரு மீள் பார்வை. கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடு.

ராஜ்கௌதமன். - (2006) பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும். தமிழினி. சென்னை.

Seneviratne. S - (1993) CANKAM TEXTS AS A SOURCE FOR THE ARCHAEO LOGIST. Thaninayam memorial Lecture 1992/93.


☆☆☆



சிறிய தந்தையார்

**அமரர் சிதம்பரநாதர் மயில்வாகனம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரதும் சுவாமி விபுலானந்தரதும் கல்விச் சிந்தனைகள்



- பேராசிரியர் சபா ஜெயராசா

பின் காலனியச் சிந்தனைகளும், செயற்பாடுகளும் கல்வி வடிவிலே எவ்வாறு எழுச்சி கொண்டன என்பவற்றைக் கண்டறிவதற்கு ஆறுமுகநாவலரதும் சுவாமி விபுலானந்தரதும் (1892-1947) சிந்தனைகள் சான்றாகவுள்ளன. காலனிய மறுதலிப்பினதும், எதிர்ப்பினதும் கல்வி சார்ந்த செயல்வடிவங்களை அவர்கள் முன்னெடுத்தனர். நாவலரது கல்விச் சிந்தனைகள், சைவசித்தாந்தக் கருத்தியலையும், சுவாமி விபுலானந்தரின் கல்விச் சிந்தனைகள், வேதாந்தக் கருத்தியலையும், அடியொற்றி எழுந்தன. அவர்களின் கருத்தியலின் தெரிவு நடைமுறைகளிலே நேரடியான வெளிப்பாடு கொண்டது.

இருவரும் ஆங்கில மொழிப் புலமையுள்ளவர்களாக இருந்தமையால் பழைய நோக்குகளையும், கல்வியிற் புதுமைகளையும் உராய்வின்றி ஒருங்கிணைத்துக் கொண்டனர். நாவலர் நவீன மரபு தழுவிய பாட நூலாக்க முயற்சியை மேற்கொண்டார். சுவாமி விபுலானந்தர் நவீன பாட்டுக்குரிய இலக்கியங்களையும், அறிவியலையும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்த்தார்.

ஆறுமுகநாவலரின் கல்விக் கருத்தியல் சைவசித்தாந்தம் தழுவி மேலெழுந்தது. பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மை சைவத்தின் உள்ளடக்கம். அவை நித்தியப் பொருள்களாக விளக்கப்படுகின்றன. பதி என்பது சிவனைக் குறிப்பிடுகின்றது. பசு உயிர்களையும், பாசம் உயிர்களைப் பீடித்திருக்கும் மலங்களையும் குறிப்பிடுகின்றன. உயிர்கள் அனுபவிக்கின்ற துன்பங்களை ஒழித்துப் பேரின்பம் தருவதற்கென இறைவனால் படைத்தல், காத்தல், அளித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்கள் புரியப்படுகின்றன. உயிர்கள் அநாதியாக இருப்பதினால் இறைவன் அவற்றைப் படைத்தல் இல்லை. உயிர்களுக்குரிய உடலே இறைவனாற் படைக்கப்படுகின்றது. மலங்களில் இருந்து ஈடேற்றம் பெறுவதற்குரிய வழிகளாகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவை குறித்துரைக்கப்படுகின்றன. அவற்றை அடியொற்றிக் கடவுள் வழிபாடு, வையத்துள் வாழ்வாங்கு வாழுதல், தொண்டு செய்தல் முதலியவற்றை மேற்கொண்டு உயர்நிலையை அடைவதற்குரிய சாதனமாக ஆறுமுகநாவலர் கல்விச் சிந்தனையைக் கட்டமைப்புச் செய்துள்ளார். "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது அவரது கூற்று.

சுவாமி விபுலானந்தரின் கல்விக் கருத்தியல் வேதாந்த நெறி தழுவி மேலெழுந்தது. காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இந்தியாவில் விரிவடைந்த இந்து மறுமலர்ச்சி இயக்கங்களுக்கு வேதாந்தம் கருத்தியல் வலுவூட்டியது. இனம், மொழி, சமூகநிலை என்பவற்றில் வேறுபட்டிருந்த மக்களை ஒன்றிணைப்பதற்கும், வேதாந்தக் கருத்தியல் துணை நிற்கின்றது. "மனிதத் தன்மையில் தெய்வத்தன்மை உள்ளடங்கி நிற்கின்றது." என்ற வேதாந்தக் கருத்து அவ்வாறான ஒன்றிணைப்புக்குரிய கருத்தியற் பலம் வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் கல்விச் செயற்பாடுகள் வாயிலாக ஒன்றிணைப்பதற்குரிய பலமாக வேதாந்தக் கருத்தியலைச் சுவாமி கண்டார். அந்த ஈர்ப்பு அவரை முழுநேரத் துறவியாக்கியது. வேதாந்தத்திலே குறிப்பிடப்படும், ஞானயோகம், பக்தியோகம், கருமயோகம், ராஜயோகம் அனைத்தும் பற்றிய தெளிவைக் கையளிப்பதற்குக் கல்வியை உன்னத நிலையிலேயே பயன்படுத்தமுடியும் என்ற நிலைக்கு உட்பட்டவராக சுவாமி விளங்கினார். அவர் உருவாக்கிய கல்வி நிலையங்களிலே சாதிமத வேறுபாடற்ற சமத்துவம் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரர் வித்தியாலயத்தில் தலித்துக்கள் சேர்க்கப்பட்டனர். மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலே இஸ்லாமியர்களுக்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.

கல்வியை நிறுவன மயப்படுத்தி வழங்குதல் வாயிலாகவே சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் அறிவைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்ற அறிவுத் தாராண்மைக் கருத்தியலை இருவரும் கொண்டிருந்தனர். ஆறுமுகநாவலர் வரன்முறையான கல்விச் செயற்பாட்டிற்குரிய சைவப்பிரகாச வித்தியாசாலைகளை அமைத்தார். சுவாமி விபுலானந்தர் காரைதீவு சாரதா வித்தியாலயத்தையும், மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தையும் நிறுவினார்.

முறைசாராக் கல்வியிலும், இருவரும் கவனம் செலுத்திய வேளை அவற்றினூடாக நாவலர் சைவக் கருத்தியலையும், சுவாமி விபுலானந்தர் வேதாந்தக் கருத்தியலையும் முன்னெடுத்தனர். முறைசாராக் கல்வியில் பிரசங்கமரபு அக்காலத்தில் வலிமையான சாதனமாயிற்று. சமய மறுமலர்ச்சியை மக்கள் மயப்படுத்த அந்த மரபு உறுதுணையாயிற்று. சமயக் கருத்தியலையும் ஒன்றிணைத்துக் கையளிப்பதற்குரிய செயற்பாடுகளிலே இருவரும் அச்சு ஊடகங்களை வளமாகப் பயன்படுத்தினர்.

ஐரோப்பிய அறிவொளி இயக்கம், மற்றும் மறுமலர்ச்சி ஆகியவை பற்றிய அறிவும், அனுபவங்களும் இருவருக்கும் கிடைக்கப்பெற்றன. அதேவேளை காலனித்துவ நிலவரங்களாற் கைவிடப்பட்டிருந்த கலை இலக்கியங்கள் பற்றிய மறைபொருள்கள் பற்றிய ஆழ்ந்த அறிவும் இருவரிடத்தும் நிலைபெற்றிருந்தன. ஏட்டுச் சுவடிகள் பலவற்றை ஆறுமுகநாவலர் தேடிப் பரிசோதித்துப் பதிப்பித்து வெளியிட்டார். சுமார் எண்பது நூல்கள் வரை அவரால் வெளியிடப்பட்டன.

பழந்தமிழர் இசைக்கருவிகளாகிய யாழையும், தொன்மையான தமிழ் இசை வடிவங்களையும் சுவாமி விபுலானந்தர் தேடியறிந்தார். அறிவொளி (ENLIGHTMENT) இயக்கத்தினதும் அதன்வழி எழுந்த விஞ்ஞானச் சிந்தனைகளினதும் செல்வாக்கிற்கு உட்பட்ட சுவாமியர்கள் புறவய அணுகுமுறைகளை அடியொற்றிய விஞ்ஞானக் கல்வியில் ஈடுபட்டார். பௌதிகவியலின் ஒரு கூறாகிய ஒலியியலை அடியொற்றி யாழின் இயல்பையும், வகைகளையும் விளக்கினார்.

தமிழ்மொழியின் ஆளுமைவளர்ச்சியையும் கல்வியின் விரிவாக்கத்தையும் இருவரது நடவடிக்கைகளும் ஒன்றிணைந்தன.

கல்வியின் உன்னத நோக்கங்களாகப் படைப்பாற்றல் மலர்ச்சியையும், புத்தாக்கங்களையும் இருவரும் வலியுறுத்தினர். நாவலரின் ஐம்பெரும் புத்தாக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமாறு :

1. தமிழில் முதன்முதலாகப் பிரசங்கம் என்ற கலையை உருவாக்கியமை.
2. கட்டுரை இலக்கியத்தைத் தமிழில் உருவாக்கியமை.
3. தமிழில் பாடநூல்களை எழுதியமை.
4. தமிழ் வசனநடையிற் குறியீட்டு முறையைப் புகுத்தியமை.
5. சைவ ஆங்கிலப் பாடசாலை அமைப்பைத் தோற்றுவித்தமை.

சுவாமி விபுலானந்தர் மேற்கொண்ட புத்தாக்கங்களை அடுத்து நோக்கலாம்.

1. கலைச் சொல்லாக்க முயற்சியைத் தமிழில் முன்னெடுத்தமை.
2. ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கும் திட்ப நுட்பங்களை உருவாக்கியமை.
3. தரவுகளை அடிப்படையாகக் கொண்டு யாழ். வகைகளை உருவாக்கியமை.
4. அநாதைச் சிறுவர்களுக்கான வதிவிடக் கல்வி இல்லத்தை வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஆரம்பித்தமை.
5. சமநிலைக் கலைத்திட்டத்தை சிவானந்தா வித்தியாசாலையில் அறிமுகம் செய்தமை.

இருவரும் தமது ஆக்க மலர்ச்சியைக் கவிதைகள் வாயிலாக வெளியிட்டு மாணவர்களுக்கு வழிகாட்டினர். எழுத்தறிவு பரவலாக வளர்ச்சியடையாத காலகட்டத்தில் அறிவுக் கையளிப்பில் இசைப்பாவின் முக்கியத்துவம் இருவராலும் உணரப்பட்டது. எடுத்துக்காட்டாக கதிர்காமசுவாமி மீது காவேரி இராகத்திலும் ஆதிகாலத்திலும் நாவலர் புனைந்த கீர்த்தனை ஒன்றைக் குறிப்பிடலாம்..

பல்லவி : உன்னிரு பாதந்தெரி சனஞ் செய்த பின்னரே
யுவகைக் கடலு லாழ்ந்தேனே.

அனுபல்லவி : தன்னிகரில் கதிரை தன்னில் வாழும் போதனே
சற்குண்ய பரிபூரண சண்முகநாதனே. (உன்)

சரணங்கள் : ஆதிநடு விறுதி நீங்கினோய் - சித்தோ
டசித்தாம் பிரபஞ்ச முற்றந் தாங்கினோய்
சோதி வடிவாய் நின்ற சூலபாணி புதல்வா
சூரணாதி மூவரைத் தொலைத்தருளும் முதல்வா (உன்)

சனன மரணத்துயரத் தாழ்கின்றேன் - இன்னுஞ்
சஞ்சலச் சாகரத்துள் வீழ்கின்றேன்
இன்னமும் பாரமுஞ் செய்யா தெனக்கு ருகுவா
யேதிலாத முத்தியின்பந் தருவாய். (உன்)

அருளுங் கருணைக் கடலல்லையோ முன்ன
ரமரரிடர கற்ற வில்லையோ
ஒரு விலெனது நோயை யோட்டுத லரமை
உன்னையே நம்பி வந்தேனுக் குருகாமை பெருமையா (உன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விபுலானந்தரின் இசைப்பாடலுக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு :

நீநீ சாச ரீ நீலவானிலே
நீசரி காக மா நிலவு வீசவே
மாம பாப தா மாலைவேளையே
மபத நீநி சா மலைவு தீருவோம்
சாச ரீரி சாலநாடியேள
சரிக மாம பா சலதி நீருளே
பாப தாத நீ பாலை பாடியே
பதநி சாச ரீ பல ரொடாடுவோம்.

இருவரும் மேற்கொண்ட மரபுவழி இசையின் மீட்டுருவாக்கம் பிரித்தானியக் காலனித்துவத்துக்கு எதிரான பண்பாட்டுக் காப்பரணாகவும், அமைந்தது. காலனித்துவத்தை மறுதலித்து இருவரும் மேற்கொண்ட கல்வி நடவடிக்கைகள் வருமாறு :

(1) தாய்மொழியைப் பயிற்றுமொழியாக்க நடவடிக்கைகள் மேற்கொண்டமை 1848ஆம் ஆண்டிலே நாவலர் தாம் ஆரம்பித்த சைவ வித்தியாசாலையிலே தாய் மொழிகளையப் பயிற்று மொழியாக்கினார். யாழ்ப்பாண இளைஞர்கழகக் கால்கோள்விழா கீரிமலையில் நிகழ்ந்தவேளை சுவாமிகளும் அதே கருத்தை வலியுறுத்தினார். .

(2) கட்டணம் அறவிடப்படமாட்டாது. கல்வி இலவசமாக வழங்கப்படல் வேண்டும். என்ற திட்டத்தை 1846 ஆம் ஆண்டிலே நாவலரின் ஆரம்பித்து வைத்தார். சுவாமி அவர்களும் தாம் ஆரம்பித்த பாடசாலைகளிலே இலவசக்கல்வியை ஏற்படுத்தினார்.

(3) பாடத்திட்டத்திலே சுதேச உள்ளடக்கம் இடம்பெறல் வேண்டுமென்ற கருத்தை இருவரும் வலியுறுத்தினர். நாவலின் பாலபாட ஆக்கம் சுதேச உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தது. மேலைத்தேய அறிவியலைச் சுதேச அறிகை மரபுகளோடு ஒன்றிணைத்து சுவாமி கற்பித்தார்.

"கல்வியின் நிறைவான நோக்கமாக நல்லொழுக்கம் அமையப் பெறுதல் வேண்டும் என்ற பொதுக் கருத்தியல் இருவரிடத்தும் காணப்பட்டது. ஒழுக்கம் பொதுநல நோக்கிலிருந்து மேலெழுதலை நாவலரின் பின்வரும் வசனம் சுட்டி நிற்கின்றது. "தன்பொருட்டு மாத்திரம் பிரயாசப்படுபவன் அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பான். அவ்வற்ற இன்பமோ மிக இழிந்தது"

கல்வியின் இலக்கு நல்லியல்பு கொண்ட மனித ஆக்கம் என்பதையும் நல்லொழுக்கக் கட்டுமான ஆக்கம் (CHARACTER BUILDING) என்பதனையும் சுவாமி தெளிவுபடுத்தினார். அக்கருத்தியலின் வளர்ச்சியில் இன நல்லிணக்கம், பண்பாட்டு நல்லிணக்கம், சமய நல்லிணக்கம் முதலியவை வலியுறுத்தப்பட்டன. அந்த நிலைப்பாட்டுக்கு வேதாந்த நெறியே பொருத்தமானதாக இருத்தலையும் அவர் கண்டறிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடும், நடைமுறையும் இருவரதும் கல்விச் செயற்பாடுகளில் இணைந்திருந்தன. எளிமையிலிருந்து சிக்கலுக்கு நகர்ந்து செல்லல். காட்சிப் பொருள்களிலிருந்து அருவப் பொருட்களுக்கு நகர்ந்து செல்லல் என்ற கற்பித்தல் முறையை இருவரும் பயன்படுத்தினர். நாவலரின் பாலபாட ஆக்கமும், சைவவினாவிடையும் எளிமை தழுவிய கற்பித்தலை புலப்படுத்தும். சுவாமிகளின் "வெள்ளைநிற மல்லிகையோ" கவிதையாக்கம் அவர் பயன்படுத்திய எளிமை வடிவத்துக்கு எடுத்தக்காட்டு. அதேவேளை இருவரும் உயர்ந்த வாசிப்பிற்குரிய சிக்கலான மொழிநடைகளையும், பயன்படுத்தினர். அந் நடவடிக்கைகள் அறிவுக் கையளிப்பின் பன்மைத் தளங்களைச் சுட்டிக் காட்டுகின்றன. அறிவுக் கையளிப்பு ஒற்றைப் பரிமாணம் கொண்டது அன்று என்பதை இருவரது செயற்பாடுகளும் துல்லியமாகப் புலப்படுத்துகின்றன.

மேலைப்புல அறிவுச் செல்வத்தைத் தாய்மொழித் தளத்தில் நின்று நுகர்தலும், வெளிப்படுத்தலும் இருவரதும் கல்வி நோக்கில் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

இந்துசமய மறுமலர்ச்சியை அடியொற்றிக் காலனித்துவக் காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளிலே இருவரது சிந்தனைகளும் பல நிலைகளிலே செல்வாக்குச் செலுத்தின.

☆☆☆

---



**சக ஆசிரியர்களுடன் ....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைக் கல்வியும் செலவும்

**பேராசிரியர் மா. சின்னத்தம்பி**
கல்வியியல் பேராசிரியர்
தலைவர் : சட்டத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

இலங்கையில் பொது மக்களுக்கான கல்வியறிவை வழங்குவது அரசின் பொறுப்பாகவும் கடமையாகவும் உணரப்பட்டுள்ளது. பொது மக்களதும் நிறுவனங்களினதும் வரிக் கொடுப்பனவுகளிலிருந்து பொதுக்கல்விக்காகவும் உயர் கல்விக்காகவும் செலவிடும் தொகை அரச நிதிக்கொள்கையின்படி அமைகின்றது. எல்லா மக்களும் கற்கும் வயதில் பாடசாலை முறைமையில் இணைந்து கொள்ள வேண்டும். என்ற உயர்ந்த இலட்சியத்தை நடைமுறைப்படுத்த முனையும் போது கல்விக்கான செலவு பற்றிய அம்சம் முக்கிய தடையாகவும் பரிசீலனைக்குரியதாகவும் அமைந்து விடுகிறது. பாடசாலைப் பலவீனங்களுடன் இது தொடர்புடையது. இத்தகைய பாடசாலை முறைமைக்கு அமைவான கல்வி ஏற்பாட்டில் பாடசாலைக் கல்வியின் செலவு பற்றி இங்கு ஆராயப்படுகின்றது.

## பலவீனம் மிக்க பாடசாலை முறைமை

கல்வி கற்றல் என்பது பல நிலைகளில் பல மாதிரிகளில் இடம் பெறத்தக்கதாயுள்ள போதிலும் நடைமுறையில் அது முறைசார் நிறுவனங்களில் தேசிய நியதிகள், நியமங்கள் தரங்கள் என்பவற்றுக்கு அமைவாக வழங்கப்படும் கல்வியையே பொதுவாகக் குறிப்பிடுகிறது. அது பாடசாலைகள் பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், தொழில் நுட்ப மற்றும் உயர் தொழில் நுட்ப நிறுவனங்கள் போன்றவற்றில் அரச கொள்கைகளுக்கு அமைவாக அரச நிதிச் செலவில் அரச கண்காணிப்பில் வழங்கப்படுவதாகவே உள்ளது. சமய நிறுவனங்களும் வணிக நோக்கம் கொண்ட தனியார் தொழில் முனைவோரும் கூட கல்வி வழங்குதலில் பொறுப்புதாரர்களாக இணைந்துள்ள போதிலும் குடிமக்களது சிந்தனை எண்ணம், மனப்பாங்கு, நடத்தை, வளப்பயன்பாடு தொடர்பான பாதிப்பை கல்வி ஏற்பாடு உருவாக்குவதால் அதனை ஒழுங்கு படுத்தும் பொறுப்பும் அரசாங்கத்துக்குண்டு.

அரசாங்கம் கல்வி வழங்குவதில் மேலாண்மை கொண்டவராக தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ள போதிலும் பிள்ளை கற்பதற்காக வீடுகளிலிருந்து விடுவித்தல் என்ற பொறுப்பு பெற்றோர் மயப்பட்டதாகவேயுள்ளது. குறிப்பாக 5 - 18 வயது வரையான பிள்ளைகள் பெற்றோரில் முற்று முழுதாக தங்கியுள்ள மாதிரியான சமூக, கலாசார பொருளாதார முறைமை தான் வலுவாக உள்ளது. "பிள்ளைகள் படித்தல்" என்பதை விட "பிள்ளைகளைப் படிப்பித்தல்" என்ற எண்ணக் கருதான் முதன்மையானது. அரசு வழங்கும் அதியுயர் வசதிகள் பல சாதாரன குடும்பத்தவர்க்கு எட்டுவதில்லை. அதேபோல் அரச பொதுக்கல்வி அனுகூலங்களைக் கைப்பற்ற முடியாதவாறு பெற்றோரால் பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுக்கப்படுகிறார்கள். தொலை நோக்கில் அல்லது நீண்ட கால முதலீடு என்ற நோக்கில் பிள்ளைகள் கற்பதற்காக தமது வாழ்நாளில் உயிர்த்துடிப்பு மிக்க பதின்மூன்று வருடங்களை செலவிடுவதற்காக - வித்தை பயிலக் கூடிய காலத்தையும் - பணவருமானம் தரக்கூடிய காலத்தையும் விரயமாக்கி விடுவதா என்ற யதார்த்த அணுகுமுறை பெரும்பாலான கிராமிய துறைசார் பெற்றோரிடமுள்ளது. இது தவறானது என்று அடித்துச் சொல்லவோ அதற்கு எதிராக கடுமையான தண்டங்களை விதிக்கவோ கல்வியியலாளருக்கோ அரசியல்வாதிகளுக்கோ துணிவு பிறந்ததில்லை. ஏனெனில் பாடசாலைக்கல்வியை நிறைவு செய்த பின் அவர்களது வெற்றி, தோல்வி பற்றி பாடசாலை முறை அக்கறை கொள்வதேயில்லை. தோல்வியுறும் பெரும் பாலானவர்களை பாடசாலைகள் கண்டு கொள்வதேயில்லை பாடசாலைக் கல்வியில் அதிக சான்றிதழ் பெற்றவர்கள் பலரது தொழில் மற்றும் சமூக வாழ்வு பற்றிய எதிர் பார்க்கைகள் நிறைவு செய்யப்பட்டதுமில்லை.

கடின உழைப்பு, புதிதாக கண்டறியும் உள்ளார்ந்த முனைப்பு, உண்மை ஈடுபாடு, தொடர் கவனம், வெற்றி மீதான வேட்கை போன்றவற்றை அதீதமாக வளர்த்துக் கொண்டு அதி உயர் சாதனையாளர்களாக வளர்ந்தவர்களில் கணிசமானவர்களது படிப்பறிவு பாடசாலைகளினால் சான்றிதழ்ப் படுத்தப்படவில்லை.

பாடசாலைப் படிப்பு முறையின் ஏற்பாடுகளது கவனக் குவிப்பும், கற்பிக்கப்படும் பாட உள்ளடக்கங்களும், கற்பித்தல் முறைகளும், ஆசிரிய பயிற்சிகளும், மாணவர் சுய வெளிப்பாட்டுக்கான மட்டுப்பாடுகளும், வெற்றிக்கான அதியுயர் வாய்ப்புக்களை மறுத்தே வந்திருக்கின்றன என்ற குற்றச்சாட்டும் உண்டு.

கைவினையாளர்களும் கலைஞர்களும் மரபுவழி தொழில் முனைவோரும் பாடசாலை முறைமைகளைவிட பெற்றோராலும் குடும்ப நடைமுறைகளாலுமே உருவாக்கப்பட்டு வருகின்றனர்.

இதன் படி பல சாதனை மிக்க பயன்களையும் உருவாக்கும் வலிமை இல்லையென்றால் பாடசாலைகள் ஏன் பெரிய வலையமைப்பின் மூலம் பச்சிளம் குழந்தைகளை சிறைப்பிடிக்க முயல்கின்றன? அவர்கள் - பாடசாலை முறைஎதை நோக்கியதாக செயல்படுகின்றனர்? ஏன் அதிக செலவில் நம்பகமற்ற - பாதுகாப்பற்ற அறிவு சார் போதனை மற்றும் பயிற்சிகளில் அவை தொடர்ந்து ஈடுபடுகின்றன? இத்தகைய பலவீனமான முறையை பலமானது போல் காட்டிக் கொள்வதில் அக்கறை கொண்ட கட்சியினர் யாரேனும் உள்ளனரா?

இத்தகைய கேள்விகளை எதிர் கொள்ள வேண்டியனவாகவே பாடசாலைகள் காணப்படுகின்றன. சமூக, பொருளாதார தொடர் முன்னேற்றங்களைப் பெறுவதற்கு வேண்டியவற்றைப் பாடசாலைகள் கற்றுத்தருவதில்லையா? பெரும் பாலானவர்கள் தமது முன்னேற்றங்களைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பை பாடசாலைகள் இல்லாமற் செய்து விட்டன என்று மனம் வருந்துகின்றனரா? பாடசாலை முறைமை மீது வெறுப்படைகின்றனரா? அதற்காக தமது வளங்களைச் செலவிடுவதற்கு உடன் பட மறுக்கின்றனரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவன் இலிச் (Ivon Illich) கூறுவதுபோல் சான்றிதழ் வழங்கும் சடங்கு முறைகளுக்காக பெற்றோரது செலவில் காலத்துக்கு காலம் கண்டதையும் கற்பிக்கின்றன நிலையங்களாகவா பாடசாலைகள் மாறிக்கொண்டிருக்கின்றன.

“அறிவு கொண்டிருத்தல்” என்பது சடங்கு முறையில் எல்லாப் பிள்ளைகளும் ஒரே மாதிரியான பாடங்களில் சில மேதாவிகள் குறிப்பிடும் நியமப் புள்ளிகளை கடதாசிச் சோதனைகளில் பெற்று விடுவது மாத்திரம் தானா? அப்படியானால் ஒழுங்காக பள்ளி சென்ற பிள்ளைகளில் சரி அரைப் பங்கினர் கணிதம், மொழி போன்றவற்றில் சித்தி பெறுவதில்லையே! தேல்வியுறச் செய்தல் பாடசாலைகளின் பணியிலக்குகளில் முதன்மையாகி விட்டதா?

கடதாசிச் சோதனைகளில் கணிதத்தில் தோற்றால் அவர்களுக்கு பிரயோக கணிதம் எதுவுமே தெரியாதா? கணிதத்திலும், மொழியிலும் சித்தி பெறத்தவறியவர்களை மாற்று ஏற்பாடுகள் மூலம் உயர் கல்விக்குச் இட்டுச் செல்லும் புதிய பாதைகளை - புதிய வழிமுறைகளை உருவாக்கினால் என்ன? அது பற்றிச் சிந்திப்பது பாடசாலைகளில் கடமையாகக் கருதப்படக் கூடாதா?

இத்தகைய பல கேள்விகள் உள்ளடங்கிய நிலையில் நீண்ட காலமாக கேட்கப்படுகின்றன. ஆனால் கேட்கக் கூடிய வலுவுடையவர்கள் இதனைக் கேட்பதில்லை. கேட்கக் கூடியவர்களிடம் அதற்கான துணிவும் இல்லை. உரத்துச் சொல்லும் முறைகளையும் அவர்கள் அறியமாட்டார்கள். சொன்னாலும் ஊடகங்கள் அவற்றுக்கு மதிப்பு மிக்க கருத்து வடிவத்தை வழங்க விரும்புவதில்லை.

இத்தகைய பல நம்பிக்கை - மற்றும் அவநம்பிக்கை நிலைமைகளில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் பல உள்ளன. அவற்றில் பாடசாலைக் கல்வியின் செலவு பற்றிய பரிசீலனை முக்கியமானது. இது பெற்றோரதும் சமூகத்தினதும் அரசாங்கத்தினதும் குடியியல் நிறுவனங்களினதும் வளங்கள் மற்றும் வளர்ச்சி வாய்ப்புக்கள் சார்ந்த பிரச்சினையாக நோக்கப்படத்தக்கதாகும்.

பாடசாலைக்கல்வியை அரசாங்கம் தனது கடமைப் பொறுப்பின் வெளிப்பாடாகக் கருதி வழங்கி வருகின்றது. தனது சமூக நலன் பேணும் இலக்கினையும், தேசியமனித வளத்தை எதிர்கால தேவைக்கேற்ப முன்னேற்றும் நோக்குடனும் தனது செலவில் வழங்கி வருகிறது. அதாவது பொது மக்களிடமிருந்தும், தொழில் நிறுவனங்களிடமிருந்தும் செல்வந்தர்களிடமிருந்தும் அதிகாரபூர்வமாக திரட்டும் வரிப்பணத்தில் ஒரு பகுதியை கல்வித்துறைக்கென செலவிட்டு வருகின்றது.

பாரளுமன்றம் பொது நிதிகள் மீதான தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி இவ்வாறு வரி அறவிட்டு அதில் ஒரு பகுதியை கல்விக்கும் செலவிடுகின்றது. இது மத்திய அரசினால் மேற் கொள்ளப்படும் செலவு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987 ஆம் ஆண்டு இலங்கை அரசியல் யாப்பில் கொண்டு வரப்பட்ட 13 ஆவது அரசியல் யாப்பு திருத்தத்தின்படி சில அதிகாரங்கள் மாகாணங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் நிதி ஆணைக்குழு வழியாக நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்படுகின்றன.

இலங்கையில் கல்வித்துறைக்கென மூன்று அமைச்சுக்கள் உள்ளன. அவை.

1. கல்வி அமைச்சு
2. உயர் கல்வி அமைச்சு
3. தொழிற்கல்வி, தொழில் நுட்ப பயிற்சி அமைச்சு

1987 இன் பின் இயங்கத் தொடங்கிய மாகாண சபைகள் கல்வி நிலையின் முதற்படியான முன் பள்ளிகளை அமைத்து அபிவிருத்தி செய்வதில் அக்கறை கொண்டு செயற்படுகின்றன.

நிர்வாகக் கட்டமைப்பானது அரசு கல்விக்கானநிதியை ஒதுக்கீடு செய்தல், நிதி பயன் பாட்டைக் கண்காணித்தல், பரிசோதனை செய்தல் போன்றவற்றில் ஈடுபடுகின்றது. இந்த நிர்வாகக் கட்டமைப்பு ஐந்து மட்டத்தில் காணப்படுகின்றது.

1. மத்திய நிலை - கல்வி அமைச்சு
2. மாகாண நிலை - மாகாணகல்வி அமைச்சு மற்றும் திணைக்களம்
3. வலையமட்டம் - வலைய கல்வி அலுவலகம்
4. கோட்டமட்டம் - கோட்டக் கல்வி அலுவலகம்
5. பாடசாலை மட்டம் - ஆரம்ப மற்றும் இடைநிலை மட்டம்

இலங்கையில் கல்விக்கான செலவை தேசியரீதியில் கையாள்பவராக கல்வி அமைச்சு உள்ளதோடு பெரும் பாலான பாடசாலைகளையும் அது முகாமை செய்து நிதி ஒதுக்கீடும் செய்து வருகின்றது.

இலங்கையில் செயற்படும் ஆரம்பமற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் 93 சத வீதத்துக்கும் பாடசாலை மாணவர் தொகையில் 95சத வீதத்துக்கும் அரசாங்கமே செலவு செய்கின்றது. ஏறக்குறைய 10,000 பாடசாலைகள் காணப்படும் போது 652 பௌத்த ஆலய பாடசாலை (பிரிவேனாக்கள்) மற்றும் மாற்று ஆற்றல் கொண்டவர்களுக்கான 25 பாடசாலைகளும் காணப்படுகின்றன. தேசிய கலைத்திட்டத்திற்கு அமைவாக இயங்குவதோடு தனியாரால் முகாமை செய்யப்படும் 80 பாடசாலைகளும் உள்ளன. இந்த உதவிபெறும் தனியார் பாடசாலைகளின் ஆசிரிய சம்பளங்களையும் அரசாங்கமே வழங்கி வருகின்றது. அரசு தனது நிதி எதனையும் செலவிடாதபோதிலும் தனது கொள்கைக்கு முரண்படாது செயற்படுகின்ற ஆனால் இலங்கை முதலீட்டுச் சபையில் பதிவு செய்வதன் மூலம் செயற்படும் 200 சர்வதேசப் பாடசாலைகளும் உள்ளன.

பாடசாலை நிர்வாக முறைமையும் பாடசாலை வகைகளும் அரசினது பாடசாலைக் கல்விச் செலவின் நோக்கையும் போக்கையும் பாதித்து வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பாடசாலைக் கல்வி முறைமையில் சராசரி மாணவர் ஆசிரியர் விகிதாசாரம் 19:1 ஆகும் இந்த விகிதாசாரம் குறையுமானால் செலவின் போக்கிலும் அதிகரிப்பு ஏற்பட முடியும். அனுமதிக்கப்படும் பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கும் போது செலவினங்களும் அதிகரித்துச் செல்வதுண்டு. வருடாந்தம் தரம் ஒன்றில் மூன்று இலட்சம் மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். இந்த எண்ணிக்கை உயரும் போது அரசின் கல்வி மீதான செலவும் அதிகரிக்கின்றது. அரசு இவ்வாறு இலவசக்கல்வியின் பயனை தரம் ஒன்றிலேயே மாணவரும் ஆசிரியர்களும் அனுபவிக்க வேண்டும் என்று கருதி செலவிடுவது ஒரு புறம் உண்மையாயினும் மறுபுறம் பல பாடசாலைகளின் அதிபர்களும் அபிவிருத்திச் சபை உறுப்பினர்களும் பல இலட்சங்கள் சட்டத்திற்கு புறம்பாக அறவிட்டு சில இலவசக்கல்வியின் தூய்மையை களங்கப்படுத்தி வந்துள்ளனர். ஒரு தேசிய கல்விமுறை வழங்கும் இலவசக்கல்வியை அவமரியாதைப்படுத்தும் வகையில் சில விதேச சிந்தனை கொண்ட அதிபர்கள் அதிக கட்டணத்தை அறவிடுவதாக இலஞ்சத்துக்கும் ஊழலுக்கும் எதிரான ஆய்வு நிறுவனம் குறிப்பிடுகின்றது.

இலவசக்கல்வி வழங்குதல் என்பது போதனை தொடர்பான செலவாக மாத்திரம் அமைவதில்லை. மதிப்பீடுகள், மற்றும் பரீட்சைகள் தொடர்பாகவும் அதிக செலவுகள் ஏற்படுகின்றன. இலவசமாக - கட்டணம் எதுவும் செலுத்தாது தேசிய பரீட்சைகளில் அதிக எண்ணிக்கையில் மாணவர் தோற்றுவதாலும் அதிக நிதிச் செலவு அரசுக்கு ஏற்படுகிறது. சித்தி பெறத்தவறும் மாணவர்கள் திரும்பத்திரும்ப பரீட்சைகளில் தோற்றுவதால் மேலதிகச் செலவு ஏற்படுகிறது. இதனால் அரசாங்கம் கட்டணமின்றி பரீட்சைக்கு தோற்றும் வாய்ப்புக்களை படிப்படியாக மட்டுப்படுத்தியது. 2005 ஆம் ஆண்டில் 307,771 மாணவர்கள் க.பொ.த.சாதாரணதரத்தில் தோற்றினர். இந்த எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தும் சென்றது. இதேயாண்டில் உயர்தரப்பரீட்சைக்கு 204,030 பேர் தோற்றினர். இவர்களில் 16,000 பேர் மாத்திரமே பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகினர். இவர்களைத் தெரிவு செய்வதற்காக இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு அதிக செலவில் பரீட்சை நடாத்த வேண்டியிருந்தது.

இலங்கை அரசின் கொள்கைப்படி பாடசாலைக் கல்வியைப் பெறுவதற்கு உரிய செலவுகளில் கணிசமான தொகையை பொது மக்களுக்காக தானே பொறுப்பேற்க வேண்டுமென்று எண்ணுகின்றது. பாடசாலைகளில் கற்கும் ஒவ்வொரு பிள்ளைக்கும் தரமான கல்வி சமத்துவமான முறையில் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அதிகம் செலவு செய்து வருகின்றது. இதனை உறுதிபட நடைமுறைப்படுத்துவதை வலியுறுத்தும் நோக்குடன் 2006 ஆம் ஆண்டில் கல்வித்துறை அபிவிருத்திச் சட்டகமும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டன. சமத்துவம், சமூக ஊடாட்டம் என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தான் கல்வியில் அதிகம் முதலீடு செய்ய வேண்டும் என்பதில் தெளிவாகவும் உறுதியாகவும் அரசு செயற்படுகின்றது.

இத்தகைய அரசின் நோக்கத்தினைபாடசாலைக்கல்வி முறை நலிவடையாமல் பேணுவதற்கும் மாற்றமுறும் உலக நாடுகளின் கல்விக்கு ஒப்பான தரத்தை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கம் அதிகம் செலவு செய்து வருகின்றதென்பதை அட்டவணை 1 காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை-1

| 1. அரச செலவில் உருவாக்கப்பட்ட பாடசாலை வசதிகள் | |
|---|---|
| 1. விஞ்ஞானக் கல்வியுடன் கூடிய க. பொ.த. உயர்தர பாடசாலைகள் | 6% |
| 2. தகவல் தொழில்நுட்ப கல்வி வழங்கும் பாடசாலைகள் | 1200 |
| 3. ஆரம்ப வகுப்பில் உள்வாங்கப்படுவோர் இதில் பெண்கள் - 96% ஆண்கள் - 94% | 96% |
| 4. ஆரம்ப நிலைக்கல்வியில் இறுதிவரை கற்போர் (ஆண்டு 5) | 98% |
| 5. தரம் 11 இல் பாடசாலையை விட்டு விலகுவோர் | 49% |

கல்விகிடைக்கச் செய்தல் கல்வியைத் தொடருதல், இடைவிலகல் நாட்டத்தை அகற்றுதல் என்பன தொடர்பாகவும் செறிவான ஊக்கத்துடன் அரசு செயற்படுகின்றது பாடசாலைப் பிள்ளைகளுக்கான இலவசமதிய உணவு, இலவச சீருடை, இலவச பாடநூல்கள், பள்ளி செல்வதற்கான பேருந்துக் கட்டணத்தில் மானியம், மிகக்குறைந்தளவான பாடசாலை வசதிக்கட்டணம் அறவிடல் போன்ற பல மாதிரி கல்விசார் சமூக நல நோக்கங்களினால் அரசு தன் செலவுகளை தொடர்ந்து அதிகரிக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றது.

கல்விகற்போர் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் பாடசாலைகள், ஆசிரியர்கள், கற்றல் உள்ளீடுகள் எண்பவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பதால் செலவு அதிகரிப்பது முதல் கட்ட வளர்ச்சியாகவே இருந்தது.

இரண்டாம் கட்டத்தில் பொருத்தமான அறிவையும், திறன்களையும், நேர்முறை மனப்பாங்கையும் வளர்த்து சரியானதை சரியான நேரத்தில் சரியான முறையில் செய்யக் கூடியவர்களாக்குவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று எண்ணியது. இது கல்வித்தரத்தை உயர்த்தும் இலக்காகும். இதற்காகவும் பெருந் தொகை நிதியை செலவிட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் பாடசாலைக்கல்விக்கான அரச செலவு 1950 மற்றும் 1960 களில் மிகவும் உயர்ந்ததாக காணப்பட்டது. இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் கல்விச்செலவு 5% ஆகவும் அரசாங்க மொத்த செலவில் 15% மாகவும் காணப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் இத்தொகை 30.93 பில்லியன் ரூபாவாக அதிகரித்தது. 2004 ஆம் ஆண்டில் இதே தொகை 42.43 பில்லியனாக உயர்ந்தது. 2009இல் இலங்கையின் மொத்தக் கல்விச் செலவு 108.37பில்லியன் ரூபாவாயிருந்தது. இவ்வாறு மொத்த தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டாலும் கூட மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக நோக்கினால் இந்த வீதம் குறைந்து வருவது தெரியவரும். இந்தியா, சிங்கப்பூர், மலேஷியா போன்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் கல்விக்கான அரசாங்க செலவுகள் குறைந்தே வருகின்றன. இது திருப்திகரமான நிலைமையன்று.

அரசாங்கத்தின் வருவாய்கள் போதியளவில் அதிகரிக்காமையும், யுத்தம் மற்றும் புனர்வாழ்வு புணரமைப்பு செலவினம் உயர்ந்தமையாலும் கல்விக்குரிய செலவைக்குறைக்க வேண்டிய கட்டாய நிலைமை அரசாங்கத்துக்கு ஏற்பட்டு விட்டது.

இலங்கையில் பொதுவான கல்விச் செலவு அதிகரித்துச் சென்றாலும் முக்கியமானதாக கருதப்படும் ஆரம்பக்கல்விக்கான செலவு விரும்பத்த வகையில் அதிகரிக்கவில்லை. 2004 ஆம் ஆண்டில் இது 13 பில்லியன் ரூபாவாக மாத்திரமே காணப்பட்டது. ஆரம்பக்கல்விகற்கும் மாணவர் ஒருவருக்கும் சராசரியாக 6500/= மாத்திரமே செலவிடப்பட்டது. தலா மாணவனுக்குரிய செலவாக 2005 இல் 11,345/= ஆகவும், 2009இல் 22077/= ரூபா ஆகவும் காணப்பட்டது. இடைநிலைக் கல்வி கற்கும் மாணவருக்குரிய இத்தொகை 7500/= இருந்தது.

இலங்கையின் மொத்தக்கல்விச் செலவுகளில் 80 சதவீதம் மீண்டெழும் செலவுக்குரியதாகும். ஆசிரியர் சம்பளம், கற்றல் - கற்பித்தல் உள்ளீடுகள், பராமரிப்பு, நூலகத்துக்கான புத்தகங்கள், ஆலோசனைபெறல் போன்றவற்றுக்காக செலவிடுவதற்கான குண நல உள்ளீடுகளுக்கு 2000 ஆண்டிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு வருகின்றது.

மொத்தச் செலவில் 20% மாத்திரமே மூலதனச் செலவுகளுக்கு ஒதுக்கப்படுகின்றது. கட்டிடம், தளபாடம், தொழில்நுட்ப வசதிகளை நிறுவுதல், கருவிகள், உபகரணங்கள் என்பவற்றுக்கான இத்தகைய செலவுகளுக்கு அதிக நிதி ஒதுக்கப்படுவதில்லை.

**முடிவுரை**

இலங்கையில் அரசாங்கம் அதிகளவு வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை எதிர்கொள்கிறது. கடந்தகாலக்கடன் அதிகவட்டி செலுத்த வேண்டும், புனரமைப்புக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும், பல்கலைக்கழகவிரிவுரையாளர் சம்பளங்களை உயர்த்த வேண்டும், தொற்றுநோய்த்தடைக்காக அதிக நிதி செலவிட வேண்டும், பட்டதாரிகளின் வேலையின்மையைக் குறைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய போட்டியிடும் தேவைகளிடையே கல்விக்காக அதிக நிதியை தொடர்ந்து செலவிடமுடியாது. பெற்றோர்தாமாகவே கல்விச் செலவை இயன்றளவு தாங்க வேண்டும். இதற்கு ஊக்கமளிப்பது போல் தரமான கல்வியை அதீத வசதிகளுடன் வழங்கும் தனியாரை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டியுள்ளது. உள்நாட்டவரும் வெளிநாட்டவரும் சந்தைகளில் போட்டி போட்டுக் கொண்டு கல்விப்பண்டத்தை தமது தகுதிக்கேற்ப வாங்கிக் கொள்ள முடியும். பரீட்சைத் தோல்விகளின் நட்டங்களையும் பெற்றோரே தாங்க முடியும். எதிர் காலத்தில் அதிக திறமைகளை நிரூபிக்கும் ஏழை மாணவர்களுக்கு மாத்திரமே முழுமையான இலவசக்கல்வியை அரசாங்கம் தன் செலவில் வழங்கும்.

ஏனையோர் தமது செலவு, தமது முதலீடு, தமது பிள்ளைகளின் படிப்பு என்ற முறையில் திட்டமிட்டு குடும்பமட்ட கல்விச் செலவுகளைத் திட்டமிட்டு தம் பிள்ளைகளுக்கு எத்தகைய கல்வியை எந்த நிறுவனத்தில் எத்தனை காலத்திற்கு வழங்க வேண்டும். என்பதைக் கணித்து முடிவுகளை எடுத்தல் வேண்டும்.

வங்கிகள் கற்பதற்கு கடன் வழங்க முன் வருகின்றன. இதற்கு அரசு ஊக்கமளித்துவருகின்றது. கடன் பெற்றுக் கற்று - கவனமாகப்படித்து சித்தியடைந்து - தொழில் பெற்று, கல்விக்கடனை அடைக்க வேண்டும். இந்தப் புதிய நிலைமைகளில் பெற்றோர் எல்லாப் பிள்ளைகளுக்கும் கற்பிக்க வேண்டுமா? பெண் பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டுமா? கற்கும் ஆற்றல் குறைந்த பிள்ளைகளுக்கு செலவு செய்து கற்பிக்க வேண்டுமா? என்பன போன்ற கேள்விகளுக்கு விடைதேட வேண்டும்.

இந்த மாற்றம் பாடசாலைகளுக்கும் கல்வி ஏற்பாடுகளுக்கும் வெளியே தொழிற்கல்வி, தொழில் பயிற்சி, தொழில் வாய்ப்பு தொடர்பான ஊக்கத்தை தூண்டவும் வாய்ப்பு உண்டு.

அரசு கல்விக்குரிய செலவுகளிலிருந்து பின் வாங்கத் தொடங்கினால் பெற்றோரும் பிள்ளைகளுக்கு அதிகம் கற்பிக்க வேண்டும். என்ற மரபுச்சிந்தனையிலிருந்தும் பின் வாங்க வேண்டிய நிலை உருவாகும் இது தான் பாடசாலைக் கல்வியின் எதிர் காலமாகும்.

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் சிறுவர் வறுமை

## Children Poverty in Sri Lanka

**பேராசிரியர் க. தேவராஜா**
பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்
யாழ். பல்கலைக்கழகம்.

### 1.0 அறிமுகம்

குறைவிருத்தி நாடுகளில் வறுமை என்பது பெரும் பொருளாதாரப் பிரச்சினையாக உருப்பெற்றிருப்பதனை எல்லோரும் அறிவர். இதன் அடிப்படையில் மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றான இலங்கையிலும் வறுமை என்பது பொருளாதாரதத்தை உலுக்கிவிடும். காரணியாக அமைந்திருக்கின்றது. அதில் பெரிதும் தாக்கமுள்ள காரணியான வலுப்பெற்றிருப்பதே சிறுவர் வறுமை என்பதாகும். சிறுவர் பாதுகாப்பு நிதியம், யுனிசெவ், தொகை மதிப்பு புள்ளிவிபரத்திணைக்களம் என்பன மேற்கொண்ட ஆய்வுகளில் சிறுவர் வறுமை என்பது இலங்கையைப் பாதிக்கின்ற காரணியாக இனங்காணப்பட்டுள்ளது. சிறுவர் வறுமை என்பது அவர்களின் ஆற்றல்கள் நலன்கள் எதிர்கால விருத்திகள் என்பவற்றின் மீது தாக்கம் செலுத்தும் காரணியாக அமைந்திருக்கின்றது. இது குடும்பத்தினரது வருமானத்துடன் தொடர்புள்ள காரணிகளுடனும் வருமானத்துடன் தொடர்பில்லாத காரணிகளுடனும் தொடர்புபட்டுள்ளது என்பதை வெளிப்படையாக பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சிறுவர் காரணிகள் அடிப்படைத் தேவைகளை உணவு, சுத்தமான நீர், கல்வி சுகாதாரம் போன்ற காரணிகள் சிறுவர் வறுமைக்கான அடிப்படைக் காரணிகளாகும். சிறுவர் பெற்றுக்கொள்ள முடியாதுள்ள சமூக ஆதரவு சமூக அந்தஸ்த்து, குழு அங்கத்துவம் பொருளாதார அந்தஸ்த்து கலாசார அங்கீகாரம் என்பன சிறுவர் வறுமையின் இன்னொரு நிலையாகும். இதற்கு மேலதிகமாக சிறுவர் துஷ்பிரயோகம், வயது பால் அடிப்படையிலான தடைகள் பயமுறுத்தல்கள் என்பனவும் சிறுவர் வறுமையின் கூறுகளாகக் கொள்ளப்படுகின்றன. மொத்தத்தில் சிறுவர்களை சுதந்திரமான சமூகமென இனங்கண்டு அவர்களை கட்டுப்பாடற்ற நிலையில் வாழ அனுமதிக்காத எல்லா நிலைகளும் சிறுவர் வறுமையென இனங்காணப்படும்.

### 2.0 சிறுவர் வறுமைக்கான காரணங்கள்

சிறுவர் வறுமை ஒரு நாட்டில் இருக்கம் வரை அந்நாடு வளர்ச்சிபெற்ற நாடாக மாற்றம் பெறாது என்பதை உலக நாடுகள் அனுபவத்தில் கண்டுள்ளன. இதனால் வறுமை நிலையைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை கையாள்வதற்கு முன்னர் இந்த வறுமை நிலை எக்காரணங்களால் ஏற்பட்டது. என்பதை இனங்காணுதல் அவசியமாகின்றது பின்வருவன சிறுவர் வறுமைக்கு காரணங்களாகும்.

### 2.1 உணவுப் பற்றாக்குறை

சிறுவர்கள் வாழுகின்ற குடும்பநிலையானது அவர்களுக்கு போதுமான உணவு கிடைப்பதனைத் தடைசெய்கின்றது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் குழந்தைகளின் போஷாக்குக்குத் தேவையான உணவை வழங்க முடிவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளின் ஆரோக்கிய நிலையின் தாக்கம் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பிள்ளையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆரோக்கியக் குறைவானது சிறுவர்களின் ஆற்றல்களைப் பயன்படுத்தும் வல்லமையைக் குறைத்து அவர்களை உற்சாகமற்றவர்களாக மாற்றிவிடும். ஆரோக்கியக் குறைவால் பாதிக்கப்பட்ட பிள்ளையால் அதன் உச்சளவு ஆற்றலை விருத்தி செய்ய முடியாமல் போவதுடன் தொடர்ச்சியாக அடுத்த தலைமுறையிலும் நீடித்துச் செல்லும் பாதிப்பைக் கொண்டுவரும். இலங்கையில் போஷக்குக் குறைவான 5 வயதுக்கும் குறைந்த பிள்ளைகளில் 1/3 பங்கினர் நிறை குறைந்திருப்பதற்கு காரணமாயிற்று என உத்தியோக பூர்வ ஆய்வுகள் காட்டுகின்றன. தாயின் போஷாக்குக் குறைவானது இலங்கையில் பிறக்கும் சிசுக்களில் 19 வீதத்தினர் இறந்து போவதற்கு காரணமாக உள்ளதெனவும் ஆய்வுகள் வெளிக்காட்டி நிற்கின்றன. இந்த நிலைமையை கருத்தில் கொண்டே அரசாங்கம் உலக உணவுத் திட்ட அமைப்பின் ஊடாக மதிய உணவுத் திட்டத்தைப் பயன்படுத்தி பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அத்துடன் வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுத் திட்டத்தையும் செயற்படுத்தி வருகின்றது.

## 2.2 சுகாதாரம்

சிறுவர்களுக்கு நல்ல வைத்திய வசதிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதும் சிறுவர் வறுமையைப் போக்குவதற்கான வழிமுறையாகும். மருத்துவ வசதியின்மை தொற்று நோய்கள் பரவுவதற்கும் குழந்தைகளின் மரணத்திற்கும் காரணமாகிவிடும். இதன் காரணமாகவே இலங்கை அரசாங்கம் இலவச சுகாதார வசதியைப் பின்பற்றி வருகின்றது. ஆய்வுகளின்படி இலங்கை அரசின் மருத்துவ சேவையின் சிறப்பினால் சிசுமரண வீதமும் தாய் இறப்பு வீதமும் ஏனைய குறைவிருத்தி நாடுகளை விட இழிவு நிலையில் இருக்கின்றது. அத்துடன் வலுக்குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைவதற்கு சிறப்பான சுகாதார சேவையே காரணமாகும். கிராமப் புறங்களில் சுகாதார சேவைகளின் பற்றாக்குறை சிறுவர் வறுமையை அதிகரிப்பதற்கும் அவர்கள் பாதிப்புறுவதற்கும் காரணமாக உள்ளன. இதனால் கிராமப்புறங்களிலேயே ஊனமுற்ற குழந்தைகளும் கேட்டல், பார்த்தல் குறைவான பிள்ளைகளும் உளநலம் குறைந்த பிள்ளைகளும் காணப்படுகின்றனர். குழந்தைகளில் வறுமை காரணமாக அமையக்கூடிய இந்நிலையைப் போக்கவே நடமாடும் மருத்துவ சேவைகள் கிடைப்பதன் ஊடாக குழந்தைகளின் வறுமை இழிவு நிலைக்கு கொண்டுவரப்பட்ட முடியும்.

## 2.3 கல்வி

இலங்கையில் இலவசக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாக அதிகமான மக்கள் கல்வித் தேர்ச்சியைக்கொண்ட நடாக இலங்கை திகழ்கின்றது. இருந்த போதும் வறுமை காரணமாக பாடசாலைக்கு செல்லாத அல்லது இடைவிலகலினைக் கொண்ட பெரும்பான்மையானவர்கள் இலங்கையில் இருப்பதனை ஆய்வுகள் காட்டுகின்றன. யுனிசெவ் நிறுவனத்தின் கருத்துப்படி 80000 பேரிலிருந்து ஏழு இலட்சம் பேர் வரை பாடசாலைக்கு செல்லாத மாணவர்கள் இருப்பதாக கூறப்படுள்ளது. அதேநேரம் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலையில் சேருவதாக புள்ளிவிபரங்கள் காட்டிய போதும் உலக வங்கியின் கருத்துப்படி 9ம் ஆண்டுக்கிடையில் 20% க்கும் கிட்டிய கிராமப்புற மாணவர்கள் இடைவிலகியிருப்பதாக கூறப்பட்டுள்ளது. இந்த இடைவிலகல் உயர்வான வீதமாக இருப்பதற்கு காரணம் சிறுவர் வறுமையேயாகும். குறிப்பாக அப்பியாசக் கொப்பிகள், எழுது கருவிகள், பஸ்கட்டணம், உணவுப் பற்றாக்குறை போன்றன பாடசாலை இடைவிலகலுக்கான காரணங்களாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இலவசக்கல்வி முறை நடைமுறையிலிருந்ததனால் 90% மான பிள்ளைகள் ஆரம்பக்கல்வியை முடிக்கின்றனர் என ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் உயர்கல்வியைப் பூர்த்தி செய்பவர்கள் 20% மாகவே உள்ளனர். அரசாங்கம் கல்வி தொடர்பான அபிவிருத்திக்கென இலவசக் கல்வி மட்டுமன்றி இலவச சீருடை இலவச பாடப்புத்தகம் என்பனவும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருதல் மாணவர் வறுமையைத் தீர்க்கும் நடவடிக்கைகளாக உள்ளன. எனவேதான் சிறுவர் வறுமையானது இலங்கையில் கல்வித்துறையில் பெருமளவான பாதிப்பை ஏற்படுத்தவில்லையெனக் குறிப்பிடலாம்.

## 2.4 குடிநீர் விநியோகம்

சிறுவர் வறுமையானது சுத்தமான குடிநீரைப் பெறுவதில் பாதிப்பை ஏற்படுத்துவதாக ஆய்வுகள் கூறுகின்றன. சுத்தமான குடிநீர் பெறப்பட முடியாமை பாதுகாப்பற்ற குடிநீரைப் பருகும் சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பதுடன் பல தொற்று நோய்கள் பரவுவதற்கும் ஏதுவாக உள்ளது. குறிப்பாக நெருப்புக் காய்ச்சல், வாந்திபோதி என்பன சுத்தமான குடிநீரைப் பெற முடியாத காரணத்தால் சிறுவரைப் பாதிப்பனவாக உள்ளன. சிறுவர் வறுமையானது பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதற்கு தடையாக அமைந்திருக்கின்றது. என்பதனால் இலங்கை அரசானது பல சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் குழாய் மூலமான குடிநீர் விநியோகத்திற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அரசின் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது சர்வதேச அமைப்புக்களின் நிதியுதவியுடன் சுத்தமான குடிநீர் பெற முடியாத பிரதேசங்களுக்கு தூர இடங்களிலிருந்து சுத்தமான நீரைக் குழாய் மூலம் விநியோகம், செய்கின்ற பெரும்பணியை மேற்கொண்டு வருகின்றது. இது சிறுவர் வறுமையின் ஓர் அங்கமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையாக மாறி சிறுவர்கள் சுத்தமான நீரைப் பருக வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

## 2.5 சிறுவர் உழைப்பு

சிறுவர் வறுமையானது சிறுவர்களை ஊழியப்படையில் சேருவதற்கு தூண்டும் காரணியாக உள்ளது. பொருளாதார ரீதியில் அதிகம் பயனளிக்காத அதே நேரம் உறுதியாக வருமானத்தைப் பெற்றுக் கொடுக்காத வேலைகளுக்கு சிறுவர்கள் அமர்த்தப்படுவது ஊழியப்படையில் சேர்ந்து கொண்டாலும் கூட சிறுவர்களைத் தொடர்ந்தும் வறுமைநிலையிலேயே வைத்துக்கொள்ளும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. சிறுவர்கள் எப்பொழுதும் குடும்பத்தின் வறுமைநிலை நீக்க ஆர்வமாக இருப்பதனால் அவர்கள் சேர்ந்து கொள்ளும் வேலை தொழிலாளர் சுரண்டலுக்கு வழிவகுப்பது எனத் தெரிந்து கொண்டாலும் அவ்வேலையை ஆற்றுவதற்கு சிறுவர்கள் முன்வருவதனைக் காணமுடியும்.

சிறுவர் உழைப்பிலே கல்வி மறுக்கப்படுவது மட்டுமன்றி அவர்களுக்கு வேலையில் ஓய்வு கிடைப்பதில்லை மோசமான வேலைச் சூழலில் பணியாற்றவேண்டி இருப்பதுடன் தொழில்கொள்வோரின் கொடூரச் செயல்களுக்கும் இடமளிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். குறைந்த சம்பளத்தில் வேலைக்கமர்த்தப்படும் சிறுவர்கள் தமது வேலைத் தளத்திலே உடல் உள விருத்திக்கான எவ்வித ஊக்குவிப்புக்களையும் பெற்றுக்கொள்வதில்லை. இலங்கையில் சிறுவர்களை முழுநேர ஊழியர்களாக வேலையில் அமர்த்திக் கொள்வதனால் உடல் ஆரோக்கியத்தை சிறுவயதிலேயே இழக்கும் நிலைக்குத் சிறுவர் தள்ளப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இடம் பெற்ற ஆய்வுகளின் படி சிறுவர் உழைப்பாளிகளில் 60% வீதத்துக்கு மேற்பட்டோர் விவசாயத்துறையுடனேயே சம்பந்தப்பட்டுள்ளனர். வயல்கள், தோட்டங்கள் என்பவற்றில் பணியாற்ற கிராமப் புறங்கள், நகர்ப்புறங்களின் சேரிகள் தோட்டத்துறைஎன்பவற்றில் இருந்து வறிய சிறுவர்கள் சேர்க்கப்டுகின்றனர். இவ்வாறு சிறுவர் உழைப்பாளிகளாக சேர்த்துக் கொள்ளப்பட்ட வறிய சிறுவர்கள் தமது வேலையூடாக வாழ்க்கையில் எவ்வித முன்னேற்றத்தையும் பெற்றுக் கொள்வதில்லை. இதன் காரணமாகவே இலங்கைப் பாராளுமன்றம் 14 வயதுக்குக் கீழ்ப்பட்ட எவரையும் உழைப்பாளிகளாக வைத்துக்கொள்ள வேண்டாமென சட்டத்தை இயற்றி அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளது. சிறுவர் உரிமை மாநாடுகளை நடாத்தி சிறுவர்களை வேலைக்கமர்த்த வேண்டாமென விழிப்புணர்வை ஏற்படுத்தியிருப்பதன் மூலம் சிறுவர் வறுமையின் அங்கமெனக்கொள்ளப்படும் சிறுவர் உழைப்பைத் தடைசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

## 2.6 சிறுவர் துஷ்பிரயோகம்

வறுமையின் பிரதான பாதிப்புக்களில் ஒன்றாக சிறுவர் துஷ்பிரயோகம் அமைந்துள்ளது. பாலியல் சுரண்டலிலிருந்து பிள்ளையின் உயிரைப் பறிக்கும் பிள்ளைகளின் கடத்தல்வரை இத்துஷ்பிரயோகம் அமைந்திருக்கும். இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் கணிசமானதொரு பிரச்சினையென ஏற்றுக் கொள்ளப்பட்டு அதனைத் தடுப்பதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கும் போதும் பல்வேறு வடிவங்களில் நடைபெறும் சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவது பெரும் பிரச்சினையாக உள்ளது. இவை சம்பந்தமாக சில முறைப்பாடுகள் கிடைத்த போதும் பல முறைப்பாடுகள் பாதிக்கப்படவர்கள் மூலம் செய்யப்படாத காரணத்தால் சிறுவர் துஷ்பிரயோகத்தை பல வறிய சிறுவர்கள் அனுபவிக்க வேண்டியுள்ளது. இலங்கையின் உல்லாசப் பயணத்துறையுடன் தொடர்புடையதாக சிறுவர் துஷ்பிரயோகம் மாற்றப்பட்டிருப்பதனால் கரையோர பிரதேசங்களில் வெட்கம், அவமாகம் என்பவற்றுக்கு மேலதிகமாக சிறுவர் துஷ்பிரயோகத்தை ஏற்றுக் கொள்ளும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இது சிறுவர் வறுமையுடன் நெருங்கிய தொடர்புடைய காரணியாக சிறுவர் துஷ்பிரயோகம் அமைய வாய்ப்பாக மாறியுள்ளது. இதனைக் கட்டுப்படுத்த அல்லது தடுக்க இலங்கையின் காவல்துறை பல்வேறு நடவுடிக்கைகளை எடுக்க முன்வந்த போதும் இது சம்பந்தமான முறைப்பாடுகளைச் செய்ய பொதுமக்கள் பின்நிற்பதனால் சிறுவர் துஷ்பிரயோகத்தை முழுமையாகத் தடுத்து நிறுத்த முடியவில்லை

## 3.0 உள்நாட்டுப் போரும் சிறுவர் வறுமையும்

உள்நாட்டில் கடந்த 30 வருடங்கள் நடைபெற்றுவந்த போர் சிறுவர் வறுமையை ஏற்படுத்திய மிக முக்கிய காரணியாகும். போராளிகள் குடும்பம் சமூகம் என்ற நிலையைக் கடந்து இண உணர்வைத் தூண்டும் நடவடிக்கையாக இருந்தமையால் பெரும்பாலும் வறிய சிறுவர்கள் போரினால் ஈர்க்கப்பட்டு போராளிகளாக மாறும் சூழல் ஏற்பட்டது. வடக்கு கிழக்கும் பகுதிகளில் காணப்பட்ட போர்ச் சூழலானது சிறுவர் போராளிகள் என்ற ஒரு பகுதியினரைத் தோற்றுவித்து விட்டது, போர்ப்பிரதேசங்களில் வாழ்ந்த பெரும் எண்ணிக்கையான வறிய சிறுவர்களே போராட்டத்தில் இணைந்து கொண்டவர்களாகவும் இருந்தனர். குடும்பத்தில் நிலவிய வறுமை தள்ளுவிசையாக மாறி சிறுவர்போராளிகளாக மாறும் நிலையைத் தோற்றுவித்தது. சிறுவர்கள் தமது வறுமைக்குக் காரணம் இனரீதியான நடவடிக்கையே என உணரத்தொடங்கியமை எவரது உந்துதலும் இல்லாமலேயே அவர்களைப் போராட்டத்தில் இணையவைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில் நீண்டகாலம் இடம் பெற்ற உள்நாட்டு யுத்தம் போர்ப்பிரதேச மக்களின் வாழ்வதாரங்களை அழித்து அவர்களை ஏழைகளாக்கிவிட்டது. இதன் ஊடாகஏற்பட்ட சிறுவர் வறுமை இன உணர்வைத் தூண்டி வறுமையைப் போக்க சுதந்திரமான நாடொன்று அவசியமென்ற மனநிலையைத் தோற்றுவித்து சிறுவர் போராளிகளின் இணைவுக்கு காரணமாகிவிட்டது. சிறுவர் வறுமை போராளிகளாக மாறுவதற்கு காரணமாகி விட்ட அதே நேரம் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும் கூட சிறுவர் வறுமையைக் குறைக்கவில்லை. போரினால் இடம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கை நிலையை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் தொடர்ந்தும் சிறுவர் வறுமை நீக்கப்படாத நிலையிலேயே உள்ளது. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் வாழும் மக்களது வாழ்க்கை நிலையை சீரமைக்க நடவடிக்கை எடுக்கவில்லையெனில் சிறுவர் வறுமை மேலும் வளர்ந்து செல்வதாகவே அமைய முடியும்.

## 4.0 சிறுவர் வறுமையும் நிறுவனம் சார்நடவடிக்கையும்

சிறுவர் வறுமையைச் சமாளிப்பதற்கு அவர்களைப் பராமரிக்கும் நிறுவனங்களின் உதவியை அரசாங்கம் நாடியுள்ளது. சமய அமைப்புக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் சமூக சேவை அமைச்சுடன் இணைந்து சிறுவர் வறுமையை நீக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வறுமையுள்ள குடும்பங்களில் வாழுகின்ற நிலையைப் போக்க முற்படும் அதே நேரம் போரினால் நிறுவனம் சார் நடவடிக்கைக்கு உட்படுதல் வேண்டும். நிறுவன ரீதியாக சிறுவர் வறுமையைப் போக்க நடவடிக்கை எடுத்தால் மட்டுமே சிறுவர் வறுமை நிரந்தரமாக நீக்கப்பட முடியும்.

நிறுவன ரீதியான நடவடிக்கையே திட்டமிட்ட முறையில் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் நிதியைத்திரட்டி அதிலிருந்தும் கட்டமைக்கப்பட்ட முறையில் சிறுவர் வறுமையைப் போக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வழிவகுக்கும். சைவச் சிறுவர் இல்லங்கள், இரட்சனிய சேனை, பௌத்த விகாரைகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்ற சிறுவர் வறுமையைப் போக்கவதற்கு வசதியாக வறிய சிறுவர்களைப் பராமரித்து வருகின்றன இத்தகைய நிறுவனமையப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் வறிய சிறவுர்களின் வாழ்வை முழுமையாகவே மாற்றியமைத்து பொருத்தமான சூழலில் வறுமையின் பாதிப்பின்றி கல்வியில் முன்னேறும் சூழலைக் சிறுவருக்கு கொண்டுவரும்.

## 5.0 முடிவுரை

சிறுவர் வறுமையை நீக்குவதற்கு எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கையும் நீண்டகாலத்துக்கான நாட்டின் வளர்ச்சிக்குரிய அடித்தளம் என்பதை எவரும் மறுக்க முடியாது. பிள்ளைகளின் உடல் உள ஆரோக்கியத்தின் மேம்பாடு பிள்ளைகளின் அடிப்படைக் கல்வி. ஒழுக்கரீதியான மேம்பாடு, அரசின் விசுவாசத்தன்மை, நாட்டுப்பற்று என்பன மேலோங்கி வருவதற்கு அடிப்படையாக அமையும் என்பதே வறுமையைப் போக்குவதற்கு வழிவகையாகும். சிறுவர் வறுமையைப் போக்க உதவக்கூடிய சமுதாய மொன்றைக் கட்டியெழுப்ப கல்வியறிவும் ஒழுக்கமும் கொண்ட மக்களை உருவாக்கும் என்ற நம்பிக்கையும் சிறுவர் வறுமையைப் போக்க பாடுபடுவோமாக.

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் தழுவிய சைவம்

**முனைவர் இரா. சந்திரசேகரன்**
தமிழ்த்துறை அறிஞர்
அண்ணா அரசு கரைக் கல்லூரி
நாமக்கல், தமிழ்நாடு - 637002,

தமிழ்மொழி தொன்மையும் நன்மையும் வாய்ந்தது முதன்மையும் மென்மையும் முகிழ்த்தது. தனிமையும் இனினிமையும் தவழ்வது தெலுங்கு கன்னடம், மலையாளம் துளு முதலிய பல மொழிகளுக்குத் தாயாக நிலவினும் தான் என்றும் கன்னித் தன்மை அழியாது மின்னுவது உலகம் முழுவதும் நிலவித் தன்னொளி பரப்பி ஒளிர்ந்தது தனித்தியங்கும் பேராற்றல் வாய்ந்தது உயிர்ப்பு மிக்குள்ளது. ஓதும் தோறும் உவகை தரும் தொல்காப்பியம், திருக்குறள், தேவாரம், திருமந்திரம் முதலிய சிறந்த நூல்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு மிளிர்வது தமிழ் எவ்வளவு பழமையோ அதைவிடப் பழமையானதும் சிறப்பு மிக்கதும் சைவசமயமும், சிவ வழிபாடும் ஆகும்.

சைவம் தழைக்க மூலாமாய் நின்றவர்கள். சைவசமயக் குரவர் எனப் போற்றப்படும் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருமே ஆவர். இவர்கள் பிறந்திலரேல் சைவசமயம் சிதைந்தொழிந்திருக்கும்.

மூவர் முதலிகள் தேவர் மூவர்க்கும் அறியொனாச் சிவபெருமானை யாவரும் உய்யச் செந்தமிழ்த் திருமுறைப்பாடியருளினர். இத்திருமுறையினைப் பண்ணோடு ஓதித் திருக்கோவில்களில் முறையாக எல்லா வழிபாடும் எப்பொழுதும் யாவரும் செய்து நன்மையடைய வேண்டுமென்பது அவர்களின் திருவுள்ளக் குறிப்பாகும்.

## எங்கும் சைவம்

"தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று வாழ்த்தியுள்ளார் மாணிக்கவாசகர், சிவபெருமான் தென்னாட்டுக்கே ஆதரவு தருவதாகச் சுந்தர மூர்த்தி நாயனார் கூறுகிறார். இறைவனுக்கு கந்த நாடு தென்னாடு என்பது இதன் பொருளன்று. ஒரே இறைவனைத் தொடர்ந்து எக் காலத்தும் வழிபடும் பெருமை இந்நாட்டுக்கு உண்டு. என்பது இதன் கருத்தாகும். இந்த சமயம் உலகுக்களித்த தெய்வமே சிவன் என்று அறிஞர் பலர் கூறும் கருத்தை இவ்வடிகள் காட்டுகின்றன.

சைவமும் சைவசித்தாந்தமும் வாழும் தத்துவம் ஆகும். அது தமிழர்களுக்கெனத் தனித்தே உருவான உயரிய உரியர் நெறி என்பதற்குச் சான்றாக உலக நாடுகளில் பல பகுதியில் வாழும் தமிழர்களால் பின்பற்றப்பட்டு வருதலையே கூறலாம்.

இந்தியாவில் தோன்றிய சைவசமயம் இன்று உலகின் பல நாடுகளிலும் பரவியுள்ளது. ஆங்கிலேயர்களின் காலணி ஆட்சியில் லட்சக்கணக்கான தமிழர்கள் இந்தியாவிலிருந்து தோட்டத்தொழிலாளர்களாக மேற்கிந்திய தீவுகள், தென்னாப்பிரிக்கா, பிஜி, இலங்கை, மழயான்மர், தாய்லாந்து, வியட்னாம், மொரிரியஸ், ரீயூனியன், மலேசியா போன்ற நாடுகளில் குடியேற்றப்பட்டனர். இவர்கள் சென்றடைந்த நாடுகளில் தமிழரின் சமயம் கலை, பண்பாடு ஆகியவற்றைப் பின்பற்றி வளர்த்தும் வந்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் ஏற்பட்ட இனக்கரவரத்தால் அங்குள்ள தமிழர்கள் அனைத்துக் கண்டங்களிலும் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர், இது இன்று பல தலை முறைகளைக் கண்டு நிற்கின்றது. இலங்கைத் தமிழர்கள் குறிப்பாக இந்து சமயத்தைச் சார்ந்த தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளில் பல கோயில்களைக் கட்டிச் சைவசமயத்தை வளர்த்து வருகின்றனர். கனடா, இங்கிலாந்து, சுவிஸ், நோர்வே, பிரான்ஸ், ஜேர்மனி, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, சுவீடன், டென்மார்க் போன்ற நாடுகளில் புதிய புதிய சைவ ஆலயங்களும் சைவ சமயத்தை பரப்பும் இதழ்களும் மாநாடுகளில் ஒளி மற்றும் ஒலிபரப்பு நிறுவனங்களும் முளைவிட்டு வருகின்றன.

புலம் பெயர்ந்த நாடுகளில் சமயக் கோட்பாடுகளைப் பின்பற்றி சைவமரபுகளைப் பாதுகாத்து வருகின்றனர். அயல்நாடுகளில் குடியேறிய தமிழர்கள் தங்களுக்கு ஒரு வழிபாட்டுத் தலம் வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர் அனைத்துத் தமிழர்களின் வீடுகளிலும் சிவனுடைய படங்களை வைத்து வழிபாடு செய்து வருகின்றனர்.

தேவாரம், திருவாசகம் ஆகிய நூல்களின் பாடல்களை புலம்பெயர் நாடுகளில் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் குழங்தைகளுக்கு பாடக் கற்றுத் தருகின்றனர். ஒரு மொழிக்கு கிடைக்கும் மரியாதைக்கூட அதைப் பேசுபவர்கள் பின்பற்றி வரும் தெய்வீக வாழ்க்கை முறைக்கு ஏற்பவே அமைந்துள்ளது. தெய்வ நம்பிக்கை என்பது எந்த அளவு ஒருவனிடம் ஊறி உள்ளதோ. அந்த அளவிற்கு அது அவனை சமுதாயத்தில் முன்னேறவும் மேன்மையான கலாசார உறவுகளுடன் வாழ்ந்து கொண்டு இருக்கவும் உதவுகின்றது என்றாலும் அதன் பெருமைக்கு காரணமாக இருப்பது அவன் பேசிய மொழிதான். ஒரு மொழியே அனைத்துத் தொடர்புகளுக்கும் ஒரு பாலமாக அமைகின்றது.

எனவே தான் அயலகத் தமிழர்கள் தாய்மொழியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு சிவ ஆலயங்களில் தமிழ்ப் பள்ளிகள் நடத்தி வருகின்றன.

தமிழ் நாட்டுக் கலை அமைப்பில் அயல்நாடுகளில் பல ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன.

கடவுளின் பால் பக்தி மிக்கவர்கள் தமிழர்கள் அந்த உணர்வு விழாக்காலங்களில் ஆழமான நம்பிக்கையாக வெளிப்படுகிறது. அதன் விளைவாகத்தான் பக்தி பூர்வமாக நாள் முழுவதும் உணவு அருந்தாமல் பட்டினி விரதம் இருப்பது மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. வெள்ளிக்கிழமைகளில் விரதம் இருப்பதும், சைவ உணவை மட்டுமே அருந்திவிட்டு ஆலயங்களுக்குச் செல்வார்கள்.

மேலை நாடுகளில் புலம் பெயர்ந்த தமிழர்கள் வளர்ந்து நாகரீக உலகில் வாழ்ந்து கொண்டு இருந்தாலும் தெய்வீகத்தில் அவர்கள் கொண்டுள்ள ஈடுபாடே அன்புடன் பழகும் நற்குணம் படைத்த மக்களாக அவர்களை வைத்துள்ளது. மேலைநாட்டினர் நாகரீக வளர்ச்சி என்பது வாழ்வில் மேன்மேலும் கிடைக்கும் இன்பங்களின் வளர்ச்சியே என நினைக்கின்றனர். ஆனால் சைவசமயத்தைப் பின்பற்றும் தமிழர்கள் தாய்மொழியே பண்பாட்டின் அச்சாணி எனவும் தாய்மொழியை அலட்சியப்படுத்துவது அவர்கள் சார்ந்துள்ள இனத்தின் கலாசார இழப்பிற்கு காரணமாக இருப்பதில்லை. சமுதாயத்தில் அவர்களுக்குள்ள மதிப்பும் அழிந்து போக அது வழி வகுத்துவிடும் என்று கருதுகின்றனர்.

சைவர்கள் கோயில்கள் பலவற்றைக் கட்டி சமய வழிபாட்டிற்கு வழிவகுத்து அவற்றை சிறந்த முறையில் பராமரித்தும் வருகின்றார்கள் இத்தகைய பணிகள் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகளாக பல நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன. கோயில்களை நேர்மையான முறையில் பராமரிப்பதும் கோயில்களின் வருமானத்தைக் கொண்டு சைவ பணி ஆற்றுவதும் சைவர்களிடையே கடவுள் வழிபாட்டினையும் சமய கோட்பாடுகளை வளர்க்க உதவும் என்பதில் ஐயமில்லை. சைவசமய அறிவினை சைவர்களிடையே வளர்க்கும் சைவக்கோயில்கள் பல வெளிநாடுகளில் இருப்பதைக் காணமுடிகிறது. வெளிநாடுகளில் வாழும் சைவர்கள் சைவ சமய அறிவினைப் பெற்று வருங்கால சந்ததியினருக்கு அறிமுகப்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சைவ சமயத்தைப் பின்பற்றி வாழ்ந்துவரும் தமிழர்கள் குடும்பமாகவே கோயிலுக்கு வெள்ளி மற்றும் புனித நாட்களில் சென்று வருகின்றனர்.

இறைவனை வழிபடுவதற்கான முறைகள் பலவற்றில் தேவாரம் திருவாசகம் ஆகியவற்றின் பாடல்களை மனமுருகிப் பாடுவதை தமிழர்கள் வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். தமிழ்க் குழந்தைகளுக்கு திருமுறைகளைக் கற்றுத்தர ஓதுவார்களைக் கோயில்களில் நியமித்து உள்ளனர் சைவ சமயத்தை வளர்ப்பதற்கு எளிதான வழி யாதெனில் சைவ சமயத்தவர்கள் தமது சமயத்தின் தத்துவங்களை அறிந்து சமயக் கோட்பாடுகளைக் கடைபிடித்து இறை உணர்வுடன் செயற்பட்டு வருதலாகும்.

ஐரோப்பிய நாடுகளில் வாழும் இந்துக்களில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள பெரும்பான்மையினர் சைவசமயத்தவர்கள் ஆவர். இவர்களில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் தான் அதிகம். புலம்பெயர்ந்த தமிழர்களின் அடுத்த தலைமுறையினர்களுக்கு தமிழ் பேசும் வல்லமையை வளர்க்க பல்வேறு அமைப்புகள் தமிழ்ப்பள்ளிகளை நடத்தி வருகின்றனர். தமிழ்மொழி அறிவு சைவசமயக் கல்வியை முழுமையாக்க கற்க துணையாக இருக்கும்.

மேலும் எதிர் பாலத்தில் தமிழ்கள் வாழும் அயல் நாடுகளில் சைவசமயத்தை முழுவேகத்தில் பின்பற்றியும் பரப்பியும் வருகின்றனர். நாயன்மார்கள் இயற்றிய தேவாரத்தை அனைவரும் பற்றுடன் பாடிவருகின்றனர். சைவ பாடசாலைகளில் பள்ளி மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் ஆண்டுதோறும் தேர்வுகளை நடத்தி வருகின்றனர். நாயன்மார்களின் குருபூசைகளைத் தவறாது நடத்தி அவர்களின் தொண்டு அற்புதங்களை முதலியவற்றை மாணவர்களுக்கு அறியப்படுத்தி வருகின்றனர்.

பல நாடுகளில் சைவசமய மாநாடுகளை நடத்தி வருகின்றனர். உள்நாடு மற்றும் அயல்நாடுகளிலிருந்து சைவசமய பேச்சாளர்களை அழைத்து வந்து ஆண்டுதோறும் பெரிய அளவில் மாநாடுகளை நடத்துவது சிறப்பாகும்.

கோயில்களில் சிவாச்சாரியார்களைக் கொண்டு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமை தோறும் விரிவான சமய உரைகளும் பூசைகளும் நடக்கின்றன.

இவ்வாறு உலக நாடுகளில் புலம்பெயர்ந்துள்ள இலங்கைத் தமிழர்கள் சைவசமயத்தை காத்து வளர்த்து வருகின்றனர். இதனால் இன்னும் சில ஆண்டுகளில் சைவ சமயம் உலகம் தழுவிய ஒரு சமயமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வயித்திலிங்கம் நடராசா அவர்களின் நினைவாக எடுத்த

# விஞ்ஞான ஆய்வு கூடத் திறப்புவிழா

**வை. க. சிற்றம்பலம்**
இணுவில் முதுபெரும் புலவர்
கலாபூஷணம், ஆசிரியர்,

**இணுவில் மேன்மை**

திருதலஞ் சேர்தலாலே செந்தமிழ் தழைத்தலாலே
கருத்துள சைவத் தோடு கமபுலஞ் செழித்தலாலே
பொருத்தமா மறிஞ ராலே பொங்கிடு மிணுவை யூரில்
பெருத்தமத் சியகல் லூரி பிறங்கிடும் பெருமை யாலே.

**கல்லூரியில் இல்லங்கள்**

காணியால் அப்பாக் குட்டி, காசினால் மயில்வர கனம்
பேணிய வகையி னாலே, பெரியராம் பொன்னை யாவும்
ஆணியாய் மூன்று இல்லம் அமர் ந்திட இக்கல் லூரி
வாணியி னருளால் மேன்மேல் வளர்ந்துயர்ந்திருந்த தின்றே.

**ஞாபகம்**

அதிபர்கள் வரிசை யில் முன் அமர்ந்திடும் நடரா சாவின்
புதுமையாங் காலந் தன்னைப் பொன்னினல் லெழுத்திற் காட்ட
இது போதி லவரைப் பற்றி எழுந்திடு ஞாப கநாள்
பொது வகை விளங்க வைத்தல் பொருத்தமே என்று எண்ணி.

**நடராசாவின் பேரன் உடையார்**

அநீதா ளுடுவிற் கோயிற் பற்றினி லுடையா ராக
வாழ்ந்தவர் இணுவை யூரில் வாழ்ந்த சிதம் பரநா தரே
சிந்தையில் நிறைந்த பாவை நாகம்மா துணைய தாக
மைந்தரை மகளைப் பெற்று மகானென மதிக்கப் பெற்றார்.

**சி. வயித்திலிங்கம்**

புத்திர ரவரில மேலாம் பேரினால் வயித்தி லிங்கம்
உத்தமி தங்க முத்தை உரிமையாந் துணைவி யாக
மெத்தநன் மைந்தர் தாமோ தரம்பிள்ளை நடரா சாவை
புத்திரி பார்ப தியை பொருளெனப் பெற்று வாழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நடராசா உபாத்தியார்

விண்ணவ னென்னக் கல்வி வேகமாய் நடரா சாவும்
கண்ணெப் படித்து லண்டன் கேம்பிரிச் சீனியரில் தேறி
துண்ணென இணுவைச் சைவ மகாஜனா உபாத்தியாராய்
எண்ணருங் கோப்பாய் சென்று ஏற்றமாய்ப் பயின்றும் வாந்தார்.

### அதிபரானார் திருமணம் புரிந்தார்

மீண்டுமவ் வித்தியால யத்தினி லாசா னாகி
நீண்டநாள் சேவை யாற்றி நிகரிலங் கதிப ராகி
கோண்டாவில் வாழும் தாமோ தரம்பிள்ளை செல்லம் மாவின்
மான்புடை மகளாம் யோக ராணியை மணமு டித்தார்.

### மக்களும் கல்வியும்

இல்லறம் என்னும் மேலாம் இனிய நற்பயனி னாலே
சொல்லரும் இறையரு ளால் தோன்றிய மக்கள் தம்மை
வல்லவ ராக்க மேலாம் வண்டமி ழாங்கி லத்தில்
நல்லரா யுயர்வ குப்பில நலமுறத் தேறச் செய்தார்.

### கல்லூரியில் க.பொ.த. வகுப்பு

ஆசான்மார் முப்ப தைவர் ஆயிரம் மாண வர்கள்
நேசமாய்ப் பயில மந்த நிகரில்வி தால யத்தில்
பாசமாய் யாரும் போற்ற பணியில் நிர் வாகத் தாலே
வாசமாய்க் க.பொ.தா வரம் வகுப்பையுந் தொடக்கி விட்டார்.

### 31.12.70ல் ஓய்வு பெற்றார்

சேவையில் மூப்ப டைந்து சிறந்த நிர்வாகஞ் செய்து
யாவரும் போற்ற அந்த எழுபதா மாண்டி னீற்றில்
ஆவலாய் ஓய்வு பெற்று அரிய கல்லூரியில்
தேவரும் போற்றும் பிரி யாவிடை பெற்று நின்றார்.

### மக்களுக்குத் திருமணம்

மைந்தரும் அரிய நல்ல மகள் மாரும் பருவஞ் சேர
சுந்தர மாயவர்க்குத் தோதினர் சோடி சேர்த்து
அந்தநற் பயனில் அன்னார் அடிமழ லைகள் கண்டு
சிந்தை செய் திறைவன் பாதம் சென்றனர் சாந்தி பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அயல் நாட்டில் பிள்ளைகள்**

படிப்பினா லுயர்ந்த அந்தர் பண்புடைமக்க ளெல்லாம்
துடித்துத்தம் தந்தை யேக சோர்ந்தனர் துயரம் நீங்கி
அடுத்தயல் நாட்டி னின்று அன்பினா லொன்று கூடி
எடுத்தனர் உத்தி யோகம் ஏந்தலாய் வாழ்கின்றாரால்.

**தருமச் செயல்**

தலைமக னான சச்சிதானந்தன் சகோத ரரும்
நிலை பெற வசிக்கு மந்த நீள் பெரும் மேலை நாட்டில்
உலவியே யங்கு மிங்கு மிருப்பினும் ஒரு மித் தோர்ந்து
பல பல தருமஞ் செய்து பண்புடன் வாழ்ந்து வாழ்ந்து

**நினைவு ஆய்வுகூடம் நிறுவுதல்** (இளையமகன் ந. திருஞானசோதி)

தம்மையீன் றெடுத்த அந்தத் தந்தையின் நினைவதாக
இம்மைமத் தியகல் லூரி யினியதாய் விளங்கு மாறு
செம்மை விஞ் ஞான ஆய்வு கூடத்தைச் சிறப்பாய்க் கட்டி
மும்மையும் விளங்க நாதம் முழங்கிடத் திறந்து வைத்தார்

**இன்றைய அதிபர் துரை - எங்கரசும் ஆசிரியரும் வைத்தார்**

அருமையா மிணுவை தோன்றும் அழகின்மத் தியகல் லூரி
பெருமையாம் அதிப ரான துரை எங்க ளரசி னோடு
ஒருமையாய் வாழு கின்ற உபாத்திமா ருடன் மாணாக்கர்
உரிமையோ டவரைப் போற்றிநயப்புடன் வாழ்த்தெடுத்தார்.

**மனிதராம் பெற்றோர் தம்மை மாண்புடன் போற்று கின்ற**

புனிதராம் நடரா சாவின் பொன்னனார் புதல்வர் தம்மை
இனியராய் இணுவில் தந்த எம்மனோர் இணையில் லாத
கனியராம் என்றெப்போதும் காதலித்தேத்து வோமே.

•


சுபம்

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுக்கிக்கேன் இந்தச் செயல்?



ச. வே. பஞ்சாட்சரம்

பறவைகளில் அன்னம்போல், பன்மலரில் தாமரைபோல்
துறைநகரப் பட்டினத்துள் தொல்பூம் புகார்நகரே!
காவிரிக்குங் காவிரியாள் கடல்முகத்துக் கழிகளெல்லாம்
பூவிரிக்குங் காவிரிப்பூம் பட்டினத்தில் அன்றொருநாள்!
ஏரோடு வித்தின்பம் எழில்குவிக்கும் இந்திரற்கு
நீராடு விப்பந்நாள்! நிலம்நெழிய விழவர்கள்!

புகழ்குவித்த போர்மறவர் அங்காடிப் பூதம்முன்
இகழ்வின்னல் இன்றாக மன்னவனுக் கென்றுதலை
கொய்தெடுத்து வைக்குமயிர்க் கொடைகண்டீர்! நாடோங்கச்
செய்தசெயல் மறக்கண்டு தெருவெல்லாம் ஆர்ப்பொலிகள்!
பசிபிணிகள் நீங்கிடுக! பகையொழிந்து சோணாட்டில்
வசிவளன்கள் மல்கென்று மறக்குலத்து மங்கையர்கள்
மலர்மடைகள் தந்தேத்தி வணங்குகின்ற பொதுநோக்கில்
நிலம்புரக்கும் தாய்மையுளம் நிரம்பிநின்று நெஞ்சள்ளும்!

எண்பேரா யம்ஐந்து பெருங்குழுவின் எண்ணம்போல்
கண்போலத் தமிழ்நாடு காக்கின்றார், தனியுரிமை
முடியாட்சிக் காலத்தும் முன்னோடும் பெருமையுடன்
குடியாட்சிப் பண்புகளும் குலவிநின்ற மூவேந்தர்!

கூத்தழகு பாட்டினிமை குலவும் புகார்மறுகில்
மூத்ததமிழ் இன்கலைகள் முறுவலிப்பில் இன்பமழை!
நுழைபுலத்தார் கூர்க்கின்ற நுண்ணறிவால் பேரறிவுப்
பிழையகலப் பேசிடவே நிற்கின்றார் கொடிகொண்டார்!

அரிசியெனும் தமிழினிதாய் அருங்குதலை யவனரிடம்
அறெசெயெனும் தமிழான அச்சிரிப்பின் ஒலிகேளீர்!

ஓயாத நீர்ப்பொன்னி உறங்காப் புகார்நகரம்
பாயாடு பலகப்பற் படைகண் டுளங்குளிரும்
சாயாத கொங்கைமலர்த் தடங்கண்ணார் குழுமலிந்த
வேயாத மாடநிரை வீதியெல்லாம் இன்ப அலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேலோடும் நீருடனே தேனோடும் பழனத்தால்
பாலோடுந் தேனெங்கும் பரந்தோட வைக்குங்கை
ஏராளர் மனடனவனுக் கிணையாய்ப்பட் டினப்பாக்கத்
தேரோடும் வீதிகளில் திருமலிந்து வாழ்கின்றார்!

கடல்தோய்ந்த கைப்பாலே காவிரிநீர்த் தேனாடி
உடல்தோய்ந்த இன்மையுடன் ஒடுங்கிடையார் காளையரின்
இதழ்தோய்ந்து மெய்குளிரும் காட்சியிதோ எக்கரிலே!
சிதறுமணல் கால்சிந்தத் திரிந்திளையோர் உறவாடும்
கைதைநறுங் கானலிலே கைதழுவுங் காதலர்கள்
பொய்தழுவாப் புகழாட்சி புனைந்தகவின் ஓவியங்கள்!

புல்பொறித்த பண்டங்கள் பொதியிமயம் துள்ளுமறி
கிலிபிடித்தப் பாய்சரக்கின் கிடங்கெல்லாம் மலைதெரியும்
வடவர்கள் திறையளிக்க மாவளத்தாள் ஆழிமுகத்
திடல் முன்னே எடுத்ததிருச் சித்திரமண் டபம்அருகில்.

பன்னாட்டுப் பண்டங்கள், பண்பாடு, நல்மணங்கள்
பன்னாட்டுக் கப்பல்கள், வணிபத்தார் பயில்நகரம்
தென்னவரின் செங்கோலின் பண்புரைக்கும் சின்னங்கள்
பொன்மலையைச் சிறுகறையான் புற்றாக்க வந்தவராய்
ஓரினத்தை ஓயாத உட்பகையால் பொருதழித்த
சீரழவு தீர்த்தின்று திகழ்கின்றார் மூவேந்தர்!
பிற்காலச் சந்ததிக்குப் பெருமெடுத்துக் காட்டமைக்கும்
பொற்காலம்! இன்பமுடன் பொலிவெங்கும் தமிழ்நாட்டில்

குழையாத கொங்கையெனும் கொடுமலையார் கவின்களினால்
விளையாத "நோய்" ஊடல் விளைக்கப் பெருந்தேவி
வளையாத செங்கோலை வளைத்திறந்த பாண்டியனும்
வளையாத செங்கோலும் வளைந்திடவே தானிறந்த
நெறிகடந்த கோவலனும், நிறைபொதுவென் றாடவர்க்கும்
அறிவுறுத்துதம் ஆயிரங்கண் இந்திரர்கள் ஆகிடவும்...!
மனம்பொய்யில் கற்புடைய மாமணியாள் கார்முகிலின்
இனம்பெய்யச் செயுங்கோயில் எழில்வண்மைக் கண்ணகியாள்
கறைமிஞ்சும் பண்புடையார் கணக்கில்லா திருந்திடினும்
நிறைகொஞ்சும் ஒருவர் முன் நீறென் றறைந்திடவும்...!

வில்சுமந்த கொடிவேந்தன் வீரம் தனக்கஞ்சிக்
கல்சுமந்தார் கண்ணகிக்கு, தமிழ்பழித்த ஆரியர்கள்!
கல்சுமந்த ஆரியரின் கதைதமிழை இகழ்வோர்க்கு
நல்குமெழிற் பாடமினி! நடக்கவிந்த நல்நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலான கானல்வரி கூடாரத் தங்கிருந்து
மேலே மிதந்தெழுந்து வருகிறதே காற்றினிலே!
பொன்னொதுக்கிப் பூப்பரந்து பொங்கிவரும் பொன்னியெல்லாம்
தென்னிலத்தின் பூமரக்கா தீட்டிவிட்ட பட்டோலை!
மஞ்சளிச்சி செங்கரும்பு மைந்தரின்ப மெல்லடிகள்
கொஞ்சிவருங் காவிரித்தாய் கூட்டிவிட்ட பல்வளத்தை
மன்றமைந்தின் முன்பரப்பும் வண்ணமடைப் பலிகளிலே,
குன்றமைந்த கூலமணிக் குலமரவூர்ப் பாக்கத்தில்
பொன்னடிக்கம் ஆர்ப்பினிலே போய்ப்புதைய மற்றொலிகள்
மின்னெறிக்கும் மணிமுத்தில் வெயில்மாளுந் தண்ணொளியில்,
தொழில்வளங்கள் மிஞ்சுதலில் செர்க்கமடா இதுவென்னும்
எழில்வளங்கள் மிஞ்சிமிடை இடம்நெருங்கு கடைகளிலே,
சந்தனமும் காரகிலும் தண்மணங்கன் பொங்கிடினும்
செந்தமிழ்நாட் டுண்டிமணம் திகழ்தெருவில் - கண்டிடலாம்.

உலகத்துத் துறைமுகங்கள் ஒன்றல்ல பலவற்றில்
நிலைபெற்ற நெறிமுறைகள் நின்றுநின்று கண்டகன்றும்
ஊரெல்லாம் ஊரே! இவ் வுலகெல்லாம் ஒன்றென்னும்
பேரெல்லை நெஞ்சத்தார் பெரும்பண்பு கண்டதிலோ
சரக்கேற்றி வருகின்ற சவ்வனத்துக் கப்பலெல்லாம்
நிரைக்கிங்கே நின்றாடும் நிலையாய்ப் புகார்த்துறையில்?

குடமலையில் தோன்றிமெலக் குதித்துக் குழைந்தோடிக்
தடவயலில், பொன்மயிலார் சதுராடும் நீர்த்துறையில்,
மடைகளிலே, மள்ளர் மதகுகளில், கனிகிழங்கு
அடகருந்து தூயவரின் அறப்பள்ளிச் சோலைகளில்,
கன்னிநறுந் தமிழென்னுங் கவின்தேறல் மாந்தியிவள்
பொன்னியெனுந் திருக்குமரி புகாரில் பலநாட்டார்
கத்துமொழி தாங்காமல் கடலில் இருசெவியும்
பொத்திவந்து குதிப்பாளோ? அன்றேல் பொருத்தங்கள்
பத்துமினி திருப்பதனால் பான்மையுளங் கூட்டிவிட
மெத்தமனங் கூத்தாட மெய்யொசிந்த பொன்னிமெல

ஆழியிளங் காதலவன் அணைப்பீயுஞ் சுகந்தன்னைக்
கூழைநறுங் கனவினிலே குடமலையில் கண்டெழுந்தும்
ஓவியப்பூஞ் செழும்பட்டுப் போர்த்துடலில் ஓடிவந்தும்
தாவிஅலைக் கைகளிலே தனைமறந்தாள்! தனைமறந்த
கிறக்கத்தால் மண்மூடிக் கெடுப்பாளோ பட்டினத்தை?
சிறுக்கிக்கேன் இந்தச் செயல்?

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்பாட்டு நோக்கில் சீர் இணுவைத் திருவூரும் கிராமியக் கலைகளும்

- த. சிவசுப்பிரமணியம்

எமது நாட்டின் கலைச் செல்வங்களிலே சிறப்புப் பெற்று விளங்கும் கிராமிய நடனங்களுக்குப் புகழ்பெற்ற கிராமமாக இணுவில் அமைந்துள்ளமை அக்கிராமத்து மக்களின் பேறு என்றே சொல்ல வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைந்திருக்கின்ற இக் கிராமம், கிராமிய நடனங்களையும், அவற்றோடு தொடர்புடைய பண்பாட்டுப் பரிமாணங்களையும் கொண்டிருப்பதோடு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் வளர்த்துவந்த பெருமைக்குரிய கிராமம், சிற்றரசர்களின் இராசதானியும், இங்கு இருந்துள்ளது.

சின்னத்தம்பிப் புலவர், அண்ணாவியார், ஏரம்பு, தவில்மேதை தட்சணாமூர்த்தி, தமிழறிஞர் இரத்தினம், கீர்த்தனைத் திலகம், பரதநாட்டிய மேதை வீரமணி ஐயர், நாட்டியக் கலாமணி ஏரம்பு சுப்பையா, இன்றும் புகழுடன் இருக்கும் தவில் மேதை புண்ணியமூர்த்தி, வயலின் மேதை இராதாகிருஷ்ணன், பேராசிரியர் சபா ஜெயராசா, தமிழ்வேள் கந்தசாமி, அமரர் வ. நடராசா, கலாநிதி வல்லிபுரம் மகேஸ்வரன் போன்ற பல அறிஞர்களையும், கலைஞர்களையும் ஈன்றெடுத்த மண்.

இந்த மண்ணின் பெருமையை நிலைநாட்ட உயர்ந்து நிற்கும் கோபுரங்கள், யாழ்ப்பாண மன்னர்களாக இருந்த பரராசசேகரன், செகராசசேகரன் ஆகியோர் வணங்கிய பிள்ளையார் கோயில்களும் மேற்கின் நடுநாயகமாக விளங்கும் இணுவில் கந்தசுவாமி கோயிலும் கிழக்கே இருக்கின்ற சிவகாமி அம்மன் கோவிலும் பிரசித்தி பெற்றவை.

உலகிலேயே அதியுயர்ந்த சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய பெரிய மஞ்சமும், இணுவில் கந்தசுவாமி கோயிலில்தான் இருக்கின்றது. அந்தக் காலத்தில் மிகப்பெரும் திருவிழாக்கள் நடைபெறும் கோயிலாகவும் இது பிரசித்தி பெற்றிருந்தது. இந்தியாவில் இருந்து வந்த பிரபல தவில், நாதசுரக் கலைஞர்கள் இக்கோயில் திருவிழாக்களில் உள்ளூர் கலைஞர்களுடன் சேர்ந்து கச்சேரிகள் நடத்தியுள்ளார்கள்.

பிரசித்தி பெற்ற இசை வேளாளர் பலரை எம்மண் கொண்டிருந்தது. சப்பறம் கட்டுபவர்கள் உள்ள பெயர் பெற்ற ஊர். முத்துச் சப்பறம் என்றால் பஞ்சாட்சரம் முன் நிற்கின்றார். கோயில் திருப்பணிகளில் மாலை கட்டுதல், பூந்தண்டிகைகள் அமைத்தல், சாத்துப்படி சாத்துதல் போன்ற கடமைகளை ஆற்றக் கைதேர்ந்த வீரசைவர்கள் பலர் இருந்துள்ளனர். நளபாகம் தெரிய வேண்டுமானால் அல்லமாப் பிரபுவிடம் கேட்க வேண்டும் என்று சொல்லுவார்கள். இவ்வாறு எத்துறை சார்ந்தாலும், அத்துறையில் பெயர் போனவர்களை நாட்டுக்கு வழங்கிப் பெருமை பெற்ற திருவூராம் இணுவில் என்று சொன்னால் அதுமிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத் துறையைப் பொறுத்தளவில் செம்மண் பூமியில் முக்கிய தொழிலாக விவசாயம் பெரும் பங்கு வகிக்கின்றது. சுருட்டுக் கைத்தொழில் உட்பட வேறு சிறு கைத்தொழில்களும் இருக்கும் பெருமை பெற்ற கிராமம். ஐம்பதாண்டுச் சாதனையைக் கண்டுள்ள சு. பொ. நடராசாவின் அண்ணா தொழிலகமும் இந்த மண்ணின் பெருமையைப் பறைசாற்றி உயர்ந்து நிற்கின்றன. 'கல்கி பீடி' சின்னத்துரையையும் மறக்க முடியாது.

எமது கிராமத்தின் கல்வி மேம்பாட்டிற்கு உழைத்தவர்கள் பலர். இணுவில் சைவ மகாஜனா வித்தியாசாலையை நிறுவ முன்னின்ற அப்பாக்குட்டியையும், இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையின் அடிநாதமாக விளங்கிய அம்பிகைபாகனையும் தமிழ்க்கலவன் பாடசாலையை நிறுவிய அமெரிக்கன் மிஷனுக்கும் இணுவில் மண் என்றும் நன்றி உடையது. மேலும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளராக இருந்த இரா சுந்தரலிங்கத்தையும், அதிபர் சோதிப்பெருமாளையும் எண்ணாமல் இருக்க முடியாது. இன்று இரண்டு பெரிய கல்லூரிகள் எம்மண்ணின் பெருமையைப் பறைசாற்றுகின்றன. இணுவில் மத்திய கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி ஆகிய கல்லூரிகள் கல்விச் செயற்பாடுகளில் மட்டுமல்லாமல் கலை, இலக்கியத்துறைகளிலும் சாதனை படைத்து நிற்கின்றன. கிராமிய நடனங்கள், கூத்துக்கள், நாடகங்கள், நடனங்கள் போன்றவற்றிலும் இக் கல்லூரிகளில் கல்விபயிலும் மாணவர்கள் பெரும் பங்களிப்பை ஆற்றி வருகின்றனர். அகில இலங்கை ரீதியில் சாதனையாளர்கள்.

ஊர்மக்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஆறு திருமுருகனின் பெருமுயற்சியால் 'அறிவாலயம்' என்னும் நூலகமும், இணுவில் தெற்கு வாழ் மக்கள் முயற்சியினால் 'பொது நூல் நிலையம்' ஒன்றும் மண்ணின் பெருமையை எடுத்துக் கூறுகின்றன. இம்மண்ணின் மக்கள் கல்வித்துறையிலும் மேம்பட்டவர்கள்.

பொதுநலத் தொண்டர்கள் பலர் எமது மண்ணில் வாழ்ந்திருக்கின்றார்கள். மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களான சித்த வைத்தியர்களான அண்ணாமலைப் பரியாரியார், இராமலிங்கப் பரியாரியார், காரைக்கால் அம்பலவாணர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கிராமசபைத் தலைவர்களாக இருந்த மாணிக்கர், ச. முத்துலிங்கம் ஆகியோருடன் பல பொது அமைப்புக்களில் இருந்து நேர்மையுடன் தமது கிராம முன்னேற்றத்திற்காகப் பணியாற்றிய கொம்யூனிஸ்ட் வாதி விசுவலிங்கமும் இணுவில் மண்ணின் மைந்தர்களே.

இத்தகைய பல்சிறப்புமிக்க கிராமத்தில் நிலைபெற்றிருந்த தமிழர் தம் கிராமிய நடனங்கள் பற்றி நோக்குவோம். மிகப்பெரும் கலைச்செல்வங்களின் வாரிசுகளைக் கொண்ட இணுவில் கிராமம் வரலாற்றுப் பெருமை மிக்கது. "தொன்மையான நடனங்கள் சமூக இயல்புகளோடு நேரடியாக இணைந்திருந்தன. வாழ்க்கையின் அனுபவங்களோடும், தொழிற்பாடுகளோடும் நடனக் கல்வி துல்லியமாகத் தொடர்புபட்டிருந்தது. ஆரம்பத்தில் நடனக்கல்வி என்பது பொதுவாகச் சடங்குகளோடும், மாய வித்தைகளோடும், கருவளப் பெருக்க முயற்சிகளோடும் சமூகத்தில் நிகழ்ந்த தொடர்பாடல்களோடும் இணைந்திருந்தது. சமூக அசைவியக்கம், சமூக இடைவினைகள், சமூக நம்பிக்கைகள், சமூக நிரற்கட்டுமானம், முதலியவை நடனங்களின் நேரடியான செல்வாக்குகளை ஏற்படுத்துதல், அறிகை மானிடவியல் ஆய்வுகளிலே தெளிவாகக் காட்டப்படுகின்றன' என்கிறார் பேராசிரியர் சபா ஜெயராசா.

"உலகிலேயே அதியுயர்ந்த சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய பெரிய மஞ்சமும், இணுவில் கந்தசுவாமி கோயிலில்தான் இருக்கின்றது. அந்தக் காலத்தில் மிகப்பெரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாக்கள் நடைபெறும் கோயிலாகவும் இது பிரசித்தி பெற்றிருந்தது. இந்தியாவில் இருந்து வந்த பிரபல தவில், நாதசுரக் கலைஞர்கள் இக்கோயில் திருவிழாக்களில் உள்ளூர் கலைஞர்களுடன் சேர்ந்து கச்சேரிகள் நடத்தியுள்ளார்கள்."

இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் கிராமிய, நடன வடிவங்களுள் 'கரகம்' சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. 'கரகாட்டம்' கட்டற்ற வெளிப்பாடுகளைக் கொண்ட நடனமாகும். பூர்வீகமான உடல் மொழிகளைக் கரகாட்டத்திலே காணமுடியும். ஆழ்மனக் கருத்துக்களையும், அமுங்கிய உணர்வுகளையும் மீண்டும் மீண்டும் உதைப்புடன் வெளியிடுவதற்கு இவ்வகை ஆடல் துணை செய்கின்றது. கரக ஆட்டத்தின் இன்னொரு பரிமாணம் தலையின் மேலுள்ள கரகத்தின் சமநிலையைப் பாதுகாத்து ஆடுதலாகும். கரக ஆட்டத்திற்குப் பிரதான கருவியாகவும், பொருத்தமான இசைக்கருவியாகவும் அமைவது உடுக்கு. கோயில் திருவிழாக்காலங்களில் கரகாட்டம் இடம்பெறும். இந்த ஆட்டத்திற்கு ஏற்றவகையில் பறையும் அடிப்பார்கள். இணுவிலில் இளந்தாரிக்கோயில் பூசகராக இருந்த பெரியார் கரகாட்டக்காரராகவும் இருந்துள்ளார். அவர் உடுக்கு வாத்தியம் வாசிப்பதிலும் வல்லவராகவும் இருந்துள்ளார்.

தமிழர்களது கிராமிய நடனங்களுள் இன்றும் பெருவழக்காக நிலவி வருவது காவடி நடனமாகும். எந்த வயது நிரலைச் சேர்ந்தவர்களும், ஆடக்கூடியதாகக் காவடி நடனம் இருந்து வருகின்றது. காவடி ஆட்டத்திலே பல்வேறு சொற்கட்டுக்கள், சொற்கோவைகள் பயன்படுத்தப்பட்டன. காவடி ஆட்டத்துக்கு தவில், உடுக்கு, மத்தளம், பறை, நாதசுரம் ஆகிய வாத்தியக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இணுவிலில் மரச் சித்திர வேலைப்பாடுகளைக் கொண்ட சித்திரக் காவடிகளும் வழக்கிலுள்ளன. அவை மிகுந்த பாரமானதால், அவற்றைத் தூக்கி ஆடுகிறவர்களும் பலசாலிகளாகவே இருக்க வேண்டும். அனுமார் அப்பா, நம்பிராசன், பொன்னையா வேறும் சிலரும் இத்தகைய சித்திரக் காவடிகளை ஆட்டியுள்ளனர். ஒரு பரம்பரையைச் சேர்ந்தவர்களே தொடர்ந்து இத்தகைய சித்திரக்காவடிகளை ஆடிவந்ததாக அறியக்கிடக்கின்றது. சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த மரச் சித்திரக்காவடி ஒன்று இணுவிலில் எழுத்தாளர் கே. எஸ். ஆனந்தனுடைய இல்லத்தில் இருப்பதாக அறிய வந்துள்ளது. இணுவிலின் பரந்துபட்ட வாழ்க்கை முறைமையோடும் பன்முகப்பட்ட பண்பாட்டுக் கோலங்களோடும் காவடி, நடனம் இணைந்திருக்கின்றது. கோவில், திருவிழாக் காலங்களில் பறவைக் காவடிகளும் எடுப்பார்கள்.

கும்மி என்பது ஒரு குழு ஆட்டம். பலர் சேர்ந்து கைகளை ஒன்றிணைத்துக் குவித்துச் செயற்படும் பூர்வீக ஒத்திசைவை இந்நடனம் புலப்படுத்தும். ஒன்றிணைந்து ஒத்திசைவுடன் தொழிற்படும் பொழுது குழுவின் வலுவும், மனித வலுவும் பெருக்கமடைவதைப் புலப்படுத்தும் ஆடலாகக் கும்மி நடனம் விளங்குகின்றது. கைகளில் கோல்களை ஏந்திக் கொட்டியாடும் மரபும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இந்நிலையில் கும்மியில் இருந்தே கோலாட்டம் படிமலர்ச்சி கொண்டிருத்தல் வேண்டுமென்று தெரிகின்றது. இணுவிலில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் கும்மி, கோலாட்டம் என்பன வழக்கிலிருந்து வருகின்றன.

குதிரையாட்டம் என்பது பொய்க்கால் குதிரையாட்டம், புரவியாட்டம், வெண்புரவியாட்டம், பரியாட்டம் என்றவாறு பலவாறாக அழைக்கப்பட்டது. இணுவிலில் இவ்வாட்டம் வளர்ச்சி பெற்றிருந்தது. இணுவிலைச் சேர்ந்த கந்தவனம் என்பவரும், சிற்றம்பலம் என்பவரும் யாழ்ப்பாணத்துக் கிராமிய நடனங்களின் காவலர்களாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இருந்தனர் என்று கூறப்படுகின்றது. காவடி, கரகம், பொய்க்கால் குதிரையாட்டம் முதலியவற்றில் அவர்கள் சிறந்து விளங்கினார்கள் என்றும் சேர். பொன். இராமநாதன் இவர்களின் ஆடல்களைக் கண்டு சுவைத்து இராமநாதன் கல்லூரியில் அவர்களை அழைத்து பிரதோஷதினங்களில் ஆடுவித்தார் என்றும் சொல்லப்படுகின்றது. தனிக் குதிரையாட்டம், ஆண் பெண் சோடிக் குதிரையாட்டம் என்றவாறான ஆட்டங்கள் இடம்பெற்றன. ஆண்களே பெண்ணுருவம் தாங்கி குதிரையாட்டத்தில் ஈடுபட்டனர். பிற்காலத்தில் ஆண்களும் பெண்களும் இணைந்து ஆடலாயினர். குதிரையாட்டப் போட்டியில் வெற்றி பெறும் குதிரைக்கு பார்வையாளர்கள் மாலைசூட்டி ஆரவாரித்த நிகழ்ச்சி இணுவில் கந்தசாமி கோயில் எட்டாம் திருவிழாவில் நிகழ்ந்ததாக இக்கிராமத்திலுள்ள முதியவர்கள் குறிப்பிட்டுள்ளதாகப் பேராசிரியர் சபா ஜெயராசா தமது "ஈழத் தமிழர் கிராமிய நடனங்கள்" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கரகம், காவடி ஆகிய கிராமிய நடனங்களோடு ஒப்பிடும்பொழுது குதிரையாட்டம் காலத்தால் பிந்தியதாகவே கருத வேண்டியுள்ளது. ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் போக்குவரத்துக்காக குதிரை வண்டில்களும், மாட்டு வண்டில்களும் பாவனையில் இருந்துள்ளன. இதன் காரணமாகக் குதிரைகளின் அறிமுகம் விரிவுபெற்றிருந்தது. எனவே குதிரையாட்டம் திருவிழாக்களிலே நிகழ்த்தப் பெறுதல் உயர்ந்த அந்தஸ்துக் கணிப்பைக் கொடுத்தது.

**முகமூடி நடனங்கள்**

யாழ்ப்பாணத்துக் கோயில்களின் மானம்பூத்திருவிழா, சூரன்போர் முதலியவற்றில் முகமூடி நடனங்களை இன்றும் காணக்கூடியதாகவுள்ளது. இணுவில் சிவகாமியம்மை வேட்டைத் திருவிழாவில் முகமூடிகளையும், அவை ஒவ்வொன்றுக்குமான தனித்துவமான ஆட்டங்களையும், பாடல்களையும் மிக அண்மைக்காலம் வரை கண்டுகொள்ளக்கூடியதாக இருந்தது. முகமூடியாடல் பத்தினித்தெய்வ வழிபாட்டிலும் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் பத்தினி அம்மன் வழிபாடு இன்றும் காணப்படுகின்றது. இணுவில் கிராமத்திலுள்ள வட்டுவினி என்ற குறிச்சியில் அமைந்துள்ள பத்தினி அம்மன் வழிபாட்டில் மாம்பழப் படையல் சிறப்புப் பெற்றிருக்கின்றது.

தொழில்சார் கிராமிய நடனங்களில் தொழில்சார் அனுபவம் பாடலாயும், ஆடலாயும் வெளிவரும். ஒழுங்குமுறையாக நடாத நாற்று சுருண்டு விழுந்த காட்சியை இணுவில் சின்னத்தம்பிப் புலவர் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

'கருடி குருடி நட்ட நாற்று
கமல குண்டலம் போடுதே' என்றார்.

கிராமியக் கூத்துக்கள் வளர்வதற்கு சமூகக் காரணிகள் பலவும் தூண்டுதலளித்தன. கிராமத்து மக்களை ஓரிடத்தில் ஒன்று திரட்டிக் கூட்டும் வல்லமை செல்வந்தர்களுக்குரிய ஒரு அந்தஸ்துச் சின்னமாகவும், கிராமங்களிலே கருதப்பட்டது. கதைசார்ந்த ஆடலின் வளர்ச்சியானதும் கல்வி சார்ந்த ஆடலின் வளர்ச்சியும், கல்வி சார்ந்த ஒரு முக்கியத்துவத்தையும் கொண்டிருந்தது. புராணக் கதைகள், இலக்கியக் கதைகள் முதலியவற்றை நெடுங்கூத்தாக ஆடுவதற்கு வரன்முறையான பயிற்சி அவசியமாகக் கருதப்பட்டது. இந்தப் பயிற்சியை வழங்கியவர்கள் 'அண்ணாவியார்' என்று அழைக்கப்பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக்கள் தொடர்பாகக் கர்ண பரம்பரைக் கதையும் உண்டு. இணுவில் கிராமத்தில் தினை, கிழங்கு முதலாம் பயிர்கள் செழித்து வளர்வதற்கு இங்கு நிகழ்த்தப்பட்ட கூத்துக்கள் 'வளப் பொலிவை' உண்டாக்கியதாக மக்கள் கூறுவர். 'வளத்தோட்டம்', 'வளப்பொலிவு' முதலாம் தொடர்கள் இன்றும் இக்கிராமத்தில் வழக்கில் உள்ளன. அண்ணாவியார்களின் நீண்ட பட்டியலை உள்ளடக்கிய கிராமமாக இணுவில் விளங்குகின்றது. அண்ணாவியார் முருகர், அண்ணாவியார் சுப்பையா, அண்ணாவியார் நாகலிங்கம், அண்ணாவியார் முருகேசு, அண்ணாவியார் சின்னமேனை, அண்ணாவியார் கந்தையா, அண்ணாவியார் ஏரம்பர், அண்ணாவியார் கதிரேசு, அண்ணாவியார் கந்தவனம், அண்ணாவியார் செல்லையா என்றவாறு அண்ணாவிமார் இணுவில் கிராமத்தில் வாழ்ந்து உள்ளனர்.

நீண்ட கூத்துக்களை வடிவமைப்பதற்கு இலக்கிய அறிவு, புராணங்களிலே புலமை முதலியவை இருக்க வேண்டியது அவசியம். இணுவிலில் வாழ்ந்த சின்னத்தம்பிப் புலவர் 1844இற்கும், 1884 இற்கும் இடையே 40 ஆண்டுகள் வரை பல கூத்துக்களை ஆக்கிக் கொடுத்தார் என்றும் அவற்றை ஆற்றுகை வடிவத்துக்குக் கொண்டுவந்த அண்ணாவிமார், அங்குள்ள ஆலயங்களுக்கு அருகாக இரவு இரவாக ஆடினர் என்று சொல்லப்படுகின்றது.

வள்ளி திருமணம், கிட்டினன் தூது, இராமாயாணக் கூத்து, பத்தினிக் கூத்து, அரிச்சந்திரன் கூத்து, குசேலர் கூத்து, மயில் இராவணன் கூத்து முதலிய கூத்துக்களை இணுவில் சின்னத்தம்பிப் புலவர் ஏட்டில் எழுதிக் கொடுக்க அண்ணாவிமார் அவற்றை மனப்பாடம் செய்து பழகினர் என்று அறியக்கிடக்கின்றது. இணுவைச் சின்னத்தம்பிப்புலவர் 'பஞ்சவண்ணதூது' உட்படப் பல பிரபந்தங்களை ஆக்கினார். இவர் ஆக்கிய பிரபந்தங்களில் நாட்டார் இசையினதும், பாடல்களினதும் செல்வாக்கு இழையோடியிருத்தல் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்து நாட்டுக்கூத்து, இசை நாடகம் முதலியவற்றை ஆராயும்போது இணுவிலில் வாழ்ந்த விசுவலிங்கம் மாசிலாமணி என்ற பெருங் கலைஞரின் பங்களிப்பு தனித்துவமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இக் கலைஞர் தவில் மேதை வி. தட்சணாமூர்த்தி அவர்களின் தமையன் ஆவார். பன்முக ஆற்றல் கொண்டவராக அவர் விளங்கினார். பத்துக்கும் மேற்பட்ட இசைக்கருவிகளை இசைக்கும் ஆற்றல் அவரிடத்தில் காணப்பெற்றது. தவில், நாயனம், மத்தளம், சுத்தமத்தளம், புல்லாங்குழல், வீணை, வயலின், முகர்சிங், ஆர்மோனியம், சாரங்கி முதலாம் இசைக்கருவிகளை ஒரே மேடையில் அவர் இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலயத்தில் இசைத்துக் காட்டியதாகச் சொல்வர். கர்நாடக இசையை அவர் வரன்முறையாகக் கற்றிருந்தார். அதேவேளை அண்ணாவியார் ஏரம்புவிடம் நாட்டுக்கூத்தையும் ஒழுங்காகக் கற்றிருந்தார்.

மேடைக் கூத்துக்களில் வரும் கட்டியங்காரர்களின் பணியினை பாவைக்கூத்தில் வாய் கட்டிகள் மேற்கொண்டனர். இணுவிலில் வாழ்ந்த சித்தர் பொன்னு என்பவர் நகைச்சுவைமிக்க 'வாய்கட்டி' யாக விளங்கினார்.

இற்றைவரை கூறியநாட்டார் கலைகளைப் பற்றி பூரணத்துவமான அறிகையையும், அவற்றுடன் இணுவில் கிராமம் இக்கலைகளின்பால் கொண்டிருக்கும் ஈடுபாட்டையும் அதன் வளர்ச்சியையும் இக்கட்டுரை கூறி நிற்கின்றது.

☆☆☆


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வும் சமயமும்



**திருமதி கமலராணி கிருஸ்ணப்பிள்ளை**
பிரதியதிபர் SLPS 21
யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி

சமயம் என்பது வாழ்வியல் ஆதாரங்களிற்கு வழிகாட்டும் வழிகாட்டி ஆகும். இதனை மார்க்கம், நெறி, மதம் எனப் பலவாறு புலப்படுத்துவர் கல்வியியலாளர். சமயம் என்பது ஆன்மீக ஈடேற்ற வழிகாட்டியே யாகும். ஆன் மீக ஈடேற்றத்திற்குரிய வழிகள் பலவாக இரப்பினும் முடிவிடம் ஒன்றே இது பல்வேறு மதங்கள், மார்க்கங்களினூடாக ஓர்பரம் பொருள் இறைவனை அடைவதையே குறிப்பிடலாம்.

எல்லா மதங்களும் ஒரேதன்மையான கருத்துக்களையே குறிக்கின்றன. ஆனால் அவற்றைப் பின்பற்றுபவர்களின் செயற்பாடுகளால் அவை பல்வேறுவிதமான விமர்சனங்களைப் பெறுகின்றன. பல்வேறு இடங்களில் உருவான நதிகள்யாவும் கடலில் சங்கமமாவது போல பல்வேறு மதங்களைப் பின் பற்றினாலும் இறுதியில் ஒர் இறைவனையே அடைவதே முடிவாகும். "ஏகம் சத் விப்புரா வகுதி" குள வேத பாசை ரமஸ்கிரதத்திப் குறிப்பிடுவர். தாயுமானவர் இதனை "யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வம் யாவும் மாதொரு பாகனார் தாம் வருவார்" எனக் கூறுகிறார்.

எல்லா மதங்களும் அன்பு என்ற அடிப்படையில் எழுந்தவையே. இதனை சைவசமயம் அன்பேசிவம் எனக்குறிப்பிடுகிறது. மனித வாழ்வும் அன்பெனும் ஆதாரவேரைப்பற்றியே உள்ளது. உயிர்களிடத்து அன்பு காட்டவேண்டும். என்பதை வலியுறுத்தாத மதங்கள் எவையும் இல்லை. ஆட்டுக்குட்டிக்கு இரங்கிய இயேசுவும், புறாவிற்கு இரங்கிய புத்தரும் மானை விடுவித்த நபிகள் நாயகமும் என நாம் அறிந்த வராறுகள் உயிர்களிடத்து இரக்கம், அன்பு, கருணை, காருண்யம் காட்டி நடப்பதையே வலியுறுத்துகின்றன. இதனையே வள்ளுவர்

"அன்புற்று அமர்ந்த வழக் கென்பர் வையத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு"

என அழகாகக் கூறியுள்ளார். உலகில் இன்பமடைந்து வாழ்பவர் எய்தும் சிறப்பு அன்புடையவராகப் பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறியுள்ளார்.

சமயங்கள் மனிதவாழ்வுக்கு காட்டும் வழிகள் பல சமயம் என்பது மனிதவாழ்வுடன் பின்னிப்பினைந்த ஒன்றாகும். வண்டி ஓடுதற்கு அச்சாணி எவ்வாறு இன்றியமையாததோ அவ்வாறே மனிதவாழ்வுவழமாக அமைய சமயமும் இன்றியமையாததாகும். இதனைக் கருத்தில் கொண்டு நம் முன்னோர் ஊர்கள் தோறும் கோயில்கள் அமைத்தனர் போலும் "கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்" என்ற முதுமொழியையும் வகுத்துள்ளனர்.

**சமயங்கள் எமக்குப் போதிப்பவை எவை?**

ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம், கருணை, காருண்யம், பாசம் இவற்றுடன் அமைதி போன்ற இன்னோரன்ன பலவும் ஆகும். எமது சைவசமயத்தைப் பொறுத்தவரையில் அறுபத்து மூன்று நாயன்மறில் எல்லாச்சாதியினரும், எல்லா வயதினரும் அடங்குவதை நாம் காணமுடியும். இது உலகியல் பண்பாடு, கலாச்சாரம் என்ற விழுமியங்களிற்கு அப்பாற்பட்ட நிலையில் சமயத்தை வைத்திருப்பதையே காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயவழிபாட்டினை எடுத்துக் கொண்டால் எல்லா மக்களும் ஒற்றுமையும், ஒன்று திரண்டு, சமத்துவம் மிக்கநிலையில் பூசை, வழிபாடு, கூட்டுப்பிரார்த்தனை என்பவற்றில் ஈடுபடுவதை நாம் காணமுடிகிறது. இவை மத அடிப்படை அம்சங்களை வெளிக் கொணர்கின்றன. ஆண்டவன் சன்னிதியில் அனைத்தும் சமம் என்பதை தெய்வங்களின் தோற்றங்களில் நாம் காணலாம் சைவசமயக்கடவுளின் முருகனின் வாகனம் மயில் அம் மயிலின் காலடியில் பாம்பு உள்ளது. மயிலும் பாம்பும் ஒன்றுக் கொன்று பகையானவை ஆயினும் ஆண்டவன் அடியில் அவற்றின் பகைமை உண்டி ஒடுங்கி விடுவதாகத்தத்துவம் கூறுகிறது.

சமயவழிபாட்டில் ஆலயவழிபாடு இன்றியமையாதது. ஆ + லயம் ஆன்மாவை லயப்படுத்தும் இடம் என்பதே பொருள். ஆலயவழிபாடு ஆன்மாவை வழிப்படுத்தும் இடமாகக்கருதப்படுகிறது. எனவே வாழ்வில் ஏற்படும் பதட்டம் நீங்கிச் சாந்தம் தரும் ஆலய வழிபாடு நித்தியமானதே. மதபோதனைகள் மனிதனுள் மிருக உனர்வு தலைதூக்கும் போது அதனை அடியோடு நீக்குதற்குரிய "துறோட்டி" போன்றது. மதபோதனைகள் மூலம் தன்னல வலையில் இருந்து விடுபட்ட மனிதன் அறியாமை என்ற இருளைக் கிளித்துக் கொண்டு ஒளிநிறைந்த உலகைக் காண வழி தேடுவான் போதனையாளர்கள், வழிகாட்டிகள், ஞானிகள், சமயதொண்டர்கள் என்போரின் வாழ்க்கை வரலாறுகள் மனுக்குலத்திற்கு பெரும்படிப்பினையாகும். அவற்றை ஒவ்வொரு மனிதனும் அறிந்து பின்பற்ற வேண்டியது காலத்தின் தேவையாகும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற வள்ளுவன் வாக்கிற்கு ஏற்ப பூமியில் வாழ வேண்டிய நெறிப்படி, முறைப்படி வாழ்பவன் வானுலகில் தேவர்களுள் ஒருவனாகக்கருதப்படுவான் மனிதனை மனிதனாகவும், தேவனாகவும் வாழவைப்பவை சமயங்கள்.

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு"

பொருளில்லார்க்கு இவ்வுலகவாழ்வு இல்லாததுபோல் இறையருள் இல்லார்க்கு மறுஉலகில் இன்பம் இல்லை என்கிறார் பொய்யாமொழி. இவ்வாறான இறையருளைப் பெற எமக்கு வழிகாட்டுபவை சமயங்களேயாகும். சமயங்களால் மனிதன் இவ்வுலகு அவ்வுலகு இரண்டிலும் ஈடேற்றம் பெறுவான் என்பது திண்ணம்.

இவ்வுலகவாழ்வின் எல்லைகள் பிறப்பும் இறப்பும் ஆகும். இவ் இரு எல்களிற்கிடைப்பட்டகாலம் மிகமிகக் குறுகியதே இதனைப் பொய்யாமொழி தனது காற்றில்

"உறங்குவது போலும் சாக்காடு
உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"

எனக்குறிப்பிடுகின்றார். இறப்பு என்பது உறக்கம் வருவதைப் போன்றது. பிறப்பு என்பது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வது போலாகும் இதனால் இக் குறுகிய கால மனித வாழ்வில் மனிதன் சாதிக்க வேண்டியவற்றை சமயங்கள் நன்கு போதிக்கின்றன. சமுத்திரத்தில் படகுவலிப்பவனுக்கு துடுப்புப் போன்று மனித வாழ்வுக்கு சமயங்கள் இன்றியமையாதமைகின்றன.

சமயஸ்தாபனங்கள் அன்றும் இன்றும் கல்விக்கண் திறப்பவையாக அமைகின்றன. அன்று அருங்கலைகள் வழிபாட்டிடங்களினூடாக வளர்ச்சிபெற்றதை வரலாறு மூலம் நாம் அறியலாம் கண்டைய மன்னர்கள் சமயங்களைப் போற்றிப் பேணினர். அவற்றிற்கு மானியங்களை வழங்கி அவற்றால் மக்கள் நன்மை பெற்றனர் என்பதை வரலாறு உணர்த்துகின்றது. நாளுக்கு நாள் மாறும் மனித நாகரீக வளர்ச்சியில் சமயங்கள் கட்டுப்பாட்டையும் நேர்த்தியையும், நெறிதவறாத தன்மையையும் எடுத்தியம்புவதால் மனித வாழ்வு தடம் புரளாதிருக்க சமயங்கள் என்றுமே ஊன்று கோல்களாகின்றன. ☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மயமாக்கல் கல்வியில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம்



தம்பு சிவா

பொருளாதார நோக்கினை மையப்படுத்தி மேற்குலக நாடுகள் 'கோளமயம்' என்ற எண்ணக் கருவை முன்னிலைப்படுத்தி வருகின்றன. உலகின் சமகாலக் கருத்து வினைப்பாட்டில் 'கோளமயம்' என்பது முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இவற்றின் தாக்கங்கள் சமூக வாழ்க்கையிலும், கல்வியிலும், மனித பண்பாட்டிலும் அதிகம் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டன. இதன் விளைவாகப் பல சாதகமானதும் பாதகமானதுமான செயற்பாடுகள் நடைபெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. கோளமயத்தோடு இணைந்த பின் நவீனத்துவம், தொழில்நுட்பமுதலாளித்துவம், தகவல் மீநிலைப் பெருஞ்சாலை, உலகளாவிய பெஞ்சந்தை, புதிய வறுமை, கோள வெகுசனப்பாடு என்பன உயிர்ப்புப் பெற்றுள்ளன. இவை ஒரு வர்க்க சார்பானதும், சுரண்டல் நிலையை ஊக்குவிப்பதாகவும், மேலெழுந்த நிலைப்பாடாகவும் இருப்பதை அவதானிக்க முடிகிறது. எனவே, பல்வேறுபட்ட பிரச்சினைகளும் எழுபொருட்களும் கோளமயமாக்கலால் தோன்றியுள்ளன.

கல்வியைப் பொறுத்தளவில் பணம் படைத்தவர்களின் செல்வாக்கும் அதேவேளை பறிப்பும் மலிந்திருப்பதைக் காணமுடிகின்றது. வளர்முக நாடுகள் முதலாளித்துவ நாடுகளின் மாயவலைக்குள் அகப்பட்டு பொருளாதார ரீதியில் பின்னடைவுகளைக் கண்டுவருகின்றன. தாய்மொழிக்கல்வி, இலவசக்கல்வி என்பவற்றுக்கு வேட்டுகள் வைக்கப்பட்டுள்ளன. சர்வதேசப் பாடாலைகளின் அதிகரிப்பு, தனியார் பல்கலைக்கழகங்களின் தோற்றப்பாடு காரணமாக ஏழைமக்களின் பிள்ளைகள் மிகுந்த பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நிலை தோன்றியுள்ளது.

சர்வதேசப் பாடசாலைகளோ மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களோ இலாபநோக்கைக் கருத்திற்கொண்டு செயற்படுவதனால் வசதிபடைத்தவர்களின் பிள்ளைகள் மட்டுமே அவற்றில் சேர்ந்து கல்வியைத் தொடரமுடியும். மேலும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களும், கல்வி நிறுவனங்களும் தங்கள் முகவர்கள் மூலம் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் செய்து மாணவர்களை உள்வாங்கும் பெருமுயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் கவரப்பட்ட பலர் இலட்சணக்கணக்கில் பணத்தைச் செலவுசெய்து கொண்டிருக்கின்றார்கள். இவற்றின் மூலம் பட்டங்கள் பெற்றாலும் வேலைவாய்ப்புக்கள் பெறுவது இன்றைய உலக பொருளாதார சூழ்நிலையில் பெரும் சவாலாகவே அமைந்துள்ளது. மேலை நாடுகளில் பொருளாதாரப் பின்னடைவு காரணமாக பெரிய பெரிய நிறுவனங்களிலிருந்து இலட்சக்கணக்கான பணியாளர்கள் வேலையை இழந்து வருகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கப் பாடசாலைகளைப் பொறுத்தளவில் நகர்ப்புறத்திற்கும் கிராமப்புறத்திற்குமிடையில் நீண்ட இடைவெளி இருப்பதை அவதானிக்க முடிகின்றது. நகர்ப்புற பாடசாலைகள் எல்லாவகையான பௌதிக வளங்களையும் கொண்டிருக்கின்ற அதேவேளை கிராமப்புறப் பாடசாலைகளில் கட்டிட வசதியின்மை, தளபாட வசதியின்மை, ஆசிரியர் பற்றாக்குறை, விளையாட்டு மைதானம் இன்மை, மின்சார வசதியின்மை, குடிநீர் பற்றாக்குறை, மலசலகூடப் பற்றாக்குறை போன்ற பலவகைப்பட்ட பிரச்சினைகள் இருப்பது உண்மையே. மேலும் கிராமப்புறங்களைப் பொறுத்தளவில் வறுமை காரணமாகப் பிள்ளைகள் ஒழுங்காகப் பாடசாலைக்கு வருவதில்லை. அவர்களின் பெற்றோர்களும் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்டாமல் சிறுவயதிலேயே தொழிலுக்கு அனுப்பும் மனோபாவத்துடன் வாழ்கின்றார்கள். 'எல்லாருக்கும் சமமான கல்வி' என்ற கோட்பாடு சிதறடிக்கப்படுகின்றது. இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வே. இதைப் பலர் புரிந்துகொள்ளாமல் இருப்பது விந்தையல்ல.

மனித வளம், இயற்கைவளம் முதலியவற்றைத் தீவிர சுரடண்டலுக்கு உள்ளாக்கி மிகை இலாபமீட்டும் பொருளாதாரச் செயற்பாடுகளினால் மனித வாழ்க்கை அவலங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றது. இந்த வகையில் பல்தேசியக் கம்பனிகளின் ஈடுபாடு மேலோங்கியிருப்பதை அவதானிக்கலாம். நவீன முதலாளித்துவ விரிவையும் சந்தைப் பொருளாதாரத்தையும், நுகர்ச்சிக்கோலங்களையும், சுரண்டலையும் கோட்பாட்டு நிலையில் நியாயப்படுத்தும் தத்துவமாக பின்நவீனத்துவம் உருவாக்கப்பட்டுள்ளது. பின்நவீனத்துவவாதிகளினால் உருவாக்கப்பட்ட எண்ணக்கருக்களின் உட்பொருளாகவும் மறை பொருளாகவும் அமைவது சுரண்டலுக்கு உள்ளாகிய மக்கள் அனுபவ நிலையிலும் கருத்தியல் நிலையிலும் ஒன்றிணைதலைத் தடுத்தலாகும்.

இதேவேளை, உலக முதலாளித்துவத்தின் வளர்ச்சியையும், உலகை நோக்கிய சந்தையின் வரிவால் ஏற்படக்கூடிய விரிவான இலாபமீட்டலையும், விஞ்ஞான பூர்வமாக விளக்கிய கோட்பாடாக அமைந்த மார்க்சியம் அறிகை நிலையில் புதிய தரிசனத்தை வழங்கியவண்ணமுள்ளது. கார்ல் மாக்ஸின் விசை கொண்ட சிந்தனைகளின் கோட்பாடு மீண்டும் அவசிய தேவையாகிவிட்டது. கியூபா நாட்டில் மேற்கொள்ளப்படும் கல்விக் கொள்கைகள் வளர்ந்துவரும் நாடுகளின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பயன் அளிக்கும் என்பது சில வறிய நாடுகளின் கருத்தாக அமைந்துள்ளது.

பேராசிரியர் சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கராவினால் இலங்கையில் கொண்டு வரப்பட்ட 'இலவசக் கல்வி' மேல்தட்டு மக்களினதும், மத்தியதர வர்க்கத்தினதும் அபிலாசைகளை நிறைவேற்றியுள்ளதே தவிர கீழ்த்தட்டு மக்களின் கல்வி மேம்பாட்டை நோக்கி நகரவில்லை. இதற்குக் கல்விசார் அதிகாரிகளின் மனப்போக்கும், ஒரு விதத்தில் காரணமாக இருந்துள்ளது என்பது மறுப்பதற்கில்லை. சில தோட்டப்பகுதிப் பாடசாலைகள் அன்று ஆரம்பிக்கப்பட்ட நிலையிலேயே இன்றும் எதுவித வளமுமற்று இருப்பதை அவதானிக்க முடிகின்றது. அதே வேளை தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை, பொருளாதாரரீதியில் மிகவும் பின்தள்ளப்பட்டு இருப்பதால், தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாமல் கூலிவேலைக்கு அனுப்பிச் சம்பாதித்து குடும்பத்தை நடத்த வேண்டிய பரிதாப நிலை தோன்றியுள்ளது. பேனை பிடித்து எழுதவேண்டிய பிஞ்சுக்கரங்கள் பாத்திரம் தேய்த்து வயிற்றைக் கழுவும் வேதனை நிரம்பிய வாழ்க்கைக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளப்பட்டுள்ளன. முதலாளித்துவ சமுதாய அமைப்பில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் இருந்தவண்ணமே உள்ளன. அதேவேளை, கோளமயமாக்கல் என்னும் ஒரு படி உயர்ந்து நின்று வறிய நாடுகளை வாட்டி வதைக்கின்றது. இந்நிலையில் கல்வி வழங்கலும் விரிவும், உழைக்கும் வர்க்கத்தின் உயர்மட்டத்திறன்களைச் சுரண்டும் நடவடிக்கையாக அமைதலைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. கோளமயமாக்கலுக்கும் கல்விக்குமுள்ள தொடர்பு பால்நிலையிலும் நோக்கவேண்டியுள்ளது. பெண்களின் நிலையைப் பொறுத்தவரை தொழிற்சந்தை இருமைநிலை காணப்படுவதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். வர்க்க நிலைக்குட்பட்ட சுரண்டலுடன் பால் நிலைப்பட்ட சுரண்டலும் இணைந்து செல்வதைக் காணமுடியும். மனித வளத்தை மீள் உற்பத்தி செய்யும் சிக்கன நடவடிக்கையில் பெண்களே ஈடுபடுத்தப்படுகின்றனர். கோளமயமாக்கலால் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் பெண்களே அதிகதாக்கத்துக்கு உள்ளாகின்றனர். வறிய பெண்கள் கல்விச் செயல்முறையில் இருந்து இலகுவாக வெளிவீசப்பட்டு விடுகின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் கல்வி வழங்குநரும், கல்வி பெறுநரும் சந்தைத் தேவையின் அடிப்படையாகவே தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். கட்டமைப்பு இசை வாக்கல் என்ற பொருளாதார நடவடிக்கைகள் கல்விக்கென அரசு வழங்கும் நிதியைக் குறைக்கும் நிலையை உருவாக்கியுள்ளன. இதன் காரணமாக வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் மற்றும் பிரதிகூலம் அனுபவித்தோர் கல்வி நிராகரிப்புக்கு உள்ளாகும் நிலை பெருக்கமடையத் தொடங்கியுள்ளது. பொருளாதார நிலையில் அனுகூலம் பெற்றவர்களே கல்வி நிலையிலும் மேம்பாடு கொள்ளல் வலுவூட்டப்பெற்று வருகின்றது. கோளமயமாக்கல் இன்றைய நிலையில் தமக்கு அனுகூலங்களை ஏற்படுத்தும். கல்வி விசையாகவும் விரிவடைந்துள்ளது. "இது எல்லோருக்கும் சமமான கல்வி" என்ற செயற்பாட்டுக்கு எதிரான போக்கைக் கொண்டிருப்பது ஆரோக்கியமான செயற்பாடாக இல்லை எனக் கல்வியாளர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

சமகால அறிவுப்போக்கிலும் மாற்றங்கள் நிகழத்தொடங்கியுள்ளன. வேறுபட்ட அறிவு வேறு வகைப்பட்ட விசையுடன், வேகத்துடன் செயற்பட ஆரம்பித்துள்ளது. உதாரணமாக தொழில்நுட்ப அறிவின் வேகம் இலக்கிய அறிவின் வேகத்தை விஞ்சும் வகையில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. மார்க்சியக் கண்ணோட்டத்தில் அறிவு சமூக இருப்பின் வெளிப்பாடாக மேலெழுதலும், அறிவுக்கும் கருத்தியலுக்குமுள்ள தொடர்புகளும் வலியுறுத்தப்படுகின்றன. உதாரணமாகச் சுரண்டுவோர் தமக்குச் சார்பான அறிவுப்பலத்தை கட்டியெழுப்புதலும், சுரண்டப்படுவோர் அவற்றுக்கு அறைகூவல் விடுக்கும் அறிவுப்பலத்தை உருவாக்குதல் நடப்பியல் வெளிப்பாடுகளாகவுள்ளன. மார்க்சிய அறிக்கையில் அறிவை இனங்காணலில் கருத்து வினைப்பாடு என்பதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது.

உயர்கல்வி, தொழில்நுட்பக்கல்வி, தொழில் சார்கல்வி, வாண்மைக்கல்வி முதலியவை வயது வேறுபாடின்றி, சமூக அந்தஸ்து வேறுபாடின்றி அனைவருக்கும் திறந்துவிடப்பட்டுள்ள நிலையில் சமூகத்தின் தாழ்மட்டங்களில் உள்ளவர்கள் இந் வாய்ப்புகளைப் பயன்படுத்தி கற்று மேலுயர முடியும் என்று கூறப்படுவது பொய்யான செய்தியாகும். உயர்பட்டங்கள், சான்றிதழ்கள் முதலியவற்றைப் பெற்றுக்கொள்வதற்குக் கல்விச் சந்தையிலே அதிக பணத்தை விரையமாக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் சான்றிதழ்களும், பட்டங்களும் பெறவிரும்புபவர்கள் அதைப் பெற்றுக்கொள்வதற்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியை வியாபாரமாக்கியமையால், அதிக பணத்தைச் செலவுசெய்ய வேண்டியுள்ளது. அதனால் சான்றிதழ்களும், பட்டங்களும் பெறுதல் சாமானியருக்கு நடைமுறையில் எட்டாதவையாகவே அமைகின்றன. ஆகவே கல்வி எல்லோருக்கும் பொதுச் சொத்தாக அமைய வில்லை.

ஊழல் அதிகமாகும்போது சமூகத்தின் நம்பிக்கைகள் தகர்த்தெறியப்படுகின்றன. நாட்டின் அபிவிருத்திக்கான ஆற்றல் மழுங்கிப்போக நேரிடுகின்றது. இளமைப் பருவத்தினர் கல்வித்துறை ஊழல்களுடன் பரிச்சயப்படுகின்றனர். இதனால் கல்வி முறையின் விழுமியங்களைப் பேணும் நோக்கங்கள் சிதைவடைகின்றன. காலங்காலமாகக் கல்வி முறையானது அறிவை மட்டுமன்றி விழுமியங்களைப் போற்றியும் வழங்கியும் வந்துள்ளது. ஆனால் கல்வித்துறையில் இடம்பெறும் ஊழலான விழுமிய நோக்கங்களைத் தகர்க்கின்றது. இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாக கோளமயமாக்கல் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

மாயப் பேரலைகளை உருவாக்கி, மாணவ சமுதாயத்தைத் திசை திருப்பி சுரண்டும் வர்க்கத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டு ஏழை மாணவர்களின் கல்வியைக் கேள்விக் குறியாக்கி ஒரு வித குழப்ப நிலையை உலகமயமாக்கல் ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மை.

☆☆☆



**திருமதி யோகராணி நடராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் மண்ணில் இன்றும் வாழும் நல்லாசிரியரின் பணி



**மூ. சிவலிங்கம்**

(இளைப்பாறிய கிராம சேவகர்)

இயற்கை அன்னையின் அருளால் அமைந்த செம்மண்ணும் கண்ணீர் ஊற்றும் இணுவில் திருவூருக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

இங்கு தோன்றிய சித்தர்களும், அருளாளர்களும், கல்விமான்களும் காட்டிய பாதையில் சிவநெறியும் முத்தமிழும் நற்பயிராக வளர்கின்றன. இதனால் இவ்வூர் புனிதமான புண்ணிய பூமியாகப் போற்றப்படுகிறது. கல்விமான்களின் தூயபணியால் எம்மக்கள் மனித நேயத்துடன் வாழும் சிறப்பை அடைந்துள்ளார்.

கல்வியாளர்களின் தன்னல மற்ற தூய சிந்தனையும், உணவு மற்றும் கல்வியறிவு யாவற்றையும் பகுத்துண்டு வாழும் நற்பண்பும், எல்லோரும் எல்லா வளமும் பெற்று வாழ வேண்டும் என்ற பொது நோக்கும் எம்மண்ணில் நல் விதைகளாகப் பரவிப் பயிராகி இன்று அறுவடைசெய்யும் காலமாகும். வித்திட்ட வரை விதந்து கூறி நன்றி செலுத்துவது சிறந்த பண்பாகும்.

நற்குடியிற் பிறந்து, நற்கல்விகற்று நற்பணியாம் ஆசிரியர் பணியினைப் பதினைந்து வருடகாலம் நிறைவு செய்து நல்லாசிரியருக்குரிய சகல இலக்கணங்களுக்கும் உரிய உயர்திரு வ. நடராசா அவர்கள் நன்கு மதிக்கப்பட்டார். இணுவில் மத்தியில் அமைந்த சைவமகாஜன வித்தியாசாலை தனது புதிய தலைமையாசிரியராக தெரிசெய்யும் சிறப்பினைப் பெற்று இருபத்திரண்டு ஆண்டுகளில் அரும் பணியாற்றினார். இவரின் பொறுப்பான பணிக்கு அணிகலனான தூய உள்ளத்தின் புன்சிரிப்பும், தூய வெண்தேசிய உடையும், கற்ற கல்விக்கேற்ற உற்சாகமும் ஆளுமையும் யாவரையும் வியக்கவைத்தன.

இவரின் வழிகாட்டலில் உருவான பலர் பலதுறைகளையும் சார்ந்த உயர் பதவிகளை அலங்கரித்து எம் மண்ணுக்கும் பாடசாலைக்கும், ஆசிரிய சமூகத்திற்கும் நற்பெயரை தேடினார். இன்று தமது நன்றியறிதலைக் காண்பிக்கின்றனர். பாலர் வகுப்பு முதல் மேல் வகுப்பு வரை இவரின் வழிகாட்டலில் உருவான எனக்கு என்கடமையிற் சிறப்பும், சமய, சமூக அறப் பணிக்கான உணர்வும் கிடைத்ததை என் இறுதி மூச்சு வரை நன்றியுடன் போற்றும் சித்தமுடையேன்.

உயர்திரு நடராசா அவர்களின் சமயநெறி இணுவைக்கந்தன் ஆலய அறப்பணியில் இணைந்தது. தமது குலத்துக்கே வாழ்வு தந்த விவசாயத்தை இறுதி வரை நேசித்தார். நாட்டுயர்வான கூட்டுறவில் தன்னை அர்ப்பணித்தார். உடல் உறுதி கருதிக் கரப்பந்தாட்டத்தை ஆடி மகிழ்ந்தார். சமூக நீதி பேணி உள்ளூரில் பிணக்குகளைச் சமரசமாக்கினார்.

இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட இவரின் பணியின் பெறுபேறாக இவரின் சற்புத்திரர்கள் கல்வியால், பணியால், உயர் சிந்தனையால், அளப்பணியால் உயர்ந்தனர். இவர் 37 வருடப் பணியாற்றிய கல்விக்கூடம் இன்று என்பதை ஆண்டு நிறைவுகாணும் இவ்வேளை நல்லாசிரியர் நடராசா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா யாவரையும் பெருமகிழ்வுடன் வரவேற்க இறையருள் பாலித்தது.

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீர் இணுவை திருவூரும் தலைமை ஆசான் நடராசாவும்

**திருமதி சந்திரபவானி பரமசாமி** *B A.(Hons)*
செயலாளர் ப. மா. சங்கக் கொழும்புக் கிளை

ஒரு கிராமத்தின் வளர்ச்சியையும், புகழையும் பெருமையுடன் எடுத்துக் காட்டுவன அங்கு வாழ்ந்த, வாழ்கின்ற மக்களின் பாரம்பரியம், பண்பாடு, ஒழுக்கம், உழைப்பு, நேர்மை என்பனவாகும். திருவூர் என்ற சிறப்புப் பெயருடன் விளங்கும் இணுவில் கிராமத்தில் இமைந்துள்ள பரராஜசேகரப் பிள்ளையார், செகராஜசேகரப் பிள்ளையார் ஆலயங்கள் காரைக்கால் என்று இந்தியாவிலுள்ள காரைக்காலை நினைவூட்டும் பிரதேசம், ஊர் எல்லையில் அமைந்துள்ள கருணாகரப் பிள்ளையார் ஆலயம் என்பன இவ்வூருக்கும் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஆட்சியாளருக்குமிடையேயான தொடர்பை விளக்கி நிற்கின்றன.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவர் வானில் நனி சிறந்தனவே" என்பதற்கிணங்க எம் திருவூரின் வளர்ச்சியிலே பெரும் பங்காற்றியவர் இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையின் தலைமை ஆசிரியராக இருந்த திரு. வயித்திலிங்கம் நடராசா ஆவார். சிறந்த ஒரு ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் பணிசெய்து பாடசாலை மாணவர்களின் வளர்ச்சியில் அதன்மூலம் சமுதாய வளர்ச்சியினூடாகக் கிராம வளர்ச்சியின் பெருந்தூணாக விளங்கியவர் அவர். இணுவையூர் சமயமும், தமிழும், இசையும், கூத்தும், பல கலைகளும் நிறைந்து விளங்கும் கிராமம் எனலாம். பாடசாலைத் தலைமைத்துவத்திலிருந்து கொண்டு அவ்வூர் மாணவர்களின் குடும்பநிலை அறிந்து அதற்கேற்ப அவர்களை நெறிப்படுத்தி ஒழுக்கம், நன்னடத்தை, கீழ்ப்படிவு, அறிவு நிறைந்தவர்களாக உலகளவில் பெருமையுடன் நடமாடவைத்த பெருமை திரு. வ. நடராசாவையும் அவருடன் சமகாலத்தில் கடமையாற்றிய திரு. இராசதுரை, திரு. கந்தையா, திரு. சீவரட்ணம், திரு. செல்வரட்ணம், திரு. அருளம்பலம், திரு. திருமதி பதஞ்சலி (சிவபாக்கியம்) திரு. த. நடராசா உட்பட்ட ஆசிரியர் குழாத்தையே சாரும்.

எங்கள் பாடசாலை என்று சொல்லும்பொழுது பாடசாலையில் நடாத்தப்பெற்ற நால்வர் குருபூசை, ஆறுமுகநாவலர் குருபூசையாகிய ஐந்து குருபூசைத் தினங்கள், நவராத்திரி நாட்கள், ஐப்பசி வெள்ளிக்கிழமைத் தினங்கள் மறக்கப்படமாட்டாதவை. இவையே மாணவர்களின் அக்கிராமத்தின் தமிழ், சைவ வளர்ச்சிக்கு அடிகோலின. அந்த அத்திவாரத்திலேயே நாம் இன்றும் வாழ்கின்றோம். இந்நாட்களில் மாணவர்கள் பங்குபற்றிய பதிகம் பாடுதல், பேச்சு மட்டுமல்ல உணவு தயாரித்தல், பங்கிடுதல், சுத்தம் செய்தல் யாவுமே வாழ்க்கைக்கு வழிகாட்டுவனவாக அமைந்தன. உணவு அருந்தும்போதுகூட முக்கியமாகச் சபைகளில் அமர்ந்து உணவருந்தும்போது நினைவிலே வருபவர் தலைமை ஆசான் திரு. வ. நடராசா அவர்களே. உணவு அருந்தும்போது உள்ளங்கையில் உணவு படாது அருந்துகின்றார்களா என எல்லா மாணவர்களையும் பார்த்தக் கொண்டு வருவது இன்றும் கண்முன்னே நடப்பதாக உளம் கொள்ளும். இது போன்ற பல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொண்டோம். ☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது தோற்றப் பொலிவும், ஆளுமையும், முகாமைத்துவப் பண்பும், கண்டிப்பும் மறக்க முடியாதவை. தேவையான நேரத்தில் ஆசிரியர் குழாத்துடன் கூடிச் சிறந்த முடிவெடுப்பார். ஒழுக்கக் கட்டுப்பாடு பேணுவதில் கடும்போக்குள்ள அதிபராகவும் இருந்தார். ஒழுக்கக் கட்டுப்பாட்டை மீறிய மாணவர்கள் தண்டிக்கப்படுவதுடன் அவர்களைப் பாடசாலையிலிருந்து வெளியேற்றவும் தவறவில்லை. அன்று உயர்வகுப்பில் வெளியேற்றப்பட்ட மாணவர் ஒருவர் இன்றும் ஒழுக்கம் குறைந்தவராகக் காணப்படும்போது எம் கண்முன் நிற்பவர் கடுகடுப்பான முகத்துடன் கூடிய தலைமை ஆசிரியர் திரு. வ. நடராசா அவர்களே. அக்காலத்தில் சைவமகாஜனா வலி வடக்குப் பிரதேசத்தில் பெருமையுடன் முன்னணியில் நின்றது. மாவட்ட, மாகாண விளையாட்டுப் போட்டிகளில் தகுதியான மாணவர்களைத் தேர்ந்தெடுத்து ஊக்கப்படுத்தி வறுமையிலும் உயர வைத்தவர்கள். அங்கு கடமையாற்றிய ஆசிரியர்கள், புலமைப்பரிசில் பரீட்சை, க. பொ. த (சாதாரண) பரீட்சைக் காலங்களில் விசேட கவனமெடுத்து மாலைநேர வகுப்புக்கள், விடுமுறைதின வகுப்புக்கள் ஆசிரியர்களால் நடத்தப்பெற்றது.

தன்னலம் கருதாது பணியாற்றியவர்கள் அக்கால ஆசிரியர்கள். மாணவர்களின் வளர்ச்சி கிராம வளர்ச்சியானது. தேவையான நேரங்களில் சங்கீத, நடன, நாடகம் எனப் பல்துறை வளர்ச்சி கண்டது பாடசாலை. அதுமட்டுமன்றித் தமிழகத்தில் இருந்துவரும் கலைஞர்கள் அறிஞர்களின் நிகழ்ச்சிகள் பாடசாலையில் நடாத்தியதுடன், அவர்களும் கௌரவிக்கப்பட்டார்கள்.

குருபூசைத் தினங்களில் அறிஞர்கள், வடிவேலுச் சாமியார் போன்ற ஞானிகளை அழைத்து ஆத்மீக உரைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. அங்கே கற்ற பலர் ஆத்மீக விழிப்புணர்வு, சமய விழுமியங்களுடன் பிற்காலத்தில் திகழ்வதற்கு அடித்தளம் சைவமகாஜனாவிலேயே இடப்பட்டது. லண்டன் மாநகரில் சமயப் பணியில் ஈடுபாட்டுடன் செயற்படும் திரு. நடராசா சச்சிதானந்தம், திரு. சண்முகநாதன் ஸ்ரீரங்கன் போன்றவர்களை உதாரணமாகக் கூறலாம். சைவனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தீட்சை எடுக்க வேண்டும் என்பதற்கிணங்க ஐப்பசி வெள்ளித் தினங்களில் பாடசாலையின் முன்னே அமைந்துள்ள ஸ்ரீ விஸ்வநாதர் சிவன் ஆலயத்திலும், பாடசாலையிலும் 5ம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களுக்குத் தீட்சை அளிக்கப்படும். ஆலயத்தின் அருகே வாழ்ந்த குருக்கள் ஐயா அவர்களும் இங்கு நினைவுகூரத் தக்கவர்.

திரு. வ. நடராசா அவர்கள் பாட விடயங்களில் சிறந்த ஆளுமைமிக்க ஆசானாக விளங்கினார். சமயக்கல்வி, தமிழ் அறிவு நிரம்பிய அவர் ஆங்கிலமொழி போதிப்பார். புவியிற் பாடம் கற்பிப்பதில் சிறந்த ஆசிரியராக விளங்கினார். அவரிடம் பெற்ற புவியியல் அறிவு, உலகப்பட விளக்கம் என்பன எனது வாழ்வில் இன்றும் கைகொடுப்பதற்கு வழிகாட்டியமையை வாழ்நாளில் மறக்க முடியாது. கண்டிப்பும், தண்டிப்பும் பேணப்படமுடியாத இன்றைய காலகட்டத்தில் மாணவ சமுதாயம் ஒழுக்க விழுமியங்களிலிருந்து விலகிச் செல்வதை நோக்கலாம். அதே கண்டிப்பும், தண்டிப்பும் அக்காலத்தில் மாணவர்களை நல்வழிப்படுத்தி உயர்ந்த விழுமியங்களுடன் சமூகத்தில் வாழ வழிவகுத்தது. "நாடு உனக்கு என்ன செய்தது என்பதை விட நீ நாட்டுக்கு என்ன செய்தாய் எனச் சிந்திக்க வேண்டும்" என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன். கென்னடி கூறினார். இக்கூற்றுக்கிணங்க கிராம வளர்ச்சிக்காக, ஆலய வளர்ச்சிக்காக உறுதுணை புரிந்து வாழ்ந்தவர் தலைமை ஆசான் திரு. வ. நடராசா அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஊருக்குத்தான் உபதேசம் எனக்கல்ல” என வாழாது தானும் வாழ்ந்து காட்டினார். பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்ட சமய, சமுதாய விழுமியங்களை அவரே பின்பற்றி வாழ்ந்து மற்றவர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கினார். ஓய்வு பெற்றபின் சிறந்த விவசாயியாக வலம் வந்தார். கிராம வளர்ச்சிக்காகப் பல தொண்டுகள் ஆற்றினார்.

தொடர்ந்து அப்பாடசாலையிலே க. பொ. த வரை படித்தவர்களுக்கும் அங்கிருந்து வெளியேறி அயற்கிராமங்களில் உள்ள பெரிய கல்லூரிகளில் உயர்வகுப்புப் படித்தவர்களுக்கும் அடித்தளம் இடப்பட்டது சைவ மகாஜன வித்தியாசாலையிலேயே. எப்படியிருப்பினும் அத்திவாரம் இல்லாது கட்டிடம் எழும்ப முடியாது என்பதனை உணர வேண்டும். பாடசாலைப்பற்று, ஊர்ப்பற்று வளர்க்க அடிப்படையாக அமைந்தவை சைவ மகாஜன வித்தியாசாலையும், அதிபர், ஆசிரிய குழாமுமே. பழைய மாணவர்கள் பலர் இன்றும் பாடசாலை வளர்ச்சியிற் பங்காற்றத் துடிப்புடன் இருக்கின்றார்கள் என்பதையும் நினைவூட்டி அதிபர் திரு. வ. நடராசா அவர்களின் நினைவுவிழா சிறப்பாக அமைய இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

☆☆☆



**இணுவில் கந்தசுவாமி கோயில் அடியார்கள் மற்றும் தர்மகர்த்தாக்களுடன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவரின் செய்தி

**சின்னையா அமிர்தலிங்கம்**

இணுவில் சைவ மகாஜனக் கல்லூரியின் தலைமை ஆசிரியராக இருந்த செல்லப்பா ஆசிரியர் காலமாகிய இடத்துக்கு புதிய தலைமை ஆசிரியர் தெரிவு நடை பெற்றது பலபேர் முயற்சித்த போதும் நிர்வாகத்தினர் திரு. வை. நடராசாவை தகுதியானவர் என கருதி தெரிவு செய்தனர். இவ் நியமனத்தை கல்வி அமைச்சு அங்கீகரித்து நியமனம் வழங்கியது.

இவர் பொறுப்பு ஏற்ற நாள் தொடக்கம் சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்தது வடமகாண ஆசிரியர் சங்கம் நடாத்துக்கின்ற இயல், இசை, நாடக போட்டிகளில் பங்கு பற்றி முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்று பாடசாலை முதன்மை இடத்தை வகித்தது. 1956 ம் ஆண்டில் யாழ்மாவட்டத்தில் நாடக போட்டியில் "சுந்தர மூர்த்திநாயனார் தடுத்தாட் கொண்டபாகம்" முதலாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை தேடித் தந்தது. அந்நாடகத்தில் நானும் நடித்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பாடசாலையை நிர்வாகிப்பதுடன் சிரேஷ்டதராதர (S.S.C) வகுப்புகளுக்கு சமயம், இலக்கியம், பூமிசாத்திரம் ஆகிய மூன்று பாடங்களையும் படிப்பித்து மாணவர்களை திறமைச் சித்தியடைய செய்த பெருமைக்குரியவர்.

இவருடைய பதவிக்காலத்திலே காலையில் பாடசாலை ஆரம்பிப்பது காலை தேவாரம் புராணம், மாலை வகுப்பு முடியும் போது தேவாரம் புராணம் பாடியே நிறைவடையும். வெள்ளிக்கிழமைகளில் காலை சிவ புராணம் எல்லோரும் சேர்ந்து பாட வழி அமைத்தவர். பின் 10 நிமிடங்கள் ஆசிரியர் மாணாக்கர் கொண்டு சமய பிரசங்கங்கள் செய்வித்தவர். நாயன்மார் நால்வரினதும் ஆறுமுக நாவலரினதும் குருபூசை தினங்களை நடாத்தி அன்று மதியம் எல்லா மாணவர்களுக்கும் அன்னதானம் வழங்கி மகிழ்ந்தவர்.

பாடசாலையில் மாணவர் சங்கத்தை அமைத்து தான் தலைவராகவும் மாணவரை செயலாளராகவும் வைத்து வழி நடாத்தி வளர ஆவண புரிந்தவர். சங்கம் பாடசாலை வளர பல சேவைப்பணிகளை செய்தது. நவராத்திரி பத்து தினங்களும் உயர் வகுப்பு மாணவர்கள் இணுவை கிராமத்து வீடுகளுக்கு பயனைபாடி சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவார்கள். அந்நேரத்தில் சேரும் பணம் பாடசாலை அபிவிருத்திக்கு செலவு செய்ய ஏற்பாடு செய்தவர். இப் பெருந்தகை இவருடைய காலத்திலே மேல் வகுப்பு மாணவர்களை சுற்றுலாவிற்கு அழைத்து கொண்டு இலங்கையில் பிரசித்தி பெற்ற இடங்களை பார்வையிடுவதற்கு வழிவகுத்தவர்.

மாணவர்களின் வரவு கூடி வரும்போது புதிய கட்டிடங்கள் அமைத்து வகுப்புகளை திறம்பட நடாத்தியவர். விவசாய பாடம் படித்தவர்களுக்கு முன் சிவன் கோயில் வளவில் தோட்டம் அமைத்து செயல்வடி வாக்கியவர் பனை அபிவிருத்தியை செய்ய எண்ணி பாடசாலையில் ஒரு பாடமாக "பன்னவேலை" அதற்குறிய ஆசிரியை நியமித்து செயலாக்கியவர். இவருடைய காலத்தில் ஒவ்வொரு வருடமும் S.S.C வகுப்பில் பதினைந்து இருபதுபேர் திறமை சித்தி எய்துவார்கள்.

இவர் வளர்த்த பாடசாலை இன்று தரமுயர்ந்து இணுவில் மத்திய கல்லூரியாக கிராமத்தின் நடுநாயகமாக K.K.S மெயின் வீதியில் உயர்ந்து நிற்கிது இப்போது மாணவர்கள் வெளி பாடசாலைக்கு செல்லாமல் இக் கல்லூரியில் கல்வி கற்கிறார்கள். நாம் படித்த காலத்தில் பலபேர் ஆங்கில பாடசாலைகளை நோக்கி சென்றபோதும் நாம் கடசிவரை இப்பாடசாலையில் கல்வி கற்று தேறி அரச உத்தியோகம் கிடைக்கப் பெற்றோம். என்போன்ற பலர் அரச உத்தியோகத்தில் அமர்ந்து ஓய்வு பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு காரணமாயிருந்த இப்பாடசாலை வளர்த்தெடுத்த அதிபர் அமரர் நடராசா அவர்களின் நூறாவது பிறந்ததின விழாவின் கண்டு கழிக்கும் வாய்ப்பு கிடைத்தமையை எண்ணி மகிழ்கிறேன். அவரின் புகழ் என்றும் நிலைத்து நிற்க மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் ஒன்றியம் [ஐ. இ]
# INUVIL ONRIYAM (UK)

18, Waverley Gardens Ilford, Essex IG6 IPT

## Persons:

**UNITED KINGDOM**
Mr. P. Panchacharam
Mr. P. Ananthapaskaran
Mrs. Ponmari Yogeswaran
Mr. Sri Rangan
Mr. Ariyarasa

**Inuvil, Sri Lanka**
Mr. Aru Thirumurugan
Prof. Saba Jayarajah
Prof. Thevarajah
Prof. R. Vigneswaran
Mr. S. P. Nadarajah
Mr. A. Kugathasan
Mr. T. Sivarajah
Mr. R. Balachandran

**PRESIDENT**
Mr. N. Saththiananthan

**SECRETARY**
Mr. C. Thavagnanakanthan (Thavam)

**TREASURER**
Mr. N. Sivakumar

**CULTURAL AFFAIRS CO -ORDINATOR**
Mr. P. Navendran

**PROJECT DIRECTOR CO-ORDINATOR**
Dr. S. Ananthavarathan

**COMMITTEE MEMBERS**
Mr. A. Vivekananthan
Mrs. Pathmaloshini Kannan
Mr. K. Manikam
Mr. R. Eashan
Mrs. Indra Raveendramohan
Mr. P. Kesavan

கடந்த 20 ஆண்டுகளில் உலகம் பல மாற்றங்களை அடைந்து விட்டது. தொடர்பு சாதனங்களின் பாரிய முன்னேற்றங்களினாலும், கணனியின் அதீத வளர்ச்சியாலும், தாக்கத்தாலும் அன்று அரச பரம்பரைக்கே சொந்தமான பல வசதிகள், சௌகரியங்கள் யாவும் இன்று சாதாரண மக்களிற்கும் கிடைக்கின்றன.

நாகரீகத்தின் பெயரால் பல சமூக மாற்றங்களும் நிகழ்ந்து விட்டன. இத்தனைக்கும் மத்தியில் தனித்துவத்தைப் பேணிக்கொண்டு, கலை கலாச்சாரத்தில் இன்றும் தனக்கென தனி இடத்தைத் தேடிக்கொண்டும், போராட்டகாலத்தில் பல கிராமத்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தும் மகத்துவம் வாய்ந்தது இணுவில் என்றால் மிகையாகாது.

இணுவிலின் அடையாளங்களில் இணுவில் மத்திய கல்லூரியும் ஒன்று. திரு. அப்பாக்குட்டியரின் தன்னிகரற்ற சமூகப் பார்வையில் தனது சொந்த 3½ பரப்புக் காணியில் உருவாக்கியதே அப்பாக்குட்டியரின் பள்ளிக்கூடம். பின்பு சைவமகாஜன சபையினரால் நடாத்தப்பட்டபடியால் சைவமகாஜன வித்தியாசாலை என்றும், பின்பு சைவமகாஜன வித்தியாலயம் என்றும் காரணங்களுடன் பெயர் மாற்றம் பெற்று, இன்று இணுவில் மத்திய கல்லூரி என நிமிர்ந்து நிற்கின்றது.

இக்கல்லூரியின் சரித்திரத்தைப் புரட்டும்போது எப்படி அப்பாக்குட்டியர், மயில்வாகனம், கல்வீட்டுப் பொன்னையா, முதல் அதிபர் செல்லத்துரை வாத்தியார் போன்ற மேன்மக்களை தவிர்க்க முடியாதோ, அதேபோல் இப்பாடசாலையில் மட்டுமல்ல, அகில இலங்கையிலும் மிக நீண்டகாலம் அதிபராக இருந்த அமரர் நடராஜா ஆசிரியரையும் தவிர்க்க முடியாது.

இவருடைய காலத்தில் மாணவனாக இருந்த பேறு பெற்றவன் என்பதாலும், அவர்மீது பெருமதிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருப்பதாலும் இக்கட்டுரையை அமரர் திரு. வ. நடராசா அவர்களின் 100 வது அகவை நிறைவுவிழா சிறப்பு மலரில் எழுதுவதில் பெருமைப்படுகின்றேன்.

இவர் 1933இல் தனது ஆசிரியத் தொழிலை இணுவில் சைவமகாஜன வித்தியாசாலையில் "ஏச்சண்டர்" கதிர்காமரின் அன்பளிப்பில் உருவான கொட்டகைப்பள்ளியில் ஆரம்பித்தார். அன்றும் மிடுக்கான அதிபர் செல்லப்பா ஆசிரியர். இவரின் மறைவுக்குப்பின் 1948இல் அமரர் நடராஜா அதிபரானார். 22 வருட அதிபர் சாதனை புரிந்து 1970இல் ஓய்வு பெற்றார்.

மிக நீண்ட காலம் தலைமை ஆசிரியராக இருந்த காரணத்தாலும், வயதில் மூத்தவர் என்பதாலும், ஆளுமையில் சிறந்தவர் என்பதாலும் அடைமொழியாக "பெரிய" நடராஜா வாத்தியார் என அன்பாக அழைக்கப்பட்டார். இவருடைய தலைமை ஆசிரியர் ஆட்சியில், பாடசாலை மாட்சிமை பெற்றது எனில் மிகையாகாது. குறிப்பாக பாடசாலையின் விரிவாக்கத்திலும், தெற்குப்பகுதியில் உருவான இரண்டு மாடிக் கட்டிடமும், பாடசாலை அகில இலங்கைரீதியில் விளையாட்டில் (1966 என ஞாபகம் - அம்பிகை சின்னத்துரையின் 100 யார் ஓட்டப்போட்டி) பங்குபற்றியதும் இவருடைய காலப்பகுதியிலேதான்.

காலையில் தமது கமத்திற்குச் சென்று வந்தாலும், தும்மைப்பூ நிறத்தில் வெள்ளை வெளேரென மடிப்புக் கலையாத வேட்டி, சட்டை, வாயில் ஒரு சுருட்டு, சுருள் சுருளான கேசம், கண நேரம்கூடத் தவறாது உரிய நேரத்தில் பாடசாலைக்கு வரும் நேர்த்தி, இவற்றின் ஒட்டுமொத்தச் சொந்தக்காரரே தலைமை ஆசிரியர் நடராஜா வாத்தியார்.

இவருடைய சேவையை மெருகேற்றும் வண்ணம், இவருடைய பிள்ளைகள் இன்றும் இப்பாடசாலைக்கு உதவி செய்து வருவது மகிழ்ச்சிக்குரியதும், பாராட்டுக்குமுரியதாகும். இவர்களின் சேவை தொடர்ந்தும் இப்பாடசாலைக்குக் கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**பதஞ்சலி நவேந்திரன்**

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயம் கூறும் வாழ்வியல்

**ம. மதுசாளினி**
மாணவி, இணுவில் மத்திய கல்லூரி

சமயம் என்றால் வாழும்முறை அல்லது வாழ்க்கை நெறி எனப்பொருள்படும். மனித வாழ்வானது உயர்வானதும் அரிதானதும் ஆகும். அந்த வகையில் சமயம் கூறும் வாழ்வியல் எனும் போது பொறுமை, பிறர் நலம் பேணல் நல்லவற்றைக் கடைப்பிடித்தல், சகோதரத்துவம் எனப் பல உண்டு. வாழ்க்கை வேறு சமயம் வேறு என்று கருத முடியாத அளவுக்கு நமது வாழ்க்கை சமயத்தினால் மெருகூட்டப்பட்டுள்ளது. குறிப்பாகச் சைவ சமயிகளாகிய நமது வாழ்வியற் கருமங்கள் யாவும் இறை சிந்தனையுடனேயே ஆரம்பித்து இறை சிந்தனையுடனேயே நிறைவெய்துகின்றன.

சமயமும் சூழலும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை. சூழல் இன்றிச் சமயம் நிலைத்து நிற்க முடியாது. அவ்வாறே, சமயம் இன்றிச் சூழல் தனித்து இயங்கவும் முடியாது. சமயத்துக்கும் சூழலுக்கும் நிலைக்களனாக விளங்குபவை ஆலயங்களாகும். ஆலயம் ஒரு சமூக நிறுவனம் என்ற வகையில் அதன் சமூகத்தை நோக்கிய பணிகள் பலவுள்ளன. ஆலயங்கள் இளைஞர்களை மையமாகக்கொண்டு, சமூகத்தில் ஒற்றுமையையும் நல்லொழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் வளர்க்கும் முயற்சிகளிலும் சமயத்தை சமுதாயத்தில் நிலை நிறுத்திக்காட்டும் செயற்பாடுகளிலும் ஈடுபட முன்வரவேண்டும்.

சமய மாணவர்களாகிய நாம் எமது பாடசாலையில் பல சைவசமய விழாக்களை மேற்கொள்கின்றோம். சிவராத்திரிவிழா, நவராத்திரிவிழா, நாயன்மார் குருபூசை என்பன அவற்றுள் சிலவாகும். பாடசாலைகளில் சமய விழாக்களை நடாத்தும் போது மாணவர்கள் மத்தியில் இலைமறைகாயாக மறைந்திருக்கும் பலதரப்பட்ட திறமைகளை வெளிக்கொணர வாய்ப்பு ஏற்படுகிறது. சமய வாழ்வின் மூலம் தலைமைத்துவம், பொறுப்புணர்வு, குழு ஒருமைப்பாடு ஆகிய விழுவியங்கள் மாணவர் மத்தியில் உருவாகின்றன. கோலமிடுதல் போட்டி, மாலை கட்டுதல் போட்டி, தோரணம் கட்டுதல் போட்டி, பேச்சுப்போட்டி, பண்ணிசைப்போட்டி எனச் சமய சார்பான போட்டிகளை மாணவர்கள் மத்தியில் நடாத்துகின்ற போது இதுவரை காலமும் தமது திறமைகளை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் கிடைக்கப் பெறாத மாணவர்கள் திறமைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

நாயன்மார்களது குருபூசை மற்றும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது குருபூசை என்பனவற்றை பாடசாலைகளில் ஆற்றும்போது, இளமைப் பராயத்திலிருந்தே குறித்த மெய்யடியார்கள் நமது சமயத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை எண்ணிப் பார்ப்பதற்கும் இவர்கள் ஆற்றிய வழியினின்று தாமும் தமது சமூகத்தில் சைவசமய விழுமியங்களை முன்னெடுக்க வேண்டுமென்ற உள்ளார்ந்த உந்தல்கள் மாணவர்கள் மத்தியில் தோன்றுவதற்கும் இவ் விழாக்கள் வழிவகுக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைநெறியானது ஒழுங்குபடுத்தப்பட்ட பண்படுத்தப்பட்ட, சீரிய ஒழுகலாறுகளை சமயம் சார்ந்த அறவாழ்க்கையாக எமக்குக் காட்டுகின்றது. ஒருவன் உயர்வான ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து வாழ்வோனால் அவனிடத்தே ஆன்மிக ஒளி பிரகாசம் பெறுதல் இலகுவாகும். உயிரினும் மேலான ஒழுக்க வாழ்வின் மூலம் பெறப்பட்ட பண்புகளையும் தலையான பெறுமானங்களையும் விழுமியங்கள் எனச் சொல்லலாம்.

*"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை"*
*"ஒழுக்கம் இல்லான்கண் உயர்வு இல்லை"*

என்றும் சான்றோர் செப்பிய வாக்குகள் இதனை வலியுறுத்தும். நீடுவாழ்வை நிர்ணயிக்கும் விழுமியங்களால் மானிடன் உயர்கிறான். வள்ளுவப் பெருமானும் 'பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடுவாழ்வார்' எனச் சுட்டியிருக்குமிடமும் இவ் விழுமியமே. ஒழுக்கமும் சமயமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும்.

மனித விழுமியங்களெனப் போற்றப்படும் எவையும் உலகும் தழுவிய அன்பினை வளர்த்துக்கொள்ளும் நோக்கில் அமையும். பொதுவாகச் சமயங்கள் அனைத்தும் பாவங்களையும் தீயனவற்றையும் விலக்கி, சீரிய வாழ்க்கை வாழவேண்டிய அவசியத்தையும் தன்னுயிர்போல மன்னுயிர்களையும் பிற உயிரினங்களையும் மதித்து நேசித்தலையுமே விழுமியங்களில் சிறந்ததாக குறித்துச் சொல்கின்றன. புண்ணியமாம் பாவம் போம் என்பதுதான் அடிப்படையான சமய நெறி எனப்பேசப்படினும் சைவநெறியென்னும் விழுமியங்கள் பல காணப்படுகின்றன. பிரசித்தி பெற்ற தலங்களுக்கு தலயாத்திரை மேற்கொள்ளல் சிறப்பான செயற்பாடாகும். ஆலயங்களில் திருவிழாக்கள் தொடங்கி விட்டால் ஊர் முழுவதுமே புனிதமாகிவிடும். அவ்வாறு தலயாத்திரை மேற்கொள்ளும் போது நன்கு திட்டமிட்டு ஒழுங்கு செய்வதன் மூலம் சமயத்தையும் சூழலையும் ஒன்றிணைக்கலாம். அதனூடாக சமூகத்தில் ஒற்றுமை, புரிந்துணர்வு என்பனவும் சமய நம்பிக்கையும் வளர்ச்சி அடையும். தலங்களிலே பேணிப் பாதுகாத்து வைத்திருக்கும் பாரம்பரிய உரிமைச் சின்னங்களையும் தல மகிமைகளையும் சிறப்புக்களையும் அறிந்து கொள்ளவும் வாய்ப்பு ஏற்படும்.

சிரமதானத்தின் மூலம் சூழல் நன்மை பெறுகின்றது. ஆலயங்களின் சுற்றுச் சூழலைச் துப்பரவு செய்தல் முக்கியமான பணியாகும். அதன் மூலம் பொறுப்புணர்வு, ஒற்றுமை என்பன விருத்தியடையும். நல்ல சைவசமய சூழலுக்கு இசைவான மனிதனாகவும் இருப்பான் என்பதை வெளிப்படுத்தக் கூடிய செயற்பாடுகளை நாம் முன்னெடுத்தல் வேண்டும். எமது சமய மரபில் சமயப்பணியுடன் சமூகப்பணியும் இரண்டறக் கலந்து நிற்கின்றன. சமயப் பணிபுரியும் நிறுவனங்கள் தங்கள் பணிகளை சமூக நலப் பணியிலும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

*"ஒழுக்கம் இல்லான் கண் உயர்வு இல்லை"*
*"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை"*
*"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பம் படும்"*
*"பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடுவாழ்வார்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சுட்டி நிற்கும் பொய்யா மொழிப்புலவர் கூற்றுக்கள் ஒழுக்கத்தின் சிறப்பினை எடுத்தியம்புகின்றன. சமய வாழ்விலும் இதுவே அச்சாணியாக அமைகின்றது. உயிரை இழந்தவன் சடமாகின்றான் இவ்வாறு ஒழுக்கத்தின் சிறப்பை உணர்த்த முயன்ற வள்ளுவர் உயிரிலும் மேலானதாக ஒழுக்கத்தைக் குறிப்பிடுவது இதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

சைவசமயி ஒருவனிடத்தில் தியாக மனப்பாங்கு, ஏழைகளுக்கு இரங்குதல், பிறரில் நிறை காணுதல், பிறரை நேசித்தல், பிறரின் கஷ்டங்களுக்காகப் பிரார்த்தித்தல் முதலான நற்பண்புகள் காணப்படும். இத்தகைய பண்புள்ளவர்கள் அன்பு, இனிமை, சாந்தம், அமைதி ஆகிய மனித நாட்டப் பண்புகளையும் கொண்டிருப்பர். இறையருளுடன் பிறரின் துன்பங்களைத் துடைப்பர். ஆதலால் நாமும் எமது வாழ்வில் மனிதநேயப் பண்பினைக் கடைப்பிடித்தல் அவசியமானது. முக்கியமாக சுயநலத்தைக் குறைத்து பொதுநலத்தை வளர்த்தல் சமயத்தின் உண்மை நிலைப்பாடாகும்.

நாவுக்கரசர் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்று பாடுவதனூடாக சமய, சமூகப் பணியின் முக்கியத்தை குறிப்பிடுகின்றார். நாம் "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற உயர் தத்துவத்தை என்றென்றும் மனதில் கொள்ள வேண்டும் நாம் மக்கள் ஒவ்வொருவர் ஊடாகவே இறைவனைக் காண்கிறோம். நாம் நல்லன செய்திடவேண்டும். அதனை அடைவதற்கு மார்க்கமாக அமைகின்றன. மானிட சேவையும் எம்மை நல்லவர்களாக மாற்ற விடட்டும்.

நாம் அனைவரும் கடவுளுடைய குழந்தைகள். எமக்குள்ளே பேதமில்லை. ஒருவருக்கொருவர் அன்புடனும், கருணையுடனும் நட்புடனும் பழகும் போது குடும்ப, சமூக ஒருங்கிணைப்பு ஏற்படும். மேற்கூறிய நல்லொழுக்கப் பண்புகள் தனி மனிதனை மனிதநேயம் உள்ளவனாக மாற்றுகின்றன. ஏழை எளியவர்க்கு இரங்கும் தியாக மனப்பாங்கையும் பிறரில் நிறை காணுதல், பிறரை நேசித்தல், முதலான பண்புகளையும் வளர்க்கின்றன. இவற்றுடன் பிறரின் கஷ்டங்களுக்காகப் பிரார்த்திக்கும் பண்பும் வளர்ச்சியடையும். இவ்வாறு வளர்க்கப்பட்ட பண்பானது உலகம் தழுவிய அன்பாக மாற்றம் அடையும். ஆகவே " யாரும் ஊரே; யாவரும் கேளிர் என்ற சர்வதேச சகோதரத்துவத்தை ஏற்படுத்தும்.

ஆன்மாக்களைப் பக்குவப்படுத்துவது சமயம் ஆகும். சமயம் சமுதாயத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. சமுதாயத்தில் தனித மனிதனின் வாழ்க்கை நெறியே சமயம் என்று அழைக்கப்படுகிறது. குறிக்கோளடிப்படையில் மக்களைப் பக்குவப்படுத்துகின்ற செயல் நிலையில் உயர்நிலை நோக்கி செலுத்துகிற சமய நிறுவனங்களாக திருக்கோயில்கள் அமைகின்றன. எனவே நாம் கடவுளை மதிக்க வேண்டும்.

*"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண*
*நன்னயம் செய்து விடல்"*

என்கிறது திருக்குளள். மன்னிப்பதென்பதும், மறப்பது என்பதும் மனிதனின் இயல்பாக இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்குகள் எனுமிடத்து மனித வரலாற்றுடன் இணைந்தவையாகும். ஆதிகாலத்தில் வாழ்ந்த மனிதன் இறை சிந்தனையோடு வாழ்வதற்காகவும் தங்களுடைய அச்ச உணர்வை போக்குவதற்காகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதற்காகவும் தொழில்களைச் செய்யும்போது சடங்குகளை மேற்கொண்டான். நாகரிகம் வளர வளர சடங்கு முறைகள் பல்வேறு நிலைகளிலும் வளர்ச்சியடைந்தன. இச் சடங்குகள் இன்றும் வட கிராமிய மக்களிடையே பயிலப்பட்டு வருகின்றன.

சைவ பாரம்பரியத்தில் வாழ்க்கை வட்டச் சடங்குகள் தொழிற் சடங்குகள் கோயிற் சடங்குகள் என பல்வேறு நிலைப்பட்ட சடங்குகள் பயிலப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஏர் மங்களம், முளைச்சடங்கு, பொலிச்சடங்கு முதலானவை வேளாண்மை நடவடிக்கை சார்ந்த தொழிற்சடங்காகவும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இவ் வாழ்வியல் சடங்கு முறையானது பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டுக் காணப்படும். குறிப்பிட்ட பிரதேசத்தில் நடைமுறையில் உள்ள வாழ்வியல் சடங்குகளை ஏனைய பிரதேசங்களில் அவதானிக்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது. இச் சடங்குகள் எமது வாழ்க்கையுடன் இணைந்தவையாகும்.

நாம் செய்யும் தொண்டுகள் சமூக சேவைகள் என்பன ஆண்டவனுக்குச் செய்யும் வழிபாடாகும். "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற கூற்றும் இதனையே வலியுறுத்துகின்றது. இதனை மனதார ஏற்றுக்கொண்டு செயற்படும் பக்குவத்தை எமது மதத்தின் ஆணிவேராக்கி, சமயத்துடன் சமூகத்தையும் அதன் சூழலையும் கட்டியெழுப்ப வேண்டும். எமது சமயத்தில் சமூகசேவைச் செயற்பாடுகள் பலவற்றை உருவாக்கி சமய நிறுவனங்களும் மக்களும் அவற்றில் ஈடுபடுவதை ஊக்குவிக்க வேண்டும். வாழ்வியல் நற்பண்புகள் என்றால் என்ன என்பதை நோக்குமிடத்து மனித வாழ்வை வளம்படுத்துவதற்காக வேண்டப்படும் பெறுமதிமிக்க நண்பண்புகள் ஆகும். வாழ்வியல் நற்பண்புகளாக பிறர் நலம் பேணல், பணிவு, மன்னிப்பு, நீதி, நேர்மை பஞ்சமா பாதங்களை தவிர்த்தல் எனப் பல்தரப்பட்ட பண்புகள் உள்ளன. சிபிச்சக்கரவர்தி தனது உடலையே ஒரு சிறு புறாவுக்காக கொடுக்க முனைந்தார். இதன் மூலம் பிறர் நலம் பேணல் விளங்குகின்றது. அத்தோடு பொறுமை காத்த கிரிசாம்பாளின் கதையையும் நாங்கள் புத்தகத்தில் இருந்து வாசித்து அறிந்திருப்போம். இப்படி இவர்களின் பாதையில் சென்று நல்ல வாழ்வியல் பண்புகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

எமது வாழ்வைக் காக்கும் அறங்களை இளமையில் இருந்தே கற்கப் பழக வேண்டும். எம்மை விட வயதிற்கு மூத்தோர்களிடமும், பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் வாழ்வியல் நற்பண்புகளை அறியலாம். பணிவு எம்மை ஒரு போதும் தாழ்த்தி விடாது. பணிவுள்ளவர்கள் தான் பண்புள்ளவர்களாகவும் உருவாக முடியும். இதை நாம் சிறுவயதில் இருந்தே கற்கப் பழக வேண்டும்.

நல்லவை எனக் கூறத்தக்க பணிவு, மன்னிப்பு, நீதி, நேர்மை போன்ற பண்புகளை வளர்ப்பதில் சமூகச் சூழலின் பங்கு குறிப்பிடத்தக்கது. நமது வாழ்விற்கு வழிகாட்டியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த நிலையை அடைவதற்கு உதவியாக இருந்த பெரியோர்களிடம் பணிவு, அடக்கம், பயபக்தி, கடப்பாடு உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். இவர்களின் நற்போதனைகளைக் கடைப்பிடிக்து ஒழுகுதலும் இன்றியமையாததாகும்.

மன்னிப்பு எனும் பண்பை எடுத்து நோக்குமிடத்து எம்மிடம் இருக்க வேண்டிய உயர்ந்த பண்புதான் அது. இறைவன் எம்மீது கருணை உள்ளவர். மன்னிக்கும் இயல்பும் உள்ளவர். ஆதலால் தான் தானிருக்கும் கைலாயமலையையே இராவணன் பெயர்க்கமுன் வந்த நிலையிலே அவனை மன்னித்தார். கடவுளின் படைப்புக்களில் மனிதனே மேலான படைப்பாகும். விலங்கு வாழ்க்கையிலிருந்து வேறுபட்டு மனிதன் மனிதனாக வாழ்வதற்கு உதவுகின்ற பெறுமதிமிக்க வாழ்க்கைப் பண்புகள் விழுமியங்களாகும். இன்று விஞ்ஞான தொழினுட்ப தொடர்பாடல் சாதனங்கள் அற்புதமாக வளர்ச்சியடைந்துள்ளன. இதன் பயனாக மக்களின் வாழ்க்கை வசதிகள், நவநாகரிகங்கள் என்பன மக்களிடையே பெருகியுள்ள போதிலும் மக்கள் இன்பமாக வாழாதிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. மக்கள் மத்தியில் காணப்படுகின்ற ஆசைமோகம், சுயநலவேட்கை என்பனவே அவர்களின் துன்பத்திற்கு காரணமாக அமைந்திருக்கின்றன.

மக்கள் எவ்வளவு சொத்துச் சுகங்களை வைத்திருந்தாலும் உண்மையில் மனித விழுமியங்களை அனுசரித்து வாழும் போதுதான் இன்பமான வாழ்க்கையை வாழமுடியும். இவையே எமது வாழ்வில் கூறப்படும் சமய வாழ்வியல் ஆகும்.

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொடர்பாடலும் சமுதாயமும்

**பா. பாலஜீவன் 10A**
மாணவன், இணுவில் மத்திய கல்லூரி

தகவல் தொடர்பாடல் என்பது மனிதன் தனது எண்ணக் கருத்துக்களினை பரிமாற்றம் செய்து கொள்வதாகும். இத் தகவல் தொடர்பாடலின் வளர்ச்சி மனித கண்டுபிடிப்புக்களிலே முக்கியமான தொன்றாகும். மனிதனது சிந்தனைகள், தேவைகள், வாழ்க்கை முறைமைகள் இதன் மூலமாகவே வளர்ச்சியடைந்து செல்கின்றன. இங்கு தொடர்பாடல் என்பது எண்ணங்கள், செய்திகள் என்பனவற்றின் பரிமாற்றமாகும். தொடர்பாடல் ஊடகமாக மொழி பயன்படுகின்றது. இத் தொடர்பாடல் வாய்மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ அல்லது அடையாளம் மூலமாகவோ இடம்பெறலாம். தகவல் தொடர்பாடலில் மொழியே மிகக் கூடியளவு பிரயோகத்தில் உள்ளது. இதனால் மனித உறவுத் தன்மை மேம்படவும் வெற்றி நிறைந்த சமூக வாழ்க்கையினை கட்டியெழுப்பவும் முடிகின்றது.

மனித வரலாறு தொடங்கிய கால கட்டங்களின் ஆரம்பத்தில் காடுகளில் வாழ்ந்து வந்த மனிதர்கள் மொழி பற்றிய அறிவு இல்லாததன் காரணமாக தனது செய்திகளை சைககள் சைக்கிள் மூலமோ, அல்லது படவடிவில் காட்டியோ தனது தொடர்பாடலை பரிமாறிக் கொண்டான். பிற்காலத்தில் நாகரிகத்தில் வளர்ச்சி கண்டபோது வேறுபட்ட ஒலியலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு பேச்சு மொழிகளை உருவாக்கிக்கொண்டான். இதன் மூலம் தொடர்பாடலை முரசடித்தல், தீமூட்டுதல், புறாதூதுவிடல், கூக்குரலிடல் என்பன மூலம் பரிமாறிக்கொண்டான்.

தகவல் தொடர்பாடலினை மனிதன் எல்லா வகையிலும் பேச்சு மொழி மூலம் நிறைவுசெய்து கொள்ள முடியாது போனதால் பின்பு எழுத்துக் கலை உருவாகி பெரும் புரட்சி ஏற்படுத்தியது. எழுத்துக்கலை வளர்ச்சி பெற்றதுடன் தொடர்பாடல் நூல்கள் மூலமும் தூது ஓலைகள் மூலமும், அஞ்சல்கள் மூலமும் எழுத்து வடிவில் கருத்துக்களை பரிமாற உதவியது. இங்கு கருத்துக்களை பரிவர்த்தனை செய்யும் போது தொடர்பை ஏற்படுத்துபவர் பெறுபவர்கள் நேரடித் தொடர்பு இல்லா விட்டாலும் அத் தகவலை மீண்டும் மீண்டும் படித்து விளங்கிக் கொள்ளவும் மறந்தவற்றினை நினைவில் கொள்ளவும் உதவுகிறது.

தகவல்களை எழுத்துருவடிவில் பரிமாறுவது சிறிது கடினமாக இருந்த போது ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாக “ஜோன் கூட்டன் பேர்க்” என்பவர் அச்சு இயந்திரத்தைக் கண்டு பிடித்ததன் மூலம் தொடர்பாடலில் பாரிய அபிவிருத்தி ஏற்பட்டது. இக்காலத்தில் ஒரு தகவலை குறுகிய காலத்தில் பல பிரதிகள் மூலம் பலருக்கும் விநியோகிக்க முடிந்ததுடன் இக் காலத்தின் பின்பே பத்திரிகைத் துறையும் வளர்ச்சி கண்டது. அப்போது பத்திரிகைகள் சாதாரண மக்கள் வரையும் விநியோகித்தனால் பத்திரிகை ஆசிரியரின் கருத்தையும் மக்களின் கருத்தினையும் அறிந்து கொண்டு பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் தொடர்பாடலில் அஞ்சல் சேவையும் பிரதானமான தொன்றாகும். இது அன்று தொட்டு இன்று வரையிலும் உயர்குடி மக்களிலிருந்து பாமர மக்கள் வரை உபயோகிக்கும் ஒரு தொடர்பாடலாகும். இதனால் மக்கள் தமது உறவுகளை வளர்த்துக்கொள்ளவும் உணர்வுகளைப் பரிமாறிக் கொள்ளவும் தொழில் நிலையங்கள் மற்றும் அலுவலகங்களிலும் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளவும் தொழிலாளிகள், முதலாளிகள் போன்றோரின் கருத்துக்களினைப் பரிமாறிக்கொள்ளவும் இந்த அஞ்சல் சேவை பெரிதும் பயன்படுகின்றது.

தொடர்பாடலை எழுத்துருவில் பரிமாறிக் கொண்டாலும் ஓசை வடிவமாக கேட்பது மிகத் தெளிவாக இருக்கும். இதனை முதல் முதலில் கம்பியில்லாத் தொடர்பு மூலம் தகவல்களை ஒலிவடிவில் மின்காந்த அலைகளுடாக பரிமாறிக்கொள்ளலாம் என இத்தாலிய விஞ்ஞானி "மார்க் கோணி" கண்டுபிடித்ததுடன் தகவல் தொடர்பாடலில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டது. இதன் மூலம் எங்கோ நடக்கும் செய்திகளை எல்லாம் உடனுக்குடன் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இதனை விட தொலைக்காட்சி எண்ணக்கருத்துக்களை ஒலிவடிவிலும் ஒளி வடிவிலும் தெரிவிக்கின்றது. அத்துடன் உலகில் எந்த மூலையில் நடைபெறும் செய்திகளைக் கூட ஒரு சில கணப்பொழுதில் பார்த்தும் கேட்டும் ரசிக்க முடிவதோடு எமது திட்டங்களைச் சரிவரச் செய்ய முடியும். அத்துடன் இங்கு மொழி பல்வழித் தொடர்புறுதல் சாதனமாக உள்ளதால் இங்கு செய்தியானது முழுமையாகவும், விரைவாகவும் தெளிவாகவும் பெறுபவரைப் சென்றடைகின்றது. இதுபோல செய்திகளில் மட்டுமல்லாது கல்வி, பொருளாதாரம் விளையாட்டு என்பவற்றிலும் தொடர்பாடல் செல்வாக்குச் செலுத்துகின்றது. அத்துடன் தொலைக்காட்சியில் சினிமாத்துறையும் சில தகவல்களை மக்களுக்கு தந்துவிட்டுச் செல்கின்றது.

தற்காலத்தில் நவீன தொடர்பாடல் விருத்தியின் காரணமாக உலகில் நடைபெறும் காலநிலை மாற்றங்களையும், வர்த்தகம், பொருளாதார விருத்தி என்பனவற்றோடு இன்னும் வேறு பல நிகழ்வுகளையும் தரவுகளையும் தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் அறிந்து கொள்ள பூமிக்கு மேலே 360 km தூரத்தில் உள்ள "சர்வதேச பரிவர்த்தன நிலையமே" காரணமாகும். இது 92 நிமிடங்களுக்கு ஒரு முறை புவியை வலம் வந்து ஒளிப்படங்கள் மூலம் தகவல்களை உடனுக்குடன் புவிக்கு அனுப்புகின்றது.

இதனை விட வான வீதியில் சஞ்சரிக்கும் பல செய்ம்மதிகள் தகவல் தொடர்பாடல் சிறக்க வழி கோலுவதுடன் நாடுகளிடையேயான இராணுவ இரகசியங்களை அறியவும் உதவும். அதனைவிட மிகத் தெளிவான தொடர்பாடல் சேவையினை ஆற்றி வருகின்றது. தமது எண்ணக் கருத்துக்களினை ஊடகங்கள் மூலமாக தெரிந்து கொண்ட காலப்பகுதியிலேயே அலெக்ஸ்சாண்டர் கிரகம் பெல் என்ற விஞ்ஞானியால் ஒரு வரை ஒருவர் தொலைவிலிருந்தே வரையக் கூடியவாறு கம்பியில்லா முறை மூலம் தொலைபேசியினைக் கண்டுபிடித்தார். இதன் மூலம் தமது கருத்துக்களையும் தமது உணர்வுகளையும் நேரடியாகவே பகிர்ந்து கொள்ளக் கூடியதுடன் உடனுக்குடனும் எந்த நேரத்திலும் கருத்துக்களினைப் பரிமாறக்கூடியதாகவும் காணப்பட்டது.

மனிதனின் வரலாற்றுப் படியில் பல படிக்கல்லை தாண்டி வந்தபோதும், கணனியின் கண்டுபிடிப்பு மிக முக்கியமானது. தற்போது நவீன யுகத்தில் மனிதனின் தேவைகளும் தொடர்பாடலும் முக்கியமென உணர்ந்து "சார்ஸ் பபேஜ்" என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. கணனியால் கணித்தல் வேலைகளை மட்டுமன்றி தகவல் தொடர்பாடல் சேவையினை மிக வினைத்திறனாகச் செய்ய முடிகின்றது. இதன் கண்டுபிடிப்பு மனித ஆற்றலை எண்ணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திருக்காத அளவு விரிவாக்கியதுடன் அவன் மதிவலி மூலம் பெறும் உற்பத்தித் திறனை அவன் கற்பனை செய்திராத அளவு மிகுத்தது. முன்பு கணனி சில தொழிற்சாலைகள், அலுவலகங்களில் மட்டுமே காணப்பட்டது. ஆனால் இன்று சிறுவர்கள் தொடக்கம் முதியோர் வரை பயன்படுத்த தக்களவு வசதியினை பெற்று வந்துள்ளது. அத்துடன் கணனிக்கு முன்பு கண்டு பிடிக்கப்பட்ட தொலைக்காட்சி, வானொலி போன்ற பொதுசன ஊடகங்கள் தமது தொடர்பாடலை மேற்கொள்ளவென தற்போது கணனியையே நம்பியுள்ளன. அச்சிடல் நடவடிக்கைகளிலும் பத்திரிகைத் துறையிலும் செய்தித் தரவுகளினை சேகரிக்கவும் அவற்றினைக் குறைந்த வலுவில் பத்திரிகையாக மாற்றவும் கணனி பெரிதும் பயன்படுகின்றது. அண்மைக்காலத்தில் புத்தகங்கள், சஞ்சிகைகளை நொடிப்பொழுதினிலே அமைத்து பல்வேறுபட்ட மக்களுக்கு வழங்கவும் இந்தக் கணனி முக்கிய பங்கு வகிக்கின்றது. தற்போது ஒலிபரப்பப்படும் பல வானொலி நிகழ்ச்சிகளும் ஒளி பரப்பப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும், கணினியின் துணையுடன் தயாரிக்கப்பட்டவையாகும்.

தற்காலிக மின்னணுவியல் யுகத்தில் சமுதாயம் கணனியின் வரவு தொடர்பாடலில் பல மாற்றங்களை ஏற்படுத்தியதோடு மின்னஞ்சல், இணையம் என்பனவற்றின் கண்டுபிடிப்பு இன்று உலகினையே கிராமமாக மாற்றி விட்டது. சாதாரணமாக முன்பு அஞ்சல் செய்வது மூலம் சில நாட்களில் பெற்றுக்கொள்ள முடிந்தது. ஆனால் இன்று இணையத்தின் மூலமாக மின்னஞ்சலை அனுப்பி ஒரு நொடிக்குள் பெற முடிகின்றது. மின்னஞ்சல் நமது கணனியில் தட்டச்சு செய்யும் செய்தி டிஜிட்டலாக மாறி அந்த இணையத்தில் கணனியைச் சென்று அது அங்கு மீண்டும் வரி வடிவம் பெறுகின்றது. தபால் முறையில் கடிதங்களை சமர்ப்பிக்க முகவரி உள்ளதுபோல மின்னஞ்சலிலும் ஒவ்வொருவருக்கும் பிரத்தியேக முகவரி உண்டு மின்னஞ்சல் தனி மனித தொடர்பாடலில் புதிய உத்தியாகும். இணையத்தைப் பயன்படுத்துபவர் உலகத்தின் எந்தமூலையில் உள்ள ஒருவரையும் எந்த நேரமும் தொடர்பு கொண்டு எத்தகைய செய்திகளையும் பரிமாறிக்கொள்ளும் வசதியை மின்னஞ்சல் வழங்கியுள்ளது. மின்னஞ்சல் மூலம் ஒலிப்படங்கள், பட்டியல்கள் போன்ற பல்வேறு கோப்புகளையும் இணைத்து அனுப்பலாம். இதனால் இது வர்த்தகத்திலும், போக்குவரத்திலும் பயன்படுவதோடு கல்வித் துறையிலும் பங்காற்றுகின்றது. தற்போது மின்னஞ்சலினை அனுப்பியதோடு அதனை அவர் படித்தாரா என உறுதிப்படுத்துவதற்கான வசதிகளும் காணப்படுகின்றன. மின்னஞ்சல் மிகவும் சிக்கனமானதோடு மின்னஞ்சலில் டிஜிட்டல் முறையில் செய்தி அனுப்பப்படுவதால் தாளுக்கும் மைக்குமான செலவு குறைகின்றது. தற்போது சமூக மாற்றங்கள் அதிகரித்ததால் இருவருக்கிடையில் அல்லது இரு நாடுகளுக்கிடையில் பல ரகசியமான தகவல்கள் காணப்படுகின்றன. இதை மின்னஞ்சலில் ஒருவருக்கு மட்டும் புரியுமாறு ரகசியக் குறியீடுகளில் காட்ட முடியும். இதனால் போலிக் கடிதங்கள் அனுப்புவதைத் தவிர்க்கவும். இராணுவ இரகசியங்களைப் பரிமாறிக்கொள்ளவும் வர்த்தக இரகசியங்களை வினைத்திறனாகச் செய்யவும் இது உதவுகின்றது. தற்போது தொடர்பாடலில் சமுதாயம் முன்னேற்றம் கண்டுள்ளதால் மின்னஞ்சலில் அனுப்பப்படும் செய்திகளினை யார் அனுப்பியவர் எனினும், யார் குரலில் படித்து சொல்ல வேண்டும் என்றால் அதற்கான வசதியும் இதில் உண்டு. இதனால் பார்வையில்லாதவர்களுக்கும் படுக்கையில் உள்ள நோயாளிகும் படிப்பறிவில்லாத பாமர மக்களுக்கும் இது ஒரு வரப் பிரசாதமாகும்.

மனிதன் தொடர்பாடலுக்கு அஞ்சலுக்கு அடுத்தபடியாக கணனி முறையில் தொலைநகல் சேவையினை கண்டுபிடித்துள்ளான். தொலைநகல் கிட்டத்தட்ட தந்தி மற்றும் தொலைபேசி போன்று செயல்படுவதாகும். இதன் மூலமாக ஒருவருக்கு செய்தியினை அனுப்பும் போது நாம் அனுப்பும் செய்தியில் உள்ள வரி வடிவத் தகவல்கள் உரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனங்கள் மூலமாக மின் சமிக்ஞைகளாக மாற்றப்பட்டு கம்பி வழியாகவும் கம்பியில்லாமலும் உரிய இடத்துக்கு அனுப்படுகின்றன. தொலை நகல் மூலமாக வர்த்தகத்தில் பல தரவுகளை அனுப்ப முடிவதனோடு கல்வித் துறையிலும் இதனைப் பயன்படுத்தலாம். அத்துடன் பிறந்த நாள் மற்றும் பல வாழ்த்துகளைப் பரிமாறவும் இது உதவுகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுகளுக்கு முன்னைய காலப்பகுதியில் தொடர்பாடலில் உலகம் பெரிதும் விரிந்து காணப்பட்டது. ஆனால் இருபதாம் நூற்றாண்டின் அரைவாசிப் பகுதியில் இது கண்டுபிடிக்கப்பட்டது. இன்ரநெற்றின் கண்டு பிடிப்போடு பூகோளம் ஒரு கிராமமாக மாறிவிட்டது. அப்படி என்றால் நாடுகளுக்கிடையிலான தொலைகள் மிகக் குறைந்துள்ளன. இணையத்தின் மூலம் உலகின் எங்கிருந்தாலும் எங்கு நடைபெறும் விடயங்களினை கூட தெளிவாக எமக்கு தேவையான அளவு பெற முடிகின்றது. அத்தோடு எமது அன்றாடத் தேவைகளுக்கும், வங்கி வர்த்தகம் போன்றவற்றின் தகவல்களையும் தரவுகளையும் பெறமுடியும். கல்வித்துறையில் மாணவர்கள் தமக்குத் தேவையான தகவல்களை இணையத்தில் இருந்து பெற்றுக்கொள்ளவதோடு இணையம் மூலமாக உடனுக்குடன் காலநிலை பற்றிய தரவுகளையும் வானிலை மாற்றம் என்பவற்றையும் அறிந்து கொள்ள முடியும்.

தொடர்பாடல் செய்தியினை ஓரிடத்திலிருந்து தான் பரிமாற்ற முடியும் என்ற காலம் போய் பயணித்துக் கொண்டு அல்லது பல்வேறான வேலையில் ஈடுபட்டுக்கொண்டு கூட மிகவும் சுலபமாக கையாளக் கூடியவகையில் தற்போது மிகச் சிறியளவான வினைத்திறன் கொண்ட செல்லிடத் தொலைபேசிகள் அதிகளவு பாவனைக்கு வந்துவிட்டன. மாட்டின் கூப்பர் என்பவர் கண்டுபிடித்த இந்த செல்லிடத் தொலைபேசிகள் உலகத்தையே சுருக்கி விட்டன. இப்போது தனிமையே இல்லையென்ற அளவுக்கு இதன் பாவனை அதிகரித்துள்ளது. செல்லிடத் தொலைபேசியினை ஒரு நடமாடும் தகவல் புரட்சி என்றால் அது மிகையாகாது. செல்லிடத் தொலைபேசிகளில் மற்றவர்களுடன் உரையாடுவது மட்டுமல்லாது குறுஞ் செய்திகளையும் அனுப்பலாம். இதனைத் தவிர விளையாட்டு நிகழ்ச்சிகளின் புள்ளி விபரங்களையும் பங்குச்சந்தை நிலவரங்களையும் தேர்தல் முடிவுகளையும் உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும். தற்போது இவைகளூடாக நடமாடும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் கண்டு ரசிக்கலாம். இப்போது கடனட்டை இல்லாமல் பொருட்களை வாங்கும் முறையும் செல்லிடத் தொலைபேசியில் உள்ளது. எனவே செல்லிடத் தொலைபேசிகளை உரிய முறையில் பயன்படுத்தாமல் விட்டால் தொல்லை தரும் பேசியாக மாறிவிடும்.

இன்று உலக மெங்கும் வியாபித்து வேரூன்றி உள்ள தகவல் தொழில்நுட்பப் புரட்சி மனித வாழ்வில் பல துறைகளிலும் தன் பங்களிப்பினை வழங்குகின்றது. தகவல் தொடர்பு சாதனங்கள் கல்வியிலும் பல செல்வாக்குச் செலுத்துகின்றன. இப்போது ஆரம்பக்கல்வி முதல் பாடங்கள் கணனி மயப்படுத்துவதனால் மாணவர்கள் புதிய பல விடயங்களினை அறிய முடிகின்றது. தொலைக்கல்வியானது பிரபலமாக உள்ள இக் காலகட்டத்திலே கணனி மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினால் பாரிய பங்களிப்பு வழங்கப்படுகின்றது. மரபுரீதியாக மாணவர்களுக்கு வகுப்பறையில் கற்பிப்பதனை விட இணையம் மூலமாக ஒரு சில நொடிக்குள் மாணவர்க்குப் பல விடயங்களை அறிமுகப்படுத்துவதோடு அவர்களை தொடர்பாடல் மூலம் எதிர்காலத்தில் சிறப்பாக வாழ வழிவகுக்க முடியும்.

தற்போது நிதிததுறை மற்றும் வியாபார நடவடிக்கைகளில் கணனி மயப்படுத்தப்பட்டதனால் தகவல் தொடர்பாடல் வர்த்தகத்திலும் பெரும் பங்களிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குகின்றது. விசேடமாக வங்கிகள் எங்கும் கணனி மயப்படுத்தப்பட்டதன் காரணமாக வேறு எந்தவொரு வங்கியுடனும் சுலபமாக கொடுக்கல் வாங்கல்களை பரிமாறிக் கொள்ளமுடியும். அத்துடன் வியாபாரம் உள்நாட்டு வர்த்தகம், வெளிநாட்டு வர்த்தகம் என இரண்டு வகையில் நடைபெறுகின்றது. இதனை சுலபமாக்க தற்போது பல்வேறான நவீன சாதனங்கள் வந்து விட்டன. இப்போது கணனி மற்றும் செல்லிடத் தொலைபேசிகளில் கடனட்டை வசதியும் காணப்படுகின்றது. இதன் மூலம் பணமில்லாமல் உடனே பொருட்களை கொள்வனவு செய்ய முடியும். இதேவேளை சர்வதேச வலைப்பின்னல் ஊடாக பல்வேறு பொருளாதார நிலைமைகளை அறிந்து கோள்ள முடிவதுடன் பங்குச்சந்தை நிலவரங்களையும் அறியலாம்.

தகவல் தொடர்பாடல் பல்வேறு துறைகளில் மட்டுமல்லாது போக்குவரத்திலும் பின்னிப் பிணைந்துள்ளது. பயணிகள் போக்குவரத்தெனினும், வர்த்தகம், சுற்றுலா மற்றும் யுத்தத்தின் போதும் போக்குவரத்தில் தொடர்பாடல் முக்கியம் பெறுகின்றது. ரேடியோ கதிர்வீச்சினைப் பாவித்து ஒரு பொருளின் நிலைப்பாடு தூரஅளவு, வேகம் போன்ற விடயங்களினைப் பெற்றுக் கொள்ளலாம். விமான ஓட்டிகளுக்கும் மாலுமிகளுக்கும் ஆகாயத்திலும் கடலிலும் அவற்றின் கட்டுப்பாடு செல்லும் திசை என்பவற்றைக் கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொள்ள றேடர் பயன்படுகின்றது.

நாடுகளுக்கிடையான பாதுகாப்புத் துறையில் தகவல் தொடர்பாடலின் பயன்பாடு மிகவும் உயர்ந்த மட்டத்தில் உள்ளது. ஏவுகணைகளை செயற்ப்படுத்தல் அணுஆயுதப் பயிற்சி போன்ற சிக்கலான நடவடிக்கைகளில் கணனி மூலம் தொடர்பாடல் சேவை நடைபெறுகின்றது. புலனாய்வுத் துறையிலும் தகவல் சேகரித்தலும் மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றிலும் இது முக்கிய பங்குவகிக்கின்றது.

தொடர்பாடலானது காலநிலையிலும் முக்கியமான பங்கு வகிக்கின்றது. வானிலைத் தரவுகள், காலநிலை மாற்றங்கள், கோள்களின் நிலைப்பாடுகள் என்பன பற்றியும் இயற்கை அனர்த்தங்களின் முன்னறிவிப்பு என்பவற்றினையும் செய்ம்மதிகள், றேடர் என்பன மூலம் அறிய முடிகின்றது.

இன்று மனித வாழ்க்கையில் பின்னணிப்பிணைந்துள்ள தகவல் தொடர்பாடல் மனித வரலாற்றில் ஒரு பாரிய புரட்சியை ஏற்படுத்தி விஞ்ஞான வளர்ச்சி கண்டு மனிதனுக்கு பெரும் பயன்களை அளித்து வந்தாலும் ஒரு சில தீமைகளையும் ஏற்படுத்தி விடுகின்றன. அபரிமிதமான சில தகவல் தொடர்புகளில் குறிப்பாக வானொலி தொலைக்காட்சிகளில் சில காலசாரங்களை சீர்கெடுக்கும் விதத்தில் விளம்பரங்கள் வெளியிடப்படுவதால் எமது புராதன கால நாகரிகம், பண்பாடு என்பன அழிந்து செல்கின்றன. அத்துடன் இணையத்தளங்களில் வெளியிடப்படும் ஆபாச சினிமாக்கள் மற்றும் நாகரிகத்தினை சீர்கெடுக்கும் நிகழ்ச்சிகளால் இன்றைய இளம் சந்ததியினரின் எதிர்காலம் பாதிக்கப்படுகின்றது. அத்துடன் சில சமூக விரோதிகளால் செல்லிடத் தொலைபேசிகளில் அனுப்பப்படும் வதந்தியான குறுஞ்செய்திகளால் மக்கள் பரபரப்பும் பீதியும் அடைகின்றனர். தகவல் தொடர்பாடல் நாகரிகத்தினை வளர்க்கவே கண்டுபிடிக்கப்பட்டது. அதனை அழிக்கவல்ல. ஒரு மனிதனை சமுதாயத்தில் முன்னிறுத்திக் காட்டுவது அவனின் தொடர்பாடல் முறைமையே ஆகும்.

எனவே தொடர்பாடலினை நல்ல முறையில் பயன்படுத்தி அதனை எமக்கடுத்து வரும் எதிர்கால சந்ததியினருக்கு கையளித்து புதியதொரு உலகம் படைப்போமாக.

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் மத்திய கல்லூரி
# J/INUVIL CENTRAL COLLEGE

*Inuvil,*
*Chunnakam.*

*Tel: 021 222 7551*

இணுவில்,
சுன்னாகம்.

23/07/2010

*Principal*
**Mr.A.Sathananthan**
B.Com., Dip.In.Edu., SLPS 2 - 1

*Deputy Principal*
**Mr.M.Uthayakumaran**
B.Com., Dip.In.Edu., S.L.T.S 1


## திரு. வ. நடராசா (முன்னாள் அதிபர்) 100வது அகவை நிறைவு விழா

### <u>கட்டுரைப் போட்டியில் பரிசில்கள் பெறுபவர்கள்</u>

**"சைவசமயம் கூறும் வாழ்வியல்"**

| | | |
|---|---|---|
| தரம் -8 | முதலாம் இடம் : | செல்வி ம. மதுசாளினி |
| | இரண்டாம் இடம்: | செல்வி ப. விதுஜா |
| | மூன்றாம் இடம் : | செல்வன் க. சுஜீவன் |
| | | செல்வி. க. ஆருண்யா |
| | | செல்வன் பா. கஜமுகன் |

**"தகவல் தொழில் நுட்பமும் சமுதாயமும்"**

| | | |
|---|---|---|
| தரம் 9-11 | முதலாம் இடம் : | பா. பாலஜீவன் |
| | இரண்டாம் இடம்: | அ. தர்சிகரூபன் |
| | மூன்றாம் இடம் : | கு. குமாரசாமி |

**"அதிபர் திரு. வ. நடராசா அவர்களின் வாழ்வும் பணியும்"**

| | | |
|---|---|---|
| தரம் 12, 13 | முதலாம் இடம் : | செல்வி .செ. யுனிஸ்பா |
| | இரண்டாம் இடம்: | செல்வி சு. சஜீபா |
| | மூன்றாம் இடம் : | செல்வி ச. திவ்யா |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



SRI VISVESWARA SWAMI THEVASTHANAM

ஸ்ரீ விஸ்வேஸ்வர சுவாமி தேவஸ்தானம்

INUVIL SIVAN KOVIL
K.K.S, ROAD,
INUVIL.

**ம. சுயம்புலிங்கம்**
தர்மகர்த்தா

இவ்வாலயமானது யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் உள்ள சைவமும், தமிழும் தழைத்தோங்கிய இணுவில் நகரின் மத்திய பகுதியில் யாவரும் வழிபடுவதற்குரிய சிவத்தலமாக அமையப் பெற்றுள்ளது. இச்சிவாலயம் ஏறக்குறைய இற்றைக்கு 100 வருடங்களுக்கு முன்னதாக குருபூசை மடமாக ஸ்தாபிக்கப்பட்டது. இம்மடத்தில் சைவவேளாண் குலத்திலகராகிய சைவச் சின்னப்பிள்ளை என அழைக்கப்படும் சின்னத்ததம்பி அவர்கள் சிவபூசை செய்துகொண்டு இருந்தார். இம்மடத்தில் குருபூசைகளும், சமய நிகழ்ச்சிகளும் நடைபெற்று வந்தன. சின்னத்தம்பி அவர்கள் இந்தியாவிற்குத் தலயாத்திரை செய்து கொண்டு காசிக்கு வந்தார். காசியில் கங்காநதியில் ஸ்நானம் செய்தபோது கிடைக்கப்பெற்ற பாணலிங்கத்தினை அங்கிருந்து எடுத்துவந்து இம்மடத்தில் 1912ஆம் ஆண்டு வைகாசி மாதம் திருவோண நட்சத்திரத்தில் பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அன்று தொடக்கம் பிராமணரால் காலையும், மாலையும் இரு வேளைகளும் பூசை நடைபெற்று வருகின்றது. அப்போது கர்ப்பக்கிருகத்தில் அம்பாளும் ஸ்தாபிக்கப்பட்டது. கர்ப்பக்கிரகத்திற்கு நான்கு பக்கமும் வாசல் விடப்பட்டு ஸ்ரீ விஸ்வேஸ்வர சுவாமி மடாலயமாக விளங்கியது.

பின்னர் 1927ஆம் ஆண்டு பிரபவ வருடம் ஐப்பசி மாதம் 22ம் திகதி திங்கட்கிழமை ஸ்ரீ விசாலாட்சி அம்பாளுக்கு வேறாகக் கர்ப்பக்கிரகம். அதில் பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றது. அத்துடன் சுவாமியின் கர்ப்பக்கிரகம் ஒரு வாசலாக்கப்பட்டு அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நபன மண்டபம் கட்டப்பட்டு பிள்ளையார், சுப்பிரமணியர், வயிரவர் முதலாய பரிவார மூர்த்திகளும் ஸ்தாபிக்கப்பட்டு மக்கள் எல்லோரும் வணங்கும் சிவாலயமாக உருவாக்கப்பட்டது. அன்று முதல் ஸ்ரீ விசாலாட்சியம்மா சமேத விஸ்வேஸ்வர சுவாமி கோவில் எல்லோரும் வழிபடும் சிவன் கோயிலாக விளங்கி வருகின்றது.

இவ்வாலயத்திற்கென வடக்குப் பக்கத்தில் திருமஞ்சனக் கிணறும், வில்வை, நெல்லி, விளா, மாவிலங்கு, முட்கிழுவை ஆகிய வில்வமரங்களும் கோவிலைச் சூழப் பூசைக்கான புஷ்பங்களுக்கென நந்தவனமும் அமைக்கப்பட்டுள்ளது. கொன்றை, பொன்நொச்சி, இருவாட்சி, துளசி, பவள மல்லிகை, முல்லை மல்லிகை, மந்தாரை, நந்தியாவட்டை, நித்திய கல்யாணி, செவ்வரத்தை, செண்பகம் ஆகிய பூ மரங்கள் நான்கு பக்கங்களும் நிறைந்து காணப்படுகின்றது. இக்கோவிலுக்குச் சொந்தமாக இணுவில் மைக்கிலியட் ஆஸ்பத்திரிக்கு வடக்கே அமைந்துள்ள கடைகளில் இருந்து பெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானத்தைக் கொண்டு சைவச் சின்னப்பிள்ளையின் (சின்னத்தம்பி) வழிவந்தோராகிய சபாபதிப்பிள்ளை, அருணந்தி சீவரத்தினமும், சபாபதிப்பிள்ளை இராமநாதனும் அவர்களது பிள்ளைகளும் தற்போது பாதுகாத்து வருகின்றனர். 1958ஆம் ஆண்டு நடன மண்டபம் திருத்தப்பட்டு மணிக்கூட்டுக் கோபுரமும் கட்டி ஓர் அசையா மணியும் திரு. கந்தவனம் செல்லத்துரை என்பவரால் வைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது. அன்று தொடக்கம் அதிகாலை 4.45 மணிக்கு மணி அடிக்கப்படும் வழக்கம் இன்றும் உள்ளது. 1977ஆம் ஆண்டு தை மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் திருத்த வேலைகள் செய்து 1978ஆம் ஆண்டு காலயுக்தி வருடம் வைகாசி மாதம் 12ம் திகதி (26.05.78) வெள்ளிக்கிமை காலை உத்திராட நட்சத்திரத்தில் மிதுன லக்கின வேளையில் ஜீர்ணோத்தாரண சம்புரோஷண பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 24 நாட்கள் மண்டலாபிஷேகமும், 25ம் நாள் சுவாமிக்கு 1008ம் அம்பாளுக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெற்றது. இத்தினம் தொடர்ந்தும் வருடா வருடம் கும்பாபிஷேகமும், சங்காபிஷேகமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அத்துடன் மாதாமாதம் வரும் பௌர்ணமித் தினத்தில் திருவிளக்குப் பூசையும் நடைபெற்று வருகின்றது. சங்காபிஷேகத் தினத்தில் அன்னதானம் வழங்கப்படுகின்றது.

1987ஆம் ஆண்டு ஆனி மாதம் பிரதோஷமூர்த்தி (சந்திரசேகரர்) பிரதிஷ்டை செய்யப்பட்டு ஒவ்வொரு மாதத்திலும், வரும் பிரதோஷதினத்தில் விசேட பூசையுடன் சுவாமி வீதியுலாவும் நடைபெற்று வருகின்றது. வருடம் தோறும் நவராத்திரி பூசையும், கந்தசஷ்டி, பிள்ளையார் கதை, திருவெம்பாவைத்தினம், ஆகிய பூசைகளும் மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, ஆனி உத்தரம், ஆடிப்பூரம், ஆடிச் செவ்வாய், ஆடி அமாவாசை, ஆவணி ஞாயிறு, புரட்டாதிச் சனி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகை சோமவாரம், சர்வாலயதீபம், தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் விஷேட பூசை நடைபெறுகின்றது. இங்கு சமயகுரவர் நால்வருடைய குருபூசைத் தினங்களிலும் விசேட பூசை நடைபெறுகின்றது. கும்பாபிஷேகத் தினங்களிலும் ஆவணிமூலம், விஜயதசமி, ஐப்பசி ரேவதி, ஐப்பசி பரணி, கார்த்திகை கடைசி சோமாவாரம், வினாயக சஷ்டி, மார்கழித் திருவாதிரை ஆகிய தினங்களிலும், மாசி மகா சிவராத்திரி அன்று இரவு 12 மணிக்கும் அபிஷேகம் நடைபெற்று விஷேட பூசையும் இடம்பெறுகிறது. மகாசிவராத்திரி தினத்தில் நான்கு சாமப் பூசைகளும், திருவெம்பாவைத் தினத்தில் அதிகாலை 5.00 மணிக்கும் விஷேட பூசை நடைபெறுகின்றது.

இவ்வாலயத்தில் பல இடங்களிலிருந்து அடியார்கள் வந்து பூசை, அர்ச்சனைகள், அபிஷேகங்கள் முதலியன செய்து தம் இஷ்ட சித்திகளையும் பெற்று, சிவாலயப் புகழைத் துலங்கவும் செய்கின்றார்கள். பூசைக்குரிய பொருட்களையும், கொடுத்து உதவுகின்றனர். ஸ்ரீ விசாலாட்சியம்பாள் சமேத விஸ்வேஸ்வர சுவாமி மீது ஊஞ்சல் பாட்டும் வெண்பாவும் இணுவில் இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ. மா.த. ந. வீரமணிஐயர் அவர்களால் பாடப்பட்டுள்ளது.

*பாருங்கள் வாருங்கள் பார்த்தருளைக் கூட்டுங்கள்*
*தீருமேயுங்கள் சிறைத்துயரம் - நேரங்கள்*
*இந்நேரில்லாத இணுவை விசுவேசன*
*தன்னையே தந்திடுவான் தான்.* சுபம்

☆☆☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூக செயல் திட்டம்
# (Community Project)

**கந்தசாமி கண்ணபிரான்**
*B.B.A (Hons) Ind, Dip-in-Mgt (O.U.S.L)*
*Dip-in-W.Ed (S.L), MARCC (Asian)*

**திட்டம் என்பது**

- எதிர்காலச் செயற்பாட்டை செயற்படுத்துவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டது.
- இலக்கை அடைவதற்கான தொடராக செய்யப்பட்ட படிமுறை
- ஒரு குறிப்பிட்ட இலக்கை / நோக்கத்தை அடைவதற்கான முன்னேற்பாடாகச் செய்யப்படும் செயன்முறை அல்லது படிமுறை.

**திட்டமிடல் என்பது**

- ஒரு விரும்புகின்ற விளைவை அடைவதற்கு முன்கூட்டியே படிமுறைகள் உருவாக்குவதைக் குறிக்கும்.
- ஒரு செயற்றிட்டத்திற்கான செயற்பாடுகளை உருவாக்குவதை / வரைவ தைக் குறிக்கும்.

**திட்டமிடல் படிமுறைகள்**

- நிர்ணயித்தல் அடையாளம் காணல்
- குறித்த காலப்பகுதிக்குள் நாம் எதனை அடைய வேண்டும்.
- இந்த நோக்கத்தை அடைவற்கான சாதகமான வழிகள் எவை?
- ஒவ்வொரு வழிமுறைகளிலும் உள்ள நன்மைகள், தீமைகள் எவை?
- எந்த முன்மொழிவினை நாம் ஏற்றுக் கொள்ளலாம்?
- கண்காணிப்பிற்கும், மீளாய்விற்கும் எந்த இடம் தேவை?
- கண்காணிப்பிற்கும், மீளாய்விற்கும் யாரை உள்வாங்குவது?

**சமுதாயச் செயற்றிட்டம் என்பது**

உள்ளூர் பொருத்தமான / சாதகமான வறுமைக்குறைபாடு முறை களை அடையாளம் காணுவதற்கான வழியும் அத்துடன் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டத்திற்கான பங்களிப்பையும் (Contribution) செய்வ தாகும்.

**சமுதாயச் செயற்றிட்டத்தின் நன்மைகள்**

சமுதாயத் திட்டமிடல் நிலைத்து நிற்கக்கூடிய தன்மையைக் கொண்டதாக அமைய சமுதாயத்தின் தூரநோக்கு, குறிக்கோள், வழிகாட்டிகள், உள்ளூர் திட்டமிடல் குழு உட்படப் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. நன்மைகள் ஆவன முழுச்சமூகத்தையும் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள விழிப்புணர்வை உருவாக்கும். வளப் பிரயோகம் ஒதுக்கமும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். தற்பாதுகாப்புக்களை நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏதுவாக அபாயங்களையும், அவற்றைச் சமாளிப்பதற்கான வழிகளையும் அறிய உதவும். கிரய வினைத்திறன் உரிய முறையில் வளங்களைப் பரவலாக்க உதவும். நீண்ட குறுகிய காலத் தீர்வுகளுக்கு வழிவகுக்கும். வெளிப்படையான மீளாய்வுத்தன்மை அங்கு காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாய ஆர்வக்குழு (Stake Holders) நீண்டகாலத் தந்திரோபாயச் செயற்றிட்டங்களுக்குள் உள்ளடக்கப்படும். சமுதாய அடிப்படையிலான முறைகள் தகவல் சேகரிப்பதற்கும் அவற்றை ஆராய்வதற்கும் இருக்கும்.

**சமுதாய திட்டமிடல் செயன்முறை**

வலுவூட்டல் : பிரதான சமுதாயத் தலைவர்களை இனங்காணலும் திட்டமிடல் அணியாக ஒழுங்குபடுத்தலும். திட்டமிடல் செயற்பாட்டிற்கான சமுதாய தயார் நிலையை ஏற்படுத்தலும் /தீர்மானித்தலும்.

**மதிப்பீடு**

- தகவல் சேகரிப்பதற்கான குழு ஒன்றை ஒழுங்குபடுத்தல்
- மதிப்பீட்டிற்கான தகவல்களைச் சேகரித்தலும், ஒழுங்குபடுத்தலும்.
- சமுதாயத்தை மதிப்பிடுதல்.

**திட்டமிடல்**

சாத்தியமாக / அடையக்கூடிய அளவிடத்தக்க முடிவுகளைத் தீர்மானித்தல். அளவிடக்கூடிய விளைவுகளை எழுதுதல். குழு உறுப்பினர்களிடம் வகைகூறும் தன்மையை (Accountability) உருவாக்குதல்.

**நடைமுறைப்படுத்தல்**

சமுதாய விழிப்புணர்வை மேம்படுத்தலும், சமுதாயப் பங்கேற்பை மேம்படுத்தலும். நடைமுறைப்படுத்தலுக்கான வழிகாட்டிகளை மேம்படுத்தல், கண்காணிப்பு முறைகளை மேம்படுத்தல்.

**செயற்பாடும் பராமரிப்பும்**

- குழுவிற்கான பொறுப்புக்கள், யாருக்கு கையளிப்பது, பராமரித்தலுக்கான நிதி.

**ஒரு செயற்திட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை இடம்பெற வேண்டிய விடயங்கள்**

**1. முதற்பக்கம்**

செயற்திட்டம் பற்றி செயற்திட்டத்தை அமுல் செய்யும் நிறுவனம் பற்றி, செயற்திட்டம் மூலம் நன்மை பெறுவோர் பற்றி மிகச் சுருக்கமான விபரம் முதற்பக்கத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். அத்தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

- செயற்திட்டத்தின் பெயர்
- செயற்திட்டத்தின் நோக்கம்
- செயற்திட்டத்தின் இலக்கு
- செயற்திட்டத்தின் வரவு செலவுத் திட்டம்
- செயற்திட்டம் ஆரம்பிக்கும் காலமும் முடிவடையும் காலமும்.

**அமுல்படுத்தும் நிறுவனம் பற்றிய தகவல்கள்**

பெயர், முகவரி, தொலைபேசி எண், தொடர்பு கொள்ளவேண்டிய நபரின் பெயரும், வங்கியும் வங்கிக் கணக்கு இலக்கம் போன்றன பற்றிய தகவல்கள்.

செயற்திட்டம் மூலம் நன்மை பெறுவோர் பற்றி விபரம், அவர்கள் வாழ்க்கை நிலைமை, அவர்களின் எண்ணிக்கை (குடும்பங்கள், ஆண்கள், பெண்கள், பிள்ளைகள், முதியோர், வயது வந்தோர் போன்றன)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் விபரங்கள் கவர்ச்சிகரமான முறையில் செயற்திட்ட முன்மொழிவின் முதற்பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**அறிமுகம் அல்லது செயற்திட்ட விபரம்**

இங்கு செயற்திட்டம் பற்றி முழு விபரமும் கொடுக்கப்படல் வேண்டும். இவ் விபரங்கள் பின்வரும் விடயங்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

செயற்திட்டம் இனங்காணப்பட்ட பிரச்சினையும், அதனால் சம்பந்தப்பட்ட மக்கள் எவ்விதம் பாதிக்கப்பட்டுள்ளனர் போன்ற விபரங்கள். செயற்திட்டம் மூலம் எவ்விதம் இப்பிரச்சினை தீர்க்கப்படும் போன்ற தகவல்கள் அமுல்படுத்தப்படும் நிறுவனம் பற்றியும் சில தகவல்களை இங்கு குறிப்பிடலாம்

**தேவை மதிப்பீடு**

நிறுவனம் இனங்காணப்பட்ட பிரச்சினை எவ்விதம் இனங்காணப்பட்டது என இங்கு விபரித்தல் வேண்டும்.

உ-ம் : தேவைப் பகுப்பாய்வு

இனங்காணப்பட்ட பிரச்சினைக்கு குறிப்பிட்ட செயற்திட்டம் எவ்விதம் தீர்வைத்தரும் என்பது பற்றிய விளக்கம் இங்கு கொடுக்கப்படல் வேண்டும்.

**செயற்திட்டத்தின் பிரதான இலக்கு**

எந்த இலக்கை அடைந்தாலும் செயற்திட்டம் முடிவுற்றதாக கருதப்படுமோ அந்த இலக்கு பற்றி விபரித்தல் வேண்டும்.

**செயற்திட்டம் நடவடிக்கை பற்றி திட்டம்**

ஒரு செயற்திட்டத்திற்கு பல நடவடிக்கைகள் இருப்பதையும் அவைகளை எவ்விதம் திட்டமிடவேண்டும் செயற்திட்டம் தொடர்பாகச் செய்யவுள்ள வேலைகள் பற்றி விபரித்தல் வேண்டும். அத்தகைய நடவடிக்கைகளை கட்டங்களாக பிரித்து விபரித்தல் அவசியம்.

**பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பிரேரிக்கப்பட்ட தீர்வுகள்**

இங்கு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்வகையான தீர்வுகளைப் பிரேரிக்கின்றீர்கள் என விபரித்தல் வேண்டும். உதாரணமாகப் பாடசாலையை மேம்படுத்தும் செயற்திட்டம் இதில் முதலில் பாடசாலைச் சமூகத்தில் தேவைப் பகுப்பாய்வை மேற்கொண்டு அப்பகுப்பாய்வில் இனங்காணப்பட்ட பாடசாலையை மேம்படுத்தும் செயல்திட்டங்களைப் பாடசாலைச் சமூகத்தினூடாக முன்னுருமைப்படுத்தி முன்னுரிமைப்படுத்திய செயற்திட்டங்கள் பற்றிப் பாடசாலைச் சமூகத்திற்குப் பூரண விளக்கமளித்தல் வேண்டும். அதாவது பாடசாலைக்குப் புதிதாகக் கட்டிடத் தொகுதி அமைத்தல், தளபாடங்கள் வழங்குதல் போன்ற தீர்வுகளை பாடசாலைச் சமூகம் முன்வைப்பதாயின் அவை பற்றிய வரைபடம், அதன் மொத்த மதிப்பீடு, பயனாளிகள் பங்களிப்பு (Contribution) இக்கட்டிடத்தால் ஏற்படப் போகும் நன்மைகள் போன்றவற்றைத் தெளிவுபடுத்தி பூரண விளக்கமளித்தல் வேண்டும்.

**நடவடிக்கைத் திட்டம்**

இப்பகுதியில் செயற்படுத்தும் நடவடிக்கைகளை விபரித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக பாடசாலையை மேம்படுத்தும் செயல்திட்டத்தில் பின்வருவன நடவடிக்கைத் திட்டங்களாக அமைதல் வேண்டும்.

- பாடசாலைச் சமூகத்திற்கு தேவைப் பகுப்பாய்வில் இனங்காணப்பட்ட செயற்திட்டத்தைப் பற்றிய பூரண விளக்கமளித்தல்.
- புதிய கட்டிடத் தொகுதியை அமைத்துக் கொடுத்தல்.
- புதிய கட்டிடத் தொகுதிக்கான தளபாடங்கள் வழங்குதல்.
- இவைகளைப் பேணும்முறைபற்றி பாடசாலைச் சமூகத்திற்கு விளக்கமளித்தல்.

**செயல்திட்ட உள்ளீடுகள் (Project inputs)**

செயற்திட்டத்திற்கு எத்தகைய செயற்பாடுகள் (பௌதிக பொருட்கள் உட்பட) செயற்திட்டத்தைச் செயற்படுத்தும் பொழுது அவை பற்றி விளக்கம் கொடுக்கப்பட வேண்டும்.

உதாரணமாக: பாடசாலையை மேம்படுத்தும் செயல்திட்டத்தில் பின்வருவனவற்றறை உள்ளீடாக நாம் கருதலாம்.

- வழங்கப்படவுள்ள கட்டடத்தொகுதியின் விஸ்தீரணம்.
- வழங்கப்படவுள்ள தளபாடங்களின் வகைகளும், அவற்றின் எண்ணிக்கையும்.

**செயற்திட்ட வெளியீடு (Project outputs)**

செயல்திட்ட நிறைவின் பின்னர் எத்தகைய நன்மைகளை பாடசாலைச் சமூகம் பெற்றிருப்பரென கருதப்படுகின்றனவோ அவைகள் அனைத்தும் செயற்திட்ட வெளியீடுகள் அல்லது செயற்திட்ட உற்பத்திகள் எனலாம். இங்கு இவை பற்றி விபரிக்கலாம். ஏற்கனவே எடுத்துக் கொண்ட உதாரணத்தின்படி செயல்திட்ட வெளியீடாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- பாடசாலைச் சமூகத்திற்கு பாடசாலை மேம்பாட்டுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல்.
- பாடசாலையில் தேவைப்பாடுகள் இல்லாதிருத்தல்.
- அவைகளுக்காக வழங்கப்பட்ட கட்டிடத்தொகுதி தளபாடங்கள் என்பனவும் செயற்திட்ட வெளியீடுகளாகும்.

**செயற்திட்டத்தை மேற்பார்வை செய்யும் செயன்முறை**

செயற்திட்டத்தை மேற்பார்வை செய்யும் செயன்முறைகளை இங்கு குறிப்பிடல் வேண்டும். இச் செயன்முறையின் சம்பந்தப்படுவோர் பற்றிய விபரம் எக்காலப்பகுதியில் இவை மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மேற்பார்வைச் செயன்முறையின்போது இனங்காணப்பட்ட செயற்திட்ட முன்னேற்றம் குறைபாடுகள் பற்றி எப்போது நிதி வழங்குதல் நிறுவனங்களுக்கு அறிக்கை வழங்கப்படும் போன்ற தகவல்களும் இதில் இடம்பெறல் வேண்டும்.

**செயற்திட்ட அமுலாக்கத்தில் செயன்முறை**

இப்பகுதியில் செயல்திட்ட அமுலாக்கல் தொடர்பான விபரங்கள் யாவும் இடம்பெறல் அவசியம். அவையாவன செயல்பாடுகளை அமுல் செய்யும் முறை செயற்பாடுகளில் பங்கு கொள்வோர் பற்றித் தகவல்கள் எவரால் எப்போது என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டுமென்ற தகவல் மேற்கொள்ளப்படல் வேண்டுமென்ற தகவல் இடம்பெற வேண்டும்.

**செயற்திட்டத்தின் வரவு செலவுத் திட்டம்**

செயற்திட்டத்தின் வரவு செலவுத் திட்டப்பகுதி மிக முக்கியமான ஒரு பகுதியாகும். இப்பகுதியில் செயற்திட்டத்திற்கான நிதி பெற்றுக்கொள்ளும் மூலங்கள் நிதி செலவிடும் விதம் ஆகியன விளக்கப்படல் வேண்டும். பொதுவாகச் செயற்திட்டத்திற்கான நிதிப்பங்களிப்புக்களை முதலில் வருமானங்கள் : (Income) எனும் தலைப்பில் காட்டியபின் செலவுகள் என்ற தலைப்பின்கீழ் சகல செலவீனங்களும் காட்டப்படுவதோடு இவ்விரு கூட்டுத்தொகை தனித்தனியாகக் காட்டப்படல் வேண்டும். அதே சமயம் வருமானமும் செலவுகளும் சமப்பட வேண்டுமென்பதையும் கவனத்தில் கொள்வோம்.

செயற்திட்ட முன்னேற்ற மதிப்பீட (Project Evaluation) செயற்திட்டம் குறிப்பிட்டவாறுஅதனுடைய இலக்கை அடைந்துள்ளதா என ஒரு மதிப்பீடு செய்வது மிக அவசியமானதாகும். இரண்டு வகையில் செயற்திட்ட முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

- உள்ளக மதிப்பீடு
- சுதந்திரமான மதிப்பீடு

செயற்திட்டத்தை அமுல் செய்யும் நிறுவனம் தாம் செயற்படுத்திய உரிய இலக்கை அடைந்துள்ளதா என ஒரு மதிப்பீட்டைச் செய்யலாம். அதனை உள்ளக மதிப்பீடு என அழைக்கப்படும். நிறுவனத்தில் இதற்கென அனுபவம் பெற்றவர்கள் இதனைச் செய்யலாம்.

செயற்திட்டத்தை அமுல் செய்த நிறுவனம் இன்றி வெளியில் இருக்கும் நிறுவனம் அல்லது நிதி வழங்கும் நிறுவனமும் சுதந்திரமாக செய்யும் மதிப்பீட்டை சுதந்திரமான மதிப்பீடு என அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு செயற்திட்டத்தை மதிப்பீடு செய்ய வேண்டியிருப்பதால் மதிப்பீடு செய்யும் முறை பற்றி விளக்குதல் வேண்டும்.

**முடிவுரை**

நவீன உலகில் செயல்திட்டம் முக்கியத்துவம் அடைந்து செல்கின்றது. செயல்திட்ட அறிவினால் வேலையை இலகுவாக்கவும் விணைத்திறனுடன் துரிதமாக அமுல்ப்படுத்தக் கூடியதாக இருக்கும். எனவே சிக்கலற்ற முறையில் செயல்திட்டமொன்று நிறைவு பெற வேண்டுமாயின் அச்செயல்திட்டம் முன் கூட்டியே உரிய முறையில் திட்டமிடப்படல் வேண்டும்.

உசாத்துணை நூல்கள்:


Training for community mobilizer: by CIRM - Hand out

NGO Sector Training programme: By Training Education Community work Information Network Hand out - 2007

Lions Clup of Inuvil PANI -Bulletin - 3, PP 1-2, September - 2009

த.ந.-நியூட்டன் (2006) சமூக ஊக்குவிப்பாளர்களுக்கான Training Hand வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் - II யாழ் மாவட்டம்.


☆☆☆




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ மகாஜன மண்டபம்



நடராசா சச்சிதானந்தன்

இந்தியத்திருநாட்டிற்கு அப்பால் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் மிகப் பழமையான சிவன் கோவில்களும் சிவ வழிபாடும் இருந்து வந்துள்ளதை வரலாற்று ஆதாரங்கள் நமக்குக் காட்டுகின்றன. சையாம் (தாய்லாந்து), கம்போடியா, வட தாய்லாந்து, இலங்கை போன்ற நாடுகளில் சைவசமயம் வேரூன்றிட வந்துள்ளது. இதில் இலங்கை இந்தியாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் இருந்து சைவசமய வளர்ச்சிக்கு தமது அரும்பணியினை ஆற்றி வருகிறது. தேவார காலம் தொட்டு தமிழர்கள் சைவப்பணியை செய்து வந்துள்ளதை ஞானசம்பந்தர் மூலம் அறிகிறோம்.

ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு பழமையான திருக்கோணேஸ்வரர் ஆலயமும், திருக்கேதீஸ்வரர் ஆலயமும் தமிழர்கள் இலங்கையில் வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வந்ததை பறைசாற்றுகிறது.

இத்தகைய பழமையான வரலாறும், சிவ வழிபாடும் தன்னகத்தே கொண்டு விளங்கியவர்கள். இலங்கைத் தமிழர்களாவர். இவர்கள் தமிழர்கள் வாழும் பகுதிகளில் அதிசமயமான சைவத்தைப் பின்பற்றி தமது வாழ்விடங்களில் சிவ ஆலயங்களை எழுப்பி வழிபட்டு வந்தனர். தங்களது வாழ்வியல் முறைமைகளோடு இணைந்த ஒன்றாகவே கருதி வந்தனர்.

சைவசமயத்தை தமிழர்கள் தாங்கள் வாழும் பகுதிகளில் பரப்புவதோடு நிற்காமல் வாழ்வோடு பின்னி பிணைந்த ஒன்றாகவே எண்ணினர். இவ்வகையில் கல்வியின் மூலம் சைவசமயத்தை மக்களின் மனங்களில் பதிய செய்ய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தோடு தமிழர்கள் வாழும் பகுதிகளில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கையில் வடபகுதியில் அமைந்துள்ள மிகப் பழமையான கிராமம் இணுவில் என்பதாகும். இக்கிராமம் தமிழ், இசை, நாடகம், நாட்டியம், சைவசமயம் ஆகியவற்றைப் பரப்பியும் அடுத்த தலைமுறைகளுக்கு கற்றுக் கொடுத்தும் வந்தது. இதனால் கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னர் "சைவ மகாஜன வித்தியாசாலை" என்ற பெயரில் நிறுவி சைவசமய வளர்ச்சியை தனது முதன்மை நோக்கமாகக் கருதி செயலாற்றி வந்தது. சைவசமயத்தையும், தமிழையும் ஊர்மக்கள் பேணவேண்டும் என்பதற்காகவும், தமிழர்கள் தங்களின் பாரம்பரிய பண்பாட்டினையும், மரபையும் கடைபிடிக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த வித்தியாசாலையை ஆரம்பித்தனர்.

இந்த பாடசாலையில் பணிபுரிந்த ஆசிரியர்கள் அனைவரும் மிகுந்த சைவப்பற்றாளர்களாக விளங்கினர். இலங்கையில் தமிழர்கள் மிகுதியாக வாழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களில் இணுவில் கிராமமும் ஒன்றாகும். ஏறத்தாழ 10,000 மக்களுக்கு மேல் வசிக்கும் இக்கிராம மக்கள் முழுவதும் சைவசமயத்தை இன்றும் கடைபிடித்து வருவதற்கு அடிநாதமாக விளங்கியது இந்த "சைவ மகாஜன வித்தியாசாலை" ஆகும்.

இப்பாடசாலையில் பணியாற்றிய ஆசிரியர்கள் ஆண்டு தோறும் சைவம் தழைக்க மூலமாய் நின்ற ஆறுமுகநாவலர், சைவ சமயக்குரவர் எனப் போற்றப்படும் அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோருக்கு நால்வர் குருபூசைகளை தவறாது நடத்தி வந்தனர். சைவசமயம் செழித்தோங்க காரணமான இந்நால்வர் விழாவைச் சிறப்பாக நடத்தி வந்தனர்.

*"சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ்*
*சிற்கோல வாதவூர்த் தேசிகரும் - முற்கோலி*
*வந்திலரேல் நீறெங்கே மாமறை நூலெங்கே*
*எந்தை பிரானஞ்செழுத் தெங்கே"*

என்ற பாடல் இந்த நால்வரின் புகழைக் காட்டுகிறது. இவ்வாறு பக்தி இயக்கத்தை புதுப்பொலிவு பெற்று விளங்கச் செய்த இந்நால்வர் விழாவில் தமிழிசை, தமிழ்ப்பாவும் மேலோங்கி விளங்கியது.

இவ்வாறு பணி செய்து வந்த இப்பாடசாலையுடன் அமெரிக்க மிஷன் ஆரம்பப் பாடசாலை இணைக்கப்பட்டது. பின்னர் இணுவில் மத்திய கல்லூரியாக தொடர்ந்தும் 1C தரத்தில் இயங்குகின்றது. இவ்வூரில் வசித்து வரும் மக்கள் தங்களின் குழந்தைகளின் உயர்கல்விக்காக அயல் ஊர்களுக்கே அனுப்பி வருகின்றனர். தங்களின் பணத்தையும், நேரத்தையும் விரயமாக்கி வேறு ஊர்களில் உள்ள கல்லூரிகளுக்கு சென்று கற்கின்றனர். அதேபோல் அயல் ஊர்களில் உள்ள மாணவர்கள் இணுவில் மத்திய கல்லூரியில் வந்து பயிலும் நிலையும் இல்லை. இந்த நிலையை கல்வியியலாளர்கள் ஆராய வேண்டும். அவ்வாறு ஆராய்ந்து இணுவில் மத்திய கல்லூரியை அடிக்கட்டுமானம், கல்வி கற்பதற்குரிய சூழல், நூலகம் போன்ற அதிநவீன தொழில் நுட்பங்களை புகுத்தி செயற்படுத்தவேண்டும். இவ்வாறு செய்தால் பழமை வாய்ந்த இக்கல்லூரியில் பயில அனைவரும் விரும்புவார்கள்.

இப்பாடசாலையில் கல்வி பயின்றவர்கள் உள்நாட்டிலும், பல மேலைநாடுகளிலும் உயர் பதவிகளிலும் மற்றும் தொழிலதிபர்களாகவும் உள்ளனர். மேலும் முன்னாள் மாணவர்களின் வாரிசுகள் நல்ல நிலைமையில் உள்ளனர். இந்நிலையில் இணுவில் மத்திய கல்லூரியின் தரத்தினை உயர்த்த வேண்டியது நம் அனைவரின் தலையாய கடமையாகும்.

கல்லூரியின் இடப்பற்றாக்குறை, வகுப்பறை, பற்றாக்குறை போதிய நூலக வசதியின்மை மற்றும் ஆய்வுகூட உபகரண இன்மை, விளையாட்டுத்திடல் இன்மை மற்றும் கணிப்பொறி இணையத்தள வசதி இன்மை போன்றவற்றை அனைவரும் செய்து தருவது அவசியமானதாகிறது. மேற்காணும் வசதிகளை இக்கல்லூரிக்கு நாம் அனைவரும் இணைந்து உதவினால் நாளடைவில் இணுவில் மத்திய கல்லூரியை நாள உள்ளூர் மற்றும் அயலூர் மாணவர்கள் வந்து பாடம் பயில போட்டியிட்டு வருவார்கள் என்பது உறுதி. மேலும் எதிர்கால சமுதாயம் கல்வியில் மேலோங்கிய சமூகமாக மாறும். இதனால் நம் மக்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை உயரும். வருங்கால சந்ததியினரின் நலனைக் கருத்தில் கொண்டு நாம் அனைவரும் மனதொருமித்து இச் செயலில் உடனடியாக இறங்கிட வேண்டும்.

29.08.2010 அன்று எனது தந்தையார் திரு. வயித்திலிங்கம் நடராசா அவர்களின் 100ஆவது அகவை விழா நடைபெறுகிறது. அவ்விழாவில் அப்பெருமகனாரிடம் கல்வி பயின்ற மாணவர்களை அழைத்து இணுவில் மத்திய கல்லூரியினை நாளடைவில் தரம் உயர்த்துவதன் அவசியத்தை எடுத்துரைப்பதும் மேலும் பாடசாலைக்குரிய இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்வது குறித்தும் எண்ணமாகும்.

மேலும் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்களின் சங்கத்தினர் ஆகியோருடன் இணைந்து செய்ய வேண்டிய பணிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட உள்ளன. இரண்டு ஆண்டிற்குள் கல்லூரிக்குத் தேவையானவற்றை செய்து கொடுக்க முயற்சிக்க வேண்டும் கல்வித்துறையின் அனுசரணையுடன்.

இணுவில் கிராமத்தைச் சேர்ந்த ஊர் பொதுமக்கள் முன்னாள் மாணவர்கள் என அனைவரும் இம்முயற்சியில் தங்களை ஈடுபடுத்துக் கொள்ள வேண்டும் என அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.


ஓர் இனத்தின் கலை, பண்பாடு, நாகரிகம், மொழி போன்றவை அந்த இனத்தின் சமயத்தோடு இணைந்தே காணப்படும். ஆகவே மனிதனின் அடையாளமே சமயத்தை அடிப்படையாகக் கொண்டே விளங்கி வருகிறது. சமய தீட்சை பெற வேண்டுமெனில் இளம் வயதிலேயே அவனுக்குக் கொடுக்கப்படுகிறது. பெளத்த, கிறிஸ்தவ குருமார்களால் ஞானஸ்தானம் கொடுக்கப்படுவதுபோல், எமது இளம் வயதில் தீட்சை வித்தியாசாலையில் சைவக்குருக்களினால் சிவ தீட்சை வழங்கப்பட்டு சமய அனுட்டானங்களை மரபார்ந்த முறையில் பேணுவதற்கு வித்திட்டதை இணுவில் வாழ் பெருமக்கள் அனைவரும் அறிவார்கள்.

ஆகவே இணுவில் மத்திய கல்லூரியில் நாம் அனைவரின் பேராதரவில் கட்டப்படும் வகுப்பறைக் கட்டிடத்திற்கு நமது பாரம்பரியத்தை பறைசாற்றும் நோக்கில் "சைவ மகாஜன மண்டபம்" என பெயரிடுதல் அனைத்து விதத்திலும் பொருந்தும் எனக் கருதி அனைவரின் ஒத்துழைப்பையும் எல்லாம் வல்ல இறைவனின் கருணையினையும் வேண்டுகின்றேன்.

☆☆☆




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ் மாவட்ட மேலதிக கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

**திரு. வே. தி. செல்வரத்தினம்**
யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளரும்,
யாழ் மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும்

## நல்ல ஆத்மாவின் நினைவுகள்

தன்னலங் கருதாது சேவையாற்றிய அதிபர் ஒருவருக்கு ஞாபகார்த்த உரையொன்று எழுதுவதற்குக் கொடுத்து வைத்தவனாகக் கருதுகின்றேன். இம்மலரை இணுவில் சைவ மகாஜன வித்தியாலய பழைய மாணவர்கள் வெளியிடுவது ஒவ்வொரு ஆசிரியருக்கும், அதிபருக்கும் பெருமையாக இருக்கும். அதிபர் அமரர்.திரு.வ.நடராஜாவின் அதிபர் கடமைகளின் வெற்றிக்கு அவர் சமூகத்துடனான நல்லுறவு முக்கிய காரணியாக உள்ளது. முகாமை என்பதில் அவரது பரம்பரைக் காரணிகளும் முக்கியத்துவம் உடையதாக உள்ளதை அறியக்கூடியதாக உள்ளது. இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அதிபராகவும், ஐந்து தசாப்தங்களுக்கு மேலாக பாடசாலையினுள் தனது வாழ்வை அர்ப்பணித்தவரையும் கல்விச் சமூகம் போற்றி வாழ்த்தும்.

பாடசாலையில் ஒழுக்க விழுமியங்களைக் கண்ணாக வளர்த்த அமரர் கல்வி அடைவிலும் உயர்வினைக் காட்டியமையைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக் கூறுகின்றன. இதனைவிட சைவசமயம் மணங்கமழும் இணுவையம்பதியில் சைவம் ஓங்கி வளர அன்னாரின் அர்ப்பணிப்பும் ஒரு காரணமாகும். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த அதிபர் திரு.வ.நடராஜா தனக்கென ஒரு முத்திரையை இணுவிலிலும், இணுவில் சைவ மகாஜன வித்தியாலயத்திலும் விட்டுச் சென்றார் என்றால் மிகையாகாது. சமய மரபுகளைப் போற்றி வாழ்ந்தமையால் பாடசாலையிலும், பாடசாலைக்கு வெளியேயும் ஒரு முரண்பாடற்ற சமூகத்தை உருவாக்கியுள்ளார் என்பது வெள்ளிடைமலை.

தற்காலத்தில் உள்ள புதிய கல்விச் சீர்திருத்தங்கள் 5S இல் உள்ள ஐந்து அம்சங்கள் என்பன அக்கால அதிபர், ஆசிரியர்களினால் பெயர் சொல்லப்படாமலே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தமைக்கு அதிபர் திரு.வ.நடராஜா ஓர் முன்னுதாரணமாகும். அன்னாரின் நினைவுகள் கூரும் இந்நாளில் அவர்தம் பணிகளை தற்காலத்திலுள்ள இளைஞர்களும் முன்னெடுத்துச் செல்வதே அவரது ஆத்மாவிற்குச் செய்யும் பிரார்த்தனைகளாகும். அன்னாரின் ஆத்மா இறைவனடியிலிருந்து தொண்டுகள் செய்ய அஞ்சலி செய்வோம்.

*"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றை நிலை முனியாது கற்கை நன்றே"*

நன்றி: நடராஜம் - 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபரின் வாழ்த்துச்செய்தி



**திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**

அதிபர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை.

"நடராஜம்" எனும் நூல் சைவமகாஜனரின் தோற்றம், கல்விமுறைமை, நடராசாவின் அதாவது தலைமை ஆசிரியரின் பணி, சமகால ஆசிரிய அதிபர்களின் பணி, மதிப்பீடு, கல்விக்கட்டுரை போன்றன உள்ளடக்கிய கட்டுரைத்தொகுப்பாக வெளிவருவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைவதோடு இம் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

திருக்கோவில்களும், விளைநிலங்களும், கலைச்செல்வர்களும் நிறைந்த திருவூர் இணுவில். இப் புண்ணிய பதியில் பாரம்பரியமான சட்டம்பியார் மரபில் கல்விபயின்று நல்லாசிரியராக, தலைமையாசிரியராக நீண்ட கல்விப்பணியாற்றி அமரத்துவம் பெற்றவர் ஸ்ரீமான் நடராசா உபாத்தியாயர் அவர்கள். கிராமத்து தலைமைத்துவங்களும் அணிசெய்த உடையார் குடும்ப மரபில் உதித்தவர். கிராம சபைத் தலைவராக புகழுடன் விளங்கிய அமரர் சி. மாணிக்கம் அவர்களின் பெறாமகன். கிராம மக்களுக்கு வழிகாட்டிய பரம்பரையில் உதித்த நடராசா உபாத்தியாயர், எளிமையான வாழ்வை தன் வாழ்வாகக் கொண்டவர். மிக இளம் வயதில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கி மூன்று தலைமுறைக்கு மானசீகக் குருவாக விளங்கி எல்லோராலும் மதிக்கப்பட்டார். மெலிந்த தோற்றம், சிரித்தமுகம், நீறுபூசிய நெற்றி, அதிகாலை கோவில் வழிபாடு முடித்து, இணுவில் சைவ மகாஜனா வித்தியாலய வளவில் கம்பீரமாகக் காட்சி தருவார் பலரது வாழ்வை தனது ஆசிரிய ஆளுமையால் திசை திருப்பியவர். உணவு கொடுத்து, கல்வியும் கொடுத்து, உத்தியோகமும் தேடிக்கொடுத்த உத்தம ஆசிரியர். இவரைப் பற்றிய செய்திகளை இவரது கால மாணவர்கள் இன்னும் சொல்லிப் பொருமைப்படுவார்கள். "இணுவை அப்பர்"என்ற நூலை எழுதிய பண்டிதர் கா.செ.நடராசா இவரது வழி காட்டலால், தான் வாழ்வு பெற்ற வரலாற்றை உதாரணம் காட்டியுள்ளமை சிறப்பு அம்சமாகும். சைவ மகாஜனா கல்லூரி அவர் உருவாக்கிய அவரது மாணவர்களால் இன்று இணுவில் மத்திய கல்லூரியாக உயர்ந்து நிற்கிறது. அன்று வறுமைக்குட்பட்ட மாணவர்களின் வாழ்விடமாக பாமர மக்களின் பிள்ளைகளுக்கு உன்னத வாழ்வு பெற்றுக்கொடுக்கும் கல்விக் கோவிலாக வளர்த்த பெருமை தலைமை உபாத்தியார் நடராசாவைச் சாரும் என்பதையாரும் மறுக்க முடியாது.

கல்விப் பணியோடு மட்டுமின்றி கிராமமக்களின் பிணக்குகளைத் தீர்த்து வைக்கின்ற நியாயவாதியாக, தீர்ப்பாளராக இறக்கும் வரை பணிசெய்தவர். இணுவில் கந்தசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் நிர்வாகப் பணிகளில் பங்கேற்று ஆலய வளர்ச்சிக்கு தொண்டாற்றியவர். சிறந்த விவசாயியாக, விளைநிலத்தில் வியர்க்க நின்ற காட்சியை இன்றும் பெருமையோடு பேசுவார்கள். மாலைப்பொழுதில் கிராமத்தில் இளைஞர்களுடன் ஒருவராக கூடி நின்று சந்தை மைதானத்தில் கரப்பந்தாட்டத்தில் முன்னணி வீரனாக விளையாடுவார். எல்லோரையும் சமமாக மதிக்கும் பக்குவம் கொண்ட ஆசான். தலைமை ஆசிரியராக கல்விப்புலத்தில் காட்சி தந்த அதே வேளை சிறந்த விவசாயியாக தோட்டத்தில் தோன்றும் காட்சி அற்புதமானது. பண்ணோடு இசை பாடும் வல்லமை மிக்க ஆசான். கோவில்களில் மட்டுமின்றி இன்ப துன்ப நிகழ்விலும் பொற்சுண்ணம் பாடி வைபவங்களை நெறிப்படுத்தும் பாண்டியர். கோண்டாவில் அவர் புகுந்த இடம். ஆசானின் ஆளுமையை சீர் நிறைந்த வளமாக்கி உதவியவர் அவரது பிரிய பத்தினி. அவரது பிள்ளைச் செல்வங்கள் கல்வியில் மிக உயர்ந்த நிலையில் இங்கிலாந்திலும், கனடாவிலும் சிறப்புடன் வாழ்வதற்கு ஆசானின் அருந்தொண்டு, அம்மையாரின் தாய்மை அறமும் காரணம் எனலாம்.

ஆசானின் தலைமைந்தன் திரு.சச்சிதானந்தன் சிவநெறிக்காவலராக இலண்டன் மாநகரில் பெருந்தொண்டுகள் ஆற்றி பெருமையோடு விளங்குகிறார். இலண்டனில் உலக சைவ மாநாட்டைத் தோற்றுவித்தவர் இவர். இன்றும் தந்தையின் வழியில் பிள்ளைகள் தம கிராமத்துக்கு குறிப்பாக இணுவில் மத்திய கல்லூரி அபிவிருத்திக்கு உதவி வருவது குறிப்பிடத்தக்கது.

இணுவில் கல்வி வரலாற்றில் தனக்கென ஒரு வரலாற்றைக் கொண்ட நல்லாசிரியர். நடராசா உபாத்தியாயரின் வாழ்வு என்றும் நன்றியோடு போற்றப்படவேண்டியது.

நன்றி: நடராஜம் – 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவில் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



**திரு. செ. குபேரநாதன்**
உதவிக் கல்விப்பணிப்பாளர்,
உடுவில் கல்விக்கோட்டம்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தின் பெருமைமிக்க கிராமங்களில் ஒன்று இணுவில். அதாவது சைவமும் தமிழும் தம் உயிரென மதிக்கும் மாண்புடைய மக்கள் வாழும் திருப்பதியாகும். இறை பக்திக்கு முதன்மை கொடுக்கும் இனிய பண்பாளர்கள் நிறைந்த இணுவில் கிராமத்தை யான் நன்கு அறிவேன். அறிவு நிறைந்த கொள்கைச் சான்றோர்கள் காலத்துக்குகாலம் இவ்வூரில் தோன்றி நற்கருமங்கள் ஆற்றியுள்ளார்கள். இவர்களையெல்லாம் நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம் என்ற வகையில் இணுவில் சைவமகாஜனா வித்தியாசாலையில் திரு.வ.நடராசா அவர்கள் அதிபராக நெடுங்காலம் சேவை செய்து ஓய்வு பெற்றவர். இப் பெரியார் இணுவில் கிழக்கைச் சேர்ந்த உடையார் குடும்பத்தைச் சேர்ந்த சிதம்பரநாத உடையார் மகன் வைத்திலிங்கத்தின் மகனாவார். இவர் சிறந்த நிர்வாகியுமாவார். இணுவில் கந்தசாமி கோவிலின் முதலாவது அறங்காவலர் குழுவில் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டு அரும் பணியாற்றியவர்.

இவர் தான் கற்று முன்னேறிய பாதையை ஏனையோரும் பின்பற்றிப் போதிய பயனடைய வைப்பதையே குறிக்கோளாகக் கொண்ட உயர்ந்த பண்பாளர்.

"கற்கக் கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக".

என்ற வாக்கியத்திற்கு அமைய ஐயந்திரிபறக் கற்ற பின் அக்கல்வியின் பயனாக நல்லதைச் செய்து காட்டி வாழ்வாங்கு வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் பெருமைதேடித் தந்தவர்.

அவர் செய்த நற்பணிகள் தொடர்பாக அவரது மகன்மார்கள் வெளியிடும் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இந்நூல் இனிவரும் மாணவ சமுதாயத்திற்கு நல்லதொரு உந்துசக்தியாக அமைவதோடு ஆசிரியத்துவப்பணி பெருமை போற்றப்படுவதுக்கு ஒப்பானதாகும் என்று கூறி வாழ்த்துகின்றேன்.

நன்றி: நடராஜம் – 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கானை கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

**திரு. துரைஐயா எங்கரசு**
உதவிக் கல்விப்பணிப்பாளர்,
சங்கானைக் கல்விக்கோட்டம்.

முதன்மை அதிபர் திரு.வ.நடராசா அவர்களை மையப்படுத்தி அவரது சேவையை மையப்படுத்தி "நடராஜம்" என்னும் நூல் வெளியிடப்படுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இந் நூலை வெளியீடுவதற்கு முயற்சியெடுத்தமையையிட்டு எனது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலின் மூலம் பாசாலையின் வரலாறு, கிராமத்தின் பண்பாட்டுக் கோலங்கள், தகைசார்ந்த அதிபர்,, ஆசிரியர்களது சேவைகள், சமகாலத்தில் கல்விப்பணியில் ஈடுபட்டவர்களது குறிப்புக்கள், எல்லாவற்றிற்கும் மேலாக இக்கல்லூரியை நீண்ட காலம் வழிநடத்திய அமரரும் அதிபருமான திரு.வ.நடராசா பற்றிய சேவைக் குறிப்புக்கள் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன.

தந்தையாரின் சேவையை வலுவூட்டும் வகையில் அவர்தம் ஞாபகார்த்தமாக கல்லூரி விஞ்ஞான கூடத்தை இன்றைய கல்வித் தேவைக்கேற்ப நவீனப்படுத்தி தந்துள்ளார். அவர் தம் அருமைப்புதல்வர் ந.திருஞானசோதி அவர்கள் ஆறரை இலட்சம் ரூபாவை இதற்கெனச் செலவிட்டுள்ளார்.இக்கைங்காரியம் எங்கள் கல்லூரிச் சமூகத்தால் எஞ்ஞான்றும் நினைவு கூறப்படும் என்பதில் ஐயமில்லை.

நூல் தொகுப்பில் அடங்கிய அம்சங்களை மனதில் கொண்டும் திரு. நடராசா அவர்களின் நூற்றாண்டினை மனதில் கொண்டும் நிறைவேறுகின்ற இப்பெருமுயற்சியை மனமார வாழ்த்தி, இவ்வெளியீடு சிறப்புற அமைய ஆசிகூறுவதிலும் மனநிறைவடைகின்றேன். செயற்கரிய கருமங்கள் என்றும் ஓங்கிவளர வாழ்த்துகின்றேன்.

நன்றி: நடராஜம் – 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



**திரு. செ. சோதிப்பெருமாள்**

இளைப்பாறிய அதிபர்

இணுவில் மத்திய கல்லூரி (இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை) முன்னாள் அதிபர் அமரர் வ.நடராசா அவர்களின் நினைவால் வெளிவரும் நூல்வெளியீட்டுக்கு ஆசியுரை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். அன்னாரைப் பற்றி எழுதுவதாயின் ஒரு நூற்றுக்கணக்கான பக்கங்களைக் கொண்ட நூலாக அமையும்.

மிகச் சுருக்கமாக சில விடயங்களை மட்டும் குறிப்பிடுகின்றேன். அமரர் அவர்கள் வித்தியாலயத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக உதவி ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றிய காலத்தில் இணுவில் மாணவரின் கல்வி வளர்ச்சியில் பெரும்பங்காற்றிய உத்தமர். அத்துடன் கிராம அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபட்டு உழைத்தவர். அவரிடம் கல்விகற்றவர்கள் பல்வேறு துறைகளிலும் பணியாற்றி இளைப்பாறியுள்ளார்கள். அமரர் அவர்கள் பாடசாலை கல்லூரியாக வேண்டுமென பெருவிருப்பத்துடன் இளைப்பாறிய பின்னரும் முயற்சி செய்தவர். அவருடைய காலத்தில் பாடசாலை தரமுயர்த்தப்படாவிட்டாலும் அவருக்குப் பின் வந்த அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் முயற்சியினால் இன்று கல்லூரி ஒளிவீசுகின்றது. அவரின் முயற்சி காலம் பிந்தியாவது நிறைவேறியதையிட்டு அவரின் ஆத்மா சாந்தி அடையும். தற்காலக் கல்விமுறைக்கேற்ப கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுகூடம் அமரரின் இரண்டாவது மகன் திரு.ந.திருஞானசோதி அவர்களால் சென்ற ஆண்டு புனரமைக்கப்பட்டு "நடராசா விஞ்ஞான கூடமாக" பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அமரர் அவர்களின் குடும்பத்தினர் இந் நினைவுமலரை வெளியிடுவது போற்றுதற்குரியது. அவர்கள் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

நன்றி: நடராஜம் – 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mr. V. Nadarajah -
# The Architect of Inuvil Saiva Mahajana

**Thambyaiyah Devarajah, J.P**
Rtd. Deputy Principal
Kokuvil Hindu College.

Lives of great men all remind us, we can make our lives sublime and departing, leave behind us the footprints on ths sand of time"

Mr. Vaithilingam Nadarajah son of our soil was a charismatic leader. Teachers of the calibre of Mr. Nadarajah were the "gems" of Saiva Mahajana (now known as Inuvil Central College). His knowledge of English was excellent, both spoken and written. Though I did not have the opportunity to study under him as a student. Later as a teacher I had been fortunate enough to chat with him. He spoke excellent English and it was a pleasure to talk to him. As a teacher he was par- excellence.

Mr. Nadarajah belongs to a distinguished family in Inuvil. He was simple, humble and a principled personality. He always wore spotless white verti and national lending prestige to it. He had his education at two leading schools Kokuvil Hindu College and Jaffna Hindu college. Later he joined Kopay Teachers' College and became a trained teacher. As a teacher and Principal of Saiva Mahajana he did a selfless service to the uplift of the school. He was able to get the old students of Saiva Mahajana parents and well wishers to rally round him to build the school. He was a source of inspiration to all those who looked for the progress of the school.

Mr. Nadarajah never confined himself to the school alone. He was an active social worker. His services to the village was immense. At the time when surveyors were less in numbers, I have seen him surveying the lands of the villagers, of course free of charge.

He was a devoted Hindu. Men approached him for advise even to settle family problems which he obliged.

God rewarded him with children who gladden the heart of both father and mother.

I hope that by God's grace, the children shall continue to live their lives as worthy offsprings of the worthy father.

"May God bless his soul"

நன்றி: நடராஜம் – 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



**திரு. செ. இலகுநாதன்**

பழைய மாணவர் சார்பில்,
தலைவர், இணுவில் இந்து விளையாட்டுக் கழகம்.

திரு.வ.நடராசா அவர்கள் 37 ஆண்டுகள் ஆசரியராகவும், தலைமையாசிரியராகவும் சிறந்த சேவையை ஆற்றியுள்ளார். தலைமையாசிரியர் பதவி தற்பொழுது அதிபர் பதவி என அழைக்கப்படுகின்றது. இவர் சிறார்களை நல்வழிப்படுத்தி வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தத்துவத்திற்கிணங்க கல்வியை நெறிப்படுத்தினார். இதற்கு அவரிடம் கற்ற மாணவர்கள் பலர் உயர்ந்த வாழக்கை வாழ்வதும் இணுவில் கிராமம் நிமிர்ந்து நிற்பதும் சான்றாகும். பழைய மாணவர் சங்கத்திலும், பாடசாலை அபிவிருத்தி சங்கத்திலும் நீண்டகாலம் செயற்பட்டவர் என்ற ரீதியில் அவரின் சேவையின் மகத்துவத்தை நான் அறிவேன்.

அதிபர் திரு.நடராசா அரசியல் ரீதியிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்காக உழைத்தவர். அக்கால அரசியல் தலைவர்களுடன் இவருக்கு இருந்த தொடர்பும் நன்மதிப்பும் இவரின் ஆளுமைக்குச் சான்றாகும். உடுவில் கிராமச் சங்கத்தின் 8ம் வட்டார உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு சில வருடங்கள் கருமமாற்றினார். இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் அமைக்கப்பட்ட பொழுது அதன் காப்பாளராக இருந்து கழகத்தை நெறிப்படுத்தியவர். இதனால் பல போட்டிகளில் வெற்றிபெற்றோம்.

இவர் நேர்மை, ஒழுக்கம், தூய்மை, தர்மம், சத்தியம், என்பவற்றை தனது கடமையின் போது கடைப்பிடித்துவந்தார்.

திரு.வ.நடராசா அவர்களின் நூற்றாண்டு தினம் அண்மிப்பதை முன்னிட்டும், இந்நூல் வெளிவருவதை முன்னிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி: நடராஜம் – 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி

**திரு. இ. மயூரநாதன்**
கொழும்பு

இணுவில் சைவமகாஜனாவின் அதிபர் திரு.வ.நடராசா அவர்களின் நூற்றாண்டு ஞாபகார்த்தமாக வெளிவரும் "நடராஜம்" என்னும் மலரை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அதிபர் வ.நடராஜாவும், திரு.செ.இராசதுரை, திரு.ச.செல்வரத்தினம், திரு.த.கந்தையா, திருமதி ப.சிவபாக்கியம், திரு.வே.நல்லதம்பி, திரு.க.அருளம்பலம், திரு.S.பஞ்சாட்சரம், திரு.த.நடராசா போன்ற ஆசிரியர்களின் ஒத்துழைப்பு, நல்லொழுக்கப் பண்புகள், அவர்களின் தூய்மை என்பன எமக்குப் பெரிதும் வழிகாட்டின. அவை பழைய மாணவர்களின் வாழ்க்கையில் அடித்தளமாக அமைந்தன.

இணுவில் சைவமகாஜனாவில் அதிபர் நடராசாவின் காலத்தில் கற்ற பழைய மாணவர்கள் அவரது பெருமையை பல சந்தர்ப்பங்களிலும், பல இடங்களிலும் எடுத்துக் கூறுவதை அவதானித்துள்ளேன். எங்களைக் கற்பித்த ஆசிரியர்களை நினைவுகூர்வதில் பெருமை அடைகின்றோம்.

மேலும் இத்தளத்தில் உருவாகிய மத்திய கல்லூரியை வளம்பெற வாழ்த்துகின்றோம்.

☆☆☆

நன்றி: நடராஜம் – 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் வழியில் இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம்

ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்
உரும்பிராய்.

சுமார் 450 வருடகாலம் இலங்கை அந்நியர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அதன் காரணமாக இங்கு மிலேச்ச நாகரிகம் பரவத் தொடங்கியது. வியாபார நோக்கமாக இங்கு காலடி எடுத்து வைத்தனர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர். இவர்கள் தமது கிறிஸ்தவ மதக் கொள்கையை இங்குள்ள மக்கள் மத்தியில் திணித்தனர்.

கல்வி, உத்தியோகம் முதலியவற்றினால் ஈர்க்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினர் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். மதமாற்ற நடவடிக்கைகளுக்கு வசதியாகப் பாடசாலைகளையும் அமைத்தார்கள். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கையாண்ட வழிகளையே ஆங்கிலேயரும் மெல்லினமான முறையில் பின்பற்றினார்கள்.

அந்நியர்கள் இலங்கையில் பரவலாகப் பாடசாலைகளை அமைத்தார்கள். கல்வியை வளர்ப்பது அவர்களது நோக்கமன்று. பாடசாலைகள் வாயிலாக கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதே அவர்களது உள்நோக்கமாகும்.

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பேர்சிவல் பாடசாலை (இப்பொழுது யாழ் மத்திய கல்லூரி) பிரசித்திபெற்றிருந்தது. ஆங்கிலக் கல்வியில் மோகங்கொண்ட நம்மவர்கள் பேர்சிவல் பாடசாலையில் சேர்ந்து படித்தார்கள். அப்பாடசாலையிலும் மதமாற்ற நடவடிக்கை களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

பேர்சிவல் பாதிரியாரைத் தலைவராகக் கொண்ட இப்பாடசாலையில் நல்லூர் கந்தப்பிள்ளை ஆறுமுகம் (நாவலர் பெருமான்) அவர்கள் சேர்ந்து ஏழு ஆண்டுகள் (1834 - 1840) ஆங்கிலம் கற்றார். தொடர்ந்து ஏழு ஆண்டுகள் பணிபுரிந்தார். பேர்சிவல் பாதிரியாருக்குத் தமிழ் ஆசிரியராகவும் (தமிழ்ப் பண்டிதர்) இருந்தார்.

கிறிஸ்தவ சூழலில் பதினான்கு வருடங்கள் ஊசாடிய நாவலர் அவர்கள் உள்ளத்தில் நல்லதொரு சிந்தனை உதயமாயிற்று. "சைவப்பிள்ளைகள் சைவப் பாடசாலையிலேயே கல்வி கற்பதற்கு ஆவன செய்யவேண்டும்" என்பதுதான் அந்தச் சிந்தனை.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சிவன்கோயில் வசந்த மண்டபத்தில் 31.12.1847 இல் சைவப்பிரசங்கம் செய்தார். இதுவே அவரது முதற் பிரசங்கமாகும். சைவசமயத்தை வளர்ப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தனவாகவே பிரசங்கம் அமைந்தது. சைவப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு அன்று அவரால் எடுத்துரைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1848 ஆவணியில் வண்ணார்பண்ணையில் சைவப்பாடசாலை ஒன்றை ஸ்தாபித்தார். சைவப்பிரகாச வித்தியாசாலை என்று பெயரும் சூட்டினார். இலங்கையில் முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்ட சைவப்பாடசாலை இதுவேயாகும்.

கோயில் என்ற சிறப்புக்குரியதான சிதம்பர தலத்திலும் 1864 இல் ஐப்பசியில் ஒரு பாடசாலையை நிறுவி அதற்கும் சைவப்பிரகாச வித்தியாசாலை என்றே பெயரும் வைத்தார். சிறுபிள்ளைகளுக்கேற்ற வண்ணம் நூல்களையும் எழுதி வெளியிட்டார்.

நாவலர் பெருமானின் குறிக்கோள் சைவ மக்களின் உள்ளங்களில் ஊன்றிப் பதிந்தது. ஊர்கள் தோறும் சைவப் பாடசாலைகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டார்கள் சைவப்பெரியார்கள். நாவலர் பெருமானின் நோக்கில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை ஸ்தாபித்த இக்கல்லூரி அதிகாரசபையினர் யாழ்ப்பணத்தின் பல பாகங்களிலும் சைவ ஆங்கில தமிழ்ப்பாடசாலைகளை நிறுவினார்கள்.

சைவ வித்தியாவிருத்திச் சங்கம் (இந்து போட்) இருநூற்றைம்பதுக்கு மேற்பட்ட சைவப் பாடசாலைகளை இலங்கையில் நிறுவிப் பெருமை பெற்றது. சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் முதுகெலும்பாக விளங்கிய நியாயவாதி சைவப்பெரியார் திரு.சு.இராசரத்தினம் அவர்களை "நாவலருக்குப் பின்னர் நமக்கோர் காவலர்" என்று சைவ உலகம் பாராட்டுகின்றது.

சைவ சங்கங்கள், சபைகள் மேற்கொண்ட கல்விப் பணியில் செல்வச் செல்வாக்குள்ள பெரியார்களும் ஈடுபடத் தொடங்கினார்கள். நாவலர் வழியைப் பின்பற்றித் தொடங்கிய சைவப் பாடசாலைகள் ஊர்தோறும் இன்று விளங்குகின்றன.

பெண்களுக்கென இணுவிலின் வடபுலத்தில் சேர்.பொன்.இராமநாத வள்ளலால் ஸ்தாபிக்கப்பெற்ற இராமநாதன் கல்லூரியும், அவரால் ஸ்தாபிக்கப்பெற்ற திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியும் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் இருகண்கள் எனத் திகழ்ந்தன. பரமேஸ்வராக் கல்லூரி 1974 இல் இருந்து பல்கலைக்கழகமானது. பலகலைக்கழகத்தின் ஒரு பாகமாக இயங்குகிற இராமநாத வள்ளலின் கல்விச்சேவையின் சிறப்பு இருந்தவாறு.

**சீரிணுவைத் திருவூர்**

சரித்திரப் பிரசித்திவாய்ந்த பரராஜசேகரப் பிள்ளையார் கோயில், செகராசசேகரப் பிள்ளையார் கோயில், பெரிய கோயில் என்று வழங்கப்படும் கந்தசுவாமி கோயில், சிதம்பரவளவுச் சிவகாமி அம்மன் கோயில், மஞ்சத்தடிக் கோயில், காரைக்கால் சிவன் கோயில், இளந்தாரியார் கோயில் முதலான சிவத்தலங்கள் இணுவிலின் பெயரை எடுத்துக் காட்டுகின்றன. ஊரின் சிறப்புக்குச் சான்றாக வித்தியாலயங்களும் விளங்குகின்றன.

நடராச ஐயர், அம்பிகையாக உபாத்தியாயர், சின்னத்தம்பிப் புலவர் முதலானோர் சைவ தமிழ்ச் சான்றோர்களாக இணுவில்பதியை அலங்கரித்தார்கள். தொடர்ந்து முத்தமிழ் வல்ல பெரியோர்கள் வாழ்ந்தார்கள். இப்பொழுதும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இணுவிற் பதிக்கு "இணையில்" என்ற பெயரும் உண்டு. இணையில்லாத பதி என்பதே அதன் பொருள். எல்லா வகையிலும் பெருமை பெற்ற இணுவிலூர் சீரிணுவைத் திருவூர் என்று அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்விச் சிறப்பு**

இணுவிலம்பதியின் கல்விச் சிறப்பை எடுத்துக்காட்டும் வகையில் மூன்று கல்விக் கூடங்கள் விளங்கின. 1864 இல் அம்பிகைபாகர் சைவப்பிரகாச வித்தியாசாலை ஸ்தாபிக்கப் பட்டதாகத் தெரியவருகிறது. அமெரிக்கன்மிஷன் பாடசாலை (புளியடிப் பள்ளிக்கூடம்) 1903 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. சைவ மகாஜன வித்தியாசாலை 1930 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. ஊர் மத்தியில் அமைந்துள்ள சைவ மகாஜன வித்தியாலயத்தின் வரலாறு தனித்துவமானது.

இணுவில் அமெரிக்கன்மிஷன் பாடசாலையில் படித்த சில பிள்ளைகள் ஒரு சந்தர்ப்பத்தில் அப்பாடசாலையில் இருந்து வெளியேற நேர்ந்தது. சைவப் பிள்ளைகள் சைவப் பாடசாலையிலேய கல்வி கற்கவேண்டும் என்ற ஒரு எண்ணம் மக்கள் மனதில் தோன்றியது. படிப்புக் குழம்பிய நிலையில் வீடுகளிலேயே வீண்பொழுது போக்க வேண்டி இருந்தது. ஊரில் உள்ள மக்கள் இதற்கு என்ன வழி என்று பெரிதும் யோசித்தார்கள். வெளியேறிய மாணவர்களின் படிப்புக் குழம்பிய காரணத்தினால் அவர்களுக்கென்றே ஒரு சைவப் பாடசாலை ஸ்தாபிக்க வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டார்கள் பெரியவர்கள்.

**சைவ மகாஜன மூவர் முதல்வர்கள்**

02.07.1930 அன்று ஆரம்பிக்கப்பட்டது. இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையின் தலைமைப் பொறுப்பைக் கணித ஆசிரியர் ஆ.சின்னத்தம்பி ஏற்றார்.

*"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்*
*இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்*
*அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் நாட்டல்*
*பின்னருள்ள தருமங்கள் யாவும்*
*பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்*
*அன்ன யாவினும் புண்ணியங் கோடி*
*ஆங்கோ ரேழைக் கெழுத் தறிவித்தல்"*

உலகிலே செய்யத்தக்க புண்ணியங்கள் பலவுள்ளன. மிகச் சிறந்த புண்ணியம் ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தலாகும். சைவ மகாஜனாவை நிறுவியதன் மூலம் திருவாளர்கள் முருகேசு அப்பாக்குட்டி, சிதம்பரநாதர் மயில்வாகனம், கதிர்காமசேகரம்பிள்ளை பொன்னையா மூவரும் பெரும் புண்ணியவான்களாகக் கருதப்படுகின்றார்கள். இவர்களை "மூவர் முதல்வர்கள்" என்று குறிப்பிடலாம்.

**முருகேசு அப்பாக்குட்டி (1865 - 1938)**

ஒரு காலத்தில் இணுவிலின் கல்வி வளர்ச்சிக்கு உழைத்தவர் சரவணைச் சட்டம்பியாராவார். கல்வி வசதிகள் குறைந்த காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்தியவர். அவருடைய மரபில் வந்தவர் திரு.முருகேசு அப்பாக்குட்டி அவர்கள். பெயர் பெற்ற வைத்தியர்.

நல்ல கமக்காரன். ஊர் மக்களது அங்கலாய்ப்பு அவரது நெஞ்சை உறுத்தியது. சைவப் பாடசாலை ஒன்றை நிறுவுவதற்கு வாய்ப்பாகத் தாம் குடியிருந்த வளவில் (சேவுகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடு) ஒரு பகுதியைப் பிரதியுபகாரம் கருதாமல் அன்பளிப்புச் செய்தார். 02.07.1930 ஆனி உத்திர தினத்தில் அந்த நிலத்தில் 30 மாணவர்களுடன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இந்த இடத்திலேயே சரவணைச் சட்டம்பியார் அவர்களது திண்ணைப் பாடசாலையும் முன்னர் அமைந்திருந்தது என்று தெரிய வருகிறது. புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலைக்கு சைவ மகாஜன வித்தியாசாலை என்று பெயருஞ் சூட்டப்பட்டது.

வருடந்தோறும் கந்தபுராணப் படிப்பு நடைபெற ஒழுங்கு செய்தார். முருகேசு அப்பாக்குட்டி அவர்களதும் அவரது சந்ததியில் வந்தவர்களும் விஷக்கடி வைத்தியத்தில் மிகவும் பிரபலம் பெற்றிருந்தார்கள். விஷந் தீண்டி ஆபத்தான நிலையில் இருந்தவர்களை உயிர்பிழைக்கச் செய்தார்கள்.

இணுவை முருகன் மீது முறுகிய பக்தி கொண்டவரான திரு.அப்பாக்குட்டியர் வருடந் தோறும் காவடி எடுத்துத் தமது நேர்த்தியை முடிப்பார். மஞ்சத்தடி பெரிய சந்நியாசியாரில் மிகவும் அபிமானம் கொண்டவர் முருகேசு அப்பாக்குட்டி அவர்கள். அப்பாக்குட்டி அவர்களது கல்வி முயற்சிக்குப் பக்கபலமாக நின்றார் மலாயன் பென்சனர் திரு.சிதம்பரநாதர் மயில்வாகனம் அவர்கள். அடுத்தவர் கதிர்காமசேகரம்பிள்ளை பொன்னையா அவர்கள். ஊரில் உள்ள பெரியவர்களும் கைகொடுத்தார்கள். சிவகுருநாத பீடத்தின் தலைவர் மகாதேவ சுவாமிகளும் இம்முயற்சியை ஊக்குவித்தார்.

## சிதம்பரநாதர் மயில்வாகனம் (1884 - 1959)

திரு.முருகேசு அப்பாக்குட்டி அவர்களது கல்வி முயற்சிக்குப் பெரிதும் உதவியாக இருந்தவர். இணுவிற் கிராமத்தின் வளர்ச்சிக்கு இளமை தொட்டே அயராது உழைத்தவர். மலேசியா, சிங்கப்பூர் நாடுளில் புகையிரதத் திணைக்களத்தில் உயர்தர உத்தியோகங்களை வகித்தவர். சைவ மகாஜன வித்தியாலயத்தின் தோற்றத்துக்கு உழைத்த உத்தமர் என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலையிற் கட்டடங்கள் அமைவதற்கு பெருநிதி உதவினார். அரசாங்க உதவி, நன்கொடை பெறும் வரை ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கவும், பாடசாலையிற் காலத்துக்குக் காலம் திருத்த வேலைகள் செய்வதற்கும் தேவையான நிதியினை வாரி வழங்கியவர். சைவப்பிரமாணம் நிறைந்தவரான திரு.மயில்வாகனம் அவர்கள் இயற்கை எய்தும் வரை கிராம வளர்ச்சியிற் கண்ணுங் கருத்துமாக இருந்தார்.

இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா அவர்கள் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் திறப்பு விழாவையொட்டி யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை வீதி வழியாக ஊர்வலமாக அழைத்து வரப்பட்டபோது சைவ மகாஜன வாசலில் திரு.மயில்வாகனம் அவர்களும் முகாமையாளருஞ் சேர்ந்து மலர்மாலை சூட்டி கௌரவ பிரதம மந்திரி அவர்களைக் கௌரவித்தார்கள். இது இணுவிலில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்களில் ஒன்றாகும்.

## கதிர்காமசேகரம்பிள்ளை பொன்னையா (1851 - 1953)

திரு.முருகேசு அப்பாக்குட்டி அவர்களும் திரு.சிதம்பரநாதர் மயில்வாகனம் அவர்களும் சேர்ந்து ஊரவர்களின் அபிப்பிராயத்தையும் அறிந்து திரு.கதிர்காமசேகரம்பிள்ளை பொன்னையா அவர்களை சைவ மகாஜனவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமையாளராக நியமித்தார்கள். திரு.பொன்னையா அவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்கு உழைத்தார். பாடசாலை கொட்டிலாக ஆரம்பித்த காலத்தில் இருந்து கிழமை தோறும் நிலத்துக்குச் சாணி போட்டு மெழுகியும், பனையோலை கிடுகுகளால் வேய்ந்தும், பாடசாலையைச் சூழ்ந்துள்ள வேலிகளை அடைப்பித்தும் பாடசாலை நல்ல சூழலுடன் விளங்க வேண்டியன செய்து வைத்தார்.

பாடசாலையில் இரு மாடிக் கட்டடம் அமைதற்கும் பெருமுயற்சி செய்தார். பாடசாலையை அரச உதவி, நன்கொடை பெறும் பாடசாலையாக உயர்த்துவதற்கு வேண்டியன செய்தார். ஊரில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அப்போது இல்லாமையால் நீர்வேலியைச் சேர்ந்த ஆசிரியர் ஆறுமுகம் செல்லப்பா அவர்களை அழைத்து வந்து அவரைத் தலைமை ஆசிரியர் ஆக்கினார். பாடசாலையில் நெசவு ஒரு பாடமாக இடம் பெறுவதற்கும் வேண்டியன செய்தார்.

இவருடைய தந்தையார் கதிர்காமசேகரம்பிள்ளை அவர்கள் கந்தசுவாமி கோயிற் சந்திக்குப் பின்புறமாக காங்கேசன்துறை வீதிக்குக் கிழக்குப் பக்கமாக கல்வீடு ஒன்றைக் கட்டினார். இணுவிலில் அமைந்த முதலாவது கல்வீடு இதுவாகும். அதனால் அவர்களைக் கல்வீட்டார் என்று அழைப்பதுண்டு. மரபுவழியில் திரு.பொன்னையா அவர்களையும் கல்வீட்டுப் பொன்னையா, மனேச்சர் பொன்னையா என்று அழைத்தார்கள்.

முருகேசு அப்பாக்குட்டி, சிதம்பரநாதர் மயில்வாகனம், கதிர்காமசேகரம்பிள்ளை பொன்னையா மூவரதும் கல்விப் பணிகளை யாவரும் எப்பொழுதும் நினைவுகூரத்தக்க வகையில் மகாஜன இல்லங்களுக்கு இவர்களின் பெயர்களைச் சூட்டி இருப்பது நன்றி மறவாத செயலாகும்.

**அதிபர்கள்**

இணுவில் சைவ மகாஜன வித்தியாலயத்தின் அதிபர்களாக திருவாளர் ஆ.செல்லப்பா, வ.நடராசா, எஸ்.சரவணமுத்து, திருமதி எஸ்.இரத்தினம் ஆகியோர்கள் பணிபுரிந்தார்கள். தொடர்ந்து பிரம்மஸ்ரீ.கே.வைத்தியநாதசர்மா, க.இரத்தினம், செ.சோதிப்பெருமாள், க.பேரம்பலம், மு.திருஞானசம்பந்தபிள்ளை, துரை எங்கரசு உள்ளிட்டவர்கள் அதிபர்களாக நியமனம் பெற்றார்கள். செல்வி.நா.சிவசுப்பிரமணியம், திரு.பொ.சிவசுப்பிரமணியம் ஆகியோர்களும் அதிபர் வரிசையில் அடங்குவார்கள். இவர்கள் அனைவரும் தம்மால் இயன்றவரை பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார்கள். யாவராலும் பாராட்டப்பட்டார்கள்.

## திரு. வ. நடராசா

புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் திரு.வயித்திலிங்கம் நடராசா அவர்களது சேவை முக்கியத்துவமானது என்பது குறிப்பிடத்தக்கது. திரு.வ.நடராசா அவர்கள் உதவி ஆசிரியராகவும், தலைமையாசிரியராகவும் மிக நீண்ட காலம் பணிபுரிந்தார். திரு.ஆ.செல்லப்பா அவர்களது மறைவுக்குப் பின் தலைமை ஆசிரியராகும் பேறு திரு.வ.நடராசா அவர்களுக்குக் கிடைத்தது. 1933 இல் சைவ மகாஜனவின் உதவி ஆசிரியராகச் சேர்ந்த இவர் 09.04.1948 இல் தலைமை ஆசிரியப் பதவியேற்றார். 15.09.1970 வரை நீடித்தது. இவர் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த இருபத்திரண்டு வருடகாலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிமை மிக்கதாக அமைந்தது. நல்லாசிரியர் இலக்கணம் பற்றி நன்னூல் ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

*"குலனருள் தெய்வம் கொள்கை மேன்மை*
*கலைபயி றெளிவு கட்டுரை வன்மை*
*நிலைமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்*
*உலகிய லறிவோ டுயர்குண மினையவும்*
*அமைபவ னூலுரை ஆசிரியன்னே"*

நன்னூலார் கூறிய அத்தனை இலட்சணங்களும் பொருந்தியவரே திரு.வ.நடராசா அவர்கள்.

தூய்மையான வேட்டி, வெள்ளை நாஷனல், ஆரணியன் சால்வை, புன்முறுவல் பூத்த முகத்துடன் கம்பீரமாகக் காட்சியளிப்பார் திரு.வ.நடராசா அவர்கள். இவரை முன்பின் அறியாதவர்கள் கூட இவர் கோல உடையுடன் தெருவில் நடமாடுவதைக் கண்டால் யாரோ ஒரு பெரியவர், நல்லாசிரியராக இருக்கலாம் என்று ஊகித்து உணர்ந்து கொள்வார்கள்.

இவரது சேவைக்காலத்தில் சைவ மகாஜனாவில் மேல் வகுப்புக்கள் வைக்கப்பட்டன. பகிரங்கப் பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்கள் நன்கு சித்தியெய்தினார்கள். இதனால் சைவ மகாஜனா மீது, மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மேலும் கல்வித் திணைக்களத்தினரும் ஊரவர்களும் பெரிதும் மதிப்புச் செலுத்தினார்கள். பாடசாலைப் புற வேலைகளிலும் மாணவர்களை நன்கு ஈடுபடச் செய்து முன்னேற வைத்தார்கள். அந்த நேரத்தில் சைவ மகாஜனாவைக் கல்வியுலகில் "கிரிதீப"மென மிளிர வைத்தவரான திரு.வ.நடராசா அவர்கள் நெசவுக் கல்விக்கும் வழிகாட்டியாக இருந்தார். பிறர் பிள்ளை தலை தடவத் தன்பிள்ளை தானே வளரும் என்ற படி இவரது மக்கள், மருகர், பேரர் யாவரும் நல்ல நிலையில் இப்பொழுது இருக்கிறார்கள். தனது வளர்ச்சிக்கும் தனது குடும்ப வளர்ச்சிக்கும் குலதெய்வமான சிவகாமி அம்பாளின் அருளே காரணம் என்று பூரிப்பு அடைவார் திரு.வ.நடராசா அவர்கள்.

இவ்வித்தியாலயத்தை வளர்ப்பதற்குத் தொடர்ந்தும் கடமையாற்றிய அதிபர்கள் தேவையான நடவடிக்கைகளை எடுத்தனர். அதிபர்களுக்கு வேண்டிய அளவுக்கு ஒத்தாசையாக இருந்தவர்கள் உதவிய ஆசிரியர்கள் பலர் இணுவிலைத் தாயகமாகக் கொண்டவர்களே. பாடசாலையின் அதியுயர் வளர்ச்சிக்கு உழைத்த அனைத்து உதவியாசிரியர்களினதும் நற்சேவை மறக்கற்பாலதொன்று.

முகாமையாளர்களது நோக்கங்களுக்கு மாறாக இலங்கை அரசு உதவி, நன்கொடை பெறும் பாடசாலைகளை 1960 இல் சுவீகரித்தது. எது எப்படியிருப்பினும் இணுவில் சைவ மகாஜன வித்தியாலயத்தின் வளர்ச்சி தடைப்படவில்லை. மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது. மகா வித்தியாலய அந்தஸ்துக்கு உயர்ந்தது. இணுவில் சைவ மகாஜன மகா வித்தியாலயத்துடன் (Type 1C) ஆரம்பப் பாடசாலையான இணுவில் அமெரிக்கமிஷன் பாடசாலை (Type II) காலத்தின் தேவைக்கேற்ப 30.07.1992 இல் ஒன்றிணைக்கப்பட்டன. இப்பொழுது இணுவில் மத்திய கல்லூரி.

இணுவில் மத்திய கல்லூரியின் தலைமைப் பொறுப்பை இப்பொழுது ஏற்றிருக்கின்றார் திரு.அ.சதானந்தன் அவர்கள். இந்த ஸ்தாபனத்தின் வளர்ச்சியை மேலும் மேலும் எதிர் பார்க்கின்றது கல்வி உலகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கையேடுகள்**

இக் கல்லூரியின் வளர்ச்சியை எடுத்துக் காட்டும் வகையில் காலத்துக்குக் காலம் விழா மலர்கள் வெளியீடு செய்யப்பெற்றன. சைவ மகாஜனவின் பொன்விழா மலர், மத்திய தீபம், இணுவில் மத்திய கல்லூரி பவளமலர் என்பன சிறந்த கையேடுகளாக அமைந்துள்ளன.

**பழைய மாணவர்கள்**

இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையின் பழைய மாணவர்களிற் பலர் உலகின் பல பாகங்களிலும் கல்விசார் அறிஞர்களாகச் செறிந்து வாழ்கிறார்கள். சிறப்பாகவும் வாழ்க்கை நடத்துகின்றார்கள். தாம் கல்வி கற்ற பாடசாலையின் வளர்ச்சிக்கு மிகவும் அனுசரணையாகவும் இருக்கிறார்கள்.

இணுவிற் பதியிற் புகழ்பூத்த பண்டிதர்கள், புலவர்கள் வித்துவான்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள் எனப் பலர் வாழ்ந்திருக்கின்றார்கள். கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் அப்பொழுது வாழ்ந்ததாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட பின்னர் கால் நூற்றாண்டுக்கு முன்னர் இணுவிலைச் சேர்ந்த ஒருவர் கலாநிதிப் பட்டம் பெற்றார். அவர்தான் பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா அவர்கள். இணுவில் கண்ட முதலாவது கலாநிதி அவரே.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணிதத் துறையின் தலைவராக விளங்கும் திரு.இ.விக்கினேஸ்வரன் அவர்களும் கலாநிதியாவார். இவர் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையின் (இந்துக்கல்லூரி) பழைய மாணவராவார்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் நீண்ட காலம் பணிபுரிந்து ஓய்வுபெற்றுள்ள திரு.தாமோதரம்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் அடுத்த கலாநிதியாக இணுவையம்பதியை மேன்மைப் படுத்துகின்றார். தேசிய கல்வி நிறுவகத்தில் விரிவுரையாளராகவும் சேவை செய்தவர்.

பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா அவர்களும், கலாநிதி தாமோதரம்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களும் இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையில் பழைய மாணவர்கள் என்பது ஈண்டு விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலையின் ஆரம்பகால மாணவர்கள் இருவரைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இணுவில் கிழக்கைச் சேர்ந்த கார்த்திகேசு சுப்பையா அவர்கள் ஒருவர். மற்றவர் இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி செல்லம்மா இராசநாயகம் அவர்கள்.

“எங்களுக்குக் கல்விக் கண்ணைத் திறந்து வைத்த பெருமை இணுவில் சைவ மகாஜனவுக்கே உரியது” என்றார் திரு.கார்த்திகேசு சுப்பையா அவர்கள்.

“நாங்கள் எல்லோரும் படித்த யூனிவேசிற்றி மகாஜனாதான்” என்று மனப்பூரிப்புடன் கூறினார் திருமதி செல்லம்மா இராசநாயகம் அவர்கள்.

இவர்கள் இருவரது வார்த்தைகளும் எனது நெஞ்சை நிறைவு செய்தன. ☆☆☆

நன்றி: நடராஜம் – 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் சைவமகாஜன வரலாறும் அதிபர் நடராசாவின் வழிகாட்டலும்

ஆதாரம் : பொன்விழா மலர்

"மனிதனை மனிதனாக்குவது கல்வி" என்பது சுவாமி விவேகானந்தரின் கூற்று. மனிதனைப் ஓர் பூரண வாழ்க்கைக்குத் தயார்படுத்துவதுதான் கல்வியின் நோக்கமாகும். இவ்வாறான கல்விக்கு மாணவர்களை ஈடுபடுத்தும் கட்டாயத்தை மேற்கொள்வதில் இன்று அரசாங்கம் பெரும்பங்கு வகிக்குமாயினும் அடுத்து இடம் பெறும் முக்கிய பங்காளி சமூகம் என்பதுதான். இச் சமூகத்திற்கு அதனுடைய செயற்பாட்டிற்கு வலுவும் வளமும் கொடுப்பது பெற்றோரது கடமையாகின்றது.

இக் கல்வியின் நோக்கத்தினையும் அதன் தேவையையும் உணர்ந்த இணுவை மக்கள் சைவமும் தமிழும் தழைத்தோங்கிய தம் ஊரிலே தம் குழந்தைகளை சைவச் சூழலில் கற்பிக்க வேண்டும் என அவா கொண்டனர். அத்தகைய நிலைமைகளில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் கல்விச் சிந்தனைகளும் சைவசித்தாந்த கல்வி மரபுகளும் இணுவை மக்களின் வாழ்க்கையிலும் அனுபவத்திலும் ஆழமாக ஊடுருவி இருந்தன. கல்வி மூலமாக இந்து சமய மறுமலர்ச்சியில் நாமும் பங்கு கொண்டு உழைக்க வேண்டுமென பெரியோர்கள் எண்ணினர். "அன்னையாவினும் புண்ணியங்கோடி அங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்கின்ற சத்திய வாக்கிற்கு நடப்பியல் வடிவம் கொடுக்க முனைந்தனர். இணுவைப் பெரியோர்களின் நல்லெண்ணங்களாலும் பரந்த மனப்பான்மையினாலும் காங்கேசன்துறை நெடுஞ்சாலைக்கு மேற்காக அமைந்த மன்னந்தோட்டம் தழுவிய வேப்பம் சோலையில் இணுவில் சைவமகாஜன வித்தியாலயம் உருவாயிற்று.

சைவசமய விருத்தியில் பேரார்வம் கொண்ட இணுவையூர் மக்களின் பெருமுயற்சியால் பிரபல வைத்தியர் திரு. முருகேசு அப்பாக்குட்டி அவர்களின் வீட்டின் முன்புறத்தில் அவரால் அன்பளிப்பு செய்யப்பட்ட மூன்று பரப்பு நிலத்தில் கொட்டகையாக அமைக்கப்பெற்று 1930 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 2ம் திகதியன்று கணித ஆசிரியர் திரு.ஆ.சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் மூன்று ஆசிரியர்களுடனும் 26 மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டது. அவ் ஆண்டு ஆவணி மாதத்திலேயே ஐந்து ஆசிரியர்களும் 73 மாணவர்களும் புதிதாக சேர்க்கப்பட்டனர். இவ்வாறு வித்தியாலயம் வளர்ச்சியுற்றது.

1930 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 3 ஆம் திகதியன்று அதிபராக திரு.ஆ.செல்லப்பா அவர்கள் நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் இணுவையூரில் சிதப்பரநாத உடையார் மகனாக அவதரித்தவரும் சிங்கப்பூரில் அரசாங்க அலுவலராக இருந்தவருமான திரு.சி.மயில்வாகனம் அவர்கள் தொடர்ந்து 03 வருடங்களாக ஆசிரியர்களுக்கான வேதனத்தை முன்வந்து உதவினார். அன்னார் பாடசாலையின் பொது முகாமையாளராகவும் திரு.க. கதிர்காமசேகரம்பிள்ளை அவர்கள் நிருவாக முகாமையாளராகவும் பொதுமக்களால் நியமிக்கப்பட்டார். பாடசாலை வருடாந்தப் பரீட்சை 27.03.1931 இல் நடைபெற்று, 1933 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக பதியப்பட்டது.. 1935 இல் ஆங்கிலம் ஓர் பாடமாக கற்பிக்க ஆரம்பிக்கப்பட்டது. 1936 இல் மதியபோசனம் வழங்கப்பட்டது. 1937 இல் வித்தியாபதி கௌரவ றொபிசன் அவர்கள் பாடசாலைக்கு விஜயம் செய்து கனிஷ்ட, சிரேஷ்ட வகுப்புகள் நடத்த அனுமதியளித்தார். 1938ம் ஆண்டு தொடக்கம் மாணவர்கள் பகிரங்க பரீட்சைக்குத் தோற்றினர்.

பாடசாலையில் தற்போதுள்ள பெரிய கட்டிடம் 1938 இல் கட்டப்பட்டது. இப்பாடசாலை மாவட்டரீதியிலும், வட்டாரரீதியிலும் நடைபெறும் போட்டிகள் யாவற்றிலும் பங்குபற்றியது. 1945, 1944 ஆம் ஆண்டுகளில் வலிகாமம் வடக்கு பகுதி சுகாதார கல்விப் பொருட்காட்சி பாடசாலையில் நடாத்தப்பட்டது. 1948 இல் அதிபர் திரு.ஆ.செல்லப்பா அவர்கள் மறைவிற்குப் பின்னர். திரு.வ.நடராஜா அவர்கள் அதிபராகவும், 1953 இல் முகாமையாளர் திரு.க.பொன்னையா அவர்கள் மறைவிற்கு பின்னர் அவரின் சகோதரன் திரு.க.மார்க்கண்டு அவர்கள் முகாமையாளராகவும் கடமையாற்றினார்கள். இக்கால அதிபர் திரு.வ.நடராஜா அவர்களின் முயற்சியால் பலதுறைகளிலும் பாடசாலை சிறப்புற விளங்கியது.

1960 ஆம் ஆண்டு மார்கழி 1 ஆம் திகதி அரசின் உடமையாக்கப்பட்டது. பின் பாடசாலையின் வளர்ச்சி கருதி மாணவர்களின் விளையாட்டிற்கு திரு.அ.பொன்னம்பலம், திரு.க.குருசாமி ஆகிய இருவரும் தமது 3 பரப்பு நிலத்தையும் வித்தியாலயத்திற்கு உரித்தாக்கினர். திரு.வ.நடராஜா அவர்களின் கல்வி முகாமைத்துவத் திறமையில் பல மாணவர்கள் உயர்சித்தி பெற்று உயர்கல்விக்கு செல்லும் வாய்ப்பைப் பெற்றனர். இவரின் வழிகாட்டலின் கீழ் மிகச் சிறந்த ஆசிரியர் குழாம் இருந்து தொண்டாற்றியது. இவர்களிடம் கற்ற மாணவர்கள் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குகின்றனர்.

லண்டனில் சிறந்த பொறியிலளாராக விளங்கும் திரு.ஆனந்தபாஸ்கரன், திரு. இராசநாயகம், திரு.சற்குணநாதன், கண் வைத்தியநிபுணராக இந்நாட்டில் சேவையாற்றும் குகதாசன். புகழ் பெற்ற பொருளியல் அறிஞராக விளங்கும் திரு. இரத்தினசபாபதி யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், நுண்கலைத்துறைத் தலைவருமாகிய கலாநிதி சபா்ஜெயராஜா ஆகியோர் சிறப்பாக குறிப்பிடத்தக்கவர்களாவர்.
இவரின் வழிகாட்டலில்

(1) பண்டித வகுப்புகள்
(2) ஆசிரிய பிரத்தியேக வகுப்புக்கள்
(3) வறிய மாணவர்கள் இரவிலும் பாடங்கள் கற்க, ஆசிரியர்கள் இலவசமாகக்கற்க
(4) பிரத்தியேக இசை வகுப்புகள்
(5) பாடசாலை என்றமுறையில் தையல் வகுப்புகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

☆☆☆

நன்றி: நடராஜம் – 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளுமை நிறைந்த அதிபர்

தமிழவேள் **இ. கந்தசாமி**
கொழும்புத் தமிழ்ச் சங்க முன்னாள் பொதுச் செயலாளர்,
இணுவில் சைவ மகாஜன வித்தியாலய முன்னாள் ஆசிரியர்.

இலங்கையின் வடபால் பலரும் பாராட்டும் வகையில் சைவமும் தமிழும் இசை நாடகம் ஆகிய கலைகளும் நிலைபெற்று விளங்கி வரும் ஊர் இணுவில். இத்தகை சிறப்புகள் அமைந்த ஊரில் கல்விப் பணியைக் கிறிஸ்தவ மிசன் மேற்கொள்வதை விரும்பாத இவ்வூர்ப்பெரியார்கள் கடந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் சைவப் பாடசாலையை நிறுவி இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை எனப் பெயர் இட்டனர். ஊர் நடுவில் அமைந்து புகழ்பரப்பிய இவ்வித்தியாசாலை இணுவில் மத்திய கல்லூரி எனப் பெயர்பெற்று விளங்குகிறது.

தொடக்கத்தில் சிறு பாடசாலையாக அமைந்து சில இடர்பாடுகளோடு நடைபெற்று வந்தது ஓர் ஊரின் வளர்ச்சியும் சிறப்புகளும் அவ்வூர்ப் பாடசாலையிலும் கோவிலிலும் தங்கியுள்ளன. பாடசாலையின் வளர்ச்சி அதிபரிலே தங்கியுள்ளது. இணுவில் சைவமகாஜன வித்தியாசாலையில் கடந்த காலத்தில் பலர் அதிபர்களாகக் கடமையாற்றி உள்ளனர். இவர்களுள் வ.நடராசா ஆசிரியரும் அதிபராக இருந்தார் இவர் இக்கல்வி நிலைய வளர்ச்சிக்கு மிகப் பெரும்பணிகள் செய்தார். இவர் இங்கு பெரும்பணிகள் செய்வதற்குப் பல வாய்ப்புகள் இவருக்கு இருந்தன.

இவ்வூரில் பலரும் அறிதற்கு உரிய உயர் குலத்திற் பிறந்த இவர் புகழ்பெற்ற யாழ் இந்துக்கல்லூரியில் உயர்கல்வி கற்று அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சி பெற்று இக்கல்வி நிலையத்தில் உதவி ஆசிரியர் ஆனார். இக்கல்வி நிலைய அதிபராக இருந்த செல்லப்பா ஆசிரியர் அவர்கள் இறைபதம் எய்தியதும் உடன் ஆசிரியர்களின் விருப்பத்திலும் முகாமைத்துவத்தின் விருப்பத்திலும் மலேசியாவில் பெரும்பதவி வகித்த இவரது பெரிய தந்தையார் இக்கல்வி நிலையம் தொடங்கிய காலத்தில் இந்நிலையத்திற்கு நிதி உதவி வழங்கி வந்தார்.

இவரது சைவத்தமிழ்ப் பற்றுகளும், மரபுவழி வந்த ஆளுமையும், இவரிடம் இருந்த நல்லியல்புகளும், சமுதாய உணர்வுகளும், இவரைச் சிறந்த அதிபராக்கின. ஊரில் உள்ள பலர் இவரது உறவினர்கள் இவரது கல்விப் பணிக்கு இவர்களும் உதவினர். இவர் அதிபரானபோது இக்கல்வி நிலையத்தில் கடமையாற்றிய ஆசிரியர்கள் அனைவரும் ஊரவர்கள். இவர்களும் இவரது பணிகளுக்கு உறுதுணையாக இருந்தனர்.

இவர் அதிபரானபோது இக்கல்வி நிலையம் ஓலையால் வேயப்பெற்ற இரு கொட்டில்களைக் கொண்டிருந்தது. இவர் அதிபரானதும் இக்கொட்டில்களை அகற்றி கல்லினால் கட்டடங்கள் அமைக்க விரும்பினார். இவ்வூர் விவசாயிகள் உள்ளதாக இருந்தது. கட்டிட அமைப்புக்கு நிதியுதவ எவரும் முன்வரவில்லை. நவராத்திரி தினங்களில் வீடுகள் தோறும் மாணவர்கள், ஆசிரியர்கள் சேர்ந்து வழிபாடு செய்யும் முறையும், இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் குருதட்சனையாக நிதி வழங்கும் முறையும் முற்காலத்தில் இருந்து வந்தது. இம்முறையைப் பின்பற்றி ஆசிரியர்களும் மாணவர்களும் வீடுகள் தோறும் சென்று வழிபாடு நடத்தும் முறையை இவர் மேற்கொண்டார். இதனால் பெற்றோர் நிதியுதவி வழங்குவர். இந்நிதி உதவியினால் இவர் முன்னைய கொட்டில்களை அகற்றி இக்கல்வி நிலையத்திற்கு கற்களினாலான சுவர்களும், ஓடுகளினாலான கூரையும் உள்ள நல்ல கட்டிடங்களை அமைத்தார்.

இவர் பாடசாலையின் கல்வித்தரத்தை உயர்த்தினார். மாணவர்கள் நல்ல கல்வியோடு ஒழுக்கம், பண்பாடு முதலியன உள்ளவர்களாகவும் வழிப்படுத்தினார். மாணவர் தொகை அதிகரித்தது அரசின் தேர்வுகளில் மாணவர் சிறந்த சித்திகளைப் பெற்றனர். கல்விப் பாடத்திட்டக் கல்வியோடு மாணவர்கள் இணைபாட முயற்சிகளிலும் பங்குபற்றி அவர்களது அறிவு ஆற்றல்கள் வளரவும் உதவினார். இதற்காக பாடசாலையில் கலை நிகழ்ச்சிகளும் சுற்றுலா முயற்சிகளும் இடம்பெற்றன. வடபகுதியில் பாடசாலைக்கு இடையில் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளிலும் விளையாட்டு, உடற்பயிற்சிகளிலும் இப்பாடசாலை மாணவர் பங்குபற்றச்செய்தார். இதனால் இப்பாடசாலைக்குப் பல பரிசில்கள் கிடைத்தன.

ஆண்டுதோறும் நவராத்திரி தினங்கள் இப்பாடசாலையில் நாள்தோறும் நிகழ இவர் வழிவகைசெய்தார். இதனால் மாணவர்கள் திருவிழாக்களில் கலையுணர்வும் இவை தொடர்பான அறிவாற்றல்களும் பெற்றனர். ஊர்நடுவில் இப்பாடசாலை அமைந்திருந்ததினால் இப்பாடசாலையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் இவ்வூருக்கும் பக்தி உணர்வூட்டின. மேலும் இப்பாடசாலை பிரதான வீதியோரம் இருந்ததினால் வீதி வழி செல்லும் ஏனைய ஊரவர்களும் சமய உணர்வு பெறச்செய்தன.

இதனோடு அமையாமல், இப்பாடசாலையில் ஆண்டுதோறும் சமயகுரவர் நால்வர் தினங்களும் சிறப்பாக நிகழ வழிவகை செய்தார். .இதனால் மாணவர்கள் சமயகுரவர்களின் பதிகங்களை சிறப்பாக ஓதவும், சமய குரவர்களின் பணியைப் பற்றிச் சிறப்பாக சொற்பொழிவுகள் நிகழவும் வழிவகுத்தது. ஆசிரியர்களும் சிறப்புரைகள் நிகழ்த்தவும் ஒழுங்குசெய்தனர். இவ்வழிபாடுகளோடு அமையாமல் அனைத்து மாணவர்களும் மனதார பூசை பொருட்கள் வழங்கவும் வகைசெய்தனர். உணவுகள் ஆக்குவதில் மாணவர்களும் ஆசிரியர்களும் ஈடுபட்டனர். உணவுகளை வழங்குவதிலும் மாணவர்களும், ஆசிரியர்களும் ஈடுபட்டனர். இதற்கான செலவுகளை ஆசிரியர்கள் ஏற்றனர். மாணவர்கள் மூலம் பெற்றோரும் உதவினர். இக்குருபூசை நிகழ்வுகள் ஊருக்கும் பரவி பக்தியுணர்வை ஊட்டினர். உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோர் என பண்டைய இலக்கியம் உணர்த்தியதை இவ் அதிபர் இங்கு செயற்படுத்தினார். இப்பாடசாலை வரலாற்றில் இக்குருபூசை நிகழ்வுகள் பெரும் பயனைத் தருவன ஆயின.

இவர் காலத்தில் இப்பாடசாலையில் சைவமகாநாடு ஒன்று நடைபெற்றது. தமிழகத்தில் இருந்து குன்றக்குடி அடிகள், சுத்தானபாரதியார் முதலிய அறிஞர்கள் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும் இங்கு நிழ்ந்தது. வடபகுதியில் இருந்த சமய, சமூக அறிஞர்களும் இவரிடம் வந்து இவரது உதவிகளைப் பெற்றனர். பெரும் அரசியற் தலைவர்களும் இவரிடம் வந்து இவரோடு உரையாடி இவரது ஆலோசனையினைப் பெற்றுச் சென்றுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது அதிபர் பணிகளும், கடமைகளும் நன்கு நடைபெற உதவியாசிரியராக திரு.S.சீவரத்தினம் அவர்கள் இருந்தார். ஆர்வமுள்ள மாணவர்களை மாணவர் தலைவர்களாக நியமித்து அவர்கள் மூலம் தமது பாடசாலைப் பணிகளை சிறப்பாக நடைபெறச் செய்தார். இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் சிறந்த அறிவும், ஆற்றலும், சமுதாயவுணர்வும் உள்ளவர்களாயினர் எனலாம். இவர்கள் வாழ்வில் மேம்பட இவை உதவின எனலாம். இவரது வழிநடத்தலின் மாணவர் தலைவர்களாக விளங்கிய சிலர் அவர்களது வாழ்வில் மேம்பாடுடையவர்களாக விளங்கினர். அமெரிக்கன் மிஷன் பாடசாலை அதிபராக விளங்கிய திரு.எஸ்.சோதிப்பெருமாள் அதிபர் நடராசாவின் கீழ் பல ஆண்டுகள் பயிற்சி பெற்றவராவார்.

மேலும் அதிபர் நடராசா அவர்களின் தலைமையில் பயிற்சி பெற்ற திரு.இ.அமிர்தலிங்கம் அவர்கள் நீதிமன்றம் ஒன்றில் பணிபுரிந்த பின்பு, புகழ்பெற்ற கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் பெரும் பதவி ஒன்று பெற்று அனைவரும் போற்றும்படி பணிபுரிந்து வருகின்றார்.

அதிபர் நடராசா அவர்கள் இக்கல்வி நிலைய வளர்ச்சிப் பணிகளோடு அல்லாது இவ்வூர் வளர்ச்சிப் பணியிலும், வடபகுதிச் சமய, சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு உதவினார். ஊர் அபிவிருத்திப் பணிகளுக்குத் தலைமை தாங்கினார். இவரது சிறிய தந்தை சி.மயில்வாகனம் மலேசியாவில் பெரும்பதவி வகித்தவர். சிறிய தந்தையார் மாணிக்கம் மலேசியாவிலிருந்து வந்த பின்பு உடுவில் கிராமசபைத் தலைவராக இருந்து அனைவரதும் நன்மதிப்பைப் பெற்றவர்.

அதிபர் நடராசா அவர்கள் தனது தந்தையாரை சிறுவயதிலேயே இழந்தார். உறவினர் களின் உதவியுடன் தன்னை வளப்படுத்திக் கொண்டார். இவரது மரபினர்களைப் போல இவரும் ஊரின் சமூக, சமயப் பணிகளில் பங்குபற்றி ஊரின் நன்மதிப்பையும், தலைமைத் துவத்தினையும் பெற்று விளங்கினார்.

இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் மேலும் கல்வி பெற பாடசாலையில் பண்டித வகுப்புகள் நடைபெற வழிவகுத்தார். இதனால் பலர் இப்பண்டித வகுப்புக்களில் கற்று தேர்விலும் சித்திபெற்றனர்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும் என்பது திருக்குறள். இவரது பிள்ளைகள் அனைவரும் நல்ல நிலையில் உள்ளனர். மூத்தமகன் சச்சிதானந்தன் லண்டன் மாநகரில் புகழ்பெற்ற ஆலயத்தின் பரிபாலனசபைத் தலைவராக இருந்தார். தமது தந்தையைப் போல இவரும் தமிழ், சைவம் ஆகியவற்றில் உயர் அறிவும் பெற்று பொறியியலாளராக விளங்குகின்றார்.

நான் அயலூர் பாடசாலையில் கல்வி கற்று, அரசினர் ஆசிரிய கல்லூரியில் பயிற்சி பெற்று, இப்படசாலையில் ஆசிரியரானேன். தொடக்கத்தில் ஆரம்ப வகுப்புக்களில் கற்பித்தேன். அதிபர் நடராசா அவர்கள் எனது அறிவையும் ஆற்றலையும் உணர்ந்து மேல் வகுப்புக்களில் கற்பிக்கும் வாய்ப்பை வழங்கினார். இதனால் மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றேன். பாடசாலையில் சனி, ஞாயிறு நாட்களிலும் மேலதிக வகுப்புக்கள் நடைபெற்றன. இதனால் பாடசாலை சமுதாயம் நல்ல நன்மதிப்பை பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாடசாலைக் கல்விப் பணியோடு ஊரிலும், வடபகுதியிலும் சமய, சமூகக்கடமைகளில் பெரியோர்களின் ஊக்குவிப்போடு பங்களிப்புச் செய்ய வாய்ப்புக் கிடைத்தது. பெரியோர்களின் விருப்பத்துடன் அரசியலிலும் ஈடுபடவேண்டியதாயிற்று. எமது கிராமம் விவசாயத் தொழிலில் முழு ஈடுபாடு கொண்டது. இந்நிலையில் சமூக, சமய, அபிவிருத்திகளிலும் அதிக ஈடுபாடு கொள்ள வேண்டியதாயிற்று. இதனால் பலவற்றைப் பொறுப்பேற்றுச் செய்ய வேண்டியதாயிற்று.

இச்சந்தர்ப்பங்களில் எல்லாம் அதிபர் நடராசா அவர்கள் எமக்குத் தந்த பெரும் ஆதரவு தந்துதவினார். அவர் தலைமை தாங்கியதினால் பொதுப் பணிகள் வளர்ந்தன. பயிற்சியும் எங்களுக்குக் கிடைத்தன. மேலும் ஊரிலும், நாட்டிலும் புகழ் பரவியது. நான் கொழுப்புக்கு இடமாற்றம் பெற்று வந்தபொழுதும் இப்பணிகளில் தொடர்ந்தும் ஈடுபாட்டுடன் செயற்பட்டேன்.

உலகிலும் பல பணிகளில் ஈடுபடும் வாய்ப்புக் கிடைத்தது. கல்வி அமைச்சில் தமிழ்ப்பாடநூல் எழுதும் பணியிலும் ஈடுபட்டேன். மேலும் கொழும்பு றோயல் கல்லூரியில் ஆசிரியராகும் வாய்ப்பும், கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 30 ஆண்டுகள் பணிசெய்து அதனை வளர்க்கவும் வாய்ப்புக்கள் கிடைத்தன. இவை மூலம் நாட்டின் அனைத்து சமூகத்தினராலும் போற்றும் வாய்ப்புக் கிடைத்தது. இவற்றிற்கு அடிப்படையாக அமைந்தது அதிபர். நடராசா அவர்களின் பேராதரவே. அவர் தலைவராகவும், நான் செயலாளராகவும், சகல துறைகளிலும் ஈடுபட்டு பங்களிப்பு செய்தோம். அதிபர் நடராசாவுக்கு என்றும் நன்றியுள்ளவனாகவே உள்ளேன். அவருக்கு யான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். யான் மட்டுமல்ல; இவ்வூர் பல்துறை வளர்ச்சிக்கு வழிப்படுத்திய அதிபர் திரு.நடராசா அவர்களுக்கு இவ்வூர் பெரிதும் கடமைப் பட்டுள்ளது. இவர் போற்றுதற்கு உரியவர். இவரது பணிகளை ஏனையோரும் அறியவும், அத்தனை அறிஞர் பெருமகன் பற்றிப் பலரும் அறிய எழுதும் வாய்ப்பினைத் தந்துதவிய அனைவருக்கும் திருவருள் பெற பெரிதும் போற்றுவோமாக.

☆☆☆

நன்றி: நடராஜம் – 2007



**சமகால உடுவில் கிராமசபை தலைவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணுவில் சைவமகாஜன கல்வி முறைமையும் அதிபர் வ. நடராசா அவர்களின் பங்கும்

கலாநிதி தா. அமிர்தலிங்கம்
Ph.D (Education)

19 ஆம் நூற்றாட்டின் இறுதியில் தாய் மொழிக்கல்வியும், சமய மறுமலர்ச்சியும் மேலோங்கி இருந்த காலத்தில் சைவ சமயத்தை வளர்க்க வேண்டும் என்ற நோக்கில் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் உருவாக்கப்பட்டன. மேலும் தேசிய மறுமலர்ச்சி இயக்கங்களின் வளர்ச்சியுடன் தாய் மொழிக்கல்வியும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தப்பட்டு வந்தன. டொனமூர் யாப்பில் கல்விக்கென ஓர் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதும் நன்கொடைகள் கிடைத்ததும் அதன் வளர்ச்சி வேகமாகப் பரவ காரணங்களாகின.

இக்காலகட்டத்தில் பெரியோர்களினால் ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளை நிர்வகிப்பதற்கான செலவினை அரசாங்கம் அளிக்க முன்வந்தது. இக்காலகட்டத்திலேயே இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை உருவாக்கப்பட்டது.

**இவ்வித்தியாசாலையின் ஆரம்பக்கல்விச் செயற்பாடு**

1) சைவப் பாரம்பரியத்தைப் பேணுதல், வளர்த்தல்
2) தமிழ்மொழியை வளர்த்தல்
3) மாணவர்களிடையே ஒழுக்கத்தை வளர்த்தல்
4) நாடகம், இசை, நடனம் போன்றவற்றில் மாணவருக்கு பயிற்ச்சியளித்து அவர்களது ஆளுமைப்பண்பை வளர்த்தல்.
5) சமூக சேவையில் மாணவரை ஈடுபடுத்தல் என்பவற்றை நோக்கங்களாகக் கொண்டு செயற்பட்டது.

ஆரம்பகாலத்தில் இக்கலாசாலை சைவபரிபாலன சபையின் வழிகாட்டலுடனும், தனிப்பட்டவர்களின் நிதி உதவியுடனும் நிர்வாகிக்கப்பட்டு வந்தது. முக்கியமாக சிதம்பரப்பிள்ளை மயில்வாகனம் நிதியுதவி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இவ்விதமாக உருவாக்கப்பட்ட இக்கல்விச்சாலையில் 1933 ஆம் ஆண்டு திரு.வைத்திலிங்கம் நடராசா அவர்கள் ஆசிரியராக இணைந்து சேவையாற்றினார். அவர் புவியியல் கற்பிப்பதிலும் தமிழ், சுகாதாரம், சமயம் போன்றவற்றைக் கற்பிப்பதிலும், மாணவர்களின் இயல்பு அறிந்து பொருத்தமான வழிகாட்டல்களையும், ஆலோசனைகளையும் வழங்குவதிலும், ஒழுக்கத்தை பேணுவதிலும், தனியான ஓர் இடத்தினை வகித்தவர்.

மாகாஜனாவின் அதிபர் பதவி வெற்றிடமாகின்ற பொழுது, அவரது திறமையை இனங்கண்டுகொண்ட பாடசாலை சமூகம், அதிபர் பதவிக்கு அவரே பொருத்தமானவர் என்பதைக் கருத்தில் கொண்டு அப்பதவியை வழங்கியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத்தில் கல்வி முகாமைத்துவம் தனியார்துறையிடமே இருந்தது. இதனால் அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் ஒரு குழுவாக இயங்கியமை பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அடிகோலியது.

ஒருவரை ஒருவர் அறிந்து எமது பாடசாலை என்ற உணர்வோடு சகல ஆசிரியர்களும் கூடித் தொழிற்பட்ட ஒரு நிலையே அக்காலகட்டத்தில் இருந்தது என்பது மறக்க முடியாத ஓர் அம்சமாகும். இத்தகைய ஒரு நிலைமை உருவாக அதிபர் நடராசா அவர்களும் உறுதுணையாக இருந்ததால் அவரது காலத்தில் பல வழிகளிலும் பாடசாலை அபிவிருத்தியினை அடைந்தது. பரீட்சைப் பெறுபேறுகள் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் சிறந்து விளங்கியது இதற்குப் பல சான்றுகள் உண்டு.

1. க.பொ.த சாதரணதர பரீட்சை பெறுபேறுகள்
2. சைவ நெறியைப்பின்பற்றும் சமூகத்தின் தோற்றம்
3. மாணவர்களது சேவை மனப்பாங்கு என்பவற்றைக் கூறலாம்.

இக்கலாசாலையில் கல்விபயின்றவர்கள் மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள், தொழில் முகாமையாளராகச் சிறப்புடன் கருமாற்ற சீரோடு வாழ்ந்து சிவபதம் அடைந்துவிட்ட லயன் விவேகானந்தன் எனக்கு கூறியது "சிறப்போடு கடமையாற்றுகின்ற தன்மையை எனக்கு வழங்கியது சைவ மகாஜனாதான். அதிலும் அதிபர் நடராசா அவர்களின் வழிகாட்டல் தான்" என்ற வார்த்தைகள் மறக்கமுடியாது. அதுமட்டுமல்ல பல இசைக்கலைஞர்களை உருவாக்கியது. பாலபண்டிதர் வகுப்புக்களினை பாடசாலையில் நடாத்தியதும், பாடசாலைமாணவர்கள் இலவசமாகக் கற்பதற்கு ஆசிரியர்களை ஒழுங்கு செய்தமையும், பெண்பிள்ளைகள் இசையறிவு பெற உதவியமையும் போன்ற அனைத்தும் அவரது வரலாற்றுச் சாதனைகள் என்றே கூறலாம். என்னைப் பொறுத்தவரை அவர் யோகாசன வகுப்புக்களில் என்னை ஈடுபடுத்தியமை மறக்கமுடியாத ஓர் அம்சம். ஏனெனில் நல்ல எண்ணம், நல்ல சிந்தனை, உடல் ஆரோக்கியம் போன்றவற்றிக்கு இது உதவி புரிகின்றது. அத்துடன் சிறந்த ஆரம்பக் கல்வியினையும் மகாஜனாவில் பெற்றமை மறக்கமுடியாது, அவற்றை வழங்கிய இக்கால நிலையத்தையும், ஆசான்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர வைத்தமை என் வாழ்க்கையின் பேறு என்றே கருதவேண்டும்.

"கற்க கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவர் கூற்றை மனதிருத்தி கசடறக் கல்வியை வழங்கியும் கற்றபின் அதற்குத்தக நிற்கும் மாணவரை உருவாக்கியும் வரும் சைவமகாஜன வித்தியாசாலை தொடர்ந்தும் தன்னிலையில் நின்றுமாறாது கல்விப் பணியாற்ற எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

☆☆☆

நன்றி: நடராஜம் – 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவநெறி வளர்த்த சைவமகாஜன வித்தியாலயம்

திரு. K. S. ஆனந்தன்

இணுவில் என்றால் சைவமும் தமிழும் செழித்துப் பரந்து வளர்ந்த ஓர் ஊர் என்பது எல்லோரும் நன்கு அறிந்த விடயம். ஆலயங்களும் ஆத்மஞானிகளும் இவ்வூருக்கு பெருமை சேர்க்கும் சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கின்றனர். ஒல்லாந்தர், போர்த்துக்கேயர் போன்ற அந்நிய தேசத்தவர்கள் இங்கே வந்து தமது மதங்களை வலுக்கட்டாயமாக மக்களிடம் திணிக்கமுயன்றபோதும் தமது வாழ்வின் ஆதார சுருதியான சைவமரபினைப் பேணிக் காப்பாற்றிய பெருமைக்குரிய மக்கள் வாழ்ந்த கிராமம். கல்வி கற்றோர் குறைந்தவர்களாகயிருந்த போதும் பல்வேறுகலைகளிலும், கலாச்சாரங்கள் மாறாத பண்புடையோராய் வாழ்ந்த மக்களிடம் பக்தியுணர்வு நிறைந்திருந்தது. இதற்கு அடிப்படைக் காரணம் சித்தர்கள் சிலர் இக்கிராமத்தில் அவதரித்து பல்துறைமகான்களாக விளங்கிட மக்களை ஆன்மீக வழியில் செல்ல வழிகாட்டிகளாக இருந்தமையேயாகும்.

ஆங்கிலேயர் வருகையின் பின்னர் அவர்கள் தமது மதமாற்றங்களை பல்வேறு வழிகளில் பரப்ப முயன்றனர். கல்விக்கூடங்கள், வைத்தியசாலைகள் என்று தமது மதத்தை சேர்வோருக்கு இலவசமாக பல்வேறு உதவிகளை வழங்கி தம்பால் ஈர்க்க முயன்றனர். இதே காலகட்டத்தில் நாவலர் பெருமான் இருந்தமையால் அவர்களுக்கு எதிராக சைவக் கல்விக் கூடங்களை நிறுவியதுடன் சைவப் பிரசுரங்களை வெளியிட்டும், பிரசங்கங்கள் நிகழ்த்தியும், சலுகைகளுக்காக ஓடியவர்களை கட்டுப்படுத்த முயன்றார். ஊருக்கு ஒரு சைவப் பாடசாலையை நாவலர் ஆரம்பித்தார். இதேபோல் சைவ பெருமக்களின் உதவியுடன் இணுவில் மத்தியில் நிறுவப்பட்டது ஓர் பாடசாலை. அதுவே இணுவில் சைவமகாஜனா வித்தியாசாலையாகும்.

இணுவில் கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் காங்கேசன்துறை வீதியின் இருமருங்கிலும் மத்திய கல்லூரி என்ற பெயருடன் இணுவை மக்களை ஒன்றிணைத்த பெருமையுடன் பெரியமாடிக்கட்டிடங்களுடன் காட்சி தருகின்றது. அமெரிக்க மிஷனரிமார் இணுவிலில் ஓர் வைத்தியசாலையையும் கல்விக்கூடத்தையும் நிறுவினர். இக்கல்விக்கூடத்தின் கற்றலை மேற்கொண்ட பிள்ளைகளுக்கும், அவர்களது குடும்பத்தவர்களுக்கும் பல்வேறு இலவசநலத்திட்டங்களை வழங்கி நமது மதத்துக்கு மாற்ற எவ்வளவோ முயற்சித்த போதும் தம் உயிரினும்மேலாக மதித்த சைவத்தை காத்த பெருமையை உடையவர்களாக விளங்கியதால் இன்று அதே பாடசாலை சைவமணம் கமழும் மத்திய கல்லூரியின் ஆரம்ப பாடசாலையாக விளங்குகின்றது.

இன்றைய நவநாகரீக உலகில் "முன்பள்ளி" என்ற ஒன்று இருக்கின்றது. சிறுவர்கள் இங்கே தேர்ச்சி பெற்றே கல்விக் கூடங்களில் சேர்க்கப்படுகின்றனர். ஆனால் நாம் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்ற காலத்தில் அரிச்சுவடியின் ஆரம்பமே பாடசாலைகளில்தான். இங்கே தான் 'அ' வில் இருந்து எமது கற்றல் செயற்பாடுகள் ஆரம்பமாகின. உதாரணமாக சைவமகாஜன வித்தியாசாலையில் எனக்கு ஆரம்பக் கல்வியை தொடங்குவதற்கு வித்திட்டு வைத்தவர் காலஞ் சென்ற நடராசா உபாத்தியாயர் அவர்களே. அவரைத் தொடர்ந்து காலஞ் சென்றவர்களான இராசதுரை, கந்தையா, அருளம்பலம், சரவணமுத்து, சிவபாக்கியம் உபாத்தியாயர்களே. இவர்களை நாம் இறக்கும் வரை நினைவில் நின்றும் நீங்காதவர்களாகவே வைத்துள்ளேன். காரணம் அவர்கள் எமக்கு வெறும் ஏட்டுக் கல்வியை மட்டும் புகட்டவில்லை. சமயத்துடன் இணைந்த தமிழர் பண்பாட்டினையும், சமூகத்தில் நாம் தலைநிமிர்ந்து நிற்பதற்கும், உயர்கல்வியினைப் பெற்ற பெருமையுடன் வாழ்வதற்கும் ஆதார சுருதிகளாய் விளங்கி அத்திவாரமிட்டுத் தந்தவர்கள் என்றுதான் கூறவேண்டும.

சைவ ஆசார முறைப்படி நெற்றியில் வீபூதியும், சந்தனத்திலகமும், தூய்மையான வெண்ணிற வேட்டியும், மேலங்கியும், சால்வையும் அணிந்து வருவார்கள். வகுப்பில் பிள்ளைகளையும் சைவசமய முறைப்படி நெற்றியில் வீபூதியும், திலகமும் அணிந்து தூய்மையுடன் வரும்படி அன்புடன் அறிவுரை கூறுவார்கள். காலையில் கடவுள் வணக்கம் பாடிய பின்பே பாடங்களை ஆரம்பிப்பார்கள். வெள்ளிக் கிழமைகளில் சிவபுராணம் ஒருமாணவன் சொல்ல வித்தியாசாலை முழுக்க மாணவர்கள் அதனைத் திரும்ப ஒப்புவிப்பார்கள். வித்தியாசலையில் அவர்கள் ஆரம்பித்த சமயப் பணிகள் இணுவில் கிராமத்தின் ஒவ்வொரு வீடுகளிலும் பரவியது. நவராத்திரி விழாக்காலத்தில் மாணவர்களை வீடுவீடாக அழைதது் சென்று ஒவ்வொரு வீட்டிலும் திருமுறைப் பாடல்கள் பாடி மக்கள் மத்தியில் ஓர் விழிப்புணர்வினை ஏற்படுத்தி வைத்த பெருமை இவர்களுக்கே உரியதாகும். வெறும் வாய்ச்சொல்லில் மட்டுமின்றிய சமய அனுட்டானங்களை பின்பற்றும் வழிமுறைகளையும் செயற்பாட்டினையும் ஆரம்பித்து வைத்தனர். சமய தீட்சை, விரதம் அனுட்டித்தல், கூட்டுப் பிரார்த்தனை, சமயச் சொற்பொழிவு, அன்னதானம், போன்ற கருமங்களையும், வித்தியாசாலையில் தான் ஆரம்பித்து வைத்தனர். மாணவர்கள் தமது வீடுகளிலும், சுற்றத்தவர்களிடத்திலும் இதனைப்பரவச் செய்தனர். உதாரணமாகக் கூறுவதாயின் இன்று ஒவ்வொரு வீடுகளிலும் நவராத்திரி விரதம், சிவராத்திரி விரதம், என்று அனுட்டிக்கப்படுபவை சைவமகாஜனவித்தியாசாலையினால் ஆரம்பித்து வைக்கப் பெற்றவை என்பதை இன்றைய இளைய தலைமுறையினர் தெரிந்திருக்கமுடியாது. மேலே குறிப்பிட்ட ஆசிரியப் பெருந்தகைகளின் காலத்தில் கல்விகற்றவர்கள் நன்கு அறிவர்.

இதிகாச புராணங்களை வாய்மொழி மூலமாகவும், கேள்வி மூலமும், விவசாயம், சுருட்டுத்தொழில் செய்வோர் கேட்டறிந்திருந்தனரே தவிர போதிய விளக்கமின்மையால் பக்தியுணர்வினை வெளிக்காட்டும் அனுட்டான முறைகளை அறிந்திருக்கவில்லை. இவற்றை இணுவில் கிராமத்தில் சைவ மகாஜன வித்தியாசாலை மூலம் மக்களுக்கு போதிய வழிகாட்டுதலை மாணவர்களைக் கொண்டே செயற்படுத்திக் காட்டினர். வாய்ச்சொல்லில் வீரரடி என்றில்லாமல் செயல் மூலம் சைவ சமயத்தில் எமது கிராமத்தில் ஒரு மறுமலர்ச்சியினை ஏற்படுத்திய பெருமை நாவலருக்குப் பின்பு இவ்வித்தியாசாலையைச் சேர்ந்ததேயாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் கிராமத்தில் சைவ நெறி தழைத்தோங்க, தமிழ்மணம்கமழ, மாணவர்களை நெறிப்படுத்திய ஆசிரியப் பெருந்தகைகளுக்கு, தலைமைஆசிரியராக இருந்து ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கியவர் காலஞ் சென்ற நடராசா அவர்கள். நாங்கள் பிறந்த மண்ணில் உள்ள சைவ கல்விக் கூடத்தில் மண்ணின்மைந்தர்கள் பல்துறையிலும் மேலோங்க வேண்டும் என்ற தூய்மையான மனப்பக்குவத்துடன் இப்பணிகளுக்கு அத்திவாரமிட்டனர். அவாகளின் பின்பு வந்தவர்கள், முன்னவர்களின் வழித்தடங்களைப் பின்பற்றி இன்றும் அப்பணியினை மேலோங்கிட வளரச் செய்தனர், செய்து ரொண்டிருக்கின்றனர் என்றால் வெறும் புகழச்சியல்ல உண்மை.

சைவ சமய மாண்பினை கொண்டியங்கும் கல்விச்சாலைகள் எல்லாம் சமயக் கல்வியை உலகளாவிய ரீதியில் பரவச் செய்யும் வகையில் சைவநெறி கற்றல் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றமை "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற கச்சியப்ப சிவாச்சரியாரின் கூற்றை இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை தான் நிலை கொண்டிருக்கும் ஊரினை சைவ சமயத்தின் ஊற்றுக் கண்ணாக்கி வைத்திருக்கின்றது என்றே கூறவேண்டும்.

☆☆☆

நன்றி: நடராஜம் – 2007



**சமகாலத் தமிழ்த் தலைவர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த பத்திரிகையாளரின் நோக்கில் நடராஜம்



**செல்லப்பா நடராசா J.P**

இணுவில் சைவமகாஜன வித்தியாலயத்தில் புகழ்பூத்த அதிபராக விளங்கிய அமரர்.வ.நடராசாவின் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிடப்பட்ட மலரைப் பார்வையிடும் வாய்ப்புக் கிடைத்தது.

மலர் எந்த நோக்கத்தின் பொருட்டு வெளியிடப்பட்டதோ அந்த நோக்கம் பரிபூரணமாக நூறுக்கு நூறு வீதம் நிறைவேறியுள்ளதென்பது எனது கணிப்பீடாகும்.

மலரிலுள்ள வாழ்த்துச் செய்திகள் உட்பட அனைத்து ஆக்கங்களையும் பூரணமாகப் படித்தபோதுதான் அமரர் நடராசாவை முழுமையாகப் பார்க்க முடிந்தது.

அமரர் ஆளுமைமிக்க அதிபர் மட்டுமல்ல: சிறந்த சமூகசேவையாளர், சமயப் பற்றாளர், ஆங்கிலப் பற்றாளர். அதாவது ஆங்கிலப் புலமையாளர், சிறந்த ஒரு கமக்காரர், துடிப்பான விளையாட்டுவீரர், கூட்டுறவாளர், கோவில் நிர்வாகியும்கூட என்பதனை பல்வேறு ஆக்கங்களினூடாகவும் அறிந்து கொண்டேன்.

இணுவில் மகாஜனாவின் 80 வருட கால வரலாற்றில் அரைப்பகுதி அமரர் நடராசாவின் வாழ்வியல்புகளுடன் ஒன்றிவிட்டது.

சைவ மகாஜனவுடன் சம்பந்தப்பட்ட தகவல்கள் பிரமுகர்களின் பட்டியல்கள் பலவும் நல்ல முறையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இது பாராட்டுதல்களுக்குரியது.

மலர் அழகாக அச்சிடப்பட்டுள்ளது. மலரின் பாகம் இரண்டு மிக மிகக் கனதியாக உள்ளது. இதுவும் பாராட்டுதல்களுக்குரியது.

நல்லதோர் அறுசுவை உணவை மிக இரசித்து அருந்துகையில் ஆங்காங்கே சோற்றில் குறுணிக் கற்கள் கடிபடுவதைப் போன்று அச்சுப்பிழைகள் மலரில் ஏற்பட்டு விட்டன.

இத்தகைய ஒருமலரை வெளியிடுவதில் எத்தனை சிரமங்களை எதிர்நோக்க வேண்டும் என்பதனை யான் அனுபவபூர்வமாக அறிவேன்.

நடராஜம் தங்களின் ஓர் வெற்றிப்படைப்பாகும். தங்கள் ஆளுமையைப் பூரணமாகக் காணமுடிகிறது மலரில். மீண்டும் மீண்டும் எனது பாராட்டுதல்களைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் புகழ்ச்சியிலும் மகிழ்ச்சியிலும் நானும் பங்கு கொள்கின்றேன்.

நன்றி: நடராஜம் - 2007


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



இணுவில் சைவமகாஜன வித்தியாலய முன்னாள் அதிபர்

## அமரர் திரு. வயித்திலிங்கம் நடராசா அவர்களின்

# நூறாவது அகவை நிறைவு விழா

**முனைவர் ஸ்ரீமத் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்** M.A., M.Phil., Ph.d.

**அவர்கள் முன்னிலையில்**

காலம் : **29-08-2010 ஞாயிற்றுக்கிழமை**
**காலை 8.30 மணி முதல் மாலை 6.30 மணிவரை**

இடம் : **இணுவில் மத்திய கல்லூரி**

தலைவர் : **திரு. அருளானந்தம் சதானந்தன்** SLPS 2-1
(அதிபர், இணுவில் மத்திய கல்லூரி)

பிரதம விருந்தினர்கள் :

**திருமதி இமெல்டா சுகுமார்**
(யாழ். அரசாங்க அதிபர்)

**திரு. ப. விக்கினேஸ்வரன்**
(கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலை நிகழ்வுகள்

**8.30 மங்கல விளக்கேற்றல்:**

**8.35 இறைவணக்கம்:**

**பண்ணிசை -** இளந்தொண்டர்சபை மாணவர்கள்

**8.45 உருவப்படம் திரை நீக்கமும், மாலை அணிவித்தலும்:**

**திரு. தம்பையா கந்தசாமி** (உரிமையாளர், பெஷன் ஹவுஸ்)

**8.50 ஆரம்ப உரை:**

**கலாநிதி தாமோதரம்பிள்ளை அமிர்தலிங்கம்**

(முன்னாள் விரிவுரையாளர்)

**8.55 வரவேற்புரை:**

**திரு. முத்ததம்பி சிவலிங்கம்** (இளைப்பாறிய கிராம சேவகர்)

**9.00 ஆசியுரை :**

**நல்லை ஆதீன முதல்வர்**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

**9.15 வாழ்த்துரை :**

**செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்**

(அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)

**9.40 தலைமையுரை:**

**திரு. அருளானந்தம் சதானந்தன்** (அதிபர், இணுவில் மத்திய கல்லூரி)

**10.00 பிரதம விருந்தினர் உரை:**

**திரு. ப. விக்னேஸ்வரன்**

**10.20 நூற்றாண்டு நினைவு மலர் வெளியீடு:**

**பிரதம விருந்தினர் திரு. ப. விக்னேஸ்வரன்**

(கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

**முதற்பிரதி பெறுபவர்**

**திரு. பொ. நடராசா** (உரிமையாளர், அண்ணா நிறுவனம்)

**10.25 மதிப்புரை : திரு. பாலசுப்பிரமணியம் தனபாலன்**

(தேசிய கல்வியியற் கல்லூரி)

**10.40 நினைவுப் பேருரை "புதிய நூற்றாண்டில் தமிழ்மொழிக்கல்வி "**

**கலாநிதி வல்லிபுரம் மகேஸ்வரன்**

(சிரேஸ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்)

**11.10 சிறப்புரை : "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரதும்**
**சுவாமி விபுலானந்தரதும் கல்விச் சிந்தனைகள்"**

**பேராசிரியர், கலாநிதி சபா. ஜெயராசா**

**11.35 சிறப்புரை : "பாடசாலைக் கல்வியும் செலவும்"**

**பேராசிரியர் மா. சின்னத்தம்பி**

(தலைவர், சட்டத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**12.00 சிறப்புரை : "நாவலர் வழி"**

**முனைவர் ஸ்ரீமத் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்**

(தர்மபுரம் ஆதீனம், மயிலாடுதுறை, தமிழ்நாடு, இந்தியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிற்பகல் நிகழ்வுகள்

**1.45 வரவேற்புரை :**

**2.00 பேச்சு : "செம்மொழி"**

செல்வி சிவபாலன் சிந்து (இணுவில் மத்திய கல்லூரி மாணவி)

**2.10 பேச்சு : "ஆறுமுக நாவலர்"**

செல்வன் அ. உமாகரன்

(இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் அறநெறிப் பாடசாலை)

**2.20 கவிதை :**

முதுபெரும் புலவர் கலாபூஷணம் வை. க. சிற்றம்பலம்

**2.40 சிறப்புரை : "சைவத்தின் இன்றைய நிலை"**

தமிழருவி த. சிவகுமாரன்

(தலைவர், வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்கம்)

**3.10 நினைவுரைகள் : சைவமகாஜன பழைய மாணவர்கள்**

திரு சின்னையா அமிர்தலிங்கம்

பண்டிதை திருமதி த. மகாலிங்கம்

திரு. செல்லையா இலகுநாதன்

திரு. தம்பு சிவசுப்பிரமணியம்

திருமதி சந்திரபவானி பரமசாமி

**4.25 பிரதம விருந்தினர் உரை :**

திருமதி இமெல்டா சுகுமார் (யாழ் அரசாங்க அதிபர்)

**4.45 வரவேற்பு நடனம்:** இணுவில் மத்திய கல்லூரி மாணவர்கள்

**4.50 தனி நடனம்** : **செல்வன் க. பவன்** இணுவில் மத்திய கல்லூரி மாணவன் (தேசிய மட்டம் முதன்மை இடம் பெற்றவர்)

**4.55 கிராமிய நடனம்** : இணுவில் மத்திய கல்லூரி மாணவர்கள்

**5.05 வில்லிசை** : **"இணையிலி"** இளந்தொண்டர்சபை மாணவன் சண்முகநாதன் யதுசன் குழுவினர்

**5.30 மெல்லிசை** : இணுவில் மத்திய கல்லூரி மாணவர்கள்

**6.00 பரிசில் வழங்கல்** : திருமதி இமெல்டா சுகுமார் (யாழ் அரசாங்க அதிபர்)

**6.15 நன்றியுரை** : திரு. மயில்வாகனம் உதயகுமாரன் (உபஅதிபர், இணுவில் மத்திய கல்லூரி)

**6.30 நூற்றாண்டு விழா நிறைவு :**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் சைவமகாஜன வித்தியாலயத்தில்
1933 முதல் 1948 வரை உதவி ஆசிரியராகவும்,
1948 முதல் 1970 வரை அதிபராகவும் கடமையாற்றிய
**அமரர் திரு. வயித்திலிங்கம் நடராசா அவர்களின்**
நூறாவது அகவை நிறைவு விழாவில் தங்களையும்
தங்கள் குடும்ப அங்கத்தவர்களையும்
கலந்து மதிய போசன விருந்திலும்
பங்குபற்றி முழுநாள் விழாவினைச்
சிறப்பிக்குமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

நன்றி

வணக்கம்.

தொடர்புகட்கு:
ந. சச்சிதானந்தன்
T.P: 021 492 0358
077 070 9584
email : nsatchi@hotmail.com

விழா அமைப்பாளர்கள் சார்பாக
மூத்ததம்பி சிவலிங்கம்
தாமோதரம்பிள்ளை அமிர்தலிங்கம்
தம்பு சிவசுப்பிரமணியம்

---

இணுவில் சைவமகாஜன வித்தியாலய முன்னாள் அதிபர்

## அமரர் திரு. வயித்திலிங்கம் நடராசா

அவர்களின்

# நூறாவது அகவை நிறைவு விழா

திரு/திருமதி/செல்வி :..........................................................
..........................................................
..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. வ. நடராஜா அவர்களின்
பாடசாலைப் பதிவேட்டிலிருந்து ......

## INSPECTOR'S ENDORSEMENTS.

The name of the School and the period covered by the endorsement, *e.g.*, from 3/2/29 to 17/2/30, must be indicated by the Inspector.

Hd. Master of [illegible] from 1.2.55 to 31.1.56. [illegible] [illegible]
28.[illegible]

Head Teacher from 1-2-56 to 31-1-57 Same School
Satisfactory.
R. Thiruvambalavanar
Inspector of Schools
25-3-57

Head Teacher 1-2-57 to 31-1-58 Same School
Satisfactory
R. Thiruvambalavanar
Inspector of Schools
24-2-58

Head Teacher 1-2-58 to 31-1-59 Same School
Very Satisfactory
R. Thiruvambalavanar
Inspector of Schools
25-2-59

Head Teacher, Same School 1-2-59 to 31-1-60 Very Satisfactory
R. Thiruvambalavanar
Inspector of Sc.
8-4-60

Head Teacher Same School 1-2-60 to 31-1-61
Very Satisfactory
R. Thiruvambalavanar
Inspector of Sch.
13-2-61

Hd. Master Same School
1.2.61 - 31.1.62. Very Satisfactory.
S. C. [illegible]
I/S. 2.3.62.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## INSPECTOR'S ENDORSEMENTS.

The name of the School and the period covered by the endorsement, *e.g.*, from 3/2/29 to 17/2/30, must be indicated by the Inspector.

Asst. Tr: Same school. 1.2.43 - 31.1.44. Satisfactory. [illegible] 11/2/44

— — 1.2.44 - 31.1.45 Satisfactory. [illegible]

— do — 1.2.45 — 31.1.46. Satisfactory. [illegible] 27/2/46

— do — 1.2.46 - 31.1.47 Satisfactory [illegible] 20/2/46

- do - 1.2.47 - 31.1.48. [illegible] 12/2/47

Work satisfactory. S. Mahalingam S.T. 17.2.48

Head Teacher 1.7.48 to 31.1.49 } Work satisfactory
Asst. Teacher 1.2.48 to 31.6.48 } S. Mahalingam 24.2.49

Head Master - same School from 1.2.49 to 31.1.50. Satisfactory. S. Mahalingam S.T. 15.2.50

Head Master same school from 1.2.50 to 31.1.51 - Satisfactory R. Sandrasegaram S.T. 20.2.51

Head Master - same school from 1.2.51 to 31.1.52 Work very satisfactory. [illegible] 27.2.52

Head Master, J/Inuvil Saivamahajana Priv. T.M. School, from 1-2-52 to 31-1-53. Very Satisfactory. [illegible] Insp. of Schools 20/2/53

Hd. Master. J/Inuvil Saivamahajana G.T.M.S. from 1.2.53 to 31.1.54. Very Satisfactory. [illegible] Ed. Offr. 20/2/54

Hd. Master. Same Schl. 1.2.54 to 31.1.55 Very Satisfactory [illegible] 24-2-55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்



**ம. உதயகுமார்**
*B.com., Dip. in. Edu., S.L.T.S* 1
பிரதி அதிபர்,
யாழ்/ இணுவில் மத்திய கல்லூரி

"தோன்றில் புகழொடு தோன்றுக" என்னும் வள்ளுவன் வாக்கிற்கணங்க எம் மண்ணில் தோன்றி தன் சேவையால் புகழ்பெற்ற எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் திரு.வைத்திலிங்கம் நடராசா அவர்களின் நூறாவது அகவைச் சிறப்பு மலருக்கு ஆக்கங்களைத் தந்து உதவியவர்களுக்கு நன்றி தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். அந்த வகையில்

- ☆ அருள்ஆசிச் செய்திகள் அனுப்பிய சமயத் தலைவர்கட்கும்,
- ☆ வாழ்துரைகள் வழங்கியவர்கட்கும்,
- ☆ தலைமைதாங்கும் பொறுப்பை ஏற்றும், மற்றும் பல உதவிகளை வழங்கிய இணுவில் மத்திய கல்லூரி அதிபர் திரு. அ. சதானந்தன் அவர்கட்கும்,
- ☆ வாழ்துச் செய்திகள் தந்துதவிய பிரதம விருந்தினர்கள், திருமதி இமெல்டா சுகுமார் (அரசஅதிபர், யாழ்ப்பாணம்) திரு. ப.விக்கினேஸ்வரன், கல்விப்பணிப்பாளர் வலிகாமம், அவர்கட்கும்,
- ☆ இவ்விழாவினைமுன்னிலைப்படுத்திச் சிறப்பிக்கும் வகையில் வருகைதந்த தமிழ்நாடு தருமபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த முனைவர் ஸ்ரீமத்குமார சுவாமித்தம்பிரான் சுவாமிகள் அஅவர்கட்கும்,
- ☆ சிறப்புக் கட்டுரைகள் தந்துதவிய வ.மகேஸ்வரன், தமிழ்த்துறை பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராசிரியர் சபா ஜெயராசா, பேராசிரியர் மா. சின்னத்தம்பி, பேராசிரியர் K. தேவராஜா ஆகியோருக்கும்,
- ☆ சிறப்புரைகள் வழங்கிய பெரியவர்களுக்கும்,
- ☆ கட்டுரைப் போட்டியில் பங்குபற்றிய இ. ம. க. மாணவர்களுக்கும், உதவி புரிந்த ஆசிரியர்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இவ்விழாவில் கலந்து விழாவினைச் சிறப்பித்த விருந்தினர்களுக்கும், மற்றும் பல வகைகயில் பங்கு பற்றிய அனைவருக்கும்,

★ மாதிரிக் கட்டிடத்துக்குரிய படத்தினை உருவாக்கிய திரு. குமாரலிங்கம், பகிதரனுக்கும், கட்டிட வரைபடத்தினை வரைந்து உதவிய திரு. மா. ரகுபதி அவர்களுக்கும் , கவிதைகள் தந்துதவியவர்கட்கும், நிகழ்ச்சிகளை தந்துதவிய மாணவர்களுக்கும்,

★ இம்மலரைச் சிறப்புற வடிவமைத்து குறுகியகாலத்தில் அச்சிட்டு வழங்கிய "குரு" அச்சக உரிமையாளருக்கும், ஊழியர்களுக்கும், பல்வேறு ஆலோசனைகள் வழங்கிய "அம்மா" அச்சக உரிமையாளர் செ. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கட்கும்,

★ விழாச்சிறப்புற பல்வேறு செயற்பாடுகளைச் செய்து தந்த திரு மூ. சிவலிங்கம், திரு. தம்பு சிவசுப்பிரமணியம், கலாநிதி தா. அமிர்தலிங்கம், திரு.க. கண்ணபிரான், திரு. வி. ஜெயசோதி மற்றும் பெயர் குறிப்பிடவிரும்பாத பல தொண்டர்களுக்கும்,

★ நிறைவாக விழா சிறப்புற நடக்கவும், மலர் வெளிவரவும், நிதி உதவி வழங்கிய அமரர் வ. நடராசா அவர்களின் மனைவி திருமதி யோகராணி நடராசா அவர்கட்கும்

எமது நன்றிகள் உரித்தாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ இணுவில் மத்திய கல்லூரி

இன்று



நாளை



GURU PRINTERS, Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org